தஞ்சை ஸரஸ்வதி மஹால் வெளியீடு—28.

# சரபேந்திர
# வைத்ய முறைகள்

## ( காஸ, ச்வாஸ சிகித்ஸை )

TNSDA
07518

...s Government Oriental Series, No. XLVI

இரண்டாம் பதிப்பு.

1957.

Madras Government Oriental Series XLVI

PUBLISHED UNDER THE AUTHORITY

OF THE

GOVERNMENT OF MADRAS

7 OCT 1974

*General Editor :*

T. CHANDRASEKHARAN, M. A., L. T.,

*Curator,*

*Govt. Oriental Manuscripts Library,*

MADRAS.

# சரபேந்திர வைத்ய முறைகள்

## ( காஸ, ச்வாஸ சிகித்ஸை )

ஸரஸ்வதி மஹால் வெளியீடு நெ. 28

# சரபேந்திர வைத்ய முறைகள்

## ( காஸ, ச்வாஸ சிகித்ஸை )

7 OCT 1974

பதிப்பாசிரியர்கள் :

ஸ்ரீ K. வாஸுதேவ சாஸ்திரி, B. A.
ஆராய்ச்சி ஆசிரியர், ஸரஸ்வதி மஹால், தஞ்சை

Dr. S. வெங்கட்டராஜன், L. I. M. (Regd.)
ஆயுர்வேத பண்டிதர், ஸரஸ்வதி மஹால், தஞ்சை

★

இரண்டாம் பதிப்பு.

★

ஸரஸ்வதி மஹால் நிர்வாகக் கமிட்டியினருக்காக
கௌரவகாரியதரிசி
ஸ்ரீ S. கோபாலன், B. A., B. L,
அவர்களால் பதிப்பிக்கப்பட்டது

வெற்றிவேல் பிரஸ், தஞ்சை.

விலை ரூ 2--50

1957.

அரசு தொல் பொருள் ... நூலகம், சென்னை
எண் 75[illegible]8
தேதி

## PREFACE TO THE FIRST EDITION.

The present publication contains the tested prescriptions for Cough, Asthma and allied diseases selected by Rajah Serfoji in his medical institute called 'Dhanvantari Mahal' with the help of Doctors of the Indian and Western systems of medicine. The selection was made after actually testing the prescriptions in use in the hospital attached to the Dhanvantari Mahal. The recipes given in the prior publications in this series have been tested by our present-day doctors and they have communicated to us their utter satisfaction with the efficacy of the prescriptions tried by them.

It is hoped that the recipes found in this work will also be found equally efficacious.

The same editors who have edited the prior books of 'Sarabhendra Vaidya Muraigal' Series have edited this work with their usual care and thoroughness and our thanks are due to them for their valuable services.

We are grateful to the Government of Madras for their timely grants that have enabled us to publish this and other valuable mauuscripts of this library.

S. GOPALAN,
*Honorary Secretary,*
*T. M. S. S. M. Library Committee.*

SARASWATHI MAHAL,
TANJORE.
4-4-1951.

## PREFACE TO THE SECOND EDITION

The first edition has been sold out and the present second edition is a reprint of the first.

S. GOPALAN,
Honorary Secretary,
T. M. S. S. M. Library Commirtee.

Tanjore,
21st July '57.

# GENERAL INTRODUCTION
## TO THE
# Madras Government Oriental Series.

The Government of Madras took up for consideration the question of publication of the various manuscripts in different languages on subjects like Philosophy, Medicine, Science, etc., early in May 1948. Important manuscript libraries in the Madras Presidency were requested to send a list of unpublished manuscripts with them for favour of being considered by the Government for publication. The Honorary Secretary of the Tanjore Maharaja Serfoji's Sarasvathi Mahal Library, Tanjore, alone complied with this request. This list as well as a similar list of unpublished manuscripts in the Government Oriental Manuscripts Library, were carefully examined and a tentative selection of manuscripts suitable for publication was made. The Government in their Memorandum No. 34913/48-10 Education, dated 4-4-19,9, constituted an Expert Committee with the Curator of the Government Oriental Manuscripts Library, Madras, as the Secretary, for the final selection of manuscripts suitable for printing and for estimating the cost of publication.

The following are members of the Committee :

1. Sri T. M, Narayanaswami Pillai, M. A., B. L,
2. „ R P. Sethu Pillai, B. A., B L.,
3. „ C. M. Ramachandra Chettiar, B. A., B. L.,
4. Sri R. Krishnamoorthy, (Kalki)
5. Dr. N. Venkataramanayya, M. A., PH. D,
6. Sri M. Ramanuja Rao Naidu, M. A., L. T.,
7. „ V. Prabhakara Sastri,
8. „ N. Venkata Rao, M. A.,
9. „ H. Sesha Ayyangar,
10. „ Masthi Venkatesa Ayyangar, M. A.,
11. „ M. Mariappa Bhat, M. A., L. T..
12. Dr. C. Achyuta Menon B. A., PH. D.,
13. „ C. Kunhan Raja, M. A., D. PHIL.,
14. „ A. Sankaran, M. A., PH. D., L. T.,
15. Sri P. S. Rama Sastri,
16. „ S. K. Ramanatha Sastri,
17. Dr. M. Abdul Haq. M A., D. Phil. (Oxon),
18. Afzul-ul-Ulma Hakim Khader Ahamed,
19. Sri P. D. Joshi,
20. „ S. Gopalan, B. A., B. L.,
21. „ T. Chandrasekharan, M. A., L. T.

The members of the Committee formed into Sub-Committees for the various languages, Sanskrit, Tamil, Telugu, Kannada, Malayalam, Marathi and Islamic Languages. They met during the month of May, 1949, at Madras and Tanjore to examine the manuscripts and make a selection. The recommendations of the Committee were accepted by the Government in G. O. No. Mis. 2745 Education, dated

7 OCT 1974

31—8—1949 and they decided to call these publications as the "**Madras Government Oriental Series,**" and appointed the Curator, Government Oriental Manuscripts Library, Madras, as the General Editor of the publications.

The following manuscripts have been taken up for publication during the current year :

## "A" From the Government Oriental Manuscripts Library, Madras.

### TAMIL

1. Kappal Sattiram
2. Anubhava Vaidya Murai
3. Attanakolahalam
4. Upadesa Kandam
5. Colan Purva Pattayam
6. Konga Desa Rajakkal
7. Sivajnana Dipam
8. Sadasiva Rupam, with commentary.

### TELUGU

1. Sangitaratnakaramu
2. Aushadha Yogamulu
3. Vaidya Nighantuvu
4. Dhanurvidya Vilasamu
5. Yoga Darsana Vishayamu
6. Khadga Lakshana Siromani.

## SANSKRIT.

1. Vishanarayaniyam
2. Bhargava Nadika
3. Hariharacaturangam
4. Brahmasutravrtti—Mitaksara
5. Nyayasiddhanta Thattvamrtam.

## MALAYALAM

1. Garbha Cikitsa
2. a. Vastulakshanam
   b. Silpasastram
   c. Silpavishayam
3. Mahasaram
4. Kanakkusaram
5. Kriyakramam

## KANNADA.

1. Lokopakara
2. Rattamata
3. Asvasastram
4. a. Aushadhagalu
   b. Vaidyavishaya
5. Sangitaratnakara
6. Supasastra

## ISLAMIC LANGUAGES.

1. Jamil-Al-Ashya
2. Tibb-E-Faridi
3. Tahqiq-Al-Buhran
4 Safinat-Al-Najat

## "B" From the Tanjore Maharaja Serfoji's Sarasvathi Mahal Library, Tanjore.

### TAMIL.

1. Sarabhendravaidya Murai (Diabetes)
2. Do. (E. N & T.)
3. Konkanarsarakku Vaippu
4. Tiruccirrambalakovaiyar with Padavurai
5. Sarabendra Vaidya Murai— (anaemia & Jaundice)
6. Talasamudram
7. Bharatam
8 a. Pandikeli Vilasa Natakam
   b. Pururava Cakravarti Natakam
   c. Madana Sundara Vilasa Natakam
9. Percy Macqueen's Collection in the Madras University Library on Folklore
10. Ramaiyan Ammanai
11. Sarabhendra Vaidya Murai — (Asthma, Cough and other lung diseases)

### TELUGU

1. Kamandakanitisaramu
2. Taladasapranapradipika
3. Raghunatha Nayakabhyudayamu
4. Rajagopala Vilasamu
5. Ramayanamu by Katta Varadaraju

### MAHRATHI

1. Natyasastrasangraha
2. a. Folk Songs

b. Dora Dharun Veni Paddhati
c. Asvasa Catula Dumani
3. Pratapasimhendra Vijaya Prabandha
4. a. Sarabhendra Tirthavali
b. Lavani
5. Devendra Kuravanji
6. Bhakta Vilasa
7. Sloka Baddha Ramayana

## SANSKRIT

1. Asvasastra with Tricolour Illustrations
2. Rajamrganka
3. Ananda Kandam
4. Ayurvedamahodadhi
5. Gita Govindha Abhinaya
6. a. Colacampu
b. Sahendra Vilasam
7. Dharmakutam-Sundara Kanda
8. Jatakasara
9. Vishnutattvanirnaya Vyakhya
10. Sangita Darpanam
11. Bijapallavam

It is hoped that the publication of most of the important manuscripts will be completed within the next four years.

Some of the manuscripts taken up for publication are represented by single copies in the Library and consequently the mistakes that are found in them could not be corrected by comparing them

with other copies. The editors have however, tried their best to suggest correct readings. The wrong readings are given in round brackets and correct readings have been suggested in square brackets. When different readings are found, they have been given in the foot-notes except in the case of a few books, in which the correct readings have been given in the foot-note or incorporated in the text itself.

The Government of Madras have to be thanked for financing the entire scheme of publication although there is a drive for economy in all the departments. My thanks are due to the members of the Expert Committee who spared no pains in Selecting the manuscripts for publication. I have also to thank the various editors, who are experts in their own field, for readily consenting to edit the manuscripts and see them through the press. The various presses that have co-operated in printing the manuscripts in the best manner possible also deserve my thanks for the patience exhibited by them in carrying out the corrections made in the proofs.

MADRAS, 1951.

T. CHANDRASEKHARAN,
*General Editor.*

# பொருளடக்கம்


பக்கம்

காஸம், சுவாஸம் இவற்றின் வகைகளும் குறிகுணங்களும் :

| | | | |
|---|---|---|---|
| காஸம் | காரணங்கள் | ... | i |
| | பூர்வரூபம் | ... | ,, |
| | வகைகள் | ... | ,, |
| | வாதகாஸ லக்ஷணங்கள் | .... | ,, |
| | பித்தகாஸ லக்ஷணங்கள் | ... | ii |
| | கப காஸத்தின் குறிகள் | ... | ,, |
| | க்ஷத காஸத்தின் லக்ஷணங்கள் | ... | ,, |
| | க்ஷய காஸத்தின் குறிகள் | ... | ,, |
| ச்வாஸ ரோகம் | காரணங்களும் வகைகளும் | .... | iii |
| | பூர்வரூபம் | ... | ,, |
| | ச்வாஸம் வரும் விதம் | .... | ,, |
| | மஹா ச்வாஸத்தின் குறிகள் | .... | iv |
| | ஊர்த்வ ச்வாஸம் | .... | ,, |
| | சின்ன ச்வாஸம் | ... | ,, |
| | தமக ச்வாஸம் | .... | v |
| | ப்ரதமக ச்வாஸம் | ... | ,, |
| | ஸந்தமக ச்வாஸம் | .... | vi |
| | க்ஷுத்ர ச்வாஸம் | ... | ,, |

அகத்தியர் '2000' என்ற சுவடியிலுள்ள காஸரோக லக்ஷணம் :— vi to viii

| | | |
|---|---|---|
| பொது லக்ஷணம் | .... | vi |
| மந்தார காஸ லக்ஷணங்கள் | .... | vii |
| பித்தகாஸ குறிகள் | .... | viii |

சரபேந்திர வைத்திய முறை காஸ சுவாஸ ரோக சிகித்ஸை முறைகளுக்கு மருந்து வகைகளின் அட்டவணை i—xvi

சரபேந்திரர் காஸ ச்வாஸ சிகித்ஸை முறைகள் நெ. 1—146 ... 1—192

மருந்துகளின் அகராதி அட்டவணை 193—199

70CT1974

# காஸம், சுவாஸம், முதலான வியாதிகளின் வகைகளும் அவைகளுக்கான குறி குணங்களும்

## காசம் (இருமல்)

### காரணங்கள்

புகை முதலான தூள்கள் வாயிலும் மூக்கிலும் புகுந்து கொள்ளுதல், ஜீரணிக்கப்படாத அன்னரஸம் வாயுவினால் மேல் நோக்கித் தள்ளப்படல், அமிதமான தேகப்பயிற்சி, நைப்பில்லாத ஆகாராதிகளைச் சாப்பிடுதல், அதிசீக்கிரமாகப் புசித்தல், தும்மல் முதலான வேகங்களை அடக்குதல், முதலான காரணங்களினால் ப்ராணவாயு உதான வாயுவுடன் சேர்ந்து கோளாறடைந்து, இருமலை உண்டாக்குகிறது. உடைந்த வெண்கலப்பாத்திரத்திலிருந்து எழும்பும் நாதம் போல் அடிக்கடி இருமல் ஏற்படும்.

### பூர்வரூபம்

தொண்டையில் கரகரப்பு, அரிப்பு, முதலியவைகளுடன் சாப்பாடும் உட்செல்லாது

### வகைகள்

(1) வாதகாஸம். (2) பித்தகாஸம். (3) கபகாஸம. (4) க்ஷதகாஸம். (5) க்ஷயகாஸம், என்பன.

### வாதகாஸ இலட்சணங்கள்

இருதயம், பொட்டு, தலை, வயிறு, விலாப்பக்கங்கள், முதலிய இடங்களில் வலி, முகம் வாட்டமடைதல், பலம், குரல் முதலியவை குறைவடைதல், கோழை முதலியவைக ளில்லாமல் வறட்டு இருமலாக அடிக்கடி இருமுதல் முத லான குறிகள் உண்டாகும்.

## பித்தகாஸத்தின் குறிகள்

மார்பில் எரிச்சல், ஜ்வரம், வாயுலர்தல், வாய்க்கசப்பு, தாகம், பச்சை நிறமானதும் அதிகக்காரமுமான வாந்தி முதலானவைகளுடன் இருமலுண்டாகும். உடம்பு வெளுக்கும்.

## கபகாஸத்தின் குறிகள்

வாயில் அடிக்கடிக் கோழை ஊறுதல், தலைவலியுடன் உடம்பு கனத்தல், அருசி, உடம்பில் அரிப்பு முதலானவைகளுடன், இருமும்போது கோழையும் கட்டிகட்டியாக விழும்.

## க்ஷதகாஸ இலட்சணங்கள்

அதிகமான சேர்க்கை, பாரத்தைத்தூக்குதல், வழி நடத்தல், யுத்தம் செய்தல், யானை, குதிரை இவைகளின் மேல் சவாரிசெய்தல் முதலிய காரணங்களினால் வாயு கோளாறடைந்து வறண்ட தேகமுள்ளவர்களின் மார்பைத் தாக்கி இருமலை உண்டாக்குகிறது. ஆரம்பத்தில் வறட்டு இருமலாக இருந்து பின்னர் சிறிது இரத்தம் கலந்த கோழை வெளிப்படும். தொண்டையிலும் மார்பிலும் தாங்கமுடியாத வலியுண்டாகும். சிறு சிறு ஊசிகளினால் குத்தப்படுவது போன்ற தொடமுடியாத வலியும் விலாப்பக்கங்களில் உண்டாகும். முட்டுக்களில் வலி, ஜ்வரம், ச்வாஸம், நாவறட்சி, குரல் கம்மல், முதலியவைகளுடன் புறாவின் சப்தத்தையொத்த இருமலும் ஏற்படும்.

## க்ஷயகாசத்தின் குறிகள்

பசியில்லாதிருக்கையில் சாப்பிடுதல், அல்லது நன்றாகப் பசிக்கும்போது குறைவாகவோ அல்லது சாப்பிடாமலோ இருத்தல், உடம்புக்கு ஏற்றுக்கொள்ளாதவைகளைச் சாப்பிடுதல், அதிகப்புணர்ச்சி, மலமூத்ராதி வேகங்களை அடக்குதல், மிகுந்த மனக்கலக்கம் இவைகளினால் கோளாறடைந்த அக்னி, வாதாதி த்ரிதோஷங்களையும் தூஷித்துத் தேகத்தையும் பலத்தையும் நாளடைவில் குறையச்செய்து க்ஷயகாஸத்தை உண்டாக்குகிறது

அப்போது உடம்பில் வலி, ஜ்வரம், மயக்கம், இவைகளேற்பட்டு நாளுக்கு நாள் நோயாளி இளைத்து வருவான். பலமும் குறைவடையும். அவனது தேகம் எலும்பும் தோலுமாக ஆகும். இரத்தத்துடனே கோழை வெளிப்படும். நாளடைவில் ப்ராணனுக்கே ஆபத்து உண்டாகும்.

இது தாதுக்களின் குறைவாலுண்டாகும் இருமலேயன்றி ராஜயக்ஷ்மாவினால் உண்டாவது அல்ல. ராஜயக்ஷ்மா (Tuber culosis) விலுண்டாகும் இருமல் கபப் பிரகோபத்தாலாகியது. ஆனால் க்ஷயகாஸத்திலுண்டாகும் இருமலில் திரிதோஷங்களும் கோளாறடைகிறது.

க்ஷயகாஸம் மெலிந்தவர்களுக்கு ஏற்பட்டாலது அசாத்யமாகும். பலமுள்ளவர்களுக்கு ஏற்பட்டால் அதை ஒருவாறு நிவர்த்திக்கலாம். கிழவர்களுக்கு ஏற்படும் காஸரோகத்தை முற்றிலும் குணமாக்கமுடியாது.

## ச்வாச ரோகம்

காஸரோகங்களுக்குக் கூறப்பட்டுள்ள எல்லா காரணங்களும் இதற்கும் பொருந்தும். இவையன்றி ஆமாதிஸாரம், வாந்தி, விஷம, பாண்டு, ஜ்வரம், தூள், (தான்யச்சுணை) புகை, காற்று, மர்மங்களில் அடி, மிக்கக் குளிர்ந்த ஜலம், இவைகளும் காரணங்களாகும்.

இது (1) மஹாச்வாஸம் (2) ஊர்த்வச்வாஸம் (3) சின்னச்வாஸம் (4) க்ஷுத்ரச்வாஸம் (5) தமகச்வாஸம் என்று 5 வகைப்படும்.

### ச்வாசத்தின் பூர்வ ரூபம்

மார்பிலும், விலாப்பக்கங்களிலும் வலி, வயிற்றுப்பொருமல், ருசியின்மை, பொட்டுகளில் கடுமையானவலி முதலியவை.

### ச்வாஸம் வரும் விதம்

தேகத்திலுள்ள வாயு கபத்துடன் சேர்ந்து பிராணன் ஜலம் இவை சஞ்சரிக்கும் ஸ்ரோதஸ்ஸுகளை அடைத்து

அதன் வழியே செல்லமுடியாததாக ஆகி நாலா பக்கங்களி லும் வியாபித்து ச்வாஸரோகத்தை உண்டாக்குகிறது.

## மஹாச்வாஸத்தின் குறிகள்

மிகவும் சப்தத்துடன் கூடிய மூச்சுத்திணரல் ஏற்படும், சிலசமயம் அதிக நடுக்கலுடன் மதம் பிடித்தகாளைமேல்மூச்சு விடுவதைப் போன்ற சப்தமுண்டாகும். ஞானேந்திரியங்கள் சரியான நிலையில் இராது. எதைக்கண்டாலும் பிடிக்காது. விழிகள் சுழலும். மலமூத்ராதிகள் தடைப்படும். பேசமுடியாமல் குரல் தடைப்படும். நோயாளி முற்றிலும் பலஹீனமடைவான். வெகு தூரத்திலிருந்தே இவனது மூச்சுத்திணறலைக் கண்டு கொள்ளலாம். தொண்டை வறண்டுவிடும். இதற்கு உடனே சிகித்ஸை செய்யாமற்போனால் வியாதி சீக்கிரத்தில் முற்றி நோயாளிக்கு மரணத்தை உண்டாக்கும்.

## ஊர்த்வ ச்வாஸம்

வெளியே விடப்படும் ச்வாஸம் வெகு நீண்டிருக்கும். உள்ளிழுக்கும் நேரம் மிகக்குறையும். வாயிலும் இதர ஸ்ரோதஸ்களிலும் கபம் நிரம்பியிருக்கும். பிரகோபித்திருக்கும் வாயு ஸ்ரோதஸ்ஸுகளைத் தாக்கும். நோயாளி மேல்நோக்கிய பார்வையுடையவனாவான். விழிகளை இங்குமங்குமாக உருட்டி, விழிப்பான். வலி பொறுக்க முடியாமல் முனகுவான். வாய் வெளுக்கும். இங்குமங்குமாக அலற்றுவான். அடிக்கடி மயங்கி வீழுவான். மர்மங்களில் வெட்டுவதைப்போன்ற குத்துவலி உண்டாகும், குரல் கம்மிப் போகும். இது பொதுவாக வியாதிகள் முற்றி மரணமுண்டாகும் தறுவாயில் ஏற்படும்.

## சின்ன ச்வாஸம் (சின்னம்— அறுபட்டது)

மிகுந்த கஷ்டத்துடன் விட்டு விட்டு மூச்சுவிடுவான் சிற்சில சமயங்களில் சுவாஸம் வெளிவராது. இருதயத்தைப் பிளப்பதைப்போன்ற வலி உண்டாகும். வயிற்றுப் பொருமல், அடிக்கடி வியர்வையுண்டாதல், மூர்ச்சை, கண்களிலிருந்து நீர்வடிதல், கண்களில் சிவப்பு முதலியவைகள் ஏற்படும்.

வாய் உலர்ந்து போவதுடன் வர்ணவேறுபாடுமுண்டாகும். அடிக்கடி பிதற்றுவான். பார்வை கீழ்நோக்குவதுடன் நிலையில்லாததாக இருக்கும். கடைசியில் தேககாந்தி குன்றி ப்ராணனுக்கும் ஹானி விளைவிககக்கூடியது.

## தமகச்வாஸம்

வாயு தன் நிலைமையை விட்டுமாறி ஸ்ரோதஸ்களை அடைத்து, கபத்தை மேலே தள்ளித் தலை, கழுத்து, முதலான அங்கங்களை அடைந்து பீனஸத்தை (மூக்கில் நீர்ப்பாய்ச்சல்) உண்டாக்குகிறது. இதனால் வாயு கபத்தைத் தடைப்படுத்தி 'குர்குர்' என்ற சப்தத்துடன் மிக்க கஷ்டத்தை உண்டாக்க வல்ல மூச்சுத்திணறலை உண்டாக்கும். நோயாளி அடிக்கடி மயங்குவான். நாவறட்சியுடன், வேலைகளைச் செய்ய முடியாமல் கட்டைபோல் அசையாமலிருப்பான். அடிக்கடி இருமுவான். மிகவும் சிரமத்துடன் சிறிது கோழை வெளிவரும். அப்போது கொஞ்சநேரம் சௌக்கியம் உண்டாகும். கழுத்தில் அரிப்பு ஏற்படும். மிகவும் சிரமப்பட்டும் பேசுவான். படுத்தால் ச்வாஸம் அதிகமாகித் தூக்கமும் வராது. விலாப் பக்கங்களிலும் வலி ஏற்படும். நோயாளி உட்கார்ந்திருந்தால் சுகம் உண்டாகும். உஷ்ணமான பதார்த்தங்களில் விருப்பம் ஏற்படும். கண்களைச் சுற்றிலும் வீக்கம் உண்டாகி, நெற்றியில் வியர்வை அரும்பி மிகவும் கஷ்டப்படுவான். நாவறட்சி ஏற்பட்டு, மூச்சுத்திணறலும் அதிகமாகி உடம்பு முழுவதும் குலுங்கும்.

இந்நோய் மேகம், குளிந்த ஜலம், குளிர்ச்சியான காற்று, கிழக்கிலிருந்து வீசும் காற்று, கபத்தைப் பிரகோபிக்கச் செய்யும் பதார்த்தங்கள் (வெல்லம் முதலியன) முதலியவைகளினால் விருத்தியாகும்.

சமீபகாலத்திற்குள் உண்டான தமக ச்வாசம் சிகித்சைக்கு வசப்படும். நோயாளி பலவானாக இருந்தாலும் சாத்தியமானது.

## பிரதமகம்

முன்கூறப்பட்ட குறிகளுடன் ஜ்வரம், மூர்ச்சை முதலியவைகளுண்டாகும்.

## ஸந்தமகம்

உதாவர்த்தம் (வாயு பிரதிலோமித்து வயிற்றிலேற் படும் ரோகம்) தூசு முதலியவைகள் மூக்கில் புகுதல், அஜீ ரணம், வேகங்களை அடக்குதல், இவைகளினால் உண்டாகும். இந்நோய் சீதோபசாரங்களினால் சாந்தமடைகிறது. நோயாளி மனது இருண்டுவிடும். இரவு நேரங்களில் இந் நோய் விருத்தியாகிறது.

## க்ஷுத்ரச்வாஸம்

நைப்பில்லாத ஆகாராதிகளை உட்கொண்டு வ்யாயாமம் (தேகப்பயிற்சி) செய்வதால் வாயு மேல்நோக்கிப் பிரகோ பித்து இம்மாதிரியான ச்வாஸரோகத்தை உண்டாக்குகிறது. தேகம் முழுவதிலும் வலி உண்டாகும். உயிருக்கு ஆபத்து இல்லை. அதிகமான கஷ்டத்தையும் கொடுக்காது. இந்திரியங் களுக்கும் ஹானி விளைவிக்காது. சிகித்ஸைக்கு வசப்படக் கூடியது. சில நாட்கள் சென்றபின் மருந்து முதலியவைகளில் லாமலேயே இவ்வியாதி சொஸ்தமாகும்.

---

'அகஸ்தியர் 2000' என்ற சுவடியிலிருந்து காசரோகத்தைப் பற்றிய செய்யுட்கள் அடியில் கொடுக்கப்பட்டிருக்கின்றன :—

## காசரோகம்

விண்ணிற் சுழலுந் துயரமிகும்
வெளுத்து வற்றித் திமிர்த்தெங்குங்
கண்ணைப்பார்க்க மஞ்சணித்துக்
களைத்த முகமும் வெளுத்ததனு
லெண்ணில் கருமமொண்ணு செய்யி
லிளைப்பு முடற்றுயருண்டாம்
நண்ணிப்பெரிய தாதுகெடும்
நவிலும் காசரோகமிதே (உ௩௧)

(இதன் பொருள்)

உடம்பு இளைத்து மதமதப்புடன் கூடியதாக ஆகும். விழி மஞ்சள் நிறத்தையடைந்து முகமும் களைப்பையடைந்து

வெளுக்கும். மனக்கலக்கம் உண்டாகும். உடம்பு இளைக்கும். தாதுக்கள் க்ஷீணமாகும். இவைகள் காசரோகத்தின் குறிகளாகும்.

## மந்தாரகாசத்தின் இலட்சணங்கள்

மந்தாரகாசம் வந்தால் வாங்கிடும் சுவாசமெல்லா
மிந்தார மெய் சுரமுங்காணு மிழைத்திடுமிருமல் மெத்துஞ்
சந்தாயுடம்பு தலையுடம்பு தளரவலிக்கு மிளைப்பாகும்
பந்தாதுடம்பு நெஞ்சுமுகம் பற்றிவலிக்கும் பண்பிதுவே (சக)

இக்கண மதனோடொக்க
விருமலுமிளைப்புமுண்டாய்
சிக்கென நெஞ்சுகட்டிச்
சீறிடு மிறுகிப் பற்றி
மிக்கதோர் வயிறுதானு
மிருந்துதான் பொருமுமாகில்
பக்கமந்தாரந்தன்னில்
பற்றிய காசமாமே (சஉ)

(இ-ள்)

சுவாசம் மிகச் சிரமத்துடன் வெளிப்படும். உடம்பில் சிறு சுரம் காணும். இருமலும், திணறலும் உண்டாகும். தலைவலி, உடம்புவலி முதலியவைகளுடனே தேகமும் இளைக்கும். நெஞ்சு, முகம் இவற்றிலும் வலி அதிகமாக இருக்கும். நெஞ்சுக்கட்டுடன் இருமலும் உண்டாகும். வயிற்றுப்பொருமலேற்படும்.

(வேறு)

துய்யதோர் நாசிதன்னில்
தும்மலுமிகவுண்டாகி
நொய்யு நீராய் விழுந்து நெஞ்சு
நோயுடலீழை வாங்கு
மெய்யின்மந் தாரகாசத்
தடைவிது தானேநீகேள்
செய்யுமா முனிவர் சொன்ன
குணமிது தெரிந்து கொள்ளே (ருரு சு)

(இ-ள்)

தும்மல் அதிகமாகி மூக்கிலிருந்து நீர் ஒழுகும். நெஞ்சு வலி அதிகமாவதுடன் இரைப்பும் காணும். இது மந்தார காசத்தின் சில குறிகளாகும்.

## பித்தகாசத்தின் சில குறிகள்.

பித்தகாசமிருமல் மிகப்
புறட்டி முறுக்கு ம்ப்புறைக்குஞ்
சத்தியெடுக்கு மிருமலுண்டாந்
தலையுமுடம்புந் தான்வலிக்கும்
குத்தியிருமும் குரல் கம்மும்
குலவுசரீர மிகவிளைக்குந்
தித்தித்திருக்கும் வாயூறல்
சிவந்த நீரே தானூறும் (௩௩எ)

வாத மேலுடம்பு முனைவாக
வயிற்றை முறுக்கி வலியெடுக்கும்
போதவிருமி யிரத்தம்விழும்
புண்ணுமிடறு புகையெடுக்குங்
காதுங் கண்ணும் வலியெடுக்கும்
கடுக்குமுடம்பு கணுக்களெல்லாம்
பாதிநேரமப் பாற்கடுக்கும்
பாயில் படுக்க வொட்டாதே (௩௩அ)

(இ-ள்)

இருமல் அதிகம் உண்டாகி, வயிற்றில் வலியுமேற்படும், உப்பு, காரச்சுவையுள்ள வாந்தியும் உண்டாகும். தலைவலி. உடம்புவலி முதலியவைகளுடனே குரலும் கம்மிவிடும், நாளடைவில் உடம்பு இளைக்கும். தித்திப்பாகவும், சிவப்பாகவும் உமிழ்நீர் அதிகம் சுரக்கும். சிற்சில சமயங்களில் கோழையுடன் இரத்தமும விழும். அடிக்கடி இருமுவதால் காதுகள், கண்கள் முதலான உறுப்புகளில் வலியெடுக்கும். மூட்டுகளிலும் சொல்லொணு வலி உண்டாகும். இவைகள் 'பித்தகாசத்தின்' குறிகளாகும்.

# சரபேந்திரர் வைத்தியமுறை காஸ, சுவாஸ ரோக சிகித்ஸை முறைகளுக்கு மருந்து வகைகளின் அட்டவணை

---

## I. எண்ணெய் வகைகள்


பக்கம்

1 காசம் இருமலுக்குத் தூதுவளை எண்ணெய் ... 1
2 காசத்திற்கு மருந்து *(குங்கிலிய எண்ணெய்)... 22
3 காசம், சுவாசம், இருமல், ஈளை, கண்டத்தைப் பற்றிய வியாதிகளுக்குப் பொடுதலை எண்ணெய் ... 60
4 ஈளை, இருமல், மருந்தீடு முதலானவைகளுக்கு (கண்டங்கத்திரி எண்ணெய்) .... 85
5 இருமல், அக்கினிமந்தம், ஈளை, பெரு வயிறு, மூலம், கிராணி, கிருமி, பக்க சூலைக்குத் (தூதுவளைக் குழம்பு) ... 86
6 ஈளை, இருமல், இரைப்பிற்குத் (தேவதாளி எண்ணெய்) ... 89
7 சூலைப்பிற்கு மருந்து (மூக்கரட்டை எண்ணெய்) ... 98
8 சளி, இருமலுக்கு (நொச்சி எண்ணெய்) ... 116
9 காசத்திற்குச் சாரணைக்கிழங்கு எண்ணெய் .... 164
10 ஈளை, இருமல், அருவருப்பு, குன்மம், மூலம், பெருவயிறு, காசம், சூலை, நெஞ்சடைப்பு, ஈளை, இரைப்பு முதலானவைகளுக்குத் தூதுவளைத் தைலம் ... 189


## II. கஷாய வகைகள்


1 காசத்திற்குச் (சிறுவழுதலையாதிக் குடிநீர்) ... 21
2 சுவாஸ காசத்திற்குக் (கீழா நெல்லிக்) குடிநீர் ... 50


---

*குறிப்பு :—பிறைக்குறிகளுள் காணப்படும் மருந்துகளின் பெயர்கள் அனைத்தும் நமது சொந்த கற்பனைப் பெயர்களே,

பக்கம்

3 ஈளைக்குப் (புரசம்பட்டைக்) கஷாயம் ... 82
4 இருமலுக்குத் (தூதுவளைக் கஷாயம்) ... 83
5 இருமலுக்கு நீர்முள்ளியாதி நீர் ... 108
6 இருமல், சேத்துமத்திற்கு (வெங்காரக்) குடிநீர் ... 137
7 வாயினுலிரத்தம் வீழ்கிறதற்கு ஊரலவல் குடிநீர் ... 145
8 பக்க காசத்திற்குத் தூதுவளையாதிக் கஷாயம்.. 147
9 இரைப்பிற்குக் கண்டங்கத்திரியாதிக் கஷாயம் ... 154
10 காஸத்திற்குச் (சுக்காதி) கஷாயம் ... 21
11 சுவாஸ காஸத்திற்கு மிளகுக் குடிநீர் ... 165
12 இருமலுக்கு ஆடாதோடைக் கஷாயம் ... 169
13 இருமலுக்கு (முசு முசுக்கைக்) கஷாயம் ... 70
14 இருமல், ஈளைக்கு வேர்க்கொம்புக் கஷாயம் .... 172
15 இருமலுக்குக் (கொத்தமல்லியாதிக் கஷாயம்).. 176
16 காசம், இருமலுக்கு (முள்ளுக்கத்திரி) கஷாயம். 6

## III. நெய் வகைகள்

1 காசத்திற்கு (சிறுவழுதலை) நெய் ... 6
2 காஸம், சுவாசத்திற்கு ஆடாதோடை நெய் ... 7
3 காசத்திற்குக் (கரிசாலை) நெய் ... 19
4 காசத்திற்குக் கரிசாலை நெய் ... 13
5 சுவாச. காசத்திற்குத் தசமுல நெய் ... 16
6 சுவாச. காசத்திற்குக் (குண்டலாதி நெய்) ... 23
7 ச்லேஷ்ம காசத்திற்கு (தேள் கொடுக்கு) நெய் ... 31
8 காசத்திற்குப் பூசினி நெய் ... 34
9 காசம், இரைப்பு, இளைப்பு பீனசத்திற்குத் (தூதுவளை நெய்) ... 35
10 ஈளை, இருமல், உடம்புலர்தல், எலும்புருக்கி, கோழை, சளி முதலியவற்றிற்கு (ந்யக்ரோதாதி) நெய் ... 53

பக்கம்

11 ஈளை, இருமலுக்குத் தூதுவளையாதி கிருதம் .... 56
12 ஈளை, இருமல், உளமாந்தைப் புகைச்சலுக்குத் தேற்றான் நெய் ... 58
13 இருமலுக்குத் தூதுவளையாதி கிருதம் .... 59
14 இருமலுக்குத் தூதுவளையாதி கிருதம் (வேறு) 71
15 தொண்டைக்கம்மல், பித்தம், வாந்தி, மயக்கம், இருமல், கைகாலெரிவு, அரோசகம், விக்கலுக்குப் பேராமுட்டி நெய் .... 80
16 இருமல், ஈளை, நெஞ்செரிவு, உடலுலர்தல், பித்தம், விஷசுரத்திற்கு ஆடாதோடை நெய் ... 102
17 ஈளை, இருமல், கிருமி, கோழை, தோஷம் வாயுவுக்குத் திப்பிலி நெய் ... 104
18 சிலேத்தும விகாரங்களுக்குத் தூதுவளை நெய் ... 124
19 சிலேஷ்ம விகாரங்களுக்குக் கடுகாதி கிருதம் ... 128
20 சுரகாசத்திற்குத் திப்பிலி நெய் ... 150
21 ஈளை, இருமல், உளமாந்தை, அக்கினி மந்தம், வாதகாசம், உள்சுரம், காய்ச்சலுக்குத் திப்பிலி நெய் ... 187
22 சுவாச காஸத்திற்குப் பூசினி நெய் ... 50

IV. சூரண வகைகள்

1 சுவாஸகாசம், இருமலுக்குத் தாளிசபத்திரி சூரணம் ... 11
2 சுவாஸகாசத்திற்கு (சிறுதேக்காதி) மருந்து .... 32
3 காசத்திற்குத் திப்பிலி ரசாயனம் ... 36
4 காசத்திற்குத் திப்பிலி ரஸாயனம் ... 37
5 காசத்திற்கு விடங்காதிச் சூரணம் .... 41
6 காசத்திற்குப் பஞ்சகோலாதிச் சூரணம் ... 42
7 காசத்திற்குத் தாளீஸ பத்திரிச் சூரணம் ... 45
8 ஈளைக்குக் கடுக்காய்ச் சூரணம் ... 77
9. இருமல், ஈளை, முதலான நோய்களுக்கு இலைக்கள்ளிச் சூரணம் .... 89

| | | பக்கம் |
|---|---|---|
| 10 | ஈளை, இருமல், மந்தாக்கினி, அருசிக்குத்தாளீச பத்திரிச் சூரணம் .... | 94 |
| 11 | குலைப்பிற்குச் (செருப்படி) மருந்து ... | 97 |
| 12 | காசம், இருமல், ஈளைக்கு வேலிப்பருத்திச் சூரணம் .... | 107 |
| 13 | இருமலுக்குக் கடுக்காய்த்தூள் .... | 110 |
| 14 | சலக்கழிச்சலுக்கு ஊசிக்காந்தாதிச் சூரணம்.. | 112 |
| 15 | இருமல், இரைப்பிற்கு ஏலாதிச் சூரணம் ... | 181 |
| 16 | ச்லேஷ்மத்திற்குத் (தேத்தான் சூரணம்) ... | 126 |
| 17 | அக்கினிமந்தம், சுவாஸகாசம், வரட்சி, குன்மம், உள்ளெரிவு, ஈரல் குலையெரிவு, பீலிகை, ச்லேஷ்ம பித்த விகாரங்களுக்கு (சாதீபலாதி) சூரணம் ... | 131 |
| 18 | கபரோகம், சுவாசகாசம், ஈளைக்குத்தாளீச பத்திரிச் சூரணம் .... | 132 |
| 19 | ச்லேஷ்மத்திற்குக் (கடுக்காய்த்தூள்) ... | 134 |
| 20 | இருமலுக்கு (ஏலாதிச்) சூரணம் .. | 118 |
| 21 | இருமல், சேத்துமத்திற்கு நிலவிளாச்சூரணம். | 138 |
| 22 | இரைப்பு, காசம், சுவாசகாசம், அடைப்பு. சேத்தும ரோகங்களுக்குத் தூதுவளையாதிச் சூரணம் .... | 152 |
| 23 | இரைப்பு, நெஞ்சுக்கட்டிற்குச் சுக்கு கண்டங்கத்திரிச் சூரணம் ... | 159 |
| 24 | வயிற்றுப் பொருமல், பித்தம், வாந்தி இருமலுக்கு இலவங்காதிச் சூரணம் ... | 160 |
| 25 | இருமலுக்குச் சுக்காதிச் சூரணம் ... | 170 |
| 26 | இருமலுக்குக் கண்டங்கத்திரிச் சூரணம் .... | 174 |
| 27 | இருமலுக்குக் கண்டங்கத்திரிச் சூரணம் ... | 171 |
| 28 | இருமலுக்குத் திப்பிலிச் சூரணம் ... | 177 |
| 29 | இருமலுக்கு அந்தரத் தாமரைச் சூரணம் ... | 180 |
| 30 | இருமலுக்கு ஏலாதிச் சூரணம் .... | 138 |
| 31 | ஈளை, இருமலுக்குத் திரிகடுச் சூரணம் ... | 182 |

பக்கம்

32 ஈளை, இருமல், க்ஷயத்திற்கு விளங்காதிச் சூரணம் ... 184
33 ஈளை, இருமலுக்கு இண்டம்வேர்ச் சூரணம்... 186

V. லேகிய வகைகள்

1 காசத்திற்கு நிரா அபையாதி லேகியம் ... 26
2 காசத்திற்குக் குண்டலாதி லேகியம் ... 39
3 ஈளை, இருமலுக்குக் (கையாந்தகரை லேகியம்) ... 62
4 ஈளை, இருமல், குன்மம், சயம், எரிகுன்மம் இரத்த பித்தத்திற்குக் கூழ்ப்பாண்ட லேகியம் ... 77
5 ஈளை, இருமலுக்குப் பூசினிக்காய் மருந்து ... 95
6 பஞ்ச குன்மம், ஈளை, சயம், இருமல் வீக்கல் முதலிய ரோகங்களுக்குக் கண்டங்கத்திரி லேகியம் ... 129
7 காசம், கபரோகங்களுக்குச் சண்டமாருத லேகியம் ... 139
8 கபரோக, இருமலுக்குச் சண்டமாருத லேகியம் .... 142
9 பித்தத்திலெழுந்த 40 காசம், உளமாந்தை. செரியாமை, சுரம், இளைப்பு, பாண்டு காமாலை முதலான ரோகங்களுக்கு வில்வாதி லேகியம் .... 155
10 சகல காசங்களுக்கும் கண்டகாரி லேகியம் ... 162

VI. சாறு வகைகள்

1 சுவாச காசத்திற்கு ஆடாதோடைச் சாறு மருந்து ... 10
2 ஈளை, இருமல், இரைப்பிற்கு முடக்கத்தான் மருந்து ... 93
3 இருமலுக்கு (செவ்வகத்தி) மருந்து ... 137
4 இரைப்பு, சிலேத்துமம், நெஞ்சுக் கட்டு முதலான ரோகங்களுக்குத் தேங்காய்ப் பால் மருந்து .... 158

பக்கம்

VII. வடக வகைகள்.

1 சுவாச காசத்திற்குத் தாளீச வடகம் .... 17
2 சுவாச காசத்திற்குக் குக்கிலாதி மாத்திரை ... 46
3 சுரம், தாபம், மார்வலி ஈளை, இருமல், எலும்பு புருக்கி, பெரும்பாடு, குன்மம், அத்தி குன்மம், அரோசகம், உஷ்ணம், கிராணி, அதிசாரம், பாண்டு, அசிரணம் முதலான ரோகங்களுக்குத் தாளீசபத்திரி வடகம் .... 84
4 சேத்துமத்திற்குத் (தூதுவளை) உருண்டை ... 127
5 இருமல், இளைப்பிற்குத் தூதுவளம் பழவுருண்டை ... 135
6 இருமல், ஈளைக்குச் சாரணையாதி வடகம் ... 185

VIII. பச்சிலை மருந்து வகைகள்

1 இருமலுக்குத் (திப்பிலி வெண்ணெய்) .... 56
2 பல வியாதிகளுக்குத் தேத்தான் கல்பம் ... 65
3 ஈளைக்குத் (தாயைக் கொன்றான்) மருந்து ... 82
4 மருந்தீட்டுக்கு (வேலிப்பருத்தி) வெண்ணெய். 99
5 இருமலுக்குத் தூதுவளை, பால் மருந்து .. 108
6 எலிகடி, இரைப்பு, மந்தாரகாசம் முதலியவைகளுக்கு ஆடுதீண்டாப்பாளை மருந்து .. 148
7 இரைப்பு, நெஞ்சினடைப்பிற்குக் (சோழி மருந்து) ... 157
8 இருமலுக்குச் சுக்காதி கற்பம் .... 180
9 ஈளை, இருமலுக்குக் (கோழிமுட்டையோட்டுக்) கல்பம் ... 187

IX. புகை மருந்துகள்

1 இருமல், நாசியாலிரத்தம் விழுதல் நீர் விழுதல் முதலியவைகளுக்கு (அரிதார இலந்தைப்) புகை ... 64
2 காசம் முதலானதற்கு அரிதாரப் புகை ... 67
3 இருமலுக்குத் திரிப்புகை ... 68

பக்கம்

4 இருமலுக்குப் பொன்னரிதாரப்புகை ... 70
5 இருமலுக்குச் சங்காதிப்புகை ... 73
6 இருமலுக்குச் (சித்தொடுவிப்) புகை ... 75
7 ஈளை, இருமலுக்கு அரிதாரப்புகை ... 91
8 இருமல், சுக்கிலப் பிரமேகத்திற்கு (அவுரி வேர்) புகை ... 92
9 இருமல், ஈளை. இரைப்பு, கோழை, சுவாச காசம் திரிதோஷங்களுக்கும் அரிதாரப் புகை ... 120
10 இருமலுக்குக் (குறட்டைப்பழ)ப்புகை ... 173

X. பற்ப வகைகள்

1 சுவாச காசத்திற்குத் தாளக பற்பம் ... 9
2 காசத்திற்கு ரஸ பற்பம் ... 29
3 காசம், ஈளை, இருமலுக்குத் தாமிர பற்பம் ... 99
4 சலக் கழிச்சலுக்குத் தாமிர பற்பம் ... 110
5 ஈளை, இருமல், உளமாந்தை, மந்தாரகாசம் சயம், வண்டுகடி, குஷ்டம், எலிகடி முதலி யவைகளுக்கு அரிதார பற்பம் ... 149
6 இருமல், பாண்டு, நீரிழிவு, பிரமியம், குடல் வாதம். சிலேஷ்மம், வாதம், குஷ்டத்திற்கு நாகபற்பம் ... 166
7 ஈளை, இருமல், சுரம் முதலானவைகளுக்கு அரி தார பற்பம் ... 113

XI. செந்தூர வகைகள்

1 ஈளை, இருமல், சுவாச காசம், மந்தாரகாசம் எலிகடி, இரைப்பு, அரிகுரல், நெஞ்செரிவு முதலான ரோகங்களுக்கு நாகச் செந்தூரம். 105
2 இருமலுக்கு நாகச்செந்தூரம் ... 117

XII. மாத்திரை வகைகள்

1 காசம், க்ஷயத்திற்கு நீலகண்ட ரஸம் ... 2
2 காசம், இருமல் எலிகடிக்குச் (சாதிலிங்க) உருண்டை ... 12

பக்கம்

3 காசத்திற்கு ரஸாதி உருண்டை ... 14

4 காசம் முதலானதற்குத் திரிலோக சிந்தாமணி ... 27

5 சுவாச காசத்திற்குப் பூரண சந்திரோதய மாத்திரை ... 43

6 காசத்திற்கு ஆனந்த ரஸம் .... 48

7 காசத்திற்கு ஷண்முக ரஸம் .... 49

8 குலைப்பிற்குத் (துத்தாதி) உருண்டை ... 97

XIII. சில்லரை மருந்து வகைகள்

1 இருமலுக்கு அடை ... 70

2 காசத்திற்கு (இலவம்பட்டை)க்களி ... 111

3 ஈளைக்குத் (தாளக) மா ... 94

4 பக்க காசத்திற்குப் பொங்கல் ... 146

5 இருமலுக்கு (அப்பம்) ... 179

6 இருமலுக்கு அண்டா நீராகாரம் ... 76

7 இரத்தத்திற்குப் பதனி ... 144

8 ச்லேஷ்மத்திற்குக் (கடப்பம் விதை) நஸ்யம் ... 123


முற்றிற்று

# சரபேந்திரர் வைத்ய முறைகள்

## சுவாச, காச, க்ஷயரோக சிகிச்சை.

### 1. காசம் இருமலுக்குத் 'தூதுவேளை எண்ணெய்'

தூதுவேளை கோரை சங்கு திருத்துளாய்
சமூலங்கள் புலிதுடக்கி
ஓதுகழற் கொடியினிலை யின்பூரன்
மூலமிதை யூட்டோர் நாழித்
தூதுவளம் பழத்தாலே யரைத்திட்டு
எண்ணெய்தனிற் றெருக்கிந்துப்பும்
பூதகரப் பான்காமன் கூட்டிவடி
நக்கிருமற் போங்காசந்தான் (க)

(இதன் பொருள்)

| | |
|---|---|
| தூதுவேளை | கோரைக்கிழங்கு |
| சங்கு | துளசி |
| புலிதுடக்கி | கழற்சியிலை |
| இன்புருவேர் | |

இவைகளைச் சமூலமாக வகைக்கு 1 பலம் வீதமெடுத்து, ஒன்றிரண்டாக வெட்டி ஒரு பானையிலிட்டு, தண்ணீர் ஒரு நாழிவிட்டு, தூதுவேளம் பழத்தையும் (1 பலம்) சேர்த்தரைத்துக் குழப்பி நல்லெண்ணெய் 1 நாழியும் விட்டு, இந்துப்பு, பூதகரப்பான்பட்டை, திப்பிலி இவைகளையும் அரைத்துக் குழப்பிப் பக்குவமாக எரித்து வடிக்கவும். இதைச் சாப்பிட்டு வர, இருமலும் காசமுந் தீரும்.

குறிப்பு:—புலிதுடக்கி=இண்டு.

## 2. காசம் க்ஷயத்துக்கு 'நீலகண்ட ரசம்'

சூதமொன்று கெந்தியொன்று லோகபற்ப
மொன்றுசெம்பு சொல்லும்பற்ப
மீதுமொன்று நாபியொன்று மிலவங்கப்பத்
திரியொன்று மேலமொன்றும்
ஓது சித்திர மூலமொன்று வாய்விளங்க
யொன்றுமரே ணுகமுமொன்று
கேதமுத்தக் காசுமொன்று திப்பிலிமூ
லங்களொன்று கேள் சுக்கொன்றே (௨)

நெல்லிமுள்ளி யொன்றுகடுக் காயுமொன்று
தானியொன்று நேர்வாளமொன்று
நல்லமிள கொன்றுசிறு மூலமொன்று
இவையெல்லாம் நன்னீர்விட்டுக்
கல்வத்தி லிட்டரைத்துக் குளிகைசெய்
தளவொற்றைக் கடலைநேராய்ச்
சொல்லுநிழ லுலர்த்திட்டுப் பதனஞ்செய்
தனுபானந் தொடங்கக்கேளே (௫)

தொடுகாசஞ் சயமுடன்சு வாசகாசங்
களிது சொல்மூன்றுக்குங்
கடுதிப்பி லிப்பொடியிற் றேன்கலந்து
மோருருண்டை காலையுண்ணக்
கொடுபிரமி யத்துக்குத் திப்பிலித்தூள்
சர்க்கரையிற் கூட்டோருண்டை
யெடுகாய்ச்ச லுக்குவெல்ல நன்னீரி
லோர்குளிகை யிடுகரைத்தே (௩)

குன்மமென்ற தற்குமொரு குளிகையுந்
திப்பிலித்தூள் கூட்டிவெந்நீர்
நன்கருந்து கிராணிக்குப் பச்சரிக்
கழுநீருள் நவிலோருண்டை
தன்னுடன்சுக் கரைகரைத்தி டுசூலைக்
கரிதகித்தூட் டானோருண்டை

மன்குளிர்ந்த நீர்கலந்து குடிபாண்டுக்
காலீரின் மருந்திட்டுண்ணே (ரு)

உண்ணுமகோ தரத்துக்குத் திப்பிலித்தாள்
வச்சிரப்பா லுட்கலந்தே
நண்ணுநிழ லுலர்த்திட்டு மோருருண்டை
கோமியத்தி னல்மருந்தில
குண்ணுசிலேட் டுமத்துக்கு மந்தமிரு
வகைக்குமே குளிர்ந்தநீரிற்
பண்ணுசன்னிக் காமதுவி லோர்குளிகைத்
திப்பிலித்தாள் படுத்திக்கொள்ளே (சு)

பார்கிரிச்ச மாகிடிலா வாரைசமு
லங்களுந்தாட் பண்ணோருண்டை
வார்பச்ச ரிசிக்கழுநீர் தன்னிலிரு
மூலமென்று லவையோருண்டை
நேர்கருணைக் கிழங்கின்றாள் தண்ணீரிற்
கொள்வயிற்றில் நெடுவலிக்குச்
சார்சுக்கோ மமரைத்து வெந்நீரி
லோருருண்டை தாலீட்டுண்ணே (எ)

நஞ்சுதின்றோர்க் கோருருண்டை மாதளையின்
பழச்சாற்றி னடத்தத்தீரும்
பஞ்சகோல கடியத்தாட் கஷாயத்தி
லோர்குளிகை படவாதம்போ
மிஞ்சுமதி சாரமெனிற் குளிகைவெப்பா
லரிசியுடன் வெந்நீருட்கொள்
அஞ்சுமிந்த வியாதியெலா மனுபான
வகையாலு மகலப்போமே (அ)

(இ-ள்)

| | |
|---|---|
| சுத்திசெய்த பாதரஸம் | 1 பலம் |
| சுத்திசெய்த கெந்தகம் | ,, |
| லோகபற்பம் | ,, |
| செம்பு பற்பம் | ,, |

| | |
|---|---|
| சுத்திசெய்த நாபி | 1 பலம் |
| இலவங்கப்பத்திரி | ,, |
| ஏலக்காய் | ,, |
| சித்ரமூலம் | ,, |
| வாயுவிடங்கம் | ,, |
| அரேணுகம் | ,, |
| கோரைக் கிழங்கு | ,, |
| கண்டத்திப்பிலி | ,, |
| சுக்கு | ,, |
| நெல்லிமுள்ளி | ,, |
| கடுக்காய்த் தோல் | ,, |
| தானிக்காய்த் தோல் | ,, |
| சுத்திசெய்த நேர்வாளம் | ,, |
| மிளகு | ,, |
| *சிறுமூலம் | ,, |

முதலில் கடைச் சரக்குகளை எடுத்து இடித்துச் சூரணஞ் செய்து வஸ்திரகாயஞ் செய்து கொள்ளவும். பின்பு ஒரு கல்வத்தில் ரஸத்தையும், கந்தகத்தையும் போட்டு நன்ருகக் கறுப்பாகும் வரை அரைத்துப் பின்பு பற்பவகைகளையும் சூரணத்தையும் ஒன்று கலந்து தண்ணீர் விட்டு நன்ருக வரைத்துக் கடலைப்பிரமாணமுள்ள மாத்திரைகளாகச் செய்யவும். இதை நிழலிலுலர்த்திப் பத்திரப்படுத்தவும்.

**தீரும் வியாதிகள் :—**

திப்பிலித் தூளுடன் தேன் கூட்டி, ஒரு மாத்திரையும் கலந்து காலையில் சாப்பிடக் காசம், க்ஷயம் சுவாசகாசம் முதலானவை தீரும்.

திப்பிலித்தூள், சர்க்கரை இவைகளுடனே இம்மாத்திரையைக் கொடுக்க பிரமியம் (நீரிழிவு) தீரும்.

காய்ச்சலுக்கு வெல்லத் தண்ணீரில் இம்மருந்தைக் கரைத்துக் கொடுக்கவும்.

*சிறுமூலம் = திப்பிலி

குன்மத்திற்குத் திப்பிலித் தூளுடனே மாத்திரையை உட்கொண்டு வெந்நீரருந்தவும்.

கிராணிக்குப் பச்சரிசிக் கழுநீரில் ஒரு மாத்திரை கொடுக்கவும்.

சூலைக்குச் சுக்குக் கல்கத்திலும், கடுக்காய்த்தூளிலும் உட்கொள்ளவும்.

பாண்டு ரோகத்திற்குப் பசு மூத்திரத்தில் சாப்பிடவும்.

மகோதரத்திற்குத் திப்பிலித் தூளுடன் வச்சிரப்பால் (சதுரக்கள்ளிப் பால் ஒரு சொட்டு) கலந்து ஒரு மாத்திரை கொடுக்கவும்.

சிலேஷ்மத்திற்குப் பசு மூத்திரத்தில் கொடுக்கவும்.

இருவகை மாந்தங்களுக்கும் குளிர்ந்த ஜலத்தில் கொடுக்கவும்.

சன்னிக்குத் திப்பிலித்தூளும் தேனும் கலந்து ஒரு மாத்திரை கொடுக்கவும்.

மூத்திர க்ருச்சிரத்திற்கு ஆவாரைச் சமூலச் சூரணத்தில் ஒரு மாத்திரை கூட்டிப் பச்சரிசிக் கழுநீரில் சாப்பிடவும்.

இருவகை மூலங்களுக்கும் காய்ந்த கருணைக் கிழங்குத் தூளுடன் கலந்து தண்ணீருடன் கொடுக்கவும்.

வயிற்று வலிக்கு சுக்கையும் ஓமத்தையும் வெந்நீரில் அரைத்துப் பிழிந்து அதிலம்மாத்திரையைக் கொடுக்கவும்.

நஞ்சு தின்றோர்க்கு மாதுளம் பழச்சாற்றில் ஒரு உருண்டை நல்கவும்.

பஞ்சகோல (திப்பிலி, கண்டத்திப்பிலி, செவ்வியம், கொடிவேலி, சுக்கு) கஷாயத்தில் ஒரு மாத்திரை கொடுத்தால் வாதரோகம் போம்.

வெட்பாலையரிசியை வெந்நீர் விட்டரைத்துப் பிழிந்து ஒரு மாத்திரை கொடுத்தால் அதிசாரம் தீரும்.

---

## 3. சுவாசமிருமலுக்கு மருந்து

முள்ளியென்ற கத்திரியின் வேர்புரணி
பொடிசெய்து மோந்துவைத்து
அள்ளியொரு வெருகடிதூ ளதுநாறு
ழியினீர் தன்னிலிட்டு
துள்ளவெரி கஷாயத்தி லோர்சிரங்கை
யாகிடவுஞ் சுண்டிறுத்து
வள்ளியவெண் காரமொரு பணவெடைதான்
பொரித்துமத் தித்துண்ணக்
கொள்ளிருமல் சுவாசகா சங்களும்போ
முறைபிதுகை கூடுந்தானே (கூ)

( இ-ள் )

முள்ளுக்கத்திரியின் வேர்த்தோலை நன்ருக உலர்த்திக் கல்லுரலிலிட்டிடித்து வஸ்திரகாயம் செய்துகொண்டு, ஒரு வெருகடியளவு தூளையெடுத்து 4 படி ஜலத்தில் போட்டு, அடுப்பின் மேலேற்றி ஒரு சிரங்கையாகு மட்டும் நன்ருக வற்றக்காய்ச்சி இறுத்துக்கொள்ளவும். பொரித்த வெங் காரம் ஒரு பணவெடையும் போட்டுச் சாப்பிடச் சுவாச காசங்கள், இருமல் முதலியவை தீரும்.

---

## 4. காசத்துக்கு நெய்

சிறு வழுதலை ங்கயாந்தகரையும்
பிரமியுடன் சிந்தில் தண்டும்
பெறுமொன்று வகைநாழிச் சாறிதிலு
நெய்நாழி யிற்கலந்து

மறுதீயி லெரித்திட்டுப் பதங்கண்டு
வடித்துங்கொள் காலைமாலை
யுறும்போது நக்கிருமல் காசசுவா
சங்கள்முத லோடிப்போமே (ம)

( இ-ள் )

சிறு கத்திரி கையாந்தகரை
பிரமி சிந்தில் தண்டு

இவைகளின் சாறு வகைக்கு ஒரு நாழி

பசுவின் நெய் ஒரு நாழி, இவைகளை யொன்றுகலந்து அடுப்பின்மேல் வைத்து எரித்துப் பதத்தில் இறக்கி வடிக் கட்டிக்கொள்ளவும்.

வேண்டும்போது ( $\frac{1}{2}$ தோலா ) வீதம் காலையிலும் மாலை யிலுமாகச் சாப்பிட இருமல், காசம், சுவாசம் இவைகள் தீரும்.

## 5 காச சுவாசத்துக்கு ஆடாதோடை நெய்

வசுவாசி சமூலங்கொண் டிடித்தெண்
ணுறுபல மாய்ப்பதக்குப்
பொசிநீரை விட்டெரித்து நானாழி
யுடன்வடித்துப் புகுநாணாழிப்
பசுவின்நெய் யவ்வளவாம் பாலும்விட்டுங்
காய்ச்சிவடி பருமரத்தை
அசுவகெந்தி சிறுதேக்குத் திப்பிலியும்
இலவங்கம திங்கமாமே (கக)

அதிதேவ தாரமஞ்சள் சீரகங்கோ
ரோசனையு மாந்தசுக்கு
மதிமுரக பாளிதமுஞ் சிறுவழுத
லைவேரு மாமுத்தக்கா
சுதிவிழா லரிசிமுந் திரிப்பழஞ்
சர்க்கரையுஞ் சொல்லொன்றுக்கு

வீதிபலமொன் றுகொண்டு மரைத்திட்டு
மேற்கலந்து மெரித்திடாயே (கஉ)

எரிபதத்தில் வடித்துக்கா லையந்தி
நக்கிடவு மேகுநோய்கேள்
சுரங்களுஞ் சத்திவிக்கல் வானீரெத்தம்
வற்றலுடன் சுவாசகாசம்
பரிந்தையக் காசமுத லிவைகளெல்லாங்
குணமாகும் பாருள்ளோர்க்குத்
தருவாக வந்துபிணி தனைநீக்குஞ்
சரபேந்திர னரைந்ததாமே (கங)

(இ-ள்)

ஆடாதோடையைச் சமூலமாக 48 பலம் எடுத்துக் கல்லுரலிலிட்டிடித்து ஒரு பாத்திரத்திலிட்டு 2 மரக்கால் ஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி 4 படியாகும்வரை வற்றக் காய்ச்சவும். அதனுடன் பசுவின் நெய் 4 படியும் விட்டுப் பசுவின் பால் 4 படியும் விட்டு

| | |
|---|---|
| சிற்றரத்தை | அமுக்கிராங்கிழங்கு |
| சிறுதேக்கு | திப்பிலி |
| கிராம்பு | அதிமதுரம் |
| தேவதாரம் | மஞ்சள் |
| சீரகம் | கோரோசனை |
| சுக்கு | சிறு கத்திரி |
| கோரைக்கிழங்கு | விழாலரிசி |
| முந்திரிப்பழம் | சர்க்கரை |

இவைகளை வகைக்கு ஒரு பலம் வீதமெடுத்துக் கல்லுரலிலிட்டிடித்து மேலே சொன்ன கஷாயம் விட்டரைத்துநெய் யுடனே குழப்பி அடுப்பின் மேலேற்றி எரிக்கவும்

நெய்யைப் பதத்தில் இறக்கி வடித்துக் காலையிலும் மாலையிலும் (½ தோலா எடை) சாப்பிடவும்.

**தீரும் வியாதிகள்:—**

ஜ்வரம், வாந்தி, விக்கல், இரத்தம் வீழல், தேகஇளைப்பு சுவாசகாசம், கபகாசம் முதலியன

குறிப்பு:—

வசுவாசி=ஆடாதோடை

அதிங்கம்=அதிமதுரம்

## 6. சுவாசகாசத்துக்குத் 'தாளகபற்பம்'

தாளகமோர் பலங்கோவை சர்க்கரை
யிரண்டுபலந் தனைதாம்பூல
நீளரிகாம் பின்சலத்தா லேயிருநா
ழிகையரைத்து நேரும்வில்லை
சூளவிதை யிடித்துநிழல் தனிலுலர்த்திக்
காகிதத்தில் சுருட்டிமேலே
கேளுபுளிச் சாம்பல்குழைத் திடுமூன்று
தரம்பூசிக் கிளர்மண்பூசே (கச)

சேலைமண்ணு நன்குசெய்து முழக்குழி
தன்னிலெருத் திரளடுக்கி
மேலேயதை வைத்திடுபின் னெருவிட்டுப்
புடஞ்செய்து வெந்தபற்பம்
பால்நிறமா மாறவிட் டெடுத்துமி
தைத்தேனிற் பருகும்போது
சூலைமுதல் வாதகப சுவாசகா
சங்களெல்லாந் துலைந்துபோமே (கரு)

(இ-ள்)

தாளகம் ஒரு பலமெடுத்துச் சுத்திசெய்து, சர்க்கரை 2 பலத்துடனே கூட்டி வெற்றிலைக்காம்பின் சாற்றினால் 2 நாழிகை அரைத்து வில்லைகளாகத் தட்டி, நிழலில் காய

2

வைத்துக்கொள்ளவும். இதைக் காகிதத்திற்குள் வைத்துச் சுருட்டி மேலே புளியஞ்சாம்பலைக் குழைத்துப் பூசவும். இவ்வாறு மூன்று தடவை பூசவும். அதற்குமேல் 4 தடவை சிலைமண் செய்து, ஒரு முழநீள அகலமுள்ள குழியில் வரளிகளை யடுக்கி அதன் நடுவில் இதை வைத்து மேலும் எரு மூட்டைகளை வைத்துப் புடமிடவும். பின்பு, வெண்மை நிறமான இப்பற்பத்தை எடுத்துத் தேனில் குழைத்துச் சாப்பிடவும்.

சூலை, வாத, கப, சுவாசகாசங்கள் தீரும்.

குறிப்பு:— இதை செய்துபார்த்ததில் கருப்பான மருந்தே கிடைக்கிறது.

## 7. சுவாச காச மருந்து

வசுவாசி தூதுவளை சங்கினிலை
முருக்கினிலை வகையிந்நாலு
மிசைசமன் கொண்டுபீட்டு வைத்தெடுத்துப்
பிழிந்துகொள் ளிறுத்தபின்னும்
வீசியுமுக் கடுகுசமன் பொடிசெய்து
வெருகடியு மென்றூளிட்டுப்
பசுந்தேனும் நாலைந்து துளிவிட்டுக்
குடிகாசம் பறந்துபோமே (கசு)

(இ-ள்)

| | |
|---|---|
| ஆடாதோடையிலை | தூதுவேளை |
| சங்கிலை | முருக்கின் இலை |

இவைகளைச் சமனாகவெடுத்து ஆவியில் வேகவைத்தெடுத்துக்கொண்டு பிழிந்து கொள்ளவும். இதை இறுத்து, சுக்கு, திப்பிலி, மிளகு இவைகளை சமங்கூட்டி இடித்து வஸ்திரகாயஞ் செய்துகொண்டு, வெருகடிதூள் போட்டுத் தேன் 4 அல்லது 5 துளிகள் விட்டு ஒன்று கலந்து குடிக்கவும். காசம் தீரும்.

## 8. சுவாச காசமிருமலுக்குத் "தாளிச பத்திரிச்" சூரணம்.

தாளிசபத் திரியோம மிருசீரக
முக்கடுகு தான்றியக்காயுங்
கேளரத்தை பெருநாகஞ் சிறுநாகப்
பூக்கடுக்காய் கிராம்புமேல
மீளவெட்டி வேருமிலா மிச்சத்தின்வேர்
சந்தனமு மிகுசாதிக்காய்
நீளுமிலவங் கப்பட் டைபத்திரியு
மிவையெல்லாம் நிறுத்துக்கூட்டே (கஎ)

கூட்டியிடி சூரணஞ்செய் சேலைவடித்
துடன்றேனுங் கூறக்கார
மீட்டியுங்கொள் ளொருநேர மொருவெரு
கடியாக மேவக்கேளு
வாட்டிரும லத்திசுரம் சுவாசகா
சங்களுடன் மற்றுந்தீரும்
பூட்டுசிலை வளவளிகர் சரபோசி
மகராசன் புகன்றதாமே (கஅ)

(இ ள்)

| | |
|---|---|
| தாளீசபத்திரி | ஓமம் |
| சீரகம் | கருஞ்சீரகம் |
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | தான்றிக்காய் |
| சித்தரத்தை | பெருநாகப்பூ |
| சிறுநாகப்பூ | கடுக்காய் |
| கிராம்பு | ஏலக்காய் |
| வெட்டிவேர் | இலாமிச்சைவேர் |
| சந்தனத்தூள் | சாதிக்காய் |
| இலவங்கப்பட்டை | இலவங்கப்பத்திரி |

இவைகளைச் சமமாக எடுத்துச் சரியெடை ஜீனிசேர்த்து சூரணம் செய்து வஸ்திரகாயஞ் செய்துகொள்ளவும். இதில்

ஒரு வெருகடியளவெடுத்துத் தினம் ஒரு வேளை தேனில் கொள்ளவும். இதனுல் இருமல், அஸ்திஜ்வரம், சுவாசகாசம், முதலிய ரோகங்கள் தீரும்.

---

## 9. காசமிரைப்பு, இருமல், எலிகடி இவைகளுக்கு உருண்டை

சாதிலிங்கங் கெந்திரச மபினாபி
தாரமிவை சமனுய்க்கொண்டு
வூதியவெண் காரமுமுக் கடுகுட
ஞெருநீட்க மூட்டுநொச்சில்
மீதுளசி கரிசாலை யின்னீரா
லரைத்துருட்டி மிளகின்றிட்ட
மீதுமொரு குளிகையுண் காசமிரைப்
பிருமல்கடி யெலிக்குந்தானே (கக)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| சுத்திசெய்த சாதிலிங்கம் | | சுத்திசெய்த கெந்தகம் |
| ,, | ரசம் | ,, நாபி |
| ,, | வெள்ளித்தூள் | பொரித்த வெங்காரம் |
| ,, | திரிகடு (சுக்கு, திப்பிலி, மிளகு) | அபினி |

இவைகளை வகைக்கு ஒரு வராகனெடை எடுத்துக் கல்வத்திலிட்டு முதலில் ரஸத்தையும் கெந்தகத்தையும் நன்முக கறுப்பாகும் வரை யரைத்துத் தூள்செய்து, மற்ற சரக்குகளையும் போட்டு நொச்சிச்சாறு, துளசிச்சாறு, கரிசாலங்கண்ணிச்சாறு, இவைகளினுல் தனித்தனியே (3 ஜாமம்) அரைத்து மிளகுப் பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்தவும். இதை வேளைக்கு ஒரு மாத்திரை வீதம் உட்கொள்ளக் காசம், இரைப்பு, இருமல், எலிகடி முதலியவைகள் தீரும்.

---

## 10. காசத்திற்கு நெய்

பசுவின்நெய் படியொன்றில் கரிசாலை
முள்ளியிலை பகருநொச்சில்
வசுவாசிய முதவல்லிச் சாரணைகண்
டங்காரி வச்சிரவல்லி
வசுவாட்டி யிலைச்சாறு வகைக்கரைக்
காற்படியாய் வார்த்துநெய்யைப்
பிசகாது பதமாக வடித்தபின்
றாதுவேளை பெருவேர் சங்கே (உ௰)

வேரதின்மேற் ரூர்ப்பொடியும் வகைபலம்முக்
காலாகும் வெள்ளைச்சீனி
சேரரைப்ப லங்கூட்டித் தினமொன்றுக்
குள்ளங்கைத் தேக்கிக்கொண்டால்
நேரிரு மலீளையிளைப் புடன்காச
மிவையெல்லாம் நீங்கிப்போகுஞ்
சாரவுப்புக் கூட்டுமறு பத்தியமும்
இருப்பதுவுஞ் சந்தமாமே. (உக)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| பசுவின் நெய் | — | 1 படி |
| கரிசலாங்கண்ணிச்சாறு | — | $\frac{1}{8}$ படி |
| முள்ளியிலைச்சாறு | — | ,, |
| கருநொச்சிச்சாறு | — | ,, |
| ஆடாதோடையிலைச்சாறு | — | ,, |
| சீந்தில்கொடிச்சாறு | — | ,, |
| சாரணைச்சாறு | — | ,, |
| கண்டங்கத்திரிச்சாறு | — | ,, |
| பிரண்டைச்சாறு (வாட்டிப் பிழிந்து) | — | ,, |

இவைகளை யொன்று கலந்து, அடுப்பின் மேலேற்றிப் பதமாக வடித்து இறக்கவும்.—இதனுடன்

பருமனுன தூதுவேளை வேர்ப்பட்டை
சங்கம் வேர்ப்பட்டை

இவைகள் வகைக்கு ¾ பலமும்

சீனி ½ பலமுமெடுத்துச் சூரணித்து வஸ்திரகாயஞ் செய்துகொண்டு, உள்ளங்கை கொள்ளுமட்டும், (½ அணு அளவு) மேலே சொன்ன நெய்யுடன் குழைத்துச் சாப்பிடவும்.

**தீரும் வியாதிகள் :—**

இருமல், ஈளை, இளைப்பு, காசம் முதலியவை.

பத்தியம் :—

உப்பு கூட்டவும். மறுபத்தியமும் பிடிக்கவும்.

---

## 11. காசத்திற்கு உருண்டை

பாதரத நாபிகெந்தி லோகமுஞ்சித்
திரமூலங் பருங்கடுக்காய்
சீதநெல்லித் தான்றியின்காய் யிலவங்கந்
தாளிசபத் திரியேலங்கள்
ஓதியதிப் பிலிமூல மரேணுகுலுஞ்
செங்கழுநீ ருத்தகோட்டம்
பேதியதாம் பிரபற்ப நாககே
ஸரங்கோரைப் பெருங்கிழங்கே (உ௨)

பெருமிலவங் கப்பட்டை யிவையெலாம்
பெறவே கூட்டி
யரைகூட்ச சூரணமா யெலுமிச்சம்
பழச்சாற்றி லிதைமத்தித்து
ஒருகடலைக் களவாய் குளிகைசெய்
ததைநிழலு லர்த்திவைத்துத்
திருமனுபானங் கள்கண்டு மிடகாச
சுவாசங்கள் சயமும்போமே (உ௩)

போகுமிதில் பிரமேக மகோதரம்
பாண்டுஞ்சூலை போங்கிரிச்சந்
தாகமரோசிகங்கிராணி மூடகெர்பங்
கிருமிகளுந் தனியுன்மத்த
மாகுல்மம் வாதபித்தங் கபத்தொகை
வியாதிகளை மாற்றுவிக்கும்
யேகும்விட சுரமாக தோடமிது
பலநோயு மிணங்காதாமே (உச)

(இ-ள்)

| | |
|---|---|
| சுத்திசெய்த பாதரசம் | ஏலக்காய் |
| ,, கெந்தகம் | திப்பிலிமூலம் (கண்டந் திப்பிலி |
| ,, நாபி | (அரேணுகம்) காட்டுமிளகு |
| ,, இரும்புத்தூள் | செங்கழுநீர்க் கிழங்கு |
| கொடி வேலிவேர் | பெரிய லவங்கப்பட்டை |
| கடுக்காய்த் தோல் | கோஷ்டம் |
| நெல்லி வற்றல் | தாமிரபற்பம் |
| தான்றிக்காயத் தோல் | நாககேஸரம் (சிறுநாகப்பூ) |
| கிராம்பு | பெருங்கோரைக்கிழங்கு |
| தாளீசபத்திரி | |

இவைகளைச் சம எடையாக நிறுத்தெடுத்துக் கொள்ளவும். முதலில் ரஸத்தையும் கெந்தகத்தையும் கல்வத்திலிட்டு நன்ருக் கறுப்பாகும்வரை யரைத்துக்கொள்ளவும். பின்பு உலோகத் தூள்களையும் போட்டு அரைக்கவும். கடைச்சரக்குகளை வெய்யிலிலுலர்த்திக் கல்லுரலிலிட்டுச் சூரணித்து, வஸ்திரகாயஞ் செய்து உலோகங்களுடனே கூட்டி, எலுமிச்சம் பழச்சாறு விட்டு நன்ருக ஒரு நாள் முழுதும் அரைத்து கடலைப் பிரமாணம் மாத்திரைகளாகச் செய்து கொள்ளவும். நிழலில் உலர்த்திக்கொண்டு தக்க அனுபானங்களில் கொடுக்க.

காசம், சுவாசம், க்ஷயம், பிரமேகம், மகோதரம், பாண்டு சூலை, மூத்திரகிருச்ரம், அரோசகம், கிராணி, மூடகர்பம்

(கருப்பையிலிருந்து சிசு வேளிவராமல் சிக்கிக்கொள்ளுதல்), கிருமிகள், பைத்தியம், குன்மம், வாத, பீத்த, கபரோகங்கள், விஷம ஜ்வரங்கள், பலவித தோஷங்கள் முதலியவைகள் தீரும்.

---

## 12. சுவாச காசத்திற்குத் 'தசமூல நெய்'

பெருவாகை முன்னைவில்வம் பாதிரிகண்
டங்காரி பெருங்குமிழ்தான்
நெருஞ்சிசிறு வழுதுணையு மொருவகைக்கு
நாற்பலமாய் நிறுத்துக்கொண்டு,
பெருமல்லி சிறுமல்லி யொன்றினுக்கு
நாலுபலம் பெருஞ்சமூல
முருகுதா ளாயிடித்து நான்மரக்கா
ணீரைவிட்டு முதிரக்காய்ச்சே (உரு)

முதுநாலு படியாக வடித்திட்டு
நாழிநெய்யு மொக்கவிட்டு
மதிகோட்டந் திரிகடுகே லமிந்துந்
திரிபலையு மிருவோமங்கள்
கதிவிளால் வாலுளுவை யரிசிதா
ளிலவங்கங் காஞ்ஞொன்றுக்கு
மிதுகழஞ் சொன்றரைத்துக் கலந்திட்டு
மூன்றுதின மெரிகொதித்தே (உசு)

எரிநாலா நாள்வடித்து மொருவேளைக்
கிருகாசி னிடையுட்கொள்ளுந்
திருமார்பி லிடிப்பிளைப்போ டுநெஞ்சுக்
கட்டுகுன்மஞ் செரிகிராணி
யுருகாச சுவாசங்கள் தீருமிதிற்
குன்றியிடை ஊட்டானந்த
வைரவத்தைக் கலந்திட்டுக் கிருதமுண்ணக்
குணமாகு மகிழ்ந்துசெய்யே. (உஎ)

(இ-ள்)

| | |
|---|---|
| பெருவாகை | திரிகடுகு |
| வில்வம் | பாதிரி |
| கண்டங்கத்திரி | பெருங்குமிழ் |
| நெருஞ்சி | சிறுவழுதுணை |
| பெருமல்லி | சிறுமல்லி |

இச் சரக்குகளின் வேர் வகைக்கு 4 பலம் எடுத்துக் கல்லுரலிலிட்டிடித்து 4 மரக்கால் தண்ணீர் விட்டு 4 படியாகச் சுண்டக்காய்ச்சி

பசுவின் நெய் 1 படியும் விட்டு

| | |
|---|---|
| கோஷ்டம் | திரிகடுகு |
| ஏலக்காய் | இந்துப்பு |
| திரிபலை | ஓமம் |
| குரோசானி ஓமம் | கிராம்பு |
| வாலுளுவையரிசி | |

இவைகள் வகைக்கு $1\frac{1}{2}$ கழஞ்சு (கழஞ்சு—$1\frac{1}{4}$ வராகனெடை) எடுத்துத் தூள்செய்து பசுவின்பால் விட்டரைத்து நெய்விட்டு குழப்பி, அடுப்பின்மேலேற்றி 3 நாளைக்குச் சிறுகச் சிறுக எரிக்கவும். நான்காவது தினத்தில் பக்குவப்படுத்தி இறக்கி வடிக்கவும்.

வேளைக்கு இரு காசளவு வீதம் இந்நெய்யையுட்கொள்ள மார்பில் வலி, மூச்சுத்திணரல், நெஞ்சுக்கட்டு, குன்மம், கிராணி, காசம், சுவாசம் முதலியவைகள் தீரும். இந்நெய் யுடன் ஆனந்த பைரவம் ஒரு குன்றுமணியெடை சேர்த்துக் கொடுக்கவும், மேலே சொன்ன வியாதிகள் தீரும்.

## 13. சுவாச காசத்திற்குத் 'தாளிச வடகம்'

தாளிசபத் திரிசுக்குச் செவ்வியந்திப்
பிலிப் பங்கு தானிரண்டு
நீளுந்திரி பலையேல மிளகுதிப்
பிலிமூல நெரிநாகப்பூ

மீளியபச் சிலைவகைக் கொருபங்கு
நாற்பதுவெல் லம்பங்கை
தோளமைமநீ றிற்கரைத்து வடிகொண்டு
மடுப்பேற்றி தோயபாகாக்கே (உஅ)

பாகதனிற் புளிச்சிராய் சுடுநீறு
மதுபங்கு பத்துமிட்டுப்
பாகுத்திறளக் காய்ந்த பக்குவத்தில்
முன்மருந்தைப் படுந்தூட்செய்து
நாகமதில் வடிகட்டித் தூவுகளி
யாகக்கிளறி நற்பதத்தில்
வேகவிறக் கியிதைமூன்று காசினிடை
யாயுருட்டி விடியற்கொள்ளே (உகூ)

கொள்ளிதனிற் சுவாசங்கள் பாண்டுகாசங்
காமாலை கொடுமேல்மூச்சுந்
தள்ளுமந்தாக் கினிவெப்புப் பாவைமரூந்
தீடுமுதற் சாராதோடுங்
கள்ளமில்லை மண்டலங்கள் செலுத்துஞ்செங்
கோன்முறையாய் கார்க்குந்தஞ்சை
வள்ளல்சர போசிமகா ராசனிந்த
முறைதன்னை வகுத்தவாறே (௩௰)

(இ-ள்)

| | |
|---|---|
| தாளிசபத்திரி | சுக்கு |
| செவ்வியம் | திப்பிலி |

இவைகள் வகைக்கு 2 பலம்

| | |
|---|---|
| கடுக்காய் | ஏலக்காய் |
| நெல்லிக்காய் | தான்றிக்காய் |
| மிளகு | திப்பிலி மூலம் |
| சிறு நாகப்பூ | பச்சிலை |

இவைகள் வகைக்கு 1 பலம் வீதமெடுத்துச் சூரணித்துக் கொண்டு, வெல்லம் 110 பலத்தைத் தண்ணீர் விட்டுக்

கரைத்து வடிகட்டிக்கொண்டு, அடுப்பின் மேலேற்றிப் பாகாக்கிக்கொண்டு, புளியம் புரணி சுட்டசாம்பல் 10 பலம் போட்டு, பாகுதிரளும் பக்குவத்தில் முன்னால் சித்தமாக வைக்கப்பட்டிருக்கும் சரக்குகளின் தூளையும் போட்டுக் கிண்டிவரவும். களிப்பக்குவமான பதத்தில் இதை இறக்கி வைத்துக்கொண்டு 3 காசெடையளவு உருண்டைகளாக உருட்டி வைத்துக்கொள்ளவும்.

தினந்தோறும் ஒரு உருண்டை வீதம் காலையில் கொள்ளவும்

தீரும் வியாதிகள் :—

சுவாசம், பாண்டு, காஸம், காமாலை, மேல் மூச்சு, மந்தாக்கினி, வெப்புப்பாவை, மருந்தீடு முதலியவைகள்.

---

## 14 காசத்திற்குக் 'கரிசாலை நெய்'

தூதுவளை கரிசாலை வசுவாசி
சங்கினுடன் சுழலாவாரை
யோதுமிலைச் சாறுவகைக் கொருநாழி
யாயிதில்நெய் யுரியுமெண்ணெய்
யீதளவாய்க் கூட்டுக்கடுக் காய்நூறும்
பொடியாகா வீடிதோல்வெல்ல
மாதிருபான் பலஞ்சேர வொன்றுபடக்
கூட்டுசுக்கு வாய்விளங்கம் (ருக)

வெண்கடுகு கொடிவேலி சிறுதேக்குத்
திப்பிலிசெவ் வியமுங்காயங்
கண்மிளக திவிடயஞ் சிரகம்பொன்
முசுட்டைவேர் கடுகரோணி
விண்சுழலா வாரைபெருங் குரும்பையுங்
குங்கிலிய மேலமோமம்
மண்ணியதிப் பிலிமூல மரேணுக
மிவையொன்று வகைகளஞ்சே (ருஉ)

அளவாகுஞ் சூரணஞ்செய் தரைப்பலம
ரப்பொடி யுமதனிற்கூட்டி
யிளமந்தாக் கினிதன்னிற் குழம்பாகும்
பக்குவத்தி றக்கியோர்நா
ளளவாறிப் பதினைந்து தினந்தானி
யப்புடத்தி லமரவைத்தும்
வெளியெடுத்தொ ருகொட்டைப் பாக்களவுண்
மண்டலம்மாபேம் வியாதிகேளே (ருரு)

பொருமீளை காசசுவா சமிரும
லிதுவெல்லாம் புகாதுகைப்பு
மருபுளிப்பு டன்விட்டுப் பசுவின்பால்
வெள்ளாட்டுப்பால் மற்றுநெய்யும்
பருப்புடன் புடலங்காய் கவுதாரி
காடைகொச்சைப் பத்தியங்கள்
முருங்கிலைப்பிஞ் சுங்கொண்டு வரலாகு
மிந்தமு றையைச்செய்யே (ருச)

(இ-ள்)

| | |
|---|---|
| தூதுவளை | கரிசாலங்கண்ணி |
| ஆடாதோடை | சங்கம் இலை |
| சுழலாவரை | |

இம் மருந்துகளின் சாறுகள் வகைக்கு ஒரு படி

| | |
|---|---|
| பசுவின் நெய் | ½ படி |
| எள்ளெண்ணெய் | ½ படி |

இவைகளை யொன்று கலந்து, கடுக்காய் 100(எண்ணிக் கையில்) எடுத்துக் கொட்டை நீக்கித் தூள் செய்து, சாறு கலந்த நெய்யுடனே போட்டு, வெல்லம் 20 பலமும் போட்டு, ஒன்றாகக் கலந்து,

| | |
|---|---|
| சுக்கு | வாயுவிடங்கம் |
| வெள்ளைக்கடுகு | கொடிவேலி வேர் |

| | |
|---|---|
| சிறு தேக்கு | திப்பிலி |
| செவ்வியம் | பெருங்காயம் |
| மிளகு | அதிவிடயம் |
| சீரகம் | பொன்முசுட்டை வேர் |
| கடுகரோகிணி | சுழலாவாரை வேர் |
| பெருகுரும்பை | குங்கிலியம் |
| ஏலக்காய் | ஓமம் |
| திப்பிலி மூலம் | காட்டு மிளகு |

இவைகளை வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை வீதம் எடுத்துக் கல்லுரலிட்டிடித்து வஸ்திரகாயஞ் செய்து அதனுடன் கலந்து சுத்திசெய்த இரும்புத்தூள் $\frac{1}{2}$ பலமும் போட்டு அடுப்பின்மேலேற்றி மந்தாக்கினியாலெரிக்கவும். இதைக் குழம்பு பக்குவத்திலிறக்கி ஒரு நாளைக்கு ஆறவைக்கவும். பின்பு இதை ஒரு பாண்டத்திலிட்டு 15 நாளைக்கு நெற்குவியற்குள் புதைத்து வைக்கவும் இதில் ஒரு கொட்டைப்பாக்களவெடுத்துச் சாப்பிட ஈளை, காசம், சுவாசம், இருமல் இவைகள் தீரும்.

பத்தியம்:—

கசப்புப் பதார்த்தங்களையும், புளிப்புப் பதார்த்தங்களையும் நீக்கவும். பசுவின்பால், வெள்ளாட்டுப்பால், பசுவின்நெய், துவரம்பருப்பு, புடலங்காய், கௌதாரி இறைச்சி, காடையிறைச்சி,முருங்கையிலை, முருங்கைபிஞ்சு இவைகளைக்கூட்டிக்கொள்ளவும்.

---

## 15. காசத்திற்குக் 'குடி நீர்'

சிறுவழுதலைவேரும் வசுவாசி
சங்கினிலை சிந்திற்றண்டுஞ்
சிறுதேக்கு நாகரம்பே ராம்பிலையுந்
தேட்கொடுக்கி சேரக்கூட்டி

யுறவிரு நாழிதண்ணீ ரொருபானை
தனிலிட்டு முழக்காய்க்காய்ச்சி
நறுந்தேனுந் திப்பிலியுங் கலந்துண்ண
சயங்காச நலமதாமே (நரு)

(இ-ள்)

சிறு கத்தரிவேர் ஆடாதோடை இலை
சங்கின் இலை சீந்தில்கொடி
சிறுதேக்கு சுக்கு
பேராம்பல் இலை தேட்கொடுக்கு இலை

இவைகளை வகைக்கு (1 பலம்) வீதமெடுத்து இடித்துப் பானையில் போட்டு, 2 படி தண்ணீர்விட்டு, அடுப்பின் மேலேற்றி ஒரு உழக்காகும் வரை வற்றக்காய்ச்சவும். இக் கஷாயத்தை வடிகட்டித் தேனும் திப்பிலிச் சூரணமும் சேர்த்துச் சாப்பிட்டுவர க்ஷயம், காசம், இவைகள் தீரும்.

---

## 16. காசத்திற்கு மருந்து

குங்கிலியம் வெள்ளையதாய்ப் பொடிசெய்து
சாறுவேளைக் கூறுமூலந்
தங்குவெள்ளை யுள்ளிவசம் பதுநறுக்கி
நல்லெண்ணெய் தன்னிலிட்டு
அங்கிதனிற் கொதிப்பித்து வடித்துவைத்
திதனையுள்ள ருந்தும்போது
சங்கையில்லை யெண்ணெயினால் காசமுதற்
சுவாச காசந்தானும் போமே (நசா)

(இ-ள்)

வெள்ளைக் குங்கிலியத்தைப் பொடிசெய்து, அதனுடன் சாறுவேளைவேர், வெள்ளைப்பூண்டு, வசம்பு இவைகளையும் சேர்த்திடித்து (வகைக்கு 1 பலம்) நல்லெண்ணெய் (2 சேர்

7 OCT 1974

விட்டுக்) குழப்பி அடுப்பின் மேலேற்றி எரித்துப் பக்குவ வாக இறக்கவும். இவ்வெண்ணெயைத் தினமும் சாப்பிட்டு வரக் காசம், சுவாச, காசம், முதலியவை தீரும்.

குறுப்பு:—சாறுவேளை என்பது சிறுசாரணை

## 17. சுவாச காச கிருதம்

சங்காடா தோடைமிள கரணைபே
ராம்பல்நொச்சி தான்றிநெல்லி
யங்கடுக்காய் சாறுவேளை மஞ்சளிவை
பத்துக்கு ளாறுவேருந்
தங்குவகை யொன்றுக்கு மூன்றுபலம்
பெருவாகை தானுமுன்னை
பங்குபெருங் குமிழ்வில்வம் பெருமல்லிச்
சிறுமல்லிப் படுநெருஞ்சில் (௧௭)

படுகண்டங் கத்திரிபா திரிசிறு
வழுதலைவேர் பத்தொன்றுக்கு
விடுமிருப லமாக மாவலிங்கஞ்
செம்முள்ளி வேருந்தண்ணீர்
அடுமுட்டான் மூலமுடன் கொடிவேலி
வீழுதிவே ராயிற்புங்குங்
கடுகளாத் தழுதாழை மூக்கரட்டை
நாணல்புன்னை காணுதண்டை (௧௮)

ஆகவிதுபன் னிரெண்டு வகைவேருந்
தூக்குபல மைம்பதாகும்
பாகமிது முன்மருந்துங் கூட்டுவசு
வாசியிலை பலமெண்ணுன்கும்
ஏகமதா யிருதூணி நீரைவிட்டுப்
பதக்காக வெரித்துக் காய்ச்சி
நீகடா யம்வடித்து மிதையுநா
ழிபசுநெய் யினிற்கூட்டே (௧௯)

கூட்டிடுதிப் பிலிமூலங் கொடிவேலி
சிறுதேக்குங் குடசப்பாலை
யூட்டருசி கற்கடகசிங் கிபுன்னை
கடுரோணியுற்ற செவ்விய
நாட்டியத்திப் பிலியேல மிருசீரந்
திரிபலையும் நல்லரத்தை
கோட்டமிந்து மசமோத மிளகுவாலு
ளுவையரிசி கொடுகற்பூரம் (சய)

முந்திரிகைப் பழமட்டி யிலவங்கம்
லவங்கபத்திரி மொழிந்ததெல்லாஞ்
சந்திரண்டு காசினெடை வீதமெட்டுக்
கடாயஞ்செய் ததிற்கலந்து
வந்த நெய்யை நக்கிடவும் ரத்தபித்தங்
காசமிரைப் பையமீழை
யுந்திரும லிவையெல்லாந் தீருமுறை
சரபேந்திர னுரைத்ததாமே (சக)

(இ-ள்)

சங்கம் வேர் — ஆடாதோடை வேர்
மிளகரணை வேர் — பேராம்பில் வேர்
நொச்சி வேர் — தான்றிக்காய் வேர்
நெல்லிமுள்ளி — கடுக்காய்த் தோல்
மஞ்சள் — சிறு சாரணை வேர்

இவைகள் வகைக்கு 3 பலம்

பெருவாகை — முன்னை
பெருங்குமிழ் — வில்வம்
பெருமல்லி — சிறுமல்லி
நெருஞ்சில் — கண்டங்கத்திரி வேர்
பாதிரி — சிறுவழுதலை வேர்

இவ்வகைகளின் வேர் தனித்தனியே 2 பலம்

| | |
|---|---|
| மாவலிங்கம் வேர் | செம்முள்ளிவேர் |
| தண்ணீர்விட்டாங்கிழங்கு | கொடிவேலிவேர் |
| விழுதிவேர் | புங்கு |
| தழுதாழை வேர் | மூக்கரட்டைவேர் |
| நாணல்வேர் | புன்னைவேர் |
| ஆதண்டம்வேர் | ஆயில்யமரப்பட்டை |

இச்சரக்குகளைத் தனித்தனியே 50 பலமும், ஆடாதோடையிலை 32 பலமும் எடுத்து எல்லாவற்றையும் இடித்து 8 மரக்கால் ஜலம்விட்டு அடுப்பின் மேலேற்றி இரு மரக்காலாகும் வரை வற்றக்காய்ச்சவும். பின்பு வடிக்கட்டிப் பசுவின் நெய் 4 படி விட்டு,

| | |
|---|---|
| திப்பிலிமூலம் | கொடிவேலி வேர் |
| சிறுதேக்கு | குடசப்பாலை அரிசி |
| கற்கடசிங்கி | புன்னைமரப்பட்டை |
| கடுகரோகிணி | செவ்வியம் |
| திப்பிலி | ஏலக்காய் |
| சீரகம் | கருஞ்சீரகம் |
| கடுக்காய்த்தோல் | நெல்லிவற்றல் |
| தான்றித்தோல் | சிற்றரத்தை |
| கோஷ்டம் | இந்துப்பு |
| ஓமம் | மிளகு |
| வாலுளுவையரிசி | கல்ப்பூரம் |
| முந்திரிகைப்பழம் (திராக்ஷை) | கிராம்பு |
| லவங்கப்பத்திரி | |

இச்சரக்குகளை வகைக்கு 2 காசெடை வீதமெடுத்து இடித்து 8 மடங்கு ஜலம்விட்டு, அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றாகக் காய்ச்சி வடிகட்டிக் கஷாயம் கலந்த நெய்யுடனே ஊற்றிப் பக்குவமாக எரித்துப் பதத்திலிறக்கவும். இந் நெய்யைச் சாப்பிட்டுவர இரத்தபித்தம், காசம், இரைப்பு, கபக்கோளாறுலேற்பட்ட ஈளை, இருமல் முதலிய ரோகங்கள் தீரும்.

4

---

## 18 காசத்திற்கு 'நிரா அபையாதி லேகியம்,

கடுக்காய் நூறுபலம் பாப்பார
முள்ளியின்வேர் காணவ்வீத
மிடுக்கிடித் திருதூணி நீரைவிட்டுக்
குறுணியா யெரித்துக்காய்ச்சி
யெடுமிதிற் பழவெல்ல நூறுதொடி
கரைத்திட்டுமி லேகியம்போ
லடுபாக மாய்க்காய்ச்சித் திரிகடுகு
முப்பலையு மேலமாமே (சஉ)

இலவங்கம் வங்கப்பத்திரி சிறுநாகப்
பூவுமவை யியம்பொன்றுக்குப்
பலமொன்று கூட்டி யெலாஞ் சூரணஞ்செய்
ததிற்றாவிப் படிதேன் வார்த்துக்
கலந்துபின் னிருநேரங் கொண்டுவரக்
கபமிரைப்புங் காச சுவாசம்
பலசயமி ருமலுப்பி சங்களுந்
தீருமிதைப் பரிந்து செய்யே (சங)

(இ-ள்)

முற்றிய கடுக்காய்—100 பலம்.
பாப்பாரமுள்ளி (கண்டங்கத்திரி வகை)— 100 பலம்.

இவைகளை இடித்து 8 மரக்கால் தண்ணீர் விட்டு அடுப்பின்மேலேற்றி 1 மரக்காலாகும்வரை எரித்து வடிகட்டிக்கொள்ளவும். இதனுடன் பழய வெல்லம் 100 பலம் போட்டுக் கரைத்து அடுப்பின் மேலேற்றிப் பாகு செய்து

| | |
|---|---|
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | கடுக்காய்த் தோல் |
| நெல்லிக்காய்வற்றல் | தான்றிக்காய்த்தோல் |
| ஏலக்காய் | கிராம்பு |
| லவங்கப்பத்திரி | சிறுநாகப்பூ |

இவைகளை வகையொன்றுக்கு ஒரு பலம் வீதமெடுத்துச் சூரணித்து வஸ்திரகாயம் செய்து முன்னே தயாராக இருக்கும் பாகுடனே சேர்த்துக் கலந்து, லேகியமாகக் கிண்டவும். இதை இறக்கி ஆறியபின்பு, ஒருபடி சுத்தமான தேனை ஊற்றிக் கலந்து கொள்ளவும். இந்த லேகியத்தைத் தினம் 2 வேளை (காலையிலும் மாலையிலும்) (ஒரு கழற்சிக்காயளவு) சாப்பிட்டுவரக் கபம், இரைப்பு, காசம், சுவாசம், க்ஷயம், இருமல், உப்பிசம், முதலிய ரோகங்கள் தீரும்.

---

## 19. காச முதலானதிற்குத் 'திரிலோக சிந்தாமணி'

சூதம் வெள்ளி வைரமுருக் குச்செம்பு
சங்கமப்பிரகஞ் சொர்ண முத்தும்
ஓதுபிர வாளமிவை யீரைந்து
மாம்பற்ப முரியகெந்தி
கோதுபச்சை நாபிமனோ சிலைதாளத்
கங்கனெல்லாங் கூறொன்றுக்கு
வீதமொரு பலமாகக் கல்வத்தி
லிட்டரைக்க மேலுங்கேளே (௨௪)

ஏழுதினங் கொடிவேலிக் கஷாயத்தி
லரைத்துப்பின் னெருக்கம் பாலிற்
சூழுதின மூன்றுநொச்சில் வேர்க்குடிநீ
ராலுமத்தித் துலர்வுலர்த்தி
மீழிடிசூ ரணஞ்செய்து மாறியபின்
சமபாக மிரதபற்பங்
கேழுமிதி னுன்கிலொன்று வைக்ராந்தம்
பற்பம்ரெண்டுங் கிளையாய்க்கூட்டே (௨௫)

கூட்டிதனை முருங்கைவேர்க் கஷாயத்தி
லேழுதினங் கொண்டரைத்து

மூட்டிருபத் தொருநாளுங் கொடிவேலி
குடிநீரால் முளையிஞ்சிச்சா
றாட்டுதின மூன்றுகஞ்சா விலைநீருஞ்
சம்பீரச்சா றுறுங்கொம்மட்டி
நாட்டிடுமா தளம்பழநீ ராலாட்டிச்
சூரணத்தி னுலத்தொன்றே (௨௬)

பொரித்திட்ட வெண்காரஞ் சுத்திசெய்த
நாபிரண்டும் புகலும் பங்காய்
நிறுத்திட்டுக் கலநன்று யரைத்துப்பின்
சாதியின்காய் நேரிலவங்க
முறிசுக்குந் திப்பிலியு நாவிக்குஞ்
சமபாகம் ஒவ்வொன்றுந்தான்
பெருமித்தைக் கொம்மட்டிமா தளம்பழச்சா
றிட்டாட்டிப் பின்னெடுத்தே (௨௭)

இடுநிட்க மொன்றளவாய் வில்லைசெய்து
நிழலுலர்த்தி யெடுத்து வைத்துக்
கொடு தேனிற் றிப்பிலியி லனுபானஞ்
செய்தருந்தக் கோழை காசம்
ஓடுசய மிருமலுட னிரைப்பீதுகள்
தீர்ந்துபோமுறு பலநோய்க்குங்
தொடுமனுபா னங்கண்டு மிட்டிடலா
மிம்முறையாற் சுகமதாமே (௨௮)

(இ-ள்)

வெள்ளிபற்பம் தங்க பற்பம்
பாதரஸ பற்பம் முத்து பற்பம்
வைரபற்பம் பவழ பற்பம்
செம்பு பற்பம் எஃகு பற்பம்
சங்கு பற்பம் அப்பிரக பற்பம்

இவைகள் வகைக்கு 1 பலம்

| | |
|---|---|
| சுத்திசெய்த கெந்தகம் | சுத்திசெய்த நாபி (ஈரமானது) |
| ,, மனோசிலை | ,, தாளகம் |

இவைகளையும் வகைக்கு ஒரு பலமெடுத்துக் கல்வத்தி லிட்டுத் தூள் செய்துகொண்டு, பற்பவகைகளையும் போட்டுக் கொடிவேலிவேர் கஷாயம் விட்டு ஏழு தினங்கள் அரைத்துக் கொண்டபின், எருக்கப்பால்விட்டு மூன்று நாளரைக்கவும். நொச்சிவேர்க் கஷாயத்தினுல் 3 நாளரைத்துக் காயவைத்துச் சூரணித்துக் கொண்டு, இம்மருந்திற்குச் சமன் ரஸபஸ்மம், அதற்கு நாலிலொன்று வைக்ராந்த பற்பமுங் கூட்டி, முருங்கைவேர் கஷாயத்தினுல் 7 தினங்கள் அரைத்துக் கொள்ளவும். கொடிவேலிக் கஷாயத்தில் 21 தினமும், குருத் திஞ்சி சாற்றினுல் 3 தினமும், கஞ்சாயிலைச்சாறு, கொம்மட்டி மாதளம்பழச்சாறு இவைகளின் சாற்றினுல் முறையே 3 தினங்களும் அரைத்துக்காயவைத்துக் கொள்ளவும். இச் சூரணத்தின் நான்கிலொருபங்கு பொரித்த வெங்காரமும், சுத்திசெய்த நாபியும் சேர்த்து அரைத்துக்கொண்டு,

| | |
|---|---|
| சாதிக்காய் | கிராம்பு |
| சுக்கு | திப்பிலி |

இவைகளையும் சமனெடுத்துச் சூரணத்துடன் கலந்து கொண்டு, கொம்மட்டி மாதுளம்பழச்சாறுவிட்டு நன்ருக அரைத்து, வராகனெடையளவுள்ள வில்லைகளாகச் செய்து நிழலில் உலர்த்திக்கொள்ளவும். இதைத் தேனிலோ அல்லது திப்பிலிச் சூரணத்திலோ சாப்பிட்டுவரக் காசம், கோழை, க்ஷயம், இருமல், இரைப்பு இவை தீரும். பற்பல நோய்களுக்கும் அதற்கேற்றபடி அனுபானத்தில் கொடுக்கவும்.

## 20. காசத்திற்கு 'ரச பற்பம்'

பாத்ரத நான்குநிட்கங் கொப்பரையின்
உள்ளடைத்துப் படுவாய்மூடி

யீதையொரு நாற்பதுநா ளசுவத்தின்
மூத்திரத்தி லிடுபுதைத்து
வோதளவு நாள்கழித்து மெடுசெம்பு
பித்தளையொன் றெருகுழாய்க்குள்
போதடைத்துச் சேலைமண்செய் தொரு பானைக்
குள்ளதனைப் பொருந்தவையே (சகூ)

வைத்துமணல் மேற்சொரிந்து மறுபதுநா
ழிகையுந்தீ மன்றெரித்து
மத்திதின்சூ டாறியபின் னெடுத்தும்பார்
பற்பமதாம் வருநோய்க்கெல்லா
மித்தையனு பானத்தா லிடுபொழுது
காசசுவா சிரைப்புந்தீரு
முத்திரும லீளைகளுங் குணமாகுங்
சரபேந்திரன் மொழிந்ததாமே (ருய)

(இ-ள்)

சுத்திசெய்த பாதரஸம் 4 வராகனெடை எடுத்து ஒரு கொப்பரைத் தேங்காய்க்குள்ளடைத்து நன்றாக மூடவும். குதிரை லாயத்தில் சிறிய குழிதோண்டி, மூத்திரம் சாரும் வண்ணம் பூமியில் மேற்சொன்ன கொப்பரையைப் புதைத்து 40 நாட்க்ள் சென்றபின் ரஸத்தைத் தனியாக எடுத்து, ஒரு செப்புக் குழாய்க்குள்ளோ அல்லது பித்தளைக் குழாய்க் குள்ளோ அடைக்கவும். பின்பு சேலைமண்செய்து ஒரு பானைக் குள்ளிதை வைக்கவும். பானைக்குள் மணலைப் போட்டு பானை யை அடுப்பின் மேலேற்றி 60 நாழிகைக் கமலாக்கினியா லெரிக்கவும். சூடாறியபின்பிதை எடுத்து உடைக்கத் துல்ய மான **பாதரஸ பற்பம்** கிடைக்கும். தக்க அனுபானங்களில் கொடுத்துவரக் காசம், சுவாசம், இரைப்பு, ஈளை இருமல் இவைகள் குணமாகும்.

---

## 21. சிலேஷ்ம காசத்திற்கு நெய்

தேள் கொடுக்கி யறுபத்து நாலு பலம்
வெட்டியிடி தண்ணீர் தூணி
மீள்க விட்டு மிதைக் காய்ச்சி நாழி
யாயிறக்கி மிளகு சுக்குந்
தாள்கு மிந்தும் கற்கடக சிங்கியத்தித்
திப்பிலியுந் தண் வசம்புங்
காள்கடுகு ரோகிணிசெங் கொடிவேலி
வேர்ப்புரணி காமனுமே (ருக)

எவச்சாரஞ் சிறுமூல கங்கள் கண்டங்
கத்திரிவே ரின்புராணி
நவபங்கம் பாளையின்வே ராயிலின்றேல்
சாறடைவேர் நவிலொன்றுக்குப்
பவமிருக மூஞ்சிட்டு மரைகலந்து
கொச்சை நெய்யும் பால் நாழி
கவனஞ்செய் தெரிவடித் தாறினுற்
பதின்பலந்தேன் கலந்துநக்கே (ருஉ)

(இ-ள்)

தேள்கொடுக்கிப்பூண்டு 64 பலம் எடுத்துச் சிறு சிறு துண்டுகளாக்கி 4 மரக்கால் சுத்த ஜலம் விட்டு, ஊறவைத்துப்பின், அடுப்பின் மேலேற்றி 4 படியாகும் வரை வற்றக் காய்ச்சவும். இதை வடிக்கட்டிக் கொண்டு.

| | |
|---|---|
| மிளகு | சுக்கு |
| இந்துப்பு | கற்கடசிங்கி |
| யானைத்திப்பிலி | வசம்பு |
| கடுகரோகிணி | செங்கொடிவேலி வேர் [பட்டை |
| ஜாதிக்காய் | யவக்ஷாரம் |
| திப்பிலி | கண்டங்கத்திரி வேர்ப் [பட்டை |
| ஆடுதீண்டாப் பாளை வேர் | ஆயில்ய மரத்தின் வேர் |
| சாறடை வேர் | |

இவைகளை வகைக்கு 2 கழஞ்சு (கழஞ்சு-1¼ வராக னெடை) வீதமெடுத்து ஷ்டிகஷாயம் விட்டு நன்றாக அரைத்து

| | |
|---|---|
| வெள்ளாட்டு நெய் | 4 படி |
| வெள்ளாட்டுப் பால் | 4 படி |

சேர்த்து, எல்லாவற்றையும் குழப்பி, அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் வடிக்கவும். நெய் நன்றாக ஆறியபின் தேன் 10 பலம் விட்டுக் குழப்பிக் கொண்டு சாப்பிடவும்.

---

## 22. சுவாச காசத்திற்கு மருந்து.

சிறுதேக்குக் கற்கடக சிங்கி சுக்குக்
கறிமஞ்சள் திப்பிலி மூலஞ்
சிறு மல்லி சடாமாஞ்சில் கொடிவேலி
யசமோதந் திப்பிலி தானுஞ்
சிறுவழுதலையுள்ளிக் கருநொச்சில்
வெண்ணொச்சிற் செவ்விய முன்னை
மறுகண்டங் கத்திரிபா திரிநெல்லி
முள்ளிபெரு வாகையாமே (ருரு)

வசுவாசி கொன்றையின்வேர் பெருங்குமிழ்
தூதுவளை வசம்பரத்தை
பசுவில்வம் பெருமல்லி யரிதகிக்
காய்நெருஞ்சிற் பகருந்தான்றி
கசிகடுகி லவங்கமகி லேலஞ் செம்
புளிச்சை கிரும்பிந்துப்பு
மசியானைத் திப்பிலிமா தளம்பழம்
துராயுத்தா மணிநாகப்பூ (ருச)

பூணுமனோ சிலைதேற்றுப் பெருங்காயம்
பிருவினடிப் பூண்டுமேனி

காணுமுள்ளங் கிக்கிழங்குந் தாளிசபத்
திரிசாதிக் காய்க்கீழ்நெல்லி
பூணுகையா னிவட்சார மருதோன்றி
நவச்சார முறைபெரும்புல்
பேணுமுருக் கழிஞ்சிசர்க் கரைதேன்பாற்
றேட்கொடுக்கி பிரசித்தமாமே (ருரு)

(இ-ள்)

| | |
|---|---|
| சிறுதேக்கு | கற்கடசிருங்கி |
| சுக்கு | மஞ்சள் |
| திப்பிலி மூலம் | சிறுமல்லி |
| சடாமாஞ்சில் | கொடிவேலிவேர் |
| ஓமம் | திப்பிலி |
| சிறுவழுதலை (கத்திரி) | பூண்டு |
| கருநொச்சி | வெண்ணொச்சி |
| செவ்வியம் | முன்னை |
| கண்டங்கத்திரி | பாதிரி |
| நெல்லிமுள்ளி | பெருவாகை |
| ஜாதிப்பத்திரி | கொன்றைவேர் |
| பெருங்குமிழ் | தூதுவேளை வேர் |
| வசம்பு | சிற்றரத்தை |
| வில்வம் | பெருமல்லி |
| கடுக்காய்த்தோல் | நெருஞ்சில் |
| தான்றிக்காய்த்தோல் | கடுகு |
| கிராம்பு | அகில் |
| செம்பிளிச்சை | லவங்கப்பத்திரி |
| இந்துப்பு | யானைத்திப்பிலி |
| மாதுளம்பழம் | திராய் |
| உத்தாமணி | சிறுநாகப்பூ |
| மனோசிலை (சுத்தியானது) | தேத்தாங்கொட்டை (சீவியது) |
| பெருங்காயம் (பொரித்தது) | பிராப்பூண்டு |
| குப்பைமேனி | முள்ளங்கிக்கிழங்கு |

| | |
|---|---|
| தாளிசபத்திரி | சாதிக்காய் |
| கீழாநெல்லி | கையாந்தகரை |
| யவட்சாரம் | மருதோன்றி |
| நவச்சாரம் | பெரும்புல் |
| முருக்கு (கல்யாண) | அழிஞ்சில் |
| சர்க்கரை | |

இச்சரக்குகளை வகைக்குச் சமபாகமாக எடுத்து நன்றாக உலர்த்திக் கல்லுரலிலிட்டிடித்துத் தூள்செய்து வஸ்திர காயஞ்செய்து கொள்ளவும். இத்தூளைத் தேனிலோ, பாலிலோ அல்லது சர்க்கரையிலோ கொடுக்கவும்.

---

## 23. காசத்திற்குப் பூசினி நெய்

பூசணிக்காய் நீர்குருணி பசுவின்நெய்
யிருபடியிற் புகட்டியேலம்
வீசுகரிப் பாலையின்வே ரிலவங்க
மிந்துசுக்கு விலாமிச்சம்வேர்
பேசதிங்கம் விழாலரிசி நாகப்பூப்
பச்சிலையும் பெருத்த கோட்டந்
தேசுவகெந் தியின்வேர சமோதஞ்
சிறுதேக்குந் தேவதாரம் (ருசு)

தருவகை யொன்றினுக்கு முக்கழஞ்சாம்
பூசணிக்காய்ச் சாற்றுலாட்டி
மருவிட்டு வெச்செனவு நாலுதின
மூறியைந்தாம் மன்னு நாளில்
குரு வடித்த திற்கண்டுச் சர்க்கரை நாற்
பலங்கூட்டிக் கொள்நாளொன்றுக்
கொரு மூன்று கழஞ்சுண்ணக் காசரோகஞ்
சுவாசகா சம்விக்க லோடிப்போமே (ருஎ)

(இ ள்)

| | |
|---|---|
| பூசினிக்காய்ச்சாறு | 1 குறுணி |
| பசுவின் நெய் | 2 படி |

இவைகளை யொன்று கலந்து,

| | |
|---|---|
| ஏலக்காய் | கரிப்பாலைவேர் |
| கிராம்பு | இந்துப்பு |
| சுக்கு | விளாமிச்சம்வேர் |
| அதிங்கு (அதிமதுரம்) | விழாலரிசி |
| சிறு நாகப்பூ | பச்சிலை |

இச்சரக்குகள் வகையொன்றுக்கு 3 கழஞ்சு ($3\frac{3}{4}$ வராக னெடை) எடுத்துப் பூஷணிக்காய்ச் சாறுவிட்டு நன்றாக வரைத்துச், சாறுகுழப்பிய நெய்யுடனே சேர்த்து 4 தினங் களுக்கு ஊறவைத்து ஐந்தாந் தினத்தில் இம்மருந்தை அடுப் பின் மேலேற்றி, எரித்துப் பக்குவமாகப் பதத்திலிறக்கவும். இதை வடிகட்டி 4 பலம் சர்க்கரை கூட்டிக்கொண்டு, தின மொன்றுக்கு 3 கழஞ்சு வீதம் (பாலுடனே) சாப்பிட்டு வர வும்.

தீரும் வியாதிகள் :—

காசரோகம், சுவாசகாசம், விக்கல் முதலியவைகள்.

---

## 24. காசம், இளைப்பு, இரைப்புப் பிணிசத்திற்குத் தூதுவேளை நெய்

தூதுவளை வேர்ப்புரணி காயவைத்துந்
தூளிடித்த தொருசிரங்கை
யோதுகடுக் காயதின்றாள் மஞ்சளின்றாள்
மிளகின்றா ளொருவகைக்கு
யீதுகாலே யரைக்கால்சிரங் கைத்தூளுங்
கலந்துமிதை நெய்யதனிற்
கோதகலக் காய்ச்சியிடு மதிலிட்டுக்
கிண்டிவைத்துக் கொள்ளப்போமே (ருஅ)

(இ-ள்)

தூதுவேளை வேரிலுள்ள மேல் தோலை உரித்துக் காய வைத்து, இடித்து வஸ்திரகாயஞ் செய்துகொண்டு எடுத்த தூள் ஒரு சிரங்கையுடன்

கடுக்காய் தூள் மிளகு பொடி
மஞ்சட் தூள்

இவைகள் வகைக்குக் காலேயரைக்கால் சிரங்கை வீத மெடுத்துப் பசுவின் நெய் (1 சேரிலே) குழப்பி, அடுப்பின் மேலேற்றிப் பக்குவப்படுத்தி, கிளரிவைத்துக் கொள்ளவும். இதை வடிக்கட்டாமல் கடுகுடனே உபயோகிக்கவும்.

---

## 25. காசத்திற்குத் 'திப்பிலி ரசாயனம்'

திப்பிலிநாற் பலமேல மிலவங்கப்
பட்டையும்பத் திரிகிராம்பு
மொப்பிலொரு வகைக்குமொரு தொடியாகு
மிரியல்சுக் கோமமல்லி
திப்பிலிமூ லஞ்செவ்வியங் கொடிவேலி
தாளிசபத் திரிதக்கோல
நப்பிசத குப்பைசிறு தேக்குடன்வாய்
விளங்கமும்நற் சீரங்காணே (ருக)

காணுவகைக் கரைப்பலங் கரிசாலைப்
பொடியுஞ்சர்க் கரையிரண்டு
மூணுவகைக் கிருதொடியா யிவையெல்லாஞ்
சூரணங்தே னென்றினுக்கா
லாணுபடி யளவிட்டு லோகபற்ப
மரைப்பலம தனிற்கொள்ளப்
பூணுபல ஹீனமும்பாண் டனல்மந்தம்
சுவாசகாசம் போகுந்தானே (சுஎ)

(இ-ள்)

திப்பிலி — 4 பலம்

ஏலக்காய் கிராம்பு
இலவங்கப்பட்டை இலவங்கப்பத்திரி

இவைகள் வகைக்கு 1 தொடி

| | |
|---|---|
| மிளகு | சுக்கு |
| ஓமம் | கொத்தமல்லி |
| கண்டத்திப்பிலி | செவ்வியம் |
| கொடிவேலி வேர் | தாளீசபத்திரி |
| தக்கோலம் | சதகுப்பை |
| சிறுதேக்கு | வாயுவிடங்கம் |
| சீரகம் | |

இவைகள் வகைக்கு 1¼ பலம்

உலர்ந்த கையாந்தகரை யிடித்த தூள்
சர்க்கரை

இவை வகைக்கு 2 தொடி

இச்சரக்குகள் அனைத்தையும் வெயிலில் உலர்த்திக் கல்லுரலிலிட்டிடித்து, வஸ்திரகாயஞ் செய்து கொள்ளவும். இதனுடன் சுத்தத் தேன் ¼ படி சேர்த்துக் குழப்பி, சுத்தமான அய பற்பம் ½ பலமும் கலந்துகொள்ளவும்.

இம்மருந்தைக் கழற்சியளவு தினம் 2 வேளை சாப்பிடப் பலவீனமும், காசமும், பாண்டு, காங்கை, மந்தம் முதலிய ரோகங்களும் தீரும்,

குறிப்பு:— தொடி என்பது ஒரு பலமாகும்,

---

## 26. காசத்திற்குத் 'திப்பிலி ரசாயனம்'

திப்பிலியெண் பலமிளகு வாய்விளங்கஞ்
சிறுதேக்குஞ் சீரகஞ்சுக்குந்
தப்பிலொரு வகைக்குநாற் றொடிகொடி
வேலிகரி சாலேத்தூளுந்
திப்பிலிமூ லஞ்செவ்வியம் வகையொன்றுக்
கிருபலமுஞ் சேரக்கூட்டி

யொப்பிலரப் பொடியிரு பலமிட்டுத்
தூளிடித்து மொன்ருய்த்தாக்கே (சூக)

தாக்கிடுசர்க் கரையுஞ்சே ரொன்றரைதே
னரைச்சேருஞ் சாரித்தூட்டி
யாக்குவதைப் பதினைந்து தினங்கள்தா
னியப்புடத்தி லமரவைத்து
நோக்கியெடுத் திதையுண்ணச் சயகாச
சுவாசங்கள் நோயாங்குன்மந்
தேக்கிடரோ சிகம்வாந்தி யிவைமுதலா
னதுதீருஞ் செய்துபாரே (சூஉ)

(இ-ள்)

திப்பிலி 8 பலம்

| | |
|---|---|
| மிளகு | வாய்விளங்கம் |
| சிறுதேக்கு | சுக்கு |
| சீரகம் | |

இவைகள் வகைக்கு 4 பலம்

| | |
|---|---|
| கொடிவேலி வேர் | கரிசாலைத்தூள் |
| திப்பிலிமூலம் | செவ்வியம் |
| சுத்திசெய்த அரப்பொடி | |

இவைகளை வகைக்கு 2 பலவீதமெடுத்துக் காயவைத்துக் கல்லுரலிலிட்டிடித்து வஸ்திரகாயஞ் செய்துகொண்டு, சர்க்கரை 1½ சேரும், தேன் ½ சேரும் விட்டு நன்ருகப் பிசைந்து இடித்து லேகியமாக்கிக்கொள்ளவும். இதை 15 தினங்களுக்குத் தானிய புடத்தில் வைக்கவும். பின்பு இதையெடுத்துத் தினம் 2 வேளை வீதம் கழற்சிக்காயளவு சாப்பிடக் காசம், சுவாசம், குன்மம், அரோசகம், வாந்தி முதலிய ரோகங்கள் தீரும்,

## 27. காசத்திற்குக் 'குண்டலாதி லேகியம்'

வனசங்கின் வேரொருநாற் றன்பதுகண்
டங்காரி மன்னுஞ்செவ்விய
மினமொன்றுக் கேளொருபா ஊைந்துபல
வீதமதா யிட்டுவில்வந்
தனில்வேரு நிலக்குமிழும் பாதிரிகாட்
டாமணக்குஞ் சார்நெருஞ்சிற்
கனமுள்ளிக் கத்திரியா னைநெருஞ்சிற்
பேர்மல்லி கண்டங்காரி (உஙு)

சிறுமல்லி யிவையெல்லாம் வேரின்வகைக்
கொடிவேலி திப்பிலிமூலஞ்
சிறுதேக்குச் சடாமாஞ்சில் வகையொன்றுக்
கிருபதாந் தெரிபலங்க
ளறுபதுபடி தண்ணீர்விட் டுயெட்டி
லொருபங்கா யனலிற்காய்ச்சி
யிறுத்திட்டு வடிக்கொண்டு நூறுடனாற்
பலவெல்ல மிடுபாகாக்கே (உச)

பாகதனிற் றிரிபலைகி ராம்பேலம்
நாகப்பூப் பத்திரித்தானும்
மாகவொரு வகைக்குழுப் பலஞ்சீரஞ்
சிறுதேக்கு மரிதகிப்பூ
வீகவிரு பலமோமம் பெருங்காய
மூங்கிலுப்பு மிளகிவைக்குப்
பாகமது நாலுபலந் திப்பிலியு
மிருபதுப லஞ்சுக்கெட்டே (உரு)

பலமிட்டுச் சூரணஞ்செய் பாகிலிதை
லேகியமாம் படிதேன் கூடக்
கலந்துண்ணப் பீனிசமு மார்புவலி
சூலைவிக்கல் காசசுவாச

மூலந்தழல் மந்தகுன்ம மகோதர
மூலம்வீக்க முதரக்கட்டி
மலந்தள்ளுங் கிராணிமுதற் றீருமுறை
சரபேந்திரன் வகுத்ததாமே (சுசு)

(இ-ள்)

| | |
|---|---|
| சங்கம் வேர் | 150 பலம் |
| கண்டங்கத்திரிவேர் | 15 பலம் |
| செவ்வியம் | 15 பலம் |
| வில்வவேர் | நிலக்குமிழ்வேர் |
| பாதிரிவேர் | காட்டாமணக்கு வேர் |
| நெரிஞ்சில் | முள்ளுக்கத்திரி வேர் |
| யானை நெரிஞ்சில் | பேராமல்லி |
| கண்டங்கத்திரி | சிறுமல்லி |
| கொடிவேலி வேர் | திப்பிலிமூலம் |
| சிறுதேக்கு | சடாமாஞ்சில் |

இவைகள் வகையொன்றுக்கு 20 பலம் வீதமெடுத்து, எல்லா சரக்குகளையும் ஒன்றிரண்டாக வெட்டிக் கல்லுரலிலிட்டிடித்து, ஒருபெரிய பானையில்போட்டு 60 படி ஜலம் விட்டு அடுப்பின்மேலேற்றி, எட்டிலொன்ருகும் வரைச் சுண்டக்காய்ச்சவும். இதை இறுத்துக்கொண்டு வெல்லம் 104 பலம் போட்டுக் கஷாயத்துடனே கரைத்து, அடுப்பின் மேல் வைத்துப் பாகாக்கிக் கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| கடுக்காய்த்தோல் | நெல்லிவற்றல் | இவைகள் வகைக்கு 3 பலம் |
| தான்றிக்காய்த்தோல் | கிராம்பு | |
| ஏலக்காய் | சிறுநாகப்பூ | |
| லவங்க்பத்திரி | | |

சிறுதேக்கு கடுக்காய்ப்பூ
இவ்விரண்டும் வகைக்கு 2 பலம்

| | | |
|---|---|---|
| ஓமம் | பெருங்காயம் | இவைகள் வகைக்கு 4 பலமும் |
| மூங்கிலுப்பு | மிளகு | |

| | |
|---|---|
| திப்பிலி | 20 பலம் |
| சுக்கு | 8 பலமுமெடுத்து |

இச்சரக்குகளைக் காயவைத்துக் கல்லுரலிலிட்டிடித்து வஸ்திரகாயம் செய்துகொண்டு, பாகுடன் கலந்து (நெய் விட்டு) லேகியமாகக்கிண்டிக்கொள்ளவும். ஆறியபின் தேன் ஒருபடி விட்டுக்கிளறி வைத்துக்கொள்ளவும்

பீனஸம், மார்வலி, சூலை, விக்கல், காசம், சுவாசம், மூலச்சூடு, மந்தம், குன்மம், மகோதரம், மூலம், வீக்கம், வயிற்றுக் கட்டி, கிராணி (வயிற்றுப்போக்கு) முதலிய ரோகங்கள் தீரும்.

---

## 28. காசத்திற்கு 'விளாங்காதிச் சூரணம்'

சொல்லியவாய் விளங்காதி பெருங்காயந்
திப்பிலியுஞ் சுக்கினோடும்
புல்லியசத் தியின்சார மிந்துப்புஞ்
சித்தரத்தை பொருந்துமேழும்
வல்லியிவை சமபாகஞ் சூரணஞ்செய்
தாவின்நெய்யில் வளங்கலந்து
நல்லியலுண் பதுகாச சுவாசச்சயந்
தீரும்வகை நன்குசெய்யே (சூஎ)

(இ-ள்)

| | |
|---|---|
| வாயுவிடங்கம் | பெருங்காயம் |
| திப்பிலி | சுக்கு |
| சத்திச்சாரம் | இந்துப்பு |
| சிற்றரத்தை | |

இவைகளைச் சம பாகமாக எடுத்துக் காயவைத்துக் கல்லுரலிலிட்டிடித்து வஸ்திரகாயஞ் செய்து கொள்ளவும். இதில் வெருகடியளவெடுத்துப் பசுவின் நெய்யுடனே கலந்து சாப்பிட்டுவரக் காசம். சுவாசம், க்ஷயம் முதலிய ரோகங்கள் தீரும்.



---

## 29. காசத்திற்குப் பஞ்ச கோலாதிச் சூரணம்

பகர்பஞ்ச கோலமில வங்கப் பட்டை
பத்திரியும் பார்கிராம்பு
மகிமேலஞ் சித்தரத்தை சிறுதேக்கு
மரமஞ்சள் வாய்விளங்க
மகிழ்சாதிப் பத்திரிகாய் கொடிவேலி
யமுக்கிரா மூலங்கோட்டஞ்
செகதாளீ சப்பத்திரியு மிளகோம
நாகப்பூச் சீரந்தானே (சுஅ)

இவையெல்லாஞ் சமபாக மாய்க்கூட்டிச்
சூரணித்து மிதற்குநேராய்
நவைதேவ தாரமிதின் சூரணஞ்சேர்த்
துள்ளருந்த நயனகாசங்
குவைதிமிரஞ் சயரோகஞ் சுரபாண்டு,
கடிரோகங் குட்டங்குன்மஞ்
சுவையக்கினி மந்தங்கள் பீனசலீ
ரடைப்புந்து லைந்துபோமே. (சுகூ)

(இ-ள்)

| | |
|---|---|
| * பஞ்சகோலம் | இலவங்கப்பட்டை |
| இலவங்கப்பத்திரி | கிராம்பு |
| ஏலக்காய் | சிற்றரத்தை |
| சிறு தேக்கு | மரமஞ்சள் |
| வாயுவிடங்கம் | சாதிப்பத்திரி |
| கொடிவேலிவேர் | அமுக்கிராக்கிழங்கு |
| கோஷ்டம் | தாளீசபத்திரி |
| மிளகு | ஓமம் |
| சிறுநாகப்பூ | சீரகம் |
| சாதிக்காய் | |

* பஞ்சகோலமாவது:— திப்பிலி, திப்பிலி மூலம், செவ்வியம், கொடிவேலி, சுக்கு.

இவைகளை வகைக்குச் சம எடை யெடுத்துக் கல்லுரலி லிட்டுச் சேதமாகாமலிடித்து வஸ்திரகாயஞ் செய்துகொண்டு இதற்குச்சமன் தேவதாரச் சூரணத்தைச் சேர்த்துக்கொண்டு, சாப்பிட்டுக் கொண்டுவரக் கண்களிலுள்ள காச வகைகள், திமிரம், க்ஷயரோகம், சுரம், பாண்டு, கடிவிஷங்கள், குஷ்டம், குன்மம், அக்கினி மாந்த்யம், பீனஸம், நீரடைப்பு இவைகள் தீரும்.

---

## 30. சுவாச காசத்திற்குப் பூரண சந்திரோதயச் செந்தூரம்

தபனீய பற்பமைந்தும் பாதரத
நாற்பதரி தாரம் பத்தும்
அமரகெந்தி முப்பதிவை நிட்கநிறை
யிடுகூட்டி யிதைக்கல்வத்தில்
குமரியினீர் சிவந்திடும் பருத்திப்பூ
வீதின்சாற்றால் குமிரவாட்டிச்
சமஞ்சிறுவில் லைபிடித்து லர்த்தியுந்து
கிற்கட்டித் தானைமண்செய் (எ௰)

செய்துவளை யலின்குப்பி தனிலிட்டு
வாயடைத்துச் சேலைமண்செய்
வையிதையோர் குண்டுசட்டி தனக்குமே
லில்லிகுப்பி வாய்பிடிக்கச்
செய்தலைகி ழாகவைத்து மணல்சொரிந்து
அடுப்பேத்தித் தீனுற்சாமம்
பெய்மூன்று விறகுதனுற் றீபாக்கினி
யாகவெரி பின்னுற்சாமம் (எக)

காலாக்கினி யாகவெரி பன்னிரெண்டு
சாமமும்பின் கனலெரித்து
மேலதனைப் பூசைசெய்து குப்பியெடுத்
துடைத்திட்டால் வியன்செந்தூரம்

நாளிவகை யனுபானங் குங்குமப்பூ
சாதியின்காய் நற்பச்சைபூரங்
கோலமிள கிவையொன்று பணவெடை
யரைக்காலாய்க் கேள் செந்தூரம் (எஉ)

கொள்ளுபொடி யதுசெய்து காலையிலும்,
வெற்றிலையிற் கூறந்திக்கிக்
துள்ளியதே னிலுமுண்ண க்ஷயகாச
முக்கடுகிற் சுவாசகாசந்
தள்ளுமிளைப் புப்பிசமு மீளைமிகு
புகைச்சலுடன் சன்னியெல்லா
மெள்ளுறுமெண் பதுநாலு வாதமுடன்
வியாதியெலாம் விட்டுப்போமே (எ௩)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| ஸ்வர்ண பஸ்பம் | ... 5 | வராகனெடை |
| சுத்திசெய்த பாதரஸம் | .... 40 | ,, |
| சுத்திசெய்த தாளகம் | .... 10 | ,, |
| சுத்திசெய்த கெந்தகம் | ... 30 | ,, |

முதலில் இரசத்தையும், கெந்தகத்தையும் ஒரு சுத்தமான கல்வத்தில் போட்டு நன்ருகக் கறுப்பாகும் வரை அரைக்கவும். பின்பு தாளகத்தையும் ஸ்வர்ண பற்பத்தையும் ஒன்று கூட்டி, கற்ருழைச்சாறு விட்டு 4 ஜாமம் அரைக்கவும். இதை வில்லைகளாகத் தட்டி காயவைத்து, மறுபடியும் செம்பருத்திப் புஷ்பச்சாறு விட்டு 4 ஜாமம் அரைத்துக்கொள்ளவும், இதைச் சிறுசிறு வில்லைகளாகத் தட்டிக் காயவைத்துக் கொள்ளவும். இவைகளைப் பட்டுத் துணியில் சுற்றிச் சீலைமண் செய்து, வளையல் குப்பியிலிட்டு (காசிக்குப்பி) மறுபடியும் சீலைமண் செய்து, அதை ஒரு குண்டுச்சட்டிக்குள் வைக்கவும். குப்பியின் வாயை மூடிவிட்டு குண்டுச் சட்டிக்குத் தக்க ஒரு சில்லிட்டு வைத்து மணல் சொரியவும். இச்சட்டியை அடுப்பின் மேலேற்றி 3 விறகால் (மூன்று விரல் கனமுள்ளவை) நாலு சாமத்திற்குத் தீபாக்கினியாக எரிக்கவும். பின்பு நான்கு ஜாமம் கமலாக்கினியா லெரிக்கவும்.

இப்படி 12 ஜாமங்களெரித்துப் பூஜை செய்தபின் குப்பியை யுடைத்துச் செந்தூரத்தை எடுத்துக்கொள்ளவும்.

### அனுபானமும் தீரும் வியாதிகளும்.

குங்குமப்பூ, பச்சைக்கல்ப்பூரம், சாதிக்காய், மிளகு இவைகளை ஒரு பணவெடையெடுத்துச் சூரணித்து, அதனுடன் இச்செந்தூரம் அரைக்கால் பணவெடையும் கூட்டிக் காலையில் வெற்றிலையில் கொள்ளவும். மாலை நேரங்களில் தேனில் சாப்பிடவும். க்ஷயகாசம் தீரும்.

திரிகடுச் சூரணத்துடன் உட்கொள்ள (சுக்கு, மிளகு, திப்பிலி) சுவாசகாசங் தீரும். இளைப்பு, உப்பிசம், ஈளை, புகைச்சல், சன்னி, 84 வித வாதரோகங்கள் முதலிய வியாதிகளும் தீரும். இது கைகண்டது.

---

## 31. காசத்திற்குத் 'தாளிசபத்திரி வடகம்'

தாளிசபத் திரிசெவ்வி யங்கரிலும்
வகைக்கொன்று தான்பலங்கள்
காளியதிப் பிலிமூலங் திப்பிலியும்
வகைக்கிரண்டு காண்பலந்தா
னிஞ்சுக்கு மூன்றுபலஞ் சிறுநாகப்
பூவேல நிகரிலாமிச்
சூளியவே ரிலங்கப்பட் டைப்பத்திரி
வகையொன்று தொடிகாலாமே (எச)

ஆவதெலாந் தூளிடித்துச் சூரணத்துக்
கிரட்டியா யதனில்வெல்லப்
பாவுமதித் தோர்கழற்காய்ப் பிரமாண
வுண்டைசெய்து பகர்நாளொன்றுக்
காவதொரு குளிகையுண் வாதபித்த
வரோசிகங் கபசுரங்கள்
நாவசய காசகுன்மம் வீக்க மகோ
தரங்கிராணி நலமதாமே (எரு)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| தாளிசபத்திரி செவ்வியம் மிளகு | | இவைகள்வகைக்கு ஒரு பலம் |
| திப்பிலிமூலம் திப்பிலி | | இவைகள் வகைக்கு 2 பலம் |
| சுக்கு | | 3 பலம் |
| சிறுநாகப்பூ ஏலக்காய் இலாமிச்சைவேர் இலவங்கப்பட்டை இலவங்கபத்திரி | | இவைகள் வகையொன்றுக்கு ¼ பலம் |

இச்சரக்குகளைக் கல்லுரலிலிட்டிடித்துத் தூள் செய்து வஸ்திரகாயஞ் செய்துகொண்டு, மொத்த நிறைக்கு இரட்டிப்பு வெல்லத்தை யெடுத்துப் பாகாக்கிக்கொண்டுக் கிளறி அதைக் கழற்சிக்காயளவு உருண்டைகளாகச் செய்துகொள்ளவும்.

தினம் ஒருமாத்திரை வீதம் உட்கொண்டுவர வாதம், பித்தம், அரோசகம், கபசுரம், க்ஷயம், காசம், குன்மம், வீக்கம், மகோதரம், கிராணி முதலிய ரோகங்கள் தீரும்.

---

## 32. சுவாச காசத்திற்குக் 'குக்குலாதி மாத்திரை'

முக்கடுகு வாய்விளங் கங்கோரைமூ
  லஞ்செவ்விய முப்பலாதி
தக்கடுகு ரோகணிமஞ் சள்கொடிவேலி
  தருதேவ தாரமேலம்
புக்கரமூ லம்வசம்பு மரமஞ்ச
  ளிலவங்கப் புரணியிந்து
மிக்கவளை சவ்வச்ச லவணபிட
  லவணங்கள்வெட் பாலைமேவே (எசு)

மேவரிசி மூக்கரட்டை யானைபெருந்
திப்பிலியும் விளம்புமூலங்
கூவுவகைக் கரைப்பலமுஞ் சுத்திசெய்த
குக்கில்பலங் கொள்பன்மூன்று
யீவதெலாஞ் சேர்த்திடித்து மிலந்தைதருங்
கனியினளவு விதையுருட்டி
யாவதுதேன் நெய்யிலொரு வுண்டைதின
மொன்றனுபா னத்தருந்தே (எஎ)

அருந்துடல் வீக்கமுடன் சயகாச
சுவாசங்க ளக்கினிமாந்தம்
பெருங்குன்மம் பகரோக மூலம்வயிற்
றுள்கட்டிப் பொருமலாதி
வருமகோ தரம்பாண்டு கிராணிகள்
கிருமியுறு வளிரோகங்கள்
தருகபமீ ளமுதற் றீருமுறை
யுரைசெய்யுஞ் சரபவேந்தே (எஅ)

(இ-ள்)

| | |
|---|---|
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | வாயுவிடங்கம் |
| கோரைக்கிழங்கு | செவ்வியம் |
| கடுக்காய்த்தோல் | நெல்லிக்காய் |
| தான்றிக்காய்த்தோல் | கடுகரோகிணி |
| மஞ்சள் | கொடிவேலிவேர் |
| தேவதாரம் | ஏலக்காய் |
| *புக்கர மூலம் | வசம்பு |
| மரமஞ்சள் | இலவங்கப்பட்டை |
| இந்துப்பு | வளையலுப்பு |
| கறியுப்பு | வெட்பாலை அரிசி |
| மூக்கரட்டை வேர் | யானைத்திப்பிலி |
| திப்பிலிமூலம் | |

---

*புக்கர மூலம் என்றசரக்கு மலையாள மருந்துக்கடைகளில் கிடைக்கும்.

இவைகளை வகைக்கு ½ பல வீதமெடுத்துக் கல்லுரலி லிட்டிடித்து வஸ்திரகாயஞ் செய்து, சுத்திசெய்த குக்கில் *13 பலமெடுத்துச் சூரணத்துடன் கலந்து, நன்றாக ஒன்று சேரும்வரை இடித்து, இலந்தைக்கொட்டை அளவுள்ள குளிகைகளாகச் செய்துகொள்ளவும். இதை நெய்யிலோ, தேனிலோ சாப்பிட்டு வர உடம்பு வீக்கம், க்ஷயம், காசம், சுவாசங்கள், அக்னி மாந்தியம், குன்மம். ஆசன நோய்கள், மூலம், வயிற்றிலுள்ள கட்டிகள், பொருமல், மகோதரம், பாண்டு, கிராணி, கிருமி ரோகங்கள், கபம், ஈளை, முதலிய முதலிய பலவித கொடூர ரோகங்களுந் தீரும்.

---

## 33, காசத்திற்கு 'ஆனந்தரசம்'

சாதிலிங்க நாவிகெந்தி முக்கடுகு
வெண்காரஞ் சமபாகங்
ளோதிவைகல் வத்திலிட்டு மேலெலுமிச்
சம்பழச்சாற் றுலூற்றரைத்து
வீதுகுன்றிப் பிரமாண மாத்திரைகள்
செய்துலர்த்தி யிஞ்சிநீரில்
மோதியனு பானமிடும் போதுசய
காசவகை முறிந்துபோமே (எசு)

(இ-ள்)

| | |
|---|---|
| சுத்திசெய்த இலிங்கம் | சுத்திசெய்த நாபி |
| ,, கெந்தகம் | சுக்கு |
| திப்பிலி | மிளகு |
| பொரித்த வெங்காரம் | |

இவைகளைச் சமனெடுத்துக் கல்வத்திலிட்டு, எலுமிச்சம் பழச்சாறு விட்டு ஊறவைத்து, நன்றாக (4 ஜாமங்கள்) அரைத்துக் குன்றிமணி அளவுள்ள மாத்திரைகளாகச் செய்து நிழலிலுலர்த்திக் கொள்ளவும். இதை இஞ்சிச் சாற்றில் சாப்பிட க்ஷயம், காசம், இவைகள் தீரும்.

---

* த்ரிபலைக் கஷாயத்தில பாவனை செய்யவும்,

## 34. காசத்திற்கு 'ஷண்முகரசம்'

கருவங்கம் வெள்ளைவங்க மப்பிரகந்
தாம்பிரமுங் காந்தம்லோகந்
தரும்பற்ப மிந்தவகைக் கொருநிட்கம்
பாதரதந் தனிச் செந்தூரம்
பொருமைந்து நிட்கமிடு விவையெல்லாங்
கல்வத்திற் போட்டுக்கண்ட
மருவுகத்தி ரிச்சாற்று லரைத்தொரு
குன்றியள வாயுருட்டே (அ௰)

உருட்டியே யதைவாழைக் கனிகொம்பிற்
றேனிலொன்றி லுரவுசெய்துந்
தெருட்டியே பின்னனுபா னங்களிலுங்
கலந்திட்டாற் றெரிக்குநோய்க
ளருட்டியே மார்புவலி யீளையிரைப்
பிருமலுட னருசிதானுஞ்
சுருட்டியே பீனசமுஞ் சயகாச
சுவாசங்கள் துலைந்துபோமே (௪௧)

(இ-ள்)

| | | | |
|---|---|---|---|
| சுத்திசெய்த | காரீயம் | சுத்தியான | வெள்ளியம் |
| ,, | அப்பிரகம் | ,, | தாமிரத்தூள் |
| ,, | காந்தம் | ,, | இரும்புத்தூள் |

இவைகளின் பற்பம் வகைக்கு 1 வராகனெடை

ரஸச் செந்தூரம் 5 ,,

அவைகளை யொன்றுசேர்த்துக் கல்வத்திலிட்டு, கத்திரி இலைச்சாற்றினாலரைத்து குன்றியளவு உருட்டவும். இதை வாழைப்பழத்திலாவது, கொம்புத்தேனிலாவது சாப்பிட்டு வர மார்புவலி, ஈளை, இரைப்பு, இருமல், அரோசகம், பீனிசம், க்ஷயம், காசம், சுவாசம் முதலிய ரோகங்கள் தீரும்.



---

## 35 சுவாச காசத்திற்குக் குடிநீர்.

முளைகிழா நெல்லிகடுக் காய்செவியஞ்
சிறுதேக்கு முள்ளிவேருந்
தளையாடா தோடையின்வேர் திப்பிலியுங்
கரில்சிந்தில்த் தண்டுபத்திரம்
கிளைசுக்குந் தூதுவளை மூலகண்டங்
கத்திரிவேர் கிளர்ந்ததெல்லாங்
களைநாழி நீரைவிட்டுக் காய்ந்துழக்காய்
கொள்சுவாச காசம்போமே (அஉ)

(இ-ள்)

| | |
|---|---|
| கிழாநெல்லி | கடுக்காய்த்தோல் |
| செவ்வியம் | சிறுதேக்கு |
| முள்ளிவேர் (நீர்முள்ளி) | ஆடாதோடைவேர் |
| திப்பிலி | மிளகு |
| சிந்தில்கொடி | சிந்தில் இலை |
| சுக்கு | தூதுவளை வேர் |
| கண்டங்கத்திரிவேர் | |

இவைகளை வகைக்கு 1 பலம் வீதமெடுத்துக் கல்லுரலி லிட்டு ஒன்றிரண்டாக இடித்து ஒருபடி சுத்தஜலம் விட்டுற வைத்து, அடுப்பின் மேலேற்றி ஒரு உழக்காகக் காய்ச்சி வடிக்கட்டிப் பருகவும். சுவாசகாசம் தீரும்.

---

## 36. சுவாச காசத்திற்குப் பூசினி நெய்

பூசினிக்காய் நீர்க்குறுணி பசுவின் நெய்யும்
நாநாழி புண்டரீகம்
பேசரத்தை வசம்புகா ரோளிதமுஞ்
சிறுதேக்குப் பேராமுத்தக்

காசசுக்குப் பூவரிசி திப்பிலிபற்
　　பாடகமுங் கண்டத்திப்பிலி
தேசவத்தித் திப்பிலியுங் கொடிவேலி
　　யிந்தவகை தெளியென்றுக்கே (அரு)

தெளிநான்கு பலங்கொண்டு மரைத்தாவின்
　　பாலதுவுந் திகழ்நாநாழி
யளிகரைத் துடன்புகட்ட டுப்போற்றி
　　யெரியில்வடித் ததையிறுத்து
நளிகல சங்களி லும்பத னஞ்செய்
　　திருநேர நக்குவிக்க
லிளிகாசஞ் சயரோகஞ் சுரபித்த
　　குன்மமுத லேகுந்தானே (அசா)

(இ ள்)

| | |
|---|---|
| பூஷணிக்காய்சாறு | 1 மரக்கால் |
| பசுவின் நெய் | 4 படி |

இவைவளை யொன்று கலந்து,

| | |
|---|---|
| தாமரைக்கிழங்கு | சிற்றரத்தை |
| வசம்பு | சிறுதேக்கு |
| பெருங் கோரைக்கிழங்கு | சுக்கு |
| பாற்பாடகம் | கண்டத்திப்பிலி |
| யானை திப்பிலி | கொடிவேலிவேர் |
| திப்பிலி | |

இவைகளை வகைக்கு 4 பலமெடுத்துத் தூள்செய்து, பசுவின்பால் 4 படிவிட்டு நன்றாக அரைத்துச் சாறு கூட்டிய நெய்யுடனே குழப்பி, அடுப்பின்மேல் வைத்து, எரித்துப் பதத்தில் வடித்து வைத்துக்கொள்ளவும் இதை வடிக் கட்டிக்கொண்டு பத்திரப்படுத்தி, தினம் 2 வேளை உள்ளுக் குச் சாப்பிட்டுவர காசம், க்ஷயம், சுரம், பித்தகுன்மம் முத லிய ரோகங்கள் தீரும்.

## 37. இருமலுக்குச் சித்ரமூலாதிச் சூரணம்

சித்திரமூ லத்துடனி லவாகை
செங்தொட்டி யடவியதன்னி
லுத்திடு மாடுதின்னுப் பாலையும்
நாலுஞ்சமூல மீதுவல்லால்
முத்தின பிரண்டை யைந்துமே சமனு
முடுக்கின் மிளகுட னுதல்
இத்தனை மருந்துங் காயவே வைத்து
மேயதைச் சூரணஞ் செய்யே (அரு)

சூரணஞ் செய்துவடி யதுகட்டிச்
சுத்தமாம்க லசமதன்னில்
நேருடன்வைத் துவெருக டிதூள்வெந்
நீரில்கலந்து காலையினில்
சிருடன்கொள்ளு பத்தியமில்லை
தேகத் திலிருமலுந்
திருமோது மிகுந்ததஞ்சை வாழ்சரபேந்
திரனருள்மு றையிதுவே (அசு)

(இ-ள்)

| | |
|---|---|
| கொடிவேலி வேர் | நிலவாகை |
| செங்தொட்டிவேர் | ஆடுதீண்டாப்பாளை |
| பிரண்டை | |

இவைகளைச் சமூலமாகச் சமனெடை எடுத்துக்கொண்டு, நறுக்கி வெயிலில் காயப்போட்டு, மிளகு (சரி எடை) கூட்டிக் கல்லுரலிலிட்டிடித்து வஸ்திரகாயஞ் செய்துகொள்ளவும். இதையொரு சுத்தமான பானையில் வைத்துக்கொண்டு, வேண்டும்போது வெருகடியளவு (மூவிரல் கொள்ளும் அளவு) தூளை வெந்நீரில் கலந்து காலை நேரத்தில் குடிக்கவும். இருமல் தீரும். இதற்குப் பத்தியமில்லை.

## 38. ஈளை, இருமல், உடம்புலர்தல் எலும்புருக்கி, கோழை, சுவி, முதலிய நோய்களுக்கு 'நெய்'

அத்தி யாலரசு யித்தி யிந்நாலி
னதிலுறும் பட்டையுஞ் சிகப்பாய்
முத்தலாய் வெட்டி வகைக்கொரு பலமு
முனிவுட னிடித்து மெய்தனில்
நத்துவமாகத் தூணி நீர் விட்டு
நயமுட னெட்டொன்ருய்க் காய்ச்சி
சத்துவ மானவெள் ளருகுமே யிடித்த
சா றிரு நாழியுங் கூட்டே. (அஎ)

கூட்டு கற்ருழை நீரிரு நாழி
குணமிகு நெய்யிரு நாழி
நாட்டர சத்தியா லமுகிள் மூன்றும்
நலமுள சந்தன மதுகம்
கோட்டமு மிலுப்பைப் பூவிலவங்கங்
குணமிகு நெய்தலின் கிழங்குங்
காட்டி நன்னுரி வேரமுக் கிராவேர்
கச்சோலஞ் சண்பக மொட்டே (அஅ)

மொட்டுசெங் கழுநீர்க் கிழங்குப்பச் சிலையு
முதிரில வங்கப்பத்திரியுஞ்
சட்டமாம் பேரீச் சம்பழ மேலந்
தாமரை வளையமதுடனே
இட்டவெள் ளருகம் வேர்நாணல் தாது
இலவங்கப் பத்திரி கூட
மட்டுள நாகப் பூவுடனேதான்
வகையது மிருபத்திரண்டே (அகூ)

இருபது மிரண்டில் வகைக்கொரு கழஞ்சு
மெடுத்துப்பால் விட்டதை யரைத்துக்

கரையவே கலந்து வடுப்பினி லேற்றிக்
காய்ச்சிடு நாலது நாளுந்
துருசுட னேந்தா ளைதை வடித்துத்
துடரும்நோய் வலுவது மறிந்து
இருபொழு துண்ண மந்தத் தேகத்
திடர்செய்யும் நோய் விதமறிந்தே (௩௰)

விதமறிந் துண்டா லுடம்பு லர்தலு
மெலும்புருக் கியுமிரு மலுமே
சதமதா மீளை நெஞ்சினி லுற்ற
சளிகளுங் கோழையும் மாறும்
இதமிகுந் தஞ்சை தனைமனு நீதி
யியல்புட னண்டு விப்பிரர்க்கும்
பதமிகுங் கவிஞர் தமக்கருள் சரபப்
பார்த்திப னுணர்ந் தருளியதே (௩௧)

(இ-ள்)

| | |
|---|---|
| அத்திப்பட்டை | ஆலம்பட்டை |
| அரசம்பட்டை | இத்திப்பட்டை |

இவைகளை நன்றாக முற்றியதாகவும், சிவப்பாகவும் பார்த்து வகைக்கு ஒரு பலம் வீதம் கொண்டுவந்து, நன்றாகப் பஞ்சுபோலிடித்து, 4 மரக்கால் ஜலம்விட்டு, அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றாகக் காய்ச்சி வடிகட்டிக்கொண்டு, அதனுடன் வெள்ளருகுச்சாறு 2 படியும், சோற்றுக்கற் றாழஞ்சாறு 2 படியும், பசுவின் நெய் 2 படியும் விட்டு ஒன்றுகலந்து.

| | |
|---|---|
| அரசமொட்டு | ஆலமொட்டு |
| அத்திமொட்டு | சந்தனத்தூள் |
| அதிமதுரம் | கோஷ்டம் |
| இலுப்பைப்பூ | கிராம்பு |
| நெய்தல் கிழங்கு | நன்னாரிவேர் |

| | |
|---|---|
| அமுகிராக் கிழங்கு | பூலாங்கிழங்கு |
| சண்பக மொட்டு | செங்கழுநீர்க் கிழங்கு |
| பச்சிலை | இலவங்கப்பத்திரி |
| பேரீச்சம்பழம் | ஏலக்காய் |
| தாமரையிலைச்சுருள் | வெள்ளருகம் வேர் |
| நாணல்தாது | சிறுநாகப்பூ |

இச்சரக்குகள் வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடைவீதமெடுத்துப் பால் விட்டரைத்து, சாறு கலந்த நெய்யுடனே குழப்பி, அடுப்பின்மேலேற்றி, சிறு தீயாக 4 நாள் எரிக்கவும். 5-வது தினத்தில் இதைப் பக்குவப்படுத்தி இறக்கவும். நோயின் பலத்தை அறிந்து தினம் 2 வேளை (ஒரு ஸ்பூன் வீதம்) சாப்பிடவும். இதனுல், உடம்பு உலர்ந்துபோதல், எலும்புருக்கி, இருமல், ஈளை, நெஞ்சில் சளி, கோழை, முதலிய நோய்கள் தீரும்.

---

## 39. புகைச்சல், இருமலுக்கு மருந்து

முசுமுசுக் கையிலை யவித்துமத் துடனே
முளிவுள மிளகது பத்தும்
இசைவதாய்ப் போட்டு மரைத்து நன்ருக
யெருமையின் வெண்ணெயும் போட்டு
பசையுள சாதத் துடனதைப் பிசைந்துப்
பருகிடப் புகைச்சலு மிருமற்
றிசையது கெட்டு மோடிடு மிதையுஞ்
செய்து பார் தெரிந்திடுந்தானே (கூஉ)

(இ-ள்)

முசுமுசுக்கையிலையை (ஒரு குத்தள வெடுத்து) ஒரு பாத்திரத்தில் போட்டு அவித்து, அத்துடன் 10 மிளகையும் சேர்த்து நன்ருக அரைத்து, எருமை வெண்ணெய் ஒரு (எலுமிச்சையளவு) எடுத்து அதனுடன் மத்தித்து, சாதத்துடன் கலந்து சாப்பிடவும்.

புகைச்சல், இருமல் இவைகள் தீரும்.

---

## 40. இருமலுக்கு மருந்து

சிரகந் திப்பி லியுஞ்சரி சேர்த்துச்
செம்மையாய்ப் பொடியது செய்து
சிருள பனையின் கட்டியுங் கூட்டித்
திறவெரு மையின்வெண்ணெ யொக்கக்
கூருடன் கலந்து கொண்டிடத் தானே
குணமிதா மிருமலும் கூட
தாரணி மார்பன் றஞ்சைவாழ் சரப
சக்கிர வர்த்திதன் னருளே (௬௫)

(இ-ள்)

சிரகம் திப்பிலி

இவ்விரண்டையும் சரி எடை எடுத்துப் பொடிசெய்து, வேண்டிய அளவு பனைவெல்லம் சேர்த்து, எருமை வெண்ணெயும் ஒரு எலுமிச்சையளவு கூட்டிச் சாப்பிட, இருமல் குணமாகும்.

---

## 41. ஈளையிருமலுக்குத் ‘தூதுவளையாதி கிருதம்’

தூதுவ ளைகையாந் தகரையுமாடா
தொடையினி லையுமிம் மூன்று
மோதிய வகைக்குச் சாறும்நாநாழி
யுடனேநெய் நாழியும்விட்டு
ஈதுடன் கற்கம் பூசினிப்பூவு
மீத்தின்னு கின்றவெள வாலுந்
தீதிலா மிளகுவசம்புட னேகருஞ்
சிரகந் திப்பிலி வகையே (௬௪)

வகையது வாறி லோரொன்று களஞ்சு
வளமுள சுக்கதி ரண்டுந்
துகையுள்ளேழு மரைத்ததிற் கலந்துச்
சூடதாந் தீயையிட் டெரித்து
தகையுடன் வடித்துக் காலையில் நக்கத்
தானறு மீளையு மிருமல்
சந்தலம் புகழத் தஞ்சையை யாளுஞ்
சரபபூ பதியுரை யிதுவே (கூடு)

(இ-ள்)

தூதுவேளை கையாந்தகரை
ஆடாதோடையிலை

இவைகளைத் தனித்தனியாக எடுத்துப் பிழிந்த சாறு வகைக்கு 4 படி எடுத்துப் பசுவின் நெய் 1 படியும் கலந்து,

பூஷணிப்பூ ஈத்தின்னி வெளவால்
மிளகு வசம்பு
கருஞ்சீரகம் திப்பிலி

இச்சரக்குகள் வகைக்கு ஒரு கழஞ்சு (1¼ வராகனெடை)

சுக்கு 2 கழஞ்சு

இவைகளை யொன்றுசேர்த்துப் பால் விட்டரைத்துச் சாறு கூட்டிய நெய்யுடனே கலந்து, அடுப்பின்மேலேற்றி நன்றாக எரித்துப் பதத்தில் வடிக்கவும்.

இந்நெய்யைத் தினந்தோறும் காலையில் சாப்பிட்டுவர ஈளை, இருமல், முதலியவை தீரும்.

## 42. ஈளை, இருமல், உளமாந்தைப் புகைச் சலுக்குத் "தேற்றான் நெய்"

காட்டினீற் றேற்றான் கொட்டையும் நூறு
கடுகவே கொணர்ந்தரைத் ததனி
நாட்டிள நீர்நா நாழியாம் நெய்நா
நாழியு மதனிலே விட்டு
கூட்டிடு மிளகுதிப் பிலியுடன் கடுகு
ரோகணி கற்கடக சிங்கி
வாட்டமில வெளுத்தப் பிசினுங் கஸ்தூரி
மஞ்சளும் பூவந்திப் பழமே (கூசு)

பூவந்திப் பழத்தோ டெழுவகை மருந்தும்
புதியதா யொவ்வொரு பலமும்
ஆவலா யரைத்துக் கரைத் தெரித் ததனை
யன்புடன் வடித்ததி காலை
நாவினல் நக்க வீளையு மிருமல்
நவிலுளை மாந்தையு மல்லால்
தாவிய புகைச்ச லென்பதுந் தீரும்
தப்பிலா விர்ப்பன னுரையே (கூஎ

(இ-ள்)

தேற்றாங்கொட்டை 100 (எண்ணிக்கையில்) கொண்டு வந்து மேல்தோலைச் சீவிவிட்டு அவைகளுடன் இளநீர் 4 படி விட்டு, நன்றாக அரைத்துப் பசுவின் நெய் 4 படியும் விட்டு, ஒன்று கலந்து

| | |
|---|---|
| மிளகு | திப்பிலி |
| கடுகரோகிணி | கற்கடசிருங்கி |
| வெளுத்தபிசின் | கஸ்தூரி மஞ்சள் |
| பூவந்திப் பழம் | |

இவைகள் வகைக்கு ஒரு பலம் வீதமெடுத்து, இளநீர் விட்டு நன்றாக அரைத்து. நெய்யுடனே குழப்பி, அடுப்பின்

மேலேற்றி நன்றாக எரித்துப், பக்குவத்தில் வடிக்கவும். இந் நெய்யைக் காலையில் ½ தோலா வீதம் சாப்பிட்டுவர ஈளை, இருமல், உளைமாந்தம், புகைச்சல் (80 வகைகள்), முதலிய பலவித ரோகங்கள் தீரும்.

---

## 43. இருமலுக்குத் 'தூதுவளையாதி கிருதம்'

தூதுவ ளையும்பொன் னாங்காணி யுடனே
துடிமிகுங் குப்பையின் மேனி
சாதகக் கையாந் தகரை யின்னாலுஞ்
சமூலமுன் புரொண்டி வேரல்லால்
தாதவிழ் கண்டங் கத்திரி வேருஞ்சம்
பீரமச் சிறுக்கீரை வேரு
பூதலச் சிறுவ ழுதலையின் வேரும்
புகன்றிடு மருந்து மெட்டே (கூஅ)

எட்டு வகையி லுஞ்சரிசமனா
கவேயெடுத் தேதுவைத் ததனில்
விட்டிடு மஞ்சு படிதண் ணீ ரொரு நாள்
வெந்தபின் கடுகுடன் மிளகு
மட்டவிழ் சாதிக் காயதி மதுரம்
வசம்புதிப் பிலியுவெண் காரந்
திட்டமாங் கடுக்காய் நாட்டினிற் சுக்குஞ்
சேருமோ ரொன்பது வகையே (கூகூ)

வகைக்கொரு களஞ்சு மரைத்ததிற் போட்டு
மாவிநெய் யுரியும்பால் நாழி
துகையுடன் விட்டுக் கடுகது திரளத்
துருசுட னெரித்ததை வடித்து
தகைவுட னிரண்டு துட்டிடை காலை
தன்னிலே கொள்ளிரு மலும்போம்
வகையுள புளிப்புங் கைப்பதைத் தள்ளி
மண்டல மரையதுங் கொள்ளே (ா)

(இ-ள்)

| | |
|---|---|
| தூதுவளை | பொன்னாங்காணி |
| குப்பைமேனி | கையாந்தகரை |

இவைகளையும் சரி எடை யெடுத்துக், கல்லுரலிலிட்டிடித்து ஒரு பாத்திரத்தில் போட்டு 5 படி, சுத்த ஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி நாலிலொன்ருகக் காய்ச்சிய கஷாயத்துடன்

| | |
|---|---|
| கடுகு | மிளகு |
| சாதிக்காய் | அதிமதுரம் |
| வசம்பு | திப்பிலி |
| வெங்காரம் | கடுக்காய்த்தோல் |
| சுக்கு | |

இச்சரக்குகளைத் தனித்தனி $1\frac{1}{4}$ வராகனெடை வீதமெடுத்துக் கஷாயம் விட்டரைத்துக் கலந்து

| | |
|---|---|
| பசுவின் நெய் | $\frac{1}{2}$ படி |
| பசுவின் பால் | 1 படியும் சேர்த்து |

எல்லாவற்றையும் ஒன்றுகலந்து, அடுப்பின் மேலே ஏற்றிக் கடுகு திரளும் பதத்தில் இறக்கி வடிக்கவும்.

இதில் 2 துட்டெடை வீதம் காலை நேரங்களில் சாப்பிட்டு வர இருமல் தீரும்.

புளிப்புப் பதார்த்தங்களையும் கசப்புப் பதார்த்தங்களையும் நீக்கி 20 நாளைக்கு இந்நெய்யைச் சாப்பிடவும்.

---

## 44. காசம், சுவாசம், ஈளை, இருமல், கண்டத்தைப் பற்றின வியாதிகளுக்குப் 'பொடுதலையாதி வெண்ணெய்'

பொடுதலைகை யாந்தகரை தூதுவளை
புதிய கீழ்காய் நெல்லிபிரமி

அடவுளசிறு வழுதலையுஞ் சுழலாவா
ரையிவ்வேழில் நாழிச்சாறு
துடியியங்கி லைச்சாறதிலு மாயுழக்குச்
சுக்முடன்வீட் டுமேன்கற்கங்
கொடிவேலிவேர் திப்பிலிபெ ருங்காயங்
குணமிகும் வசம்புசிரகமே (௱க)

சீரகங் கடுக்காய் மிளகுடனே சிறு
தேக்குவெட் பாலையினரிசி
சாரமாமேலம் பெருங்குரும் பையும்நற்
சாதிக்கா யிலவங்கத் தோடே
சீரில வங்க விழாலரி சியுமே
சேருகோ ரோசனைகூட்டப்
பாரொரு பத்தி லொன்பது வகையும்
பண்டுள கடாயம்நா ழிக்கோ (௱உ)

கடாயம்நா நாழிக்குக் கற்கமும் வகைக்குக்
களஞ்சரைத் ததனிலே கரைத்து
அடவுள எள்ளி னெண்ணெயும் நாழி
யதனிலே விட்டதைக் காய்ச்சி
துடியுள மெழுகு பக்குவத் திறக்கிச்
சுகமுடன் வடித்ததிகாலை
எடுமிரு களஞ்சு கரண்டியால் குடிக்க
யேகிடும் நோய்வகை கேளே (௱ங)

வகை சொல்வேன் கயசு வாசமு மிரும
வல்லிளை கண்டத்தைப் பற்றி
யுரும்வியாதி களும றும்பத்து நாளி
லுசிதமும் ரசிதமு மிகுந்த
செகதல மன்பத்தா றுமன்னர் போற்றுஞ்
செகபதி சோடசதான
மகமகிழ்ந் திடப்பூ சுரர்க்கருள் சரப
அண்ணலு முணர்ந்ததிம் முறையே (௱ச)

(இ-ள்)

| | |
|---|---|
| பொடுதலை | கையாந்தகரை |
| தூதுவளை | கீழாநெல்லி |
| பிரமி | சிறுவழுதலை |
| சுழலாவாரை | |

இப்பச்சிலைகளின் சாறு வகைக்கு 1 படி, சங்கம் இலைச் சாறு 1 உழக்கு இவைகளை ஒன்று கலந்து

| | |
|---|---|
| கொடி வேலி வேர் | திப்பிலி |
| பெருங்காயம் | வசம்பு |
| சீரகம் | கடுக்காய் |
| மிளகு | சிறுதேக்கு |
| வெட்பாலை அரிசி | ஏலக்காய் |
| பெருங்குரும்பை | சாதிக்காய் |
| கிராம்பு | இலவங்கப்பட்டை |
| விழலரிசி | கோரோசனை |
| கருஞ்சீரகம் | இலவங்கப் பத்திரி |

இச்சரக்குகளை, வகைக்கு $1\frac{3}{4}$ கழஞ்சு வீதமெடுத்துச் சாறு விட்டரைத்து மேலே சொன்ன 7 படி சாற்றில் கலந்து

சுத்தமான எள்ளெண்ணெய்–1 படியும் சேர்த்து ஒன்று கலந்து, அடுப்பின்மேல் வைத்துக் காய்ச்சி, மெழுகு பதத்தில் இறக்கி வடிக்கட்டவும். இவ்வெண்ணெயைத் தினம் அதி காலையில் 2 களஞ்சு வீதம் குடித்துவர,

க்ஷயம், சுவாசம், இருமல், ஈளை, தொண்டையைப்பற் றிய நோய்களும் 10 நாளையில் தீரும்.

## 45. ஈளை, இருமலுக்குக் கையாந்தகரை மருந்து

வனத்தினிற் கையாந் தகரையு மிடித்த
வளமுள சாறும் நாநாழிக்

கினத்துடன் கற்கஞ் சுக்குடன் மிளகு
    மிந்துப்புத் திப்பிலி கடுகு
முனிவுள கண்டங் காரிவேர் நெல்லி
    முள்ளிகற் கடகசிங்கி மாஞ்சில்
வனப்புள தேவ தாரமுந் தான்றி
    வளசிறு தேக்கையுங் கூட்டே (௱ரு)

கூட்டிடு வர்க்கப் பனிரெண்டு வகையுங்
    கொள்ளொரு வகைக்கு மோர் களஞ்சு
நாட்டமா யரைத்துக் கரைத்ததை யெரித்து
    நற்பதங் கண்டதை வடித்து
வூட்டதி காலை சீரறிந் துண்ணு
    மோடிடு மீளையு மிருமல்
மாட்டினிற் பவனி வருஞ்சிவன் பாதம்
    அர்ச்சிக்குந் தஞ்சைமா னுரையே (௱சூ)

(இ-ள்)

கையாந்தகரையைக் கொண்டு வந்து நன்றாக ஆய்ந்து கல்லுரலிலிட்டிடித்துப் பிழிந்த சாறு 4 படியுடன்

| | |
|---|---|
| சுக்கு | மிளகு |
| இந்துப்பு | திப்பிலி |
| கடுகு | கண்டங்கத்திரி வேர் |
| நெல்லி முள்ளி | கற்கடசிங்கி |
| சடாமாஞ்சில் | தேவதாரம் |
| தான்றிக்காய்த்தோல் | சிறுதேக்கு |

இச்சரக்குகளை வகைக்கு $1\frac{1}{4}$வராகனெடை வீதமெடுத்து ஷை சாறு விட்டு அம்மியிலிட்டரைத்து, ஷை சாற்றால் குழப்பி, அடுப்பின்மேலேற்றி எரித்து அது இறுகிய பதமான பின் அதை இறக்கிக் காலை வேளையில் சாப்பிட, ஈளை, இருமல் முதலிய நோய்கள் தீரும்.

## 46. இருமல், நாசியாலிரத்தம் விழுதல், நீர்விழுதல் முதலியவைகளுக்குத் தாளகப் புகை

நிலத்தினிற் படர்ந்த யிலந்தையின் கொழுந்தும்
நேரரி தாரமுஞ் சமனுய்க்
கலந்தரைத் ததையுங் குழம்பது வாக்கிக்
கருதுவேன் வெள்ளிய சீலே
யிலுங்கிழித்த தனிற் றேய்த்து நன்ருக
வேநிழ லுலர்த்தலா யுலர்த்தி
பல திரியாகத் திரித்ததை வைத்துப்
பண்புள சோறுமோ ருண்ணே (௬௭)

உண்டுமே வயிறு நிரம்பமுன் றிரியி
லொன்றெடுத் தனலிற் கொளுத்தி
ஒண்டிய கொருக்காய்க் குழாய் வழியாக
வுண்ணந்தப் புகையை மூன்றே நாள்
சண்டிசெய் யிருமல் நாசியில் நீரிரத்
தம்விழும் வியாதியுந் தீருந்
தண்டமிழ் வாணற் கவித்திற மறியுஞ்
சரப பூபதி யருளாமே (௬௮)

(இ-ள்)

நிலத்தில் படர்ந்த இலந்தையின் துளிருடன், சமன் எடை சுத்தி செய்த தாளகம் சேர்த்து, ஒரு கல்வத்திலிட்டு அரைத்துக் குழம்பாகச்செய்து, ஒருசாண் நீள அகலமுள்ள வெண்மையான துணியின்மேல் ஒரே சீராகத்தடவி, நிழலில் உலர்த்திக் கொள்ளவும். இதைக் கிழித்துச் சிறு சிறு திரியாகச் செய்து கொள்ளவும்.

நோயாளி வயிறு நிரம்ப மோர்சாதம் சாப்பிட்ட பிறகு, முன் தயார்செய்த திரியிலொன்றை எடுத்து அனலில் கொளுத்தினல் புகை எழும்பும். இப்புகையை ஒரு கொருக்

காத் தட்டைக் குழாயின் வழியாக வரும்படி செய்து அதை வாயினுல் உள்ளுக்கு இழுக்கவும். 3 நாளைக்குள் இருமல், ஜல தோஷம், இரத்தம் வீழல் முதலிய நோய்கள் தீரும்.

---

## 47. பல வியாதிக்குத் 'தேத்தான் கற்பம்'

### (அனுபானம் வெவ்வேறு)

காட்டினிற் றேற்றும் பழமதின் கொட்டை
கையினுற் பிதுக்கியே தள்ளி
வாட்டிட வுலர்த்திப் பொடியது செய்து
வளமுள வெண்ணெய்வார்த் தரைத்து
நாட்டமாய்க் காலை தன்னிலே வீழுங்கு
நற்றிய யிருமலுந் தீரும்
நாட்டினிற் கோமூத் திரத்தினிற் கொடுக்க
நடந்திடும் பிசாசுபேய் தானே (௱௬)

தானதைப் பாலுட னேகொள் வயிற்றிற்
சள்ளைசெய் கிருமிகடீரு
மான வெங்காய நீரினிற் கொடுக்க
வணுகிய வெள்ளை வோக்காள
வூனமுந் திரு மஞ்சளி லரைத்து
முட்கொள் விடங்களுந் தீரும்
கூனவே வெள்ளுள்ளி யரைத்துப்பா லுடனே
கொண்டிடத் தீபனமாமே (௱௰)

ஆவின்மூத் திரத்தி லரைத்துணப் பாண்டு
மற்றிடு மப்பொடி தன்னை
யேவெள்ளை யுள்ளி யரைத்ததை மோருட
னேயுணு நெஞ்சடைப் பினும்போம்
காவினற்றேனி லரைத்துண்ணத் தானே
கண்ணிரோ யற்றிடும் நலமு
மேவுமெள் ளெண்ணெய் தன்னிலே யரைத்து
மேநசி யமும்பண்ணக் கேளே (௱௰௧)

நசியமும் பண்ண வொருத்தலை நோயும்
அகன்றிடும் விளக்கெண்ணெய் தன்னில்
மசியவே யரைத்து மிடுகண்ணி லூற்ற
மாசறு மிப்பொடி தன்னை
சுசியுள நெய்யிற் கொண்டிடப் பாண்டுஞ்
சூழ்ந்திடுந் தலைவலி தீரும்
வசமுள மோரி லுண்டிட வெறுப்பு
மகற்றிடு மிப்பொடி தானே (௱௰௨)

பொடியதைக் காலை மண்டல மரையும்
புசித்திடத் தேகமும் நன்றாந்
திடமுள தஞ்சை நகர்த்துள சேந்திரன்
செல்வனிப் புவிக்கனு கூலன்
துடிமிகும் புண்ட ரீகமதனை யெதுப்
பாக்கிக்கொண் டேயொரு குறியா
லுடனதி னுயிரை வானுல கேற்று
முற்பன மானுவி னருளே (௱௰௩)

(இ-ள்)

தேத்தாம் பழங்களைக் கொண்டுவந்து அதன் கொட்டைகளைப் பிதுக்கி அவைகளை வெயிலில் உலர்த்தவும். பின்பு அதன் மேலுள்ள தோலைச் சீவிக் கல்லுரலிலிட்டிடித்து வஸ்திரகாயஞ் செய்து கொள்ளவும்.

காலை நேரங்களில், நல்லெண்ணெய்யுடன் வெருகடி தூள் குழப்பிச் சாப்பிட இருமல் தீரும்.

கோமூத்திரத்தில் கொடுத்தால் பேய், பிசாசுகள் நீங்கும்.

பசுவின் பாலில் கொடுக்க வயிற்றிலுள்ள கிருமிகள் விழும்.

வெங்காயச் சாற்றில் கொடுக்க, வெள்ளை ஓக்காளம் தீரும்.

மஞ்சள் (விழுதுடனே அல்லது பொடியுடனே) கொடுக்க விஷங்கள் அனைத்துந் தீரும்.

பூண்டின் விழுதுடன், பால் விட்டுக் குழப்பி, ஷை சூரணத்தை அருந்தத் தீபனம் உண்டாகும்.

பசுவின் மூத்திரத்துடன் உட்கொள்ளப் பாண்டு தீரும்.

வெள்ளைப் பூண்டு விழுதுடன், இச்சூரணத்தைக்கலந்து மோர் விட்டுச் சாப்பிட, நெஞ்சடைப்புத் தீரும்.

இச்சூரணத்தைத் தேனில் குழைத்துச் சாப்பிடப் பல வித, கண்ணோய்களும் தீரும்.

இச்சூரணத்தை நல்லெண்ணெயுடன் கலந்து மூக்கி லிட்டு உறுஞ்ச 'ஒருத்தலைவலி' தீரும்.

விளக்கெண்ணெயில் அரைத்துச்சாப்பிடக் கண்ணோய் கள் தீர்ந்து கண்களும் துலங்கும். இச்சூரணத்தை நெய்யு டனே உட்கொண்டால் பாண்டு ரோகமும், தலைவலியும் தீரும்.

மோருடனே உட்கொள்ள வெறுப்பு (அன்னத்வேஷம்) தீரும்.

இந்தச் சூரணத்தைத் தினந்தோறும் காலையில் சாப்பிட வும். இம்மாதிரி 20 நாள் உட்கொள்ளத் தேகம் திடமாகும்

---

## 48. காசம் முதலானதற்கு "அரிதாரப்புகை"

பொன்னரி தாரஞ் சுத்தியுஞ் செய்து
பொடிசெய்து மப்பொடி யூடே
பொன்மெழு கதனைக் கூட்டியே யுருக்கிப்
புகலும்பா வட்டையின் கொய்பால்

அன்னத்தை நன்ருய்ச் சாரித்து முருண்டை
யதுசெய்து பதனமும் பண்ணி
யுன்னிதப் புளியஞ் சிராய்தணல் தன்னை
யோர்கல சந்தனிற் போடே (௱௰௪)

போட்டுமோ ருருண்டை யன்னெருப் பினிலே
புதுமை யாய்ப்புகை தன்னை
நாட்டமாய் முக்கா டிட்டுவப் புகையை
நயமுடன் கொண்டிட விருமல்
லோட்டிடு மிதுவுங் கையது கண்ட
வுற்பனப் புகையிது தானே
தாட்டிகற் றஞ்சை நகர்சர பேந்திரன்
தானுணர்ந் தருளிய முறையே (௱௰௫)

(இ-ள்)

தாளகத்தைச் சுத்தி செய்து ஒரு கல்வத்திலிட்டுப் பொடி செய்து கொள்ளவும். இதற்குச் சரி எடை பொன் மெழுகை உருக்கி அதில் ஷி தூளைப் போட்டுக் கலக்கிவரவும். பாவட்டையின் பால் விட்டரைத்து உருண்டைகளாகச் செய்து வைத்துக்கொள்ளவும்.

ஒரு கலசத்தில் புளியஞ் சிராய் தணலைப் போட்டு, அதில் ஒரு உருண்டையை இட்டால் அதிலிருந்து புகை எழும்பும், அந்தப்புகையை வெளியே விடாமல், நோயாளிக்கு முக்காடிட்டுப் புகையை உட்கொள்ளச் செய்யவும். இருமல் நிற்கும். கை கண்டது.

---

## 49. இருமலுக்குப் பிரண்டைத் திரிப் புகை

பிரண்டையை யிடித்தச் சாறதை வெள்ளைப்
புடவையிற் ருேய்த்ததை யுலர்த்தி
மறுதினந் தேற்ருன் காய்தண்ணீர் தெளித்து
வளமுட னறுக்கிய சாற்றை

சரியென முன்சொற் சீலையிற்தோய்த்த
தையும்நிழ லுலர்த்தியே மறுநா
ளூரமுள குப்பை மேனியின் ரசத்தி
லுள்ளூரத் துவைத்ததை யுலர்த்தே (௱௰௬)

அதையுலர்த் தியபின் பொன்னரி தார
மரைத்ததிற் றோய்த்துமே யுலர்த்தி
பதனம தாக வைத்துமே யுந்தன்
பாணியால் கிழித்ததைத் திரியாய்
விதமுடன் திரித்துத் தயிருடன் சோறு
மேயுண்டு யனலினிற் கொளுத்தி
யதையவித் தேயப் புகையதை யுண்ண
அசடுசெய் யிருமலும் போமே (௱௰௭)

(இ-ள்)

பிரண்டையை ஒரு கல்லுரலிலிட் டிடித்துச் சாறு பிழிந்து, அதையொரு வெள்ளைச் சீலையில் ஊட்டி நிழலில் உலர்த்தி, மறுநாள், தேத்தாங்காயை இடித்துத் தண்ணீர் தெளித்து ஊறவைத்த சாற்றில் முன் சொன்ன துணியைத் தோய்த்து நிழலில் உலர்த்தவும். இம்மாதிரியே மறுநாள் குப்பைமேனிச்சாற்றில் தோய்த்து நன்றாக நிழலில் உலர்த்தவும். சிறிது ஈரம் இருக்கும்போது, தாளகத்தைச் சுத்தி செய்து அதைத் தூள் செய்து அதில் போட்டுப் புரட்டவும்; அதில் தூள் ஒட்டிக்கொள்ளும். இதைக் காயவைத்து சிறு சிறு துண்டுகளாகக் கிழித்துத் திரியாகத் திரித்து வைத்துக் கொள்ளவும்.

நோயாளி, தயிர் சாதம் சாப்பிட்டபின் முன் சொன்ன திரியிலொன்றையெடுத்து அனலில் கொளுத்தி அணைக்கவும். அதிலிருந்து புகை எழும்பும், இதை வாயினாலுட்கொள்ளவும். இதனால் இருமல் தீரும்.

குறிப்பு:—67 லெ சுவடியில் கண்டங்கத்திரி எண்ணெயிலோ நெய்யிலோதோய்த்துக் கொளுத்தவும் என்று காணப் படுகிறது.

## 50. இருமலுக்குப், பொன்னரிதாரப்புகை

பொன்னரி தாரம்பொற் கொன்றைப் பட்டை
பொருந்திய யிரண்டையுந் தானே
நன்னயக் கொன்றை யிலைரசம் விட்டு
நயமுட னரைத்துவெண் சீலை
தன்னிலே தோய்த்துத் திரிசெய்து வைத்துத்
தயிருடன் சோறது முண்டு
வன்னமாந் திரியைக் கொளுத்தியப் புகையை
வாங்கிட யிருமலும் போமே (௱௰அ)

(இ-ள்)

சுத்தி செய்த தாளகம் கொன்றைப் பட்டை

இவ்விரண்டையும் சமமெடுத்துக் கல்வத்தில் வைத்துத் தூள் செய்து கொன்றை யிலைச்சாறு விட்டு நன்ருக அரைத்து ஒரு வெள்ளைத் துணியில் தோய்த்து. (ஒரே சீராகத்தடவி) நிழலில் உலர்த்தி அதை சிறு சிறு துண்டுகளாகக் கிழித்துத் திரிசெய்து கொள்ளவும்.

நோயாளி, தயிர் சாதம் சாப்பிட்டு, ஷ டிரியில் ஒன்றை யெடுத்துக்கொளுத்தி அணைக்க அதிலிருந்து புகை எழும்பும் இதை உட்கொள்ளவும். இருமல் தீரும்.

---

## 51. இருமலுக்கு "அடை"

காட்டினில் முசுமுசுக் கைவேர் வெட்டிக்
கடுகவே கொணர்ந்ததைத் தானே
நாட்டமா யரிசி மாவினில் கூட்டி
நயமுட னரைத்ததைச் சுட்டு
யூட்டிடு காலை மூன்று நாளுந்தா
னோடிடு மிருமலுந்தானே
தாட்டிகற் றஞ்சை நகர்ச்சர பேந்திரன்
தானுண ரடையிது தானே (௱௰௯)

(இ-ள்)

முசுமுசுக்கை வேர் கொண்டுவந்து அதை அம்மியில் வைத்துத் தண்ணீர் விட்டரைத்து, அரிசி மாவுடன் சேர்த்துப்பிசைந்து அடைதட்டிச் சுட்டுத் தினம் காலை வேளையில் சாப்பிடவும். இப்படி 3 நாள் சாப்பிட இருமல் நிற்கும்.

---

## 52. இருமலுக்குக் கிருதம்

தூது வளையின் புராவுமே யாடா
தொடை யிம் மூன்றுஞ் சமூல
மீதுடன் குழுவிவேர் குருந்தம்வே
ரெழில்பெருங் குரும்பைவேர் கூட
சாதக வமுக்கிரு வேர்மிள கரணை
தன்னுட வேரழிஞ் சிலின்வேர்
கோதிலா மணவரை வேருட னுய்யக்கொண்
டானின்வே ராகவுமெட்டே (௱உ௰)

ஆகவே ரெட்டுஞ் சங்கிலை முருக்கி
னதிலை குப்பை மேனியிலை
வாகுள வடவிக் குலசிலை காட்டு
மல்லிகை யிலையதுங் கூட
வேகமாங் கோழி யவரையி னிலையு
மிவ்வாறு யிலையுடன் குக்கில்
சோகைநீர் கடுகுரோ கிணியுள்ளி
சுக்குத்திப் பிலியுமிந் துப்பே (௱உக)

இந்துப்புச் சீனக்கார ம் வாலுமுழுவை
யிதமுள கிராம்பு வெண்காரங்
கந்த நற்சீரக வசம்புட னேசவுக்
காரமு மிளகுநேர் வாளஞ் சாதி

சந்தமாங் காந்த முடனரி தாரஞ்
சாதிலிங் கங்கருஞ் சீரகம்
விந்தைசெய் யிரத முடனிவட் சார
மேற்பெருங் காயமுங் கூட்டே (௱௨௨)

கூட்டிடு துவர்ச்சி கையதுங் கூடக்
கூறிய யிருபத்தி மூன்றும்
நாட்டமாய்ச் சரியா யெண்ணெய்சேர் நெய்சேர்
நாரிகே ளத்தின்பால் சேருங்
காட்டினிற் கள்ளிப் பாலதுவுங் கூட்டிக்
கடுகதாய்ச் செய்துட்டி டையுங்
கூட்டிடு காலையி ருமலு மீளே
குடிபுகு மூரது விட்டே (௱௨௩)

(இ-ள்)

| | |
|---|---|
| தூதுவளைச்சமூலம் | இம்புராச்சமூலம் |
| ஆடாதோடைச்சமூலம் | குழவிவேர் * |
| குருந்தம்வேர் அதாவது காட்டு எலுமிச்சை வேர் | பெருங்குரும்பைவேர் (மருள் வேர்) |
| அமுக்கிருக்கிழங்கு | மிளகரணைவேர் |
| அழிஞ்சில்வேர் | மணவரைவேர் |
| உய்யகொண்டான்வேர் | சங்கிலை |
| முருக்கின் இலை | குப்பைமேனி இலை |
| அடவிக்குளசிலை | காட்டுமல்லிகை இலை |
| கோழியாவாரை இலை | குக்கில் |
| கடுகரோகிணி | உள்ளி |
| சுக்கு | திப்பிலி |
| இந்துப்பு | சீனக்காரம் |
| வாலுளுவை | கிராம்பு |
| வெங்காரம் | சீரகம் |
| வசம்பு | சவுக்காரம் |
| மிளகு | நேர்வாளம் |
| | (சுத்தியானது) |

* குழுவி வேர் என்று காணப்படுகிறது.

| | |
|---|---|
| சுத்திசெய்த லிங்கம் | கருஞ்சீரகம் |
| ,, ரஸம் | எவட்சாரம் |
| பெருங்காயம் | கடுக்காய் |
| சுத்திசெய்த காந்தம் | சுத்திசெய்த தாளகம் |

இவைகளை வகைக்கு (1¼ வராகனெடை வீதம்) எடுத்து அம்மியில் வைத்துத் தண்ணீர் விட்டரைத்து,

| | |
|---|---|
| நல்லெண்ணெய் | 1 சேர் |
| பசுவின் நெய் | 1 சேர் |
| தேங்காய்ப் பால் | 1 சேர் |
| கள்ளிப்பால் | 1 சேரும் விட்டு |

எல்லாவற்றையும் ஒன்று கலந்து, அடுப்பின்மேலேற்றி எரித்துப், பதத்தில் வடித்துக் கடுகுடனே வைத்துத் தினந் தோறும் ஒரு துட்டெடை வீதம் காலை நேரங்களில் சாப்பிட இருமல், ஈளை முதலிய ரோகங்கள் தீரும்.

---

## 53. இருமலுக்குச் சங்காதிப்புகை

சங்குட னுடா தோடையுங் கையாந்
    தகரைசெம் முள்ளியுந் தும்பை
துங்கமாங் குப்பை மேனியுந் துளசி
    தூதுவ ளையும்வேலி யின்பருத்தி
பங்கமில செருப்படி யும்பொடு தலையும்
    பதினொரு வகையிலை தனையும்
பொங்கமாய்த் துவைத்த ரசமதில் வெள்ளைப்
    புடவையைற் றோய்த்திடு வாயே (௱உ௪)

புடவையை றோய்த்து நிழலுலர்த் துலர்த்திப்
    போட்டிடு மீளவும் ரசத்தில்
திடமுடன் றோய்த்து முலர்த்தி நன்றாகச்
    செய்விதம் பொன்னரிதார

மடவியின் றும்பை யிலைரசத் தரைத்து
அச்சாற்றில் குழப்பியே பின்முன்
புடவையைற் றோய்த்து நிழலு லர்த்திப்
பிசகிடா மலுமதை வையே (௱உ௫)

வைத்து நல்லெண்ணெய் தனில்விளக் கேத்தி
வளமுட னுலர்த்திய துணியில்
சத்ததிற் கிழித்துத் திரியது வாக்கிச்
சாற்றிய விளக்கினிற் கொளுத்திச்
சுத்தமாய்,நாழி தனிற்றலை கீழாய்த்
துடியுடன் போட்டதின் புகையை
தத்துவ மாயுண் ணிருமலுந் தீரும்
நம்பிநீ செய்விபு வுரையே (௱உ௬)

(இ-ள்)

| | |
|---|---|
| சங்கிலை | ஆடாதோடை |
| கையாந்தகரை | செம்முள்ளி |
| தும்பை | குப்பை மேனி |
| துளசி | தூதுவளை |
| வேலிப்பருத்தி | செருப்படி |
| பொடுதலை | |

இவற்றை ஒன்று சேர்த்துக் கல்லுரலிலிட்டு இடித்துப் பிழிந்த ரசத்தை எடுத்துக் கொண்டு, அதில் ஒரு வெள்ளைத் துணியைத் தோய்த்து நிழலில் உலரவைக்கவும்.

முன்போல மறுபடியும் ஒரு தடவை தோய்த்து உலர்த்தவும்.

சுத்தி செய்த தாளகத்தைக் காட்டுத் தும்பை இலை ரசத்தினுலரைத்துக் குழம்பாகச் செய்து மேல் சொன்ன சீலையை மறுபடியும் அதில் தோய்த்து நிழலில் உலர்த்தவும்.

இத்துணியைச் சிறு சிறு துண்டுகளாகக் கிழித்துத்திரியாகச் செய்து. ஒரு அகலில் நல்லெண்ணெயூற்றி, அதில்

இத்திரியைக் கொளுத்திப் போட்டு அதன் மேல் ஒரு துவாரமுள்ள படியைக் கவிழ்த்து அதின் வழியே எழும்பும் புகையை உட்கொள்ளவும். இருமல் தீரும்.

---

## 54. இருமலுக்குப் புகை

* சித்தொடு வியின்பட் டையுமெல்லி தாகச்
சீவியே செங்கலின் பொடியுஞ்
சத்ததிற் போட்டு முலர்த்தித்தூ ளாக்கித்
தகை பெருங் கொட்டாங் கச்சியிலே
வைத்ததி லோர்பெருந் தணலதி லிட்டு
மற்றொரு துளைக்கொட்டாங் கச்சி
சுத்தமாய் மூடிச் சோறுமோ ருண்டு
துளைவழி புகையதை யுண்ணே (௱உஎ)

புகையதை யுண்ணச் சத்திய தாமப்
போதிலுஞ் சாதமோ ருண்ணு
வகைவெகு விதமாய் வருமிரு மலுமே
மாறிடுஞ் சிவனரு ளாலே
அகமகிழ்ந் தன்ன தானமுஞ் சொர்ண
மாடையு மிரவலர்க் களிக்குந்
துகையினி லடங்காக் கீர்த்திகள் பெற்ற
துரைசர பேந்திர னருளே (௱உஅ)

(இ-ள்)

சித்தொடுவியின் பட்டையை எடுத்து மெல்லியதாகச் சீவிச் செங்கல் பொடியும் சேர்த்து, இடித்துத் தூளாக்கிக் கொள்ளவும்.

---

*சித்துடி=கிலுகிலுப்பைப் பூடு எனக்காணப்படுகிறது.

இதையொரு கொட்டாங்கச்சிக்குள் வைத்து, அதன் மேல் ஒரு நெருப்புத் துண்டையிட்டு, வேறொரு துளையுள்ள கொட்டாங்கச்சியினால் பொருந்தும்படி மூடவும்.

நோயாளி, மோரும் சோறு உண்ட பின், மேலேயுள்ள கொட்டாங்கச்சியின் துளைவழியாய் வரும் புகையை உட்கொள்ளவும். வாந்தி ஏற்படில் மறுபடியும் மோர் சோறு உண்ணவும். பலவகைப்பட்ட இருமலும் தீரும்.

குறிப்பு :—

67 நெ. சுவடியில் '4 நாளைக்கு உபயோகிக்கவும்' என்றிருக்கிறது.

---

## 55. இருமலுக்கு 'அண்டா நீராகாரம்'

அண்டாவிற் சமைத்த சோற்றினிற் றண்ணீ
ரடவுட னூற்றியே வைத்தி
ரண்டானு ளந்த தண்ணியை யிறுத்து
நட்புட னுவுப்பு மிடாமற்
கொண்டிடு நாலைந் தாறுநா டன்னிற்
குலைந்திடு மிருமலுந்தானு
மண்டாது சொன்னேன் வீபுசரபேந்திர
னருளிய நீரிது தானே (௱௨௯)

(இ-ள்)

சமைத்த சோற்றின் தண்ணீரை ஒரு அண்டாவில் ஊற்றிவைத்து, (வடித்த கஞ்சி), மறுநாள் அந்தத் தண்ணீரை இறுத்து, உப்பு சேர்க்காமல் அப்படியே சாப்பிடவும். இவ்வாறு 4, 5, அல்லது 6 நாட்கள் சாப்பிடவும்' இருமல் தீரும்.

---

## 56. ஈளைக்குக் கடுக்காய்ச் சூரணம்

துவற்கடுக் காயதி விடையம தோடே
துடிமிகுங் காசுக்கட் டியுமே
யிவைகள்மூன் றையுமே சரிநிறை யாக
வெடுத்ததைப் பொடியது செய்து
கவனமாய் காசி னிடையது வொன்று
காலமே கொண்டிட ஈளை
யலம்பார்த் தோடுந் தப்பிலா மலுமே
யன்புள தஞ்சை மானுரையே (எ௬ய)

(இ-ள்)

கடுக்காய்த்தோல் அதிவிடையம்
காசுக்கட்டி

இம்மூன்றையும் சமனெடை எடுத்துப் பொடி செய்து வஸ்திரகாயம் பண்ணித் தினம் காசெடை எடுத்துக் காலையில் சாப்பிட ஈளை (கபக்கட்டு) தீரும்.

---

## 57, ஈளை, இருமல், குன்மம், சயரோகம், எரிகுன்மம், இரத்த பித்தத்திற்குக் "கூழ்ப்பாண்ட லேகியம்"

பூசணிக் காய்முத் தினதையுங் குடலைப்
போக்கி நன்றாகவே திருகிக்
கூசிடா மலுமே பிட்டதாய்ச் சுட்டுக்
குணமுடன் கையினால் பிழிந்து
மேசட்டி காயவைத்ததிற் போட்டு
மேன்மையாம் பசுவினெய் விட்டு
சூசினை யாகச் சிவக்கவும் வறுத்து
துடிமிகு முரலினி லிடியே (௱௬க)

இடித்தைத் தெள்ளிய தற்குமேன் மருந்து
இயம்புவேன் றிப்பிலிமூலந்
திடக்கிராம் போமஞ் சாதிக்கா யேலஞ்
செண்பகப் பூவில வங்க
மிடுக்குள சுக்கு திப்பிலி மிளகு
மிந்துப்பு கற்கட சிங்கி
யடவு செங்கழு நீர்கோட்ட மதுடனே
யதிமது ரமுநில வேம்பே (௩௩௨)

நிலத்தினில் வேம்பு நற்சிறு தேக்கு
நேருள்ள கொத்தமல் லிவிரை
வலுத்திடு நாகப் பூநாகந் தாது
வளமிருஞ் சீரகத் தோடே
நலத்தேவ தார முடன்கருஞ் சீரம்
நவிலிரு பத்திரண் டதனில்
சொலத்தகு மருந்தில் வகைக்குமுக் கழஞ்சு
தூளதா யிடித்திடு வாயே (௩௩௩)

இடித்துமுன் சொன்ன பொடியதிற் கலந்து
இயல்புடன் பிசரியோர் சட்டி
அடுப்பினில் காய வைத்திரு நாழி
ஆவினெய் விட்டுவேக விட்டு
விடுத்திடு தேனு முரியுஞ் சர்க்கரையு
மெய்ப்புட னுரியதிற் போட்டு
வடிப்பமாய்க் குழப்பிப் பதத்தினி லிறக்கி
வையொரு கலசம தனிலே (௩௩௪)

கலசத்தில் வைத்துத் தினமெலு மிச்சங்
காயள வுண்டிடு காலே
உலவிய பீளை யிருமலுங் குன்ம
மொட்டிய சயமெரி குன்மங்
கலகஞ்செய் யிரத்த பித்தமுந் தீருங்
கடவுளர் கிருபையி னலே
பலனுற்ற தஞ்சை விபுசர பேந்திரன்
பண்புட னுணர் லேகியதே (௩௩௫)

(இ-ள்)

முற்றிய பூசணிக் காயைக் கொண்டு வந்து, நறுக்கிக் குடல்களையும், விரைகளையும் நீக்கிவிட்டு அதைத் தேங்காய் திருகுபலகையில் திருகி வைத்துக்கொள்ளவும். ஒரு பாத்திரத்தில் தண்ணீரூற்றி வேடுகட்டி அதன் மேல் பூசணித் தூளைப் போட்டு அவிக்கவும். பின்பு, இவைகளைப் பிழிந்து அடுப்பின்மேல் ஒரு சட்டியை வைத்து அதிலிட்டுப் பசுவின் நெய் விட்டுப் பொன் வறுவலாக வறுக்கவும். இதை உரலிலிட்டிடித்துத் தூளாக்கிக் கொள்ளவும். பின்பு,

| | |
|---|---|
| கண்டத்திப்பிலி | ஓமம் |
| சாதிக்காய் | ஏலக்காய் |
| செண்பகப்பூ | கிராம்பு |
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | இந்துப்பு |
| கற்கடசிங்கி | செங்கழுநீர்க் கிழங்கு |
| கோஷ்டம் | அதிமதுரம் |
| நிலவேம்பு | சிறுதேக்கு |
| கொத்தமல்லி விதை | சிறு நாகப்பூ |
| சீரகம் | தேவதாரம் |
| கருஞ்சீரகம் | லவங்கப்பத்திரி |

இச்சரக்கு வகைகளை வகைக்கு 3 கழஞ்சு (கழஞ்சு 1¼ வராகனெடை)

வீதமெடுத்து உலர்த்திக் கல்லுரலிலிட்டிடித்துத் தூளாக்கி வஸ்திரகாயஞ் செய்துகொண்டு, பூஷணிச் சூரணத்துடனே கலந்து கொள்ளவும்.

அடுப்பின்மேல் ஒரு சட்டியை வைத்து 2 படி பசுவின் நெய்விட்டு அதில் ஷெ சூரணத்தை இட்டு,

| | |
|---|---|
| தேன் | ½படியும் |
| சர்க்கரை | ½படியும் |

போட்டு எரித்துப் பதத்தில் இறக்கவும். இதை ஒரு பாத்திரத்தில் பத்திரப்படுத்தித் தினமும் ஒரு எலுமிச்சங் காயளவெடுத்துக் காலை நேரங்களில் சாப்பிட்டுவர,

ஈளை, இருமல், எட்டுவகைக் குன்மங்கள், க்ஷயம், எரிகுன்மம், இரத்த குன்மம் முதலியவை தீரும்.

---

## 58. தொண்டைக் கம்மல், பித்தம், வாந்தி மயக்கம், இருமல், கால், கையெரிவு, அரோசகம், விக்கலுக்குப் 'பேராமுட்டி நெய்

காட்டினிற் பேரா முட்டி சமூலங்
கணக்குடன் றூக்கதி ரண்டு
நாட்டமா யிடித்துப் பானையிற் போட்டு
நல்ல தண்ணீ ரெட்டு மரக்கால்
கூட்டியே குறுணி யாகவே காய்ச்சிக்
கொண்டிறுத் தேபடி நெய்யுந்
தாட்டிக மாய்விட்டெ ரித்துநற்பதத்திற்
சாற்றுவேன் மென்பொடி தானே (௱௩௬)

பொடியது மிளகு திப்பிலி சுக்குப்
பொற்புள செண்பகப் பூவுங்
கடிமிகு மேலஞ் சந்தன மரேணு
கம்பெருஞ் சீரக முடனே
துடிமிகுந் தாளிச பத்திரி தானுஞ்
சுகசடா மாஞ்சிலிப் பத்து
மிடிவகை யொன்றுக் கொன்றரைப் பலமு
மிதமுள சூரண மாக்கே (௱௩௭)

ஆக்கியே யடுப்பிற் கொதிக்கிற பாகி
லன்புடன் றூவியே கிண்டி
யேற்கவே லேகியப் பதமதி னெய்யு
மீடுவொரு காற்படி தானும்

தாக்க நாழிகையுங் நாலது கொதிக்கத்
தான் வைத்துத் தேன்படி காலும்
யோக்கிய மாய்விட் டிறக்கிப்பாக் களவு
முண்டிடத் தீரும்நோய் கேளே (௱ந அ)

தீருநோய் கேளு தொண்டையின் கம்மல்
தேகவாந் தியும் பித்த மயக்கஞ்
சீரிய யிருமல் கால்கை யெரிவு
சினத்திட ரோசகம் விக்கல்
பாரிது களெல்லாஞ் சூரியன் முன்னே
பனி யெனப் பறந்திடுந் தானே
தாரணி புயன் றஞ்சை யில்வளர் சரபத்
தலைவனு மருளிய முறையே (௱நகூ)

(இ-ள்)

பேராமுட்டியைச் சமூலமாக 2 தூக்கு எடுத்துத் துண்டு துண்டுகளாக நறுக்கி ஒரு பானையில் போட்டு, சுத்த ஜலம் 8 மரக்கால் விட்டு, அடுப்பின் மேலேற்றி 1 மரக்காலாகும் வரைச் சுண்டக் காய்ச்சவும். அதனுடன் பசுவின்நெய் 1 படி விட்டுக் கலந்து அடுப்பின் மேலேற்றிக்காய்ந்து வரும்போது,

| | |
|---|---|
| மிளகு | திப்பிலி |
| சுக்கு | செண்பகப்பூ |
| ஏலக்காய் | சந்தனம் |
| காட்டு மிளகு | பெருஞ் சீரகம் |
| தாளிச பத்திரி | சடாமாஞ்சில் |

இவைகளை வகைக்கு $1\frac{1}{2}$ பலம் வீதம் எடுத்துச் சூரணித்து வஸ்திரகாயஞ் செய்து, அடுப்பின் மேலுள்ள பாகில் கலந்து, துாவிக் கிண்டி வரவும். லேகியம்போல சுண்டி வரும்போது பசுவின் நெய் $\frac{1}{4}$ படி விட்டு, அடிப்பிடிக்காமல் கிளரி லேகிய பதத்தில் இறக்கவும். பின்பு 4 நாழிகை ஆன பின் தேன் $\frac{1}{4}$ படி விட்டுக் கிளரித் தினம் பாக்களவு சாப்பிடவும்.

இதனால் தீரும் நோய்கள் :—

தொண்டைக் கம்மல், வாந்தி, பித்தம், மயக்கம், இருமல் கை காலெரிவு, அரோசகம், விக்கல் முதலியவை.

குறிப்பு :

தூக்கு—1¼ வீசை.

---

## 59. ஈளைக்கு இரண்டு மருந்துகள்.

தாயைக் கொன்றானை யுலர்த்தியே பொடிகள்
தான் செய்து சோறதிலிட் டாலுந்
தாயகப் புரசம் பட்டையைக் கடாயந்
தான் வைத்துப் பருகிடில் தானும்
போயிடு மீளை சிவன்கிரு பையினால்
பொற்புள தஞ்சையை யாளுந்
தாயினு மெற்ற தயவுத் தீரன்
சரப பூபதி யருள் முறையே (ராசய)

(இ-ள்)

தாயைக் கொன்றானை உலர்த்திப் பொடி செய்து சாதத்துடன் கலந்து சாப்பிட்டாலும்.

புரசம் பட்டையைச் சிதைத்துக் கஷாயம் வைத்துப் பருகினாலும் ஈளை தீரும்.

குறிப்பு :

தாயைக் கொன்றான்—வாழை

இம்மருந்தில் வாழைக்கிழங்கை எடுத்துக் கொள்ளவும்.

---

## 60. இருமலுக்கு மருந்து

“ தூதுவளைச் சமூலமுமே கொண்டுவந்து
நன்றாகற் றுவைத்துத் தண்ணீர்
சாதகமா யூற்றியதைப் பிசைந்துபிழிந்
தேயுழக்குச் சாற்றுக்குத்தா
னேதுமோர் கொட்டைப்பாக் களவுகண்டங்
கத்தரிவே ருமரைத்து
பேதமில் லாமலதை கரைத்துச் செய்யும்
விதமதனைப் பேசக்கேளே ” (௱சக)

“ பேசக்கேள் மூன்றேநாள் காலை தனிற்
குடித்திடவே பிசகிடாமற்
கூசிடா மற்பருத்திச் சுளைபோலும்
விழும் வாயால் குக்கியாலு
மேசத்து நேரமதின் பிறகுகஞ்சி
காய்ச்சியுண்ண இருமற்றீருந்
தேசத்திற் கீர்த்திபெற்ற தஞ்சைசர
பேந்திரனருள் செய்துபாரே” (௱சஉ)

(இ-ள்)

தூதுவளையைச் சமூலமாகப் பிடுங்கிவந்து நன்றாகக் கல்லுரலிலிட்டு இடித்து, ஜலம்விட்டு ஊரவைத்து மறுநாள் அதை நன்றாகப் பிசைந்து சக்கையைப் பிழிந்தபின் அதன் சீத கஷாயம் 1 உழக்கு எடுத்துக்கொள்ளவும். கண்டங்கத்திரி வேர் ஒரு கொட்டைப்பாக்களவு எடுத்து அரைத்து, முன் வைத்த சீத கஷாயத்தோடு குழப்பித் தினம் காலை வேளைகளில் மூன்று நாளைக்கு குடிக்கவும். வாயிலிருந்தும் வயிற்றிலிருந்தும் கபம் விழும். சிறிது நேரஞ்சென்று கஞ்சி காய்ச்சிச் சாப்பிடவும். இருமல் தீரும்.

---

## 61. சுரம், தாபம், மார்வலி, ஈளை, இருமல், எலும்புருக்கி, பெரும்பாடு, சத்திகுன்மம், அரோசகம், உஷ்ணம், கிராணி, அதிசாரம், பாண்டு, அசீரணம் முதலான ரோகங்களுக்குத் தாளிசபத்திரி வடகம்

தாளிசபத் திரிநாகப் பூகூகை
நீர்கிராம்பு தன்னுடனெக்க
நீளுசித்திர மூலமைந்தும் வகைக்குப்பல
மொன்றுவெகு நேர்த்தியான
கோளிலா மிளகுதிப் பிலிமூல
மிரண்டுதுகைக் குங்கூறத்தான்
கேளிரண்டு பலம்நாட்டுச் சுக்கதுவு
மூன்றுபலங் கெடியாய்க் கூட்டே (௱சங)

கூட்டியிடித் தேவடித்து வொருசட்டி
யிற்பசும்பால் குணமாய்விட்டு
நாட்டமாய் வேடுகட்டி வேட்டின்மேல்
முன்பொடியில் நறுநெய்விட்டு
போட்டிடுசர்(க்) கரைமூன்று சேரிதெலாம்
பிசைந்து வைத்துப் பிட்டாய்ச் சுட்டு
நீட்டிகையா லிறக்கியது வாறினபின்
தேன்வார்த்து நீயுந்தானே (௱சச)

தானேயிதிற் கழற்கொடிக் காய்ப்பிரமாண
மனுபானந் தனிலேகொள்ளு
மீனமுறுஞ் சுரந்தாப மார்வலியீ
ளையிரும லெலும்புருக்கி
ஊனமிகும் பெரும்பாடு சத்திகுன்ம
மரோசிகமு முஷ்ணங்கிராணி
நானுமதி சாரம்பாண் டசீரணமு
மிவ்வூரில் தரித்திடாதே (௱சரு)

(இ-ள்)

தாளிசபத்திரி சிறுநாகப்பூ
கூகைநீர் கிராம்பு
சித்திரமூலம்
இவைகள் வகையொன்றுக்கு ஒரு பலம்
மிளகு திப்பிலிமூலம்
இவ்விரண்டும் வகைக்கு 2 பலம்
சுக்கு 3 பலம்

இவைகளை எடுத்துக் காயவைத்துக் கல்லுரலிலிட்டிடித்து, வஸ்திரகாயம் செய்துகொள்ளவும். இதில் சிறிது பசுநெய்யை விட்டுப் பிசறிக்கொண்டு, ஒரு சட்டியில் பசுவின் பாலை விட்டு வேடுகட்டி, அதன்மேல் முன்சொன்ன தூளையிட்டுச் சர்க்கரை 3 சேரும் போட்டுக் கலந்து, அடுப்பின் மேலேற்றிப் பிட்டாகச் சுடவும். பின்பு இது ஆறியவுடன் தேன் விட்டுப் பிசைந்து கொள்ளவும். இதில் கழற்சிக்காயளவெடுத்து தக்க அனுபானத்தில் சாப்பிடச் சுரம், தாபம், மார்வலி, ஈளை, இருமல், எலும்புருக்கி, பெரும்பாடு, சத்தி குன்மம், அரோசகம், உஷ்ணம், கிராணி, அதிசாரம், பாண்டு, அசீரணம், முதலிய நோய்கள் தீரும்.

---

## 62 ஈளை, இருமல், மருந்தீடு, முதலானவைகளுக்குக் கண்டங்கத்தரி எண்ணெய்

கண்டங்கத் தரிதூது வளையுத்தா
மணியுமிள கரணைசங்கு
முண்டியமுற் றெருக்கின்செவி கரிசலாங்
கண்ணியுஞ்செம் முள்ளி யோடே
உண்டிடுஞ் சிறுவழுதலை யொன்பதுவே
ருஞ்சரியா யுந்தான்கொண்டு
அண்டியவா வின்பாலை வார்த்தரைத்து
வேண்டியவா மணக்கு நெய்யே (ஈசசு)

ஆமணக்கி னெண்ணெய்தனிற் கரைத்தெரித்து
மிறக்கிறபோ ததனிற்றுனே
நேமமுட னுப்பதனி லொருபிடிபோட்
டேயிறக்கி நிதமுங்காலை
யேமனத்தோ டொருகரண்டி கொள்ளீளை
இருமல்மருந் திடுதல்தானும்
போமிதுக்கென் றேதஞ்சைச் சரபோசி
மகாராசன் புகன்றவாறே" (௯௪௭)

(இ-ள்)

கண்டங்கத்திரி
உத்தாமணி
சங்கம்
கரிசாலங்கண்ணி
சிறுவழுதலை (சிறுகத்திரி)
தூதுவளை வேர்
மிளகரணை
முத்தெருக்கஞ்செவி
செம்முள்ளி

இச்சரக்குகளின் வேர்கள் வகைக்கு (1 பலம்) வீத மெடுத்துப் பசுவின்பால் விட்டு அரைத்து, சிற்றுமணக்கெண்ணெய் (4 சேருடனே) குழப்பி, அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதமானபின் இறக்குந் தருவாயில் உப்பு ஒரு பிடியை அதிலிட்டுக் குழப்பி இறக்கவும். இவ்வெண்ணெயைத் தினந்தோறும் காலை வேளையில் ஒரு சிறு கரண்டியளவு உட்கொள்ள ஈளை, இருமல், மருந்தீடு முதலிய ரோகங்கள் தீரும்.

---

## 63. இருமல், அக்கினிமந்தம், ஈளை, பெருவயிறு, மூலம், கிராணி, கிருமி, பக்கசூலைக்கு தூதுவேளைக் குழம்பு.

தூதுவளை கையாந்த கரைநொச்சி
யுமாடா தோடைசங்கு
சாதகச்சி றுவழுதலை குப்பைமேனி
தேட்கடைசா ரடையினூடே

சீதகக்கீழ் காய்நெல்லி பிரமியுட
னேநல்ல சிற்றமட்டி
ஓதுமீ ராறுவகை யிலையிடித்து
மதின்சாறு மோரொன்றுக்கே (௱சஅ)

ஓரொன்றுக் கும்நான்கு நாழிச்சா
றெண்ணெயது மொன்றுநாழி
சீருடைய முத்தக்கா சதிவிடைய
பேரீச்சமுந் திப்பிலிசுக்கு
சீரகமுங் கொடிவேலிவ சம்புவெட்பா
லையினரிசி சிறுமூலந்தான்
காரமிள குமிலந்தை யடையும்விழா
லரிசிமருக் காரைதானே (௱சகூ)

மருக்காரைசெ(வ்) வியஞ்சிறுதேக் குபெருங்குரும்
பையசம தாகங் கூட்(டே)
பெருங்காய முங்கடுகு ரோகிணியுங்
கடுகேலம் பிசகாமற்றுன்
இருபத்தி யிரண்டுவகைக் கொவ்வொரு
வகையதற்கு மேதான்கேளு
ஒருபலமு மெடுத்தரைத்து மென்பொடியாய்த்
தூவிவிடு வொக்கத்தா (னே) (௱ருய)

தூவியெரித் தேபதத்தி லிறக்கிநோய்
வலுவதும்பா(ர்)த் துக்கொண்டேதான்
ஆவலுட னேகாலை தனிற்கொள்ள
யிருமலுட னக்கினிமாந்தம்
மேவிளை பெருவயிறு மூலரோகங்
கிராணி மெற்றக்கிருமி
தாவுபக்கச் சூலையெல்லாம் பறந்தோடுந்
தப்பாமல் சகத்திற்றுனே (௱ருக)

(இ-ள்)

| | |
|---|---|
| தூதுவளை | கையாந்தகரை |
| நொச்சி (கருப்பு) | ஆடாதோடை |
| சங்கு | சிறுவழுதலை |
| குப்பைமேனி | தேள்கொடுக்கு |
| சாரடை | கீழாநெல்லி |
| பிரமி | சிற்றுமுட்டி |

இச்சரக்குகளின் இலையை யிடித்துப் பிழிந்த சாறு வகைக்கு 4 படி.

சுத்தமான நல்லெண்ணெய் 1 படி

| | |
|---|---|
| கோரைக்கிழங்கு | அதிவிடையம் |
| திப்பிலிமூலம் | சுக்கு |
| சீரகம் | கொடிவேலிவேர் |
| வசம்பு | வெட்பாலை அரிசி |
| திப்பிலி | மிளகு |
| இலந்தை | விழாலரிசி |
| மருக்காரை | செவ்வியம் |
| சிறுதேக்கு | பெருங்குரும்பை |
| ஓமம் | பெருங்காயம் |
| கடுகரோகிணி | கடுகு |
| ஏலக்காய் | பேரீச்சங்காய் |

இச்சரக்குகளை வகைக்கு ஒரு பலம் வீதமெடுத்துக் கல்லுரலிலிட்டு இடித்துச் சூரணம் செய்து சாறுகலந்த எண்ணெயுடன் கலந்து, அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்திலிறக்கவும்.

நோயின் பலமறிந்து இந்த எண்ணெயைத் தினந்தோறும் காலை வேளையில் உட்கொள்ள.

இருமல், அக்னிமாந்தம், ஈளை, பெருவயிறு, மூலரோகம், கிராணி, கிருமி, பக்கசூலை முதலிய வியாதிகள் நிச்சயமாகத் தீரும்.

7 OCT 1974



## 64. ஈளை, இருமல், இரைப்புக்குத் தேவதாளி எண்ணெய்

தேவதா ளிக்கையாந் தகரைத்தா
　　யைக்கொன்முன் செகத்திற்றுனே
தாவிவள ரவுரியிந்நாற் சாறுமிடித்
　　தேயதையுஞ் சமனுய்க்கூட்டி
பாவமுட னல்லெண்ணெய் விட்டெரி
　　நல்லகுணப் பதத்திறக்கி
யேவயண மாய்க்காலை நக்கயிரு
　　மலீளை யிரைப்பும் போமே　　(௱௫௨)

(இ-ள்)

| | |
|---|---|
| தேவதாளி சமூலம் | கையாந்தகரை சமூலம் |
| வாழைக் கிழங்கு | அவுரி சமூலம் |

| | |
|---|---|
| இவைகளின் சாறு தனித் தனியே | 1 சேர் |
| சுத்தமான நல்லெண்ணெய் | 4 சேரும் |

விட்டு ஒன்றாகக் கலந்து அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்திலிறக்கவும். இந்தஎண்ணெயைத் தினம் காசளவெடுத்துக் காலை வேளையில் சாப்பிட இருமல், ஈளை, இரைப்பு முதலிய ரோகங்கள் தீரும்.

---

## 65. இருமல், ஈளை, முதலான நோய்களுக்கு இலைக்கள்ளிச் சூரணம்

(அனுபானம் வெவ்வேறு)

இலைக்கள்ளி வடக்கினிற்போம் வேர்வெட்டித்
　　தோல்சீவி ரவிமுன்வைத்
துலர்த்திப்பொடி செய்துவைத்துக்கொண்டத்திக்
　　காயளவு மேயெடுத்து

நலத்துடைய நெய்யதனிற் குழைத்துண்ணுக்
காலையினில் நவிலுமீளை
குலேத்தோடுஞ் சோகையிரு மல்பித்த
பாண்டுமின்னங் கூறக்கேளே (௱௫௩)

கூறக்கே ளிப்பொடியை வெள்ளாட்டுப்
பாலினுடன் கூட்டியுண்ணச்
சிறும்பேய்ப் பிசாசகலு மிப்பொடிகோ
மயத்தினிலே சேர்த்துண்டக்கால்
தீருமகு வைபருத்த வயிறுசூலே
நீராமை செகத்திலேதான்
சாரமுள்ள காடியுட னுண்டக்கால்
சிறுபுழுவுந் தானும்போமே (௱௫௪)

போமிதற்குச் சளிநாக்குப் பூச்சிகிரை
யின்புழுவும் புகலும்வாதம்
நேமமுடன் முலேப்பாலிற் கலக்கியுண்ணக்
காமாலே நிலேகெட்டோடும்
பூமிதனிற் கீர்த்திபெற்ற துரைசரபேந்
திரனுணர்ந்து புதுமையாக
நேமமுள்ள யிலேக்கள்ளிச் சூரணமிது
நம்பியிதை நீ செய்வாயே (௱௫௫)

(இ-ள்)

இலேக் கள்ளிச் செடியின் வடக்கே போகும் வேரை வெட்டிக் கொண்டு வந்து மேல் தோலேச் சீவிவிட்டு, துண்டு துண்டுகளாக நறுக்கி வெயிலில் காயவைக்கவும். பின்பு இதைக் கல்லுரலிலிட்டிடித்துச் சூரணித்து வஸ்திரகாயஞ் செய்துகொண்டு, இச்சூரணத்தில் ஒரு அத்திக்காயள வெடுத்து நெய்யுடன் குழைத்துக் காலே நேரங்களில் சாப்பிடவும், ஈளை, சோகை, இருமல், பித்தபாண்டு, முதலியவை தீரும்.

பேய், பிசாசு, தீரச்

சூரணத்தை வெள்ளாட்டுப் பாலில் சாப்பிடவும்.

பெருவயிறு, ஈளை இவைகளுக்குப்

பசுமூத்திரத்தில் சூரணத்தை யுட்கொள்ளவும்.

வயிற்றிலுள்ள கிருமி விழவும், பெருவயிறு, சூலை, நீராமைக்கட்டி, சளி, நாக்கப்பூச்சி, வாதம் முதலான ரோகங்களுக்குச்

சூரணத்தைக் காடியுடன் சாப்பிடவும்.

காமாலை தீர

முலைப்பாலில் இச்சூரணத்தை உண்க.

---

## 66. ஈளை இருமலுக்கு 'அரிதாரப்புகை'

இலந்தையிலை மணித்தக்காளியினிலையு
மிடித்துப்பிழிந் திரண்டுசாறும்
நலந்தருமெல்லியசீலை தனிற்றோய்த்து
வைத்துமதை நன்றாகத்தா
னுலர்ந்தபின்பு இப்படியே யைந்துதரந்
தோய்த்துமதை யுலர்த்தித்தானே
பலந்தரும்பொன் னரிதாரம் பொடிசெய்து
முன்றுணிகைப் பத்தித்தானே (௯௫)

பத்திகிழித் தப்பொடியைத் தூவிதிரித்
தேபுளியம் பருமரத்தி
னுத்தபொருக் கின்தணலைக் கொளுத்தியிந்தப்
புகையதனே யுட்கொண்டாலே
நித்தமிரு மும்நோயு மீளையெலாந்
தீ(ர்)ந்து விடும் நிசமாய்த்தானே
சத்தியவா சகன் சரப மகிபால
னுணர்ந்தபுகை தாலிதாமே (௯௭)

(இ-ள்)

இலந்தை இலை, மணித்தக்காளி இலை.

இவைகளைக் கொண்டு வந்து, கல்லுரலிலிட்டிடித்துச் சாறு பிழிந்து, அதை ஒரு வெள்ளைத்துணியிலூட்டி, நிழலில் காயவைத்துக் கொள்ளவும், மறுபடியும் ஷெ சாற்றில் தோய்த்து உலர்த்திக் கொள்ளவும், இவ்வாறு 5 தடவை செய்துகொள்ளவும்.

தாளகம் ¼ பல மெடுத்துச் சுத்தி செய்து, அதைத் தூளாக்கி மேலே சொல்லி யிருக்கும்படி செய்துள்ள துணியில் ஒரே சீராகத் தூவித், திரியாகத் திரித்துக் கொள்ளவும் வேண்டும்போது இத் திரியை புளியம் பொருக்குத் தணலிலே கொளுத்தி, அதிலிருந்து எழும் புகையை வாயினுலுட் கொள்ளவும். ஈளை, இருமல் முதலிய நோய்கள் தீரும்.

---

## 67. இருமல், சுக்கிலப் பிரமேகத்திற்குத் தாளகப் புகை

அவுரிகொடி வேலி கையாந் தகரைவே
　　ருடனேபொன் னரிதாரந்தான்
நவிலுமிந்த நாலுஞ்சரி யாகவுமே
　　பசும்பாலை நாடிவார்த்து
துவளுமையைப் போலரைத்து யீக்கிபோ
　　லேநிரைத்து சொல்லக்கேளு
நலமாக நிழலுலர்த்த லாயுலர்த்திப்
　　பொட்டிதனில் நலமாய்வையே (ஈ௫அ)

வைத்தெருக்கங் குழல்தனிற் சொருகிநெருப்
　　பினிற்கொளுத்தி வகையாய்த்தாமே
யுத்திடுமப் புகையதனைக் காலையந்தி
　　யிலுங்கொள்ள வுடம்பிலுற்ற
சத்தமிகு மிருமலுடன் சுக்கிலப்பிர
　　மேகமறுந் தப்பாமற்றான்
மத்தகெச மீதிலிந்திர னு னிகர்ப்பவனி
　　வருந்தஞ்சை மானுஞ்சொல்லே (ஈ௫௯)

(இ-ள்)

அவுரி வேர் கொடி வேலி வேர்
கையாந்தகரை வேர் சுத்தி செய்த தாளகம்

இந்நான்கு சரக்குகளையும் வகைக்குச் சரி எடை யெடுத்துச் சூரணித்துப் பசுவின் பால் விட்டு மைபோலரைத்து மெல்லியதாக (ஈர்க்கின் கனம்போலத்) திரித்துக்கொள்ளவும் இதை நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்ளவும்.

இதை எருக்கங் குழலிற்குள் சொருகி. நெருப்பில் கொளுத்தவும். இதிலிருந்து எழும்பும்புகையைக் காலையிலும் மாலையிலும் மூக்கினாலுட் கொள்ளவும். இருமல், சுக்கிலப்பிரமேகம் முதலியவைகள் தீரும்.

---

## 68. ஈளை, இருமலிரைப்பிற்கு முடக்கொத்தான் மருந்து

முடக்கொத்தான் சாறுவுரி வெள்ளையுள்ளிப்
பூண்டைந்து மொக்கக்கூட்டி
திடத்துடனே யரைத்துக்கலக் கியுமூன்று
நாட்குடிக்க சேட்டைசெய்துக்
கடுத்தீளை யிருமலிரைப்புந்தீருஞ்
சிவனுடைய கருணையாலே
யடுத்தவரை யீடேற்றுந் துரைசரபேந்
திரனுணர்ந்த வருளதாமே (ராசூம)

(இ-ள்)

முடக்கொத்தான் சாறு ½ படி
வெள்ளைப் பூண்டின் பல் 5 (எண்ணிக்கையில்)

இவைகளை யரைத்துக் குழப்பித் தினம் காலை வேளையில் குடிக்கவும், 3 நாளைக்குக் குடிக்கவும். இருமல், ஈளை, இரைப்பு முதலிய நோய்கள் தீரும்.

---

## 69. ஈளைக்குத் தாளக மா

பொன்னரிதா ரம்பண்டத்திடைமூன்று
பணவெடைபொருந் துந்திப்பிலி
யின்னிரண்டும் பொடிசெய்து பச்சரிசி
மாபடிலொன் றிதிலேதானே
நன்னயமாய்ப் பிசைந்துதேன் கூட்டியொரு
பாக்களவோர் நாளேகொள்ளு
நின்னயமா வீளையக லும்பத்திய
மாகவிரு நீயுந்தானே (௱சுக)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| சுத்தி செய்த தாளகம் | 3 | பணவெடை |
| திப்பிலி | 12 | ,, |
| பச்சரிசி மா | 1 | படி |

அவற்றையும் ஒன்று கலந்து கல்லுரலிலிட்டிடித்து, தேன் வேண்டிய அளவு விட்டுப் பிசைந்து கொண்டு, ஒரு பாக்களவு வீதம் சாப்பிடவும், ஈளை தீரும். மருந்து சாப்பிடும்போது பத்தியமாக இருக்கவும்.

---

## 70. ஈளை, இருமல், மந்தாக்கினி, அருசிக்குத் தாளிச பத்திரிச் சூரணம்

தாளிச பத்திரியு மொரு பங்கு
மிளகிரண்டு பங்கத னுடன்றுனே
கேளுசுக்கு மூன்றுபங்குக் கூகை நீராம்
ஐந்துபங்கு கொடியதான
நீளுமில வங்கத்தின் பட்டை யரைப்
பங்கேலம் நிறைபலந்தான்
சூளுமிந்த வாறுவகை மருந்தெல்லாஞ்
சேர்த்தரைத்துச் சூரணஞ் செய்யே (௱சுஉ)

சூரணத்துக் கிரண்டுபங்குச் சீனிகலந்
தேகாலைத் துடியாய்க்கொள்ளு
சீரீளை யிருமல்மந் தாக்கினி யருசி
நோயதுவுந் தீர்ந்தேபோகும்
பாரில்மிகு கீர்த்திபெருந் துளசேந்திர
பூபனருள் பாலனென்கோன்
தீரன்சர போசிம (கா) ராசேந்திர
நிர்ணயித்துச் செப்பும் வாரே (ஈசுரு)

(இ-ள்)

| | |
|---|---|
| தாளிச பத்திரி | 1 பங்கு |
| மிளகு | 2 பங்கு |
| சுக்கு | 3 பங்கு |
| கூகை நீர் | 5 பங்கு |
| இலவங்கப் பட்டை | ½ பங்கு |
| ஏலக்காய் | 1 பங்கு |

இவைகளைக் காயவைத்து, ஒன்று சேர்த்துக் கல்லுரலி லிட்டு இடித்து, வஸ்திரகாயஞ் செய்து, அதற்கு 2 பங்கு சர்க்கரை கலந்து வைத்துக்கொள்ளவும்.

இச் சூரணத்தைத் தினம் ஒரு வெருகடி வீதம் சாப்பிட ஈளை, இருமல், மந்தாக்னி, அருசி, முதலியவைகள் தீரும்.

---

## 71. ஈளை, இருமலுக்குப் பூசினிக்காய் மருந்து

முத்தினபூ சணிக்காயைக் கொண்டு வந்து
குடல்தோலு முன்னே போக்கி
சத்துளபொன் னரிதாரந் திப்பிலி சுக்
கிதுமூன்றுந் தான்கழஞ்சு
நத்துவமா மிலவங்க மிருகழஞ்சு
சீனிபலம் நாலைந்தாகும்
பத்துகழஞ் சேகடுக்காய் பசுவின் பால்
நாழிப் பண்பாய்க் கூட்டே (ஈசுச)

கூட்டியே வேகவைத்துப் பதத்திறக்கி
நாளொன்றுக் குந்தான்கேளு
நாட்டினெலு மிச்சங்கா யளவுண்ணு
அதிகாலை நாளொன்றுக்கு
வாட்டிய ஈளையுமிரும லற்று விடுந்
தப்பாமல் மனிதற்காக
வூட்ட யிந்த முறையதனை யுணர்ந்தசர
போசிமன்ன னுரையிதாமே (ராசூ)

(இ-ள்)

ஒரு முற்றிய பூசினிக்காயைக் கொண்டுவந்து அதன் குடல், தோல் இவைகளை நீக்கிவிட்டு, சிறு சிறு துண்டுகளாகச் செய்து கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| சுத்திசெய்த தாளகம் | 1 | கழஞ்சு (1¼ வராகனெடை) |
| சுக்கு | 1 | ,, |
| திப்பிலி | 1 | ,, |
| கிராம்பு | 2 | ,, |
| கடுக்காய்த் தூள் | 10 | ,, |

இச்சரக்குகளை எடுத்து, உலர்த்தி, இடித்து வஸ்திர காயஞ்செய்து கொள்ளவும்.

ஒரு இருப்புச் சட்டியில் 20 பலம் சீனி போட்டு, பசுவின் பால் 4 படி விட்டு, அடுப்பின் மேலேற்றி எரித்துப், பாகான பின் பூசினிக்காய்த் துண்டுகளையும், சூரணத்தையும் அதில் போட்டு வேகவைத்து லேகிய பதத்தில், இறக்கி வைத்துக்கொள்ளவும்.

இதில் ஒரு எலுமிச்சங்காயளவெடுத்துத் தினம் காலையில் சாப்பிட ஈளை, இருமல் முதலிய ரோகங்கள் தீரும்.

## 72 குலைப்புக்குச் செருப்படி மருந்து

குலைப்புவந்த போதுசெருப் படிசமூல
மும்பிடுங்கிக் கொண்டேவம்மி
யுலர்த்தியிடித் துப்பொடிசெய் தோன்ருய்
வடிக்கட்டி யுறுதியாக
வலுத்தவெரு கடிதூளை மோரினிலா
குதல்வெந்நீர் வைத்தேயாதல்
பலத்தகுலைப் பும்வந்த போதுகொள்ளு
மைந்துவிசை பறந்துபோமே (௭௬௬)

(இ-ள்)

இருவித செருப்படிகளில் எது கிடைத்தாலும் அதை எடுத்துக்கொள்ளலாம். செருப்படியைச் சமூலமாகப்பிடுங்கி வந்து, நிழலில் உலர்த்திக் கல்லுரலிலிட்டிடித்து வஸ்திர காயஞ் செய்து கொள்ளவும். இதைக் குலைப்பு, இருமல் இருக்கையில் ஒரு வெருகடி (மூவிரல் கொண்ட அளவு) தூளை மோரிலோ அல்லது வெந்நீரிலோ சாப்பிடவும். ஐந்து நாளைக்கு இவ்வாறு உட்கொள்ளவும்.

---

## 73. குலைப்புக்குத் துத்தாதி உருண்டை

துத்தமெலிப் பாஷாணந் துருசியிது
மூன்றுசரி தொகுத்தெடுத்துன்
மத்தையிலைச் சாறுவிட்ட மரைத்துப்பய
றளவுருண்டை வகையாய்ச்செய்து
சத்துளவா வின்பாலி லோருண்டை
யிடக்குலைப்புந் தானேதீரும்
தந்தையர்மோ கனவனங்கன் சரபேந்திர
னிர்ணயித்த தாலிதாமே (௭௬௭)

(இ-ள்)

சுத்தி செய்த துத்தம்
சுத்தி செய்த எலிப்பாஷாணம்
,, துருசு

இவைகளைச் சம எடையெடுத்துக் கல்வத்திலிட்டு, ஊமத்தை இலைச் சாறு விட்டு நன்றாக அரைத்துப் பயறளவு உருண்டைகளாகச் செய்து கொள்ளவும், ஒரு மாத்திரை வீதம் பசுவின் பாலில் உட்கொள்ளக் குலைப்பிருமல் தீரும்.

---

## 74 "குலைப்புக்கு மூக்கரட்டை யெண்ணெய்

தாக்கியகு லைப்பதுவந் திடுபோதுச்
சிதமருந்து தானேகேளு
மூக்கரட்டை வேரையெண்ணெ யிற்போட்டுக்
கொதிக்கவைத்து முசிதமாக
சாக்கிரதை யாகவிட்டு மேலுக்கும்
பூசுமிதைத் தானேயைந்து
நாட்குளந்தக் குலைப்புவிட்டு மறுதேசம்
புகுந்துசடம் நலமதாமே (௱சூஅ)

(இ-ள்)

மூக்கரட்டைவேரை எண்ணெயிலிட்டுச் (நல்லெண்ணெய்) சிவக்கக்காய்ச்சி, இந்த எண்ணெயை உடம்பிலும் பூசி உள்ளுக்கு ஒரு துட்டெடையும் சாப்பிடக் குலைப்புத் தீரும். 5 நாளையில் குணம் கிடைக்கும்.

---

## 75. மருந்தீடுக்கு வேலிப்பருத்தி மருந்து

காசினியில் வளர்வேலிப் பருத்தியுட
கொழுந்ததனைக் கையினாலே
மாசிலா மற்கொணர்ந்து மதிலேந்து
பாக்களவு மரைத்துநன்றாய்
வாசமிகு மாவெண்ணெ யிற்குழைத்து
மைந்துநாள் வகையாய்க்கொள்ள
வீசுமருந் தீடுதீர்ந்து முடம்புசௌக்
கியமாகு மியல்பாய்ச் செய்யே (௱சுசு)

(இ-ள்)

வேலிப் பருத்திக் கொழுந்தைக் கொண்டு வந்து தண்ணீர் விடாமலரைத்த விழுதில் 5 பாக்களவெடுத்துப் பசுவின் வெண்ணெயுடனே குழைத்து, 5 நாளைக்குச் சாப்பிடவும் மருந்திடு நீங்கித் தேகமும் பலப்படும்.

---

## 76. காசமிளை, இருமலுக்குச் 'செம்பு பற்பம்'

செம்புபத்து கழஞ்சீச லிறகதுபோ
லேதட்டிச் செய்விதங்கேள்
கம்பிகம்பி யாகவொரு யிரைநீள
மத்தகட்டைக் கத்தரித்து
அம்புவியெ ருக்கம்பா லினில்மூன்று
நாளூற வதையும்வைத்துப்
பிம்பிரத முக்கழஞ்சுங் கெந்தகமு
மைங்கழஞ்சும் பிசகிடாதே (௱எ௰)

பிசகிடா தேவெள்ளைப் பாஷாண
மோர்கழஞ்சும் பேதமில்லா
இசைவான குழிக்கல்லி லேகருக
மத்தித்து மிதையும்வைத்து

இசையழிஞ்சில் பருப்புழக்கு மெருக்கினுட
பருப்புச்சாற் றினிலரைத்து
வசமான குகைபிடித்து நன்ருக
வுலர்த்தியதை வைத்துக்கொள்ளே (ாஎக)

வைத்துக்கொண் டேயந்தச் செம்பினுட
தகடெடுத்து வகையாய்த்தானே
சுத்தமுள்ள தூள்போட்டுத் தகட்டையு
மத்தித்துக் கொண்டேதான்
சத்துவைத்து மதின்மேலே பொடிதூவிக்
குகைவாயைத் தானுமூடிச்
சுத்தவெள்ளைச் சீலைதனை யடையடையாய்
வைத்துபின்புஞ் சொல்லக்கேளே (ாஎஉ)

சொல்லக்கேள் காயவைத்தோர் கலசமதற்
குள்குகையைத் துடியாய்வைத்து
நல்லகல சத்தின்வா யோட்டானே
மூடிமண்சீலையுமேசெய்து
வல்லபன்னி யுயரமெருக் குவித்துநடு
வேகலசம் வைத்துத்தீயை
யல்லலற வேயிட்டு மதுவெந்த
வாறறிந்து மதையுந்தானே (ாஎங)

அதையெடுத்துச் கலசத்துக் குள்மருந்தை
வாங்கிகுகை யதிஞேடேதான்
பதமாக மத்தித்து பிளகைதனி
லேயடைத்துப் பதனமாய்வை
யிதனி(ன்) நோய் வலுவறிந்து சற்றெடுத்துத்
தேனிலதை யிதமாய்க் கொள்ள
உதரத்தி லுற்றபிணி யீளையிரு
மல்காச முடனேபோமே (ாஎச)

(இ-ள்)

சுத்தி செய்த செம்பு 10 கழஞ்சு எடுத்து ஈசலிறகைப் போல் மெல்லிய தகடாகத் தட்டிக்கொள்ளவும் ஒரு விரற் கெடை நீள முள்ளதாக அதைத் கம்பியாகக் கத்தரித்துக் கொள்ளவும். இத்துண்டுகளை எருக்கம் பாலில் 3 நாளூற வைக்கவும்.

ஒரு கல்வத்தில் சுத்திசெய்த ரசம் 3 கழஞ்சும், சுத்தி செய்த நெல்லிக்காய் கெந்தகம் 5 கழஞ்சும், சுத்திசெய்த வெள்ளைப் பாஷாணம் 1 கழஞ்சும்போட்டு நன்ருக மத்திக்கக் கறுப்பான பொடியாகும். பின்பு, அழிஞ்சில் பருப்பு ஒரு உழக்குப் போட்டு, எருக்கம் பழுப்புச்சாறு விட்டு நன்ருக அரைத்து ஒரு குகை செய்து கொள்ளவும். இதை நிழலில் நன்ருக உலர்த்திக் கொள்ளவும். முன்னே சொல்லப்பட்ட தூணையும் செம்புத் தகட்டைக் கம்பிகளாக் கியதையும் தூளாக்கிக் குகைக்குள்ளே வைத்து மூடி வெள்ளைத் துணி யினுல் அதின் மேல் சுற்றவும். இவ்வாறு மூன்று அல்லது நான்கு தடவை சுற்றவும்.

ஒரு சட்டியை எடுத்து அதற்குள்ளே துணி சுற்றிய குகையைவைத்துச் சட்டியின் வாய்க்குத்தகுந்த ஒரு ஓட்டால் மூடிச் சீலை மண் செய்யவும். ஒரே அளவு, நிறையுள்ள வர ளிகளை பன்னியுரமுள்ள வரை (வராக புடம்) அடுக்கி, அதன் நடுவில் சட்டியை வைத்துப் புடமிடவும். புடம் ஆறிய பின்பு, கலசத்தைத் திறந்து மருந்தை எடுத்துக் கொள்ளவும், நோயின் பலமறிந்து தேனில் கொடுக்கவும்.

தீரும் நோய்கள் :—

வயிற்றிலுள்ள நோய்கள், ஈளை, இருமல், காசம் முதலி யவை.

## 77. இருமல், ஈளை, நெஞ்செரிவு, உடலுலர்தல், பித்தம், விஷசுரத்திற்கு 'ஆடாதோடை நெய்'

இருமலுக்கு மாடாதோ டையினெய்யு
மொன்றுரைப்பே னிதமாய்க்கேளு
தருவாடா தோடையிலை வேர்க்கொம்பு
பட்டையதிற் சமூலமுந்தான்
குருகவுமே யரிந்துமதி னூற்றிருப
துபலமுங் கொண்டிடித்து
இருதூணி நீர்விட்டு மஞ்சுநாள்
வைத்துமடுப் பேத்திடாயே (எஎரு)

ஏத்திநா லொன்றாகப் பதக்குநீ
ராய்க்காய்ச்சி யேவடித்து
மூத்தபசும் பால்குறுணி நெய்யுமொரு
நானாழி யொக்கவிட்டு
பார்த்துமது காய்ந்தபிற கிதற்குக்கற்க
மமுக்கிராவேர் பாரில்மேவும்
வாய்த்தவட்டத் திருப்பியுமா டாதோடை
யுஞ்சுழலா வாரைதானே (எஎசு)

தானுமுக்கா வேளையுங்கண் டங்காலி
வட்டுவேர தனுடனேழ்வே
ரானசிறு மூலகமுந் திரிகடுகு
சிறுதேக்கு மரத்தையேலம்
ஈனமிலா முந்திரிகைப் பழம்பேரீச்
சம்பழமு மிருவேலிவேர்
கானீல்விழா லரிசியில வங்கமர
மஞ்சளுங்கற் கடகசிங்கே (எஎஎ)

சிங்கார்கோ லிக்ஷீரக் கார்கோலி
யிடமியமுந் தேவதாரம்

பொங்கமிகு மிந்துப்புச் சிவதையுடன்
இலவங்கம் பொந்தத்தானே
பங்கமில்லாச் சந்தனத்தோ டாகயிரு
பதுவகையும் ப சுநெய்நாழி
யுங்கவன மாகவொரு கழஞ்சிவீ
தமதையுங் கொண்டிடாயே (௱எஅ)

கொண்டரைத்துக் கரைத்துப்பதத் தினிலிறக்கி
வடித்துமதைக் கொள்ளுகாலே
மண்டுமிரு மலீளை நெஞ்செரிவு
முடலுணர்தல் வலுத்தபித்தங்
கொண்டவிஷ சுரமதெலாங் குணமாகுஞ்
சிவகிருபைக் குமுகந்த
மண்டலாதி பதிசரபோ சிமகா
ராசனுணர் வகையாம் நெய்யே (௱எகூ)

(இ-ள்)

ஆடாதோடையிலை, வேர், கொம்பு முதலியவைகளுடன் சமூலமாக எடுத்து, சிறு சிறு துண்டுகளாக வெட்டி 120 பலம் எடுத்துக் கல்லுரலிலிட்டிடித்து 8 மரக்கால் தண்ணீர் விட்டு, 5 நாள் முழுதும் ஊறவைக்கவும். பின்பு, இதை அடுப்பின் மேலேற்றி நாலிலொன்றாய்க் காய்ச்சவும். பசுவின் பால் ஒரு மரக்காலும், பசுவின் நெய் 4 படியும் விட்டு, ஷை கஷாயத்தையும் ஒன்று கலந்து,

| | |
|---|---|
| அமுக்கிராக்கிழங்கு | வட்டத்திருப்பி |
| ஆடாதோடை வேர் | சுழலாவாரை |
| முக்காவேளை வேர் | கண்டங்கத்திரி வேர் |
| திப்பிலி | முந்திரிகைப்பழம் |
| திரிகடுகு | சிறு தேக்கு |
| சிற்றரத்தை | ஏலக்காய் |
| பேரீச்சம்பழம் | வெட்டிவேர் |
| விழாலரிசி | கிராம்பு |
| மரமஞ்சள் | கற்கடசிங்கி |

காகோலி
தேவதாரம்
சிவதை வேர்
சந்தனத்தூள்
கரிமுள்ளி வேர்
க்ஷீரகாகோலி
இந்துப்பு
இலவங்கப்பட்டை
*இடமியம்

இவைகளை வகைக்கு 4 கழஞ்சு வீதம் எடுத்து, இடித்து ஊரவைத்து, அம்மியிலிட்டரைத்துக் கஷாயம் கூட்டிய நெய்யுடனே குழப்பி, அடுப்பின் மேலேற்றிப் பக்குவமாக எரித்துப் பதத்திலிறக்கவும். தினம் ½ தோலா விதம் காலை நேரங்களில் சாப்பிடவும்.

இருமல், ஈளை, நெஞ்செரிவு, உடம்பு உலர்தல், பித்தம், விஷஜ்ஜுரம், முதலியவைகள் குணமாகும்.

## 78. ஈளை, இருமல், கிருமி, கோழை, தோஷம், வாய்வுக்குத் திப்பிலி நெய்.

திப்பிலிநெய் யிருமலுக்கொன் றுரைதுவேன்
றிப்பிலியுந் திறமாய்த்தானே
யற்புதமா யிரண்டுபலங் கடுகரோ
கணிமிளகு மாழாக்குத்தான்
தப்பிலா வெளுத்தபிசி னொருபலமுங்
கூட்டியரைத் ததனிற்போட்டு
செப்பமுட னதிகாலை நோயறிந்தோர்
கரண்டிநக்கத் தீர்நோய்கேளே (ரஅய)

கேளிரும லீளையறுந் தேகத்தி
லுண்டான கிருமிதீருங்
கோழையறுஞ் சலதோஷ முதலான
வாயுவெல்லாங் குணமதாகுங்

* 67 நெ. சுவடியிலும் இடமியம் என்றே காணப்படுகிறது இது மலையாளச் சரக்கான 'எடவகம்' என்று சொல்லப்படும் அஷ்டவர்க்க சரக்கிலொன்றாக இருக்கலாமென்று தோன்றுகிறது,

காலை தனிற் பவனிவரும் பரமசிவ
னருளாலே கனதைபெற்ற
வாளிறைவன் தஞ்சைசர பேந்திர னுணர்
திப்பிலிநெய் வகையாயுண்ணே (௱அக)

(இ-ள்)

| | |
|---|---|
| திப்பிலி | 2 பலம் |
| கடுகரோகிணி | 1 ஆழாக்கு |
| மிளகு | 1 ஆழாக்கு |
| வெளுத்த பிசின் | 1 பலம் |

இவைகளை எடுத்துச் சூரணித்து, *பசுவின் நெய் (1படி) யுடனே கலந்து அடுப்பின் மேலேற்றிப் பக்குவமாக எரித்து வடிக்கவும். இந்நெய்யில் ஒரு சிறு கரண்டியளவெடுத்துக் காலை வேளையில் சாப்பிட, இருமல், ஈளை, கிருமிகள், கோழை சலதோஷம, வாயு முதலிய பற்பல ரோகங்கள் தீரும்.

## 79. ஈளை, இருமல், காசச்சுவாசம், மந்தார காசம், எலிகடி, இரைப்பு, அரிகுரல், நெஞ் செரிவு முதலான ரோகங்களுக்கு 'நாகச் செந்தூரம்'

முத்திரைக்கட் டியுந்துத்த நாகமதி
லஞ்சுபல முந்தான்கேளு
வுத்தபசு வின்வெண்ணெ யிலுப்பெண்ணெ
யுங்கலந்து வோர்கரண்டி
யித்தடவி யத்துத்த நாகமதைப்
போட்டுமிரு பதுதிறந்தான்
சத்துளவெள் ளாட்டுப்பா லிற்சாய்த்தும்
புதுச் சட்டி தனிலேதானே (௱அ௨)

*செய்யுளில் காணப்படவில்லை.

புதுச்சட்டி தனிற்சுக்குப் பலமைந்தோ
மமும்வெடி யுப்புமூழ்க
பதத்துடனே பொடிசெய்து சட்டி தனி
லேநிரவிப் பகரக்கேளு
இதவாந்துத் தநாக மதிற்போட்டு
வறுபின்பு மேதினிக்குள்
வீதமாகச் சிவந்தநா யுருவி கண்டங்
கண்டமாய் வெட்டிக்கொள்ளே (௱அங)

வெட்டிக்கொண் டேவைத்துச் சிறுகசிறு
கப்போட்டு மேவறுக்க
திட்டமுருக் கம்பூவைப் போல்சிவந்
தேவருமச் செந்தூரத்தை
சட்டமாயோர் பணவி னிடைசுக்கு
மிளகிரண்டுந் தான் வெதுப்பி
அட்டியிலா மற்றாள்செய் தேவெருக
டிதாளு மருந்தேருனே (௱அச)

தேனதனிற் கலந்திரண்டு வேளையுமே
நாற்பது நா(ள்) திறமாய்க் கொள்ளு
தானிதனிற்கு மீளையிரு மற்காசச்
சுவாசமுமந் தாரகாச
மானயெலி கடியிரைப்பு மரிகுரல்
நெஞ்சுநோவு மகலுமிந்த
வூனமிலா நாகசெந் தூரமிது
தஞ்சைவிபு வுரைத்தவாறே (௱அரு)

(இ-ள்)

சுத்தி செய்த துத்தநாகம் 5 பலமெடுத்துத் தகடாகத் தட்டி இலுப்பெண்ணெயும், பசுவின் நெய்யும் தனித்தனி ஒரு கரண்டியளவு எடுத்துக் கலந்து, தகட்டின்மேல் பூசி, அதை ஒரு சட்டியிலிட்டு அடுப்பின்மேல் வைத்து உருக்கவும். அது உருகியபின் அதை வெள்ளாட்டுப் பாலில் சாய்க்கவும். இவ்வாறு 20 தடவை செய்யவும்.

ஒரு புதுச் சட்டியை யெடுத்து அதில், சுக்கு, ஓமம், வெடியுப்பு இவைகளை வகைக்கு 5 பலமெடுத்துச் சூரணித்து வஸ்திரகாயஞ் செய்து போட்டு, அதை ஒரே சீராக நிரவி விடவும். அதன்மேல், மேலே சொன்னபடி சுத்திசெய்த துத்தநாகத்தைப்போட்டு, அடுப்பின்மேல் ஏற்றவும். சிவப்பு நாயுருவியைச் சமூலமாக எடுத்துச் சிறுசிறு துண்டுகளாக்கிக் கொண்டு இவைகளைச் சிறுகச் சிறுகப் போட்டு சட்டியிலிருக்கும் நாகத்துடன் வறுக்கவும். முருக்கம் பூவையொத்த சிவப்பு நிறமான சிந்தூரம் கிடைக்கும்.

இச்சிந்தூரத்தில் ஒரு பணவெடை (3½ குன்றி)யெடுத்து அதனுடன் மிளகு, சுக்கு இவ்விரண்டையும் சமனெடை யெடுத்து வெதுப்பிச் சூரணித்த தூளில் ஒரு வெருகடி எடுத்து தேன்விட்டுக் குழைத்துக் காலையிலும் மாலையிலுமாக 40 நாளைக்குச் சாப்பிடவும். ஈளை, இருமல், காசம், சுவாசம், நெஞ்சிலுண்டாகும் ரோகங்கள் முதலியவை நீங்கும்.

குறிப்பு:—

இம்மருந்து சிவப்பாக ஆகவில்லை. சாம்பல் நிறமாகவே இருக்கிறது.

---

## 80. காசம், இருமல், ஈளைக்கு 'வேலிப் பருத்திச் சூரணம்'

அடவிவேலிப் பருத்தியிலை யடுப்பதில்
வறுத்துத்தூள் செய்துமி(ரண்டு)கா
சிடையுந்திப் பிலிசுக்கு மிளகிரண்டு
காசிடையும் வகையொன்றுக்கு
திடமதாகவுஞ் சூரணஞ்செய்து முன்செப்பிய
பொடியுங்கூட்டி நான்கையுங்
கடத்திலுற் றிடுதேனிற் குழப்பியுண
காசமோடிரு மலீளைதீருமே (ரா அசு)

(இ-ள்)

வேலிப்பருத்தி இலை 2 காசளவு எடுத்து ஒரு புதுச் சட்டியிலிட்டு அடுப்பின் மேலேற்றிச் சிவக்க வறுத்துக் கொள்ளவும். அதை இடித்து வஸ்திரகாயஞ் செய்து அதனுடன் திப்பிலி, மிளகு, சுக்கு, இவைகளையும் வகைக்கு 2 காசெடை எடுத்துச் சூரணித்துத்தேனில் குழைத்துவைத்துக்கொண்டு சாப்பிட்டு வரக் காசம், இருமல், ஈளை முதலிய ரோகங்கள் தீரும்.

குறிப்பு :—

காசெடை—வராகனெடை.

---

## 81. இருமலுக்கு மருந்து.

கானத்தூது வளைவே ரரைத்துமே
கள்ளமில் லாப்பசுப் பாலிலேகலந்து
தானமில் லாமலே யதிகாலையி
லுண்டுபார் மூன்று நாளதிற்ருனுமே
ஈனமாக மனிதரைப் போர்செயு
மிருமலுமற்றுப் போம்நிச மாகவே
ஞானவான் தஞ்சை யாளுஞ் சரபோசி
ராச பூபதி சொல்லு முறையிதே (௱அஎ)

(இ-ள்)

தூதுவேளை வேரைப் பசுவின் பாலில் அரைத்து அதிலேயே கலந்து காலை வேளையில் மாத்திரம் 3 நாளைக்குச் சாப்பிட இருமல் தீரும்.

## 82. இருமலுக்கு 'நீர் முள்ளியாதி நீர்'

நீரின்முள்ளி சமூல மொருபிடி
நீண்கையாந்தகரை யொருபிடி

காரமாமாடா தோடை யொருபிடி
கானச்செம்முள்ளி வேருமரைப்பிடி
சாரமான முருக்கி லிலையதுஞ்
சாற்றியபடி யேயதரைப்பிடி
ஊரிற் சுக்குட னேகடுக் காயது
மொக்கக் கூட்டிநா நாழிநீர்வா (ர்)த்திடே
(ரஅஅ)

வா(ர்)த்த டுப்பினில் வைத்திரு நாழியாய்
வந்ததே யிறக்கி வேரடுப்பினி
லாற்றிச் சட்டியிற் சூடதாய் வைத்துநா
ளொன்றுக்குமூன்று காசிடை நீரதும்
வா(ர்)த்துத் திப்பிலி மென்பொடி தூவியே
வதிகாலையிற் கொண்டிட இருமலுங்
காற்றென வேபறந் துநன்ற கிடுங்
கனமிகுந் தஞ்சை மானருளிதே (ரஅகூ)

(இ-ள்)

| | |
|---|---|
| நீர்முள்ளிச்சமூலம் | 1 பிடி |
| கையாந்தகரை | 1 பிடி |
| ஆடாதோடை இலை | 1 பிடி |
| செம்முள்ளி வேர் | ½ பிடி |
| முருக்கிலை (முள் முருக்கு) | ½ பிடி |
| சுக்கு | 1 பிடி |
| கடுக்காய்த்தூள் | 1 பிடி |

இவைகளையொன்று சேர்த்து இடித்து 4 படி தண்ணீர் விட்டு, அடுப்பின் மேலேற்றி 2 படியாகும்வரை காய்ச்சவும். இக்கஷாயத்தை வேரொரு சட்டியில் ஊற்றிவைத்து, சூடாக இருக்கும்போதே நாளொன்றுக்கு 3 காசெடை வீதம் எடுத்து அதனுடன் திப்பிலித்தூள் போட்டு அதிகாலையில் உட்கொள்ளவும். இருமல் தீரும்.

## 83. இருமலுக்குக் 'கடுக்காய்த்தூள்'

சட்டமாங் கடுக்காய்ப் பொடி செய்ததூ
டன்னெச்சீலை தனில்வடிக் கட்டியே
திட்ட மானநற் றேனிற்கு ழைத்துமே
திப்பி லியதின் மேன்பொடி கூட்டியே
நட்டணும் பிள்ளை நாவிற் றடவிட
நாட்கள் சென்ற யிருமலு மாறிடும்
அட்டியில் லாமற் செப்பிள்ளையான துக்
காகுமே கைகண்ட முறை யதே (௱௯௰)

தோட்டத்தின் குப்பை மேனியின் வேரதைத்
தூக்கியேயொரு காசளவுமரைத்
தேட்டமா மங்கைப் பாலிற் கொடுத்திடத்
தீர்ந்திடும் வயிற்றின் கழிச்சலதும்
நாட்டமாய் மூன்றுநாளது மீய்ந்திடு
நல்லகோயில் மதில்களுஞ் சூழ்ந்திடுந்
தாட்டிக மிகுந்(த) தஞ்சை நகரில் வாழ்
சரப பூபதி சாற்றுமருமிதே (௱௯௧)

(இ-ள்)

(1) கடுக்காயைச் சூரணித்து வஸ்திரகாயஞ்செய்து கொண்டு, திப்பிலிச் சூரணமும் சேர்த்துத் தேனில் குழைத்துச் சாப்பிட்டுவர நாட்பட்ட இருமல் தீரும். இதனால் அதிக மான மலப்பிரவிருத்தி உண்டானால்,

(2) குப்பைமேனியின் வேரை ஒரு காசளவெடுத்து முலைப்பாலில் அரைத்துக் கொடுக்கவும். வயிற்றுக்கழிச்சல் தீரும். 3 நாளைக்குக் கொடுக்கவும்.

---

## 84. சலக்கழிச்சலுக்குத் "தாம்பிர பற்பம்"

தாம்பிரத்தைத் தகடதுதட் டியேதண்ணீர்
வார்த்தரைத்தே யரிதாரத்தை

சோம்பிடாமற் றகட்டிற் றடவியே
சுத்தமாயெரு முட்டைப் புடம்பண்ணி
தேம்பிடாமலதையெடுத் தேயரைத்
திடுகல்லம்மி யிலுச்சித மாம்பற்ப
மாம்பின் பத்திரம் பண்ணிபணவெடை
மாத்திரங்கொளச் சுடுநீரிற் காலையே (௱௬௨)

காலையே யைந்துமா றுநாட் கொண்டிடு
கற்புடன்புளிப் புந்தவிர் வாயுவின்
சோலியான பதார்த்தமுந் தள்ளிடு
தோன்றிடுஞ் சலத் தின்கழிச் சலது
கோல மானக திரவனைக்கண்ட
கொடும்ப ளியென வோடிடு மற்புத
வாலச் சந்திரனைச் சூடுஞ் சங்கரன்
வரங்கள் பெற்றம காவிபு சொல்லிதே
(௱௬௩)

(இ-ள்)

சுத்தி செய்த தாளகத்தைத் தண்ணீர் விட்டரைத்து விழுதாக்கிக் கொண்டு, சுத்தி செய்த தாமிரத் தகட்டின்மேல் ஓரேசீராக இருபக்கங்களிலும் தடவவும். இதை ஒரு அகலில் வைத்துச் சீலைசெய்து காய்ந்தபின், வரளிகளை அடுக்கிக் கஜ புடம் போடவும். ஆறியபின்பு, புடத்தைக் கலைத்துத் தாமிரத் தகட்டை எடுத்துக் கல்வத்திலிட்டு நன்றாக அரைத்துக் கொள்ளவும்.

இப்பற்பத்தில் ஒரு பணவெடை எடுத்து வெந்நீரில் போட்டு காலை வேளைகளில் உட்கொள்ளவும். இவ்வாறு 5 அல்லது 6 நாட்கள் சாப்பிடவும், புளிப்புப் பதார்த்தங்களையும், வாயு பதார்த்தங்களையும் நீக்கவும், சலக்கழிச்சல் தீரும்

குறிப்பு :

தாளகத்தை சுண்ணும்புக் கல்லுக்குள்வைத்து பசுவின் மூத்திரத்தை விட்டு 2 நாளூரவைக்கவும்.

## 85. சலக் கழிச்சலுக்கு 'ஊசிக்காந்தாதிச் சூரணம்'

ஊசிக்காந் தமபிலி குருசானி
வோமஞ்சா திலிங்கஞ் சாதிபத்திரி
வாசமாஞ்சாதிக் காயுங் கிராம்புடன்
வகையொன் றுக்கோர் பலமது வெண்காரந்
தூசிபோகச் சாணுகத்தி லேயதைச்
சுத்தி பண்ணி யொருவரா கனெடை
பேசுமெட்டும் பொடி செய்து வைத்துமே
பின்பு நாலு பணவெடை தேனிலே (ரகூச)

தேனி லாவத லது சர்க்கரை
தின்னும் வாழைப் பழத்தினி லாவது
தானு மெட்டு நாட்கொள்ளு புளிப்பதுந்
தள்ளு கைப்புடன் வாயுப்ப தார்த்தமு(ம்)
ஈனஞ் செய்யுஞ் சலக்கழிச் சலது
மேகு மூரைவிட் டைந்தாறு நாடனி
லூனமில் லாத்தஞ் சாபுரி தன்னில்வா
முத்தமன் சர பேந்திர னருளிதே (ரகூரு)

(இ-ள்)

| | |
|---|---|
| சுத்திசெய்த ஊசிகாந்தம் | அபினி |
| ,, ஜாதிலிங்கம் | குராசானி ஓமம் |
| சாதிப்பத்திரி | சாதிக்காய் |
| கிராம்பு | |

| | |
|---|---|
| இவைகள் வகைக்கு | 1 பலமும் |
| சாணியில் சுத்தி செய்த வெங்காரம் | 1 வராகனெடையு மெடுத்துக் |

கல்வத்திலிட்டு நன்றாக நுணுக்கிக்கொள்ளவும். இந்தச் சூரணத்தில் 4 பணவெடை யெடுத்துத் தேனிலோ அல்லது சர்க்கரையிலோ அல்லது வாழைப்பழத்திலோ 8 நாளைக்குச் சாப்பிடவும்.

இதற்குப் பத்தியம்:—

புளிப்பு, கைப்புப் பதார்த்தங்களை நீக்கவும்.

5 அல்லது 6 நாட்களுள் சலக் கழிச்சல் நிற்கும்.

---

## 86. ஈளை, இருமல், சுரம், முதலான வியாதிகட்கு அரிதார பற்பம்

### (அனுபானம் வெவ்வேறு)

வன்ன மாமரி தாரம் பலமொன்று
வரிசை நொச்சிலைச் சாறுதன் னைவிட்
டுன்னித மாயரை பின்புகேள் செம்பருத்
தியினிலைச் சாறு வார்த்து மூன்றுநாள்
நன்னயத் துட னேயரைத் தேயதை
நற்று மண்ணின் குகைதனில் வைத்துமே
பின்னுங் கேள்முருங் கையிலைச் சாறதைப்
பிசகி டாமலோர் சீலையி லூட்டிடே (௩கசு)

ஊட்டியே யந்தச் சீலையை யக்குகை
யொக்க மூடிய தின்மே லறுசீலை
நாட்ட மாகவே யிட்டலி போலிட்டு
நல்ல வெய்யினி லேவைத் துலர்த்தி
காட்டெருவை யடுக்கிக் குழியிலே
கடுக வைத்துக் கெசபுடந் தானதுப்
போட்டெ டுத்துப் பதனம தாகவே
புதுமை யாகவும் வைத்திடு மேலுமே (௩கஎ)

மேலுஞ் சொல்வேன் சிறுபய றத்தனை
வெற்றிலை ரசந் தனிலே கொண்டிட
வோலஞ் செய்யு மிருமலுஞ் சேற்றும
முடனே நிற்கும் வெங்காய ரசத்தினில்

நாலு நாளது கொண்டி (டஇ)ருமலும்
நாடி டாதுமஞ் சள்பொடி தன்னிலே
மேலும் நாலுநாட் கொண்டிட மாந்தர்க்கு
மேலின் மூச்சது மூரைவிட் டோடுமே
(௱௬௮)

ஏகுந் திப்பிலிச் சூரணந் தன்னிலே
இதயமாய்க் கொள்ள இருமலும் போகுமே
வாகுள நொச்சி யின்னிலைச் சூரணம்
வகையாய்ச் செய்ததிற் கூட்டியே யுண்டிட
தேக மீதுற்ற கொடிய வீஷசுரஞ்
சேற்றும சுரந் தீர்ந்திடும் வாழையி
ஞகிடும் பழந் தன்னிலே யுண்டிட
யருஞ்சுரம் போமோர் தன்னிலே யுண்டிடே
(௱௬௯)

மோரி லுண்டிடக் குக்கிக் கழிச்சலு
முக்கிய மாஞ்சுரந் தானதுந் தீருமே
சார மானவெண் ணெயதிற் கொண்டிட
சகல வாந்திவிக் கலதுந் தீருமே
தூருத் தாமணிச் சாற்றினிற் கொண்டிடச்
சுத்தநா லாமுறைக் காய்ச்சல் தீருமே
கூறுள மருதம் பட்டைச் சாற்றினிற்
கொள்சலக் கழிச்ச லதுமோடுமே (௨௱)

ஓடிடும் பருத் திவிதைச் சாற்றினி
லுறுதியாய்க் கொள்வெகு மூத்திர மறும்
பாடிய வைத்தி யநூல் முறையதைப்
பார்த்துப் பார்த்து வுணர்ந்து நன்ருகவே
தேடியே யிதைச் சொன்னது தஞ்சையின்
தீரனுந் துள சேந்திர மகிபதி
யாடவர் சிரோ ரத்தின மருளிய
அன்பனுஞ் சர பேந்திர னருளிதே (௨௱௧)

(இ-ள்)

சுத்தி செய்த தாளகம் 1 பலம் எடுத்துக் கல்வத்திலிட்டு கருநொச்சியிலை சாறு விட்டு நன்றாக (4 ஜாமங்கள்) அரைத்துக் கொள்ளவும். பின்பு செம்பருத்தியிலைச் சாறுவிட்டு 3 நாள் அரைத்து, மண் குகைக்குள் அவ்விழுதை வைக்கவும்.

முருங்கையிலைச் சாற்றை ஒரு சிறிய வெள்ளைத் துணியிலாட்டவும். இந்தச் சீலையினால் குகையின் வாயை மூடி 6 தடவைச் சீலமண் செய்யவும். அந்த குகையானது ஒரு இட்டிலி பரிமாணமாகும் வரை சீலமண் செய்தல் வேண்டும். பின்பு, இதை வெயிலில் நன்றாகக் காயவைத்து, ஒரு குழியில் காட்டெருவை (தானாகவே உலர்ந்தசாணி) அடுக்கிக் கஜபுடம் இடவும். ஆறியபின் இப்பற்பத்தை யெடுத்துக் கொள்ளவும்.

இதில் ஒரு சிறு பயறளவு எடுத்து, வெத்திலைச் சாற்றில் சாப்பிட இருமல், கபம், முதலான ரோகங்கள் உடனே தீரும்

## இருமலுக்கு :—

4 நாளைக்கு வெங்காயச் சாற்றில் சாப்பிடவும்.

## மேல் மூச்சு நிற்க :—

4 நாளைக்கு மஞ்சட் பொடியில் சாப்பிடவும்.

## இருமலுக்கு :—

திப்பிலிச் சூரணத்திலும் உட்கொள்ளலாம்.

## விஷஜ்வரம், ச்லேஷ்ம ஜ்வரத்திற்கு :—

நொச்சி இலைச் சூரணத்தில் இப்பற்பத்தைச் சாப்பிடவும். ஜ்வரம் தீர வாழைப்பழத்திலும் சாப்பிடலாம்.

### வயிற்றுக் கழிச்சலுக்கு :—

மோரில் சாப்பிட மேல் சொன்ன நோயும் ஜ்வரமும் தீரும்.

### வாந்தி விக்கல் தீர :—

வெண்ணெயுடன் சாப்பிடவும்.

### நாலாம் முறை காய்ச்சலுக்கு (நான்கு நாளைக்கு ஒரு தடவை வரும் ஜ்வரம் அதாவது மலேரியா)

உத்தாமணி (வேலிப்பருத்திச்) சாற்றில் உட்கொள்ளவும்.

### சலக்கழிச்சல் தீர :—

மருதம் பட்டைச் சாற்றில் உட்கொள்ளவும்.

### வெகு மூத்திர ரோகத்திற்கு :—

பருத்தி விதைச் சாற்றில் கொள்ளவும்.

---

## 87. சளி இருமலுக்கு "நொச்சி எண்ணெய்"

நொச்சிவேர் வெள்ளெருக்கு வழிஞ்சிலும்
நூதனப் பிரட்டான் கொஞ்சில்வே ரைந்துஞ்
சொச்ச மாகவில் லாமற் சரியதாய்
சுக்குமுள்ளி வசம்பு மிளகுமே
இச்சை யாகவே கூட்டியே சூரண
மிதமாய்ப் பண்ணியே யெண்ணெயுஞ் செய்
உச்சிதத் திப்பிலி யதுமேன் பொடி [துதான
யொக்கத்தூவி யிறக்கியும் வைத்திடே (உ௱உ)

வைத்துக் காலையி லுள்ளுக் களவதாய்
வகையாய்க் கொண்டதை மேலும் பூசிடச்
சுத்த மாகவி ருமல் சளியுமே
துரத்திடு மிதற்கும் வாயுப் பண்டங்கள்

நத்திடும் புளி தள்ளிட வேவெகு
நாட்கள் சென்ற யிருமலும் போய்விடும்
பத்தி யாகவுஞ் செய்திடு நந்திக்குப்
பரம ஞருரை செய்த முறையதே (உரு)

(இ-ள்)

நொச்சி வேர் வெள்ளெருக்கம் வேர்
அழிஞ்சில் கொஞ்சிவேர்
பிரட்டான் வேர்*

இவைகளைச் சம எடை எடுத்துக்கொள்ளவும்.

சுக்கு உள்ளி
வசம்பு மிளகு

இவைகளையும் சம எடை எடுத்து, இரண்டு வகைகளையும் ஒன்று சேர்த்து இடித்து நல்லெண்ணெயுடனே குழப்பி, அடுப்பின் மேலேற்றிப் பக்குவமாக எரிக்கவும். இறக்குந் தருவாயில் திப்பிலி (சமனெடை)ச் சூரணத்தைத் தூவிக் கிளறி வைக்கவும்.

இவ் வெண்ணெயைக் காலை வேளையில் உள்ளுக்குக் கொடுத்து, மேலும் பூசிவர, நாட்பட்ட இருமல், சளி இவைகள் தீரும்.

பத்தியம்:—

வாயு பதார்த்தங்களையும், புளியையும் நீக்கவும்.

## 88. இருமலுக்கு 'நாக செந்தூரம்

இரதங் காரியந் துத்தநா கத்துட
னிதுகள் மூன்றுஞ் சரிநிறை கூட்டியே
உருக்கிச் சட்டியி லிட்டுமஞ் சள்பொடி
யொக்கத் தூவி வறுத்து யிடித்தபின்

* பிராட்டான் வேர் என்பது என்னவென்று விளங்கவில்லை.

கரண்டிதன் னிலிட்டுத் தேய்த்துத் தேய்த்ததைக்
கருத்த தாகவறுக் கச்செந் தூரமாம்
அருமை யாக யெடுத்ததைப் பத்திர
மாக வைத்ததைச் செய்விதங் கேட்டிடே (உ௱௨௪)

விதமுங் கேளினி காலமுந் தோற்றின
வியாதியின் வலுவுங் கொண்டு காலையிற்
பதமறிந் திரண்டு மூன்று நான்கைந்து
பணவெடை யெடுத்தே தேனில் மண்டல
மதுவுங் கொள்ளரை மண்டல மாவது
வண்மை யாய்க்கொள் ளிருமலுந் தீருமே
யிதுவும் நாகசெந் தூரமெ னவும்பெய
ரின்ப மாஞ்சர பேந்திர னருளிதே (௨௱௨௫)

(இ-ள்)

சுத்தி செய்த பாதரஸம்
,, துத்தநாகம்
,, காரீயம்

இம்மூன்றையும் சரி எடை எடுத்து, ஒரு புதுச்சட்டியி லிட்டு, உருகி வருகையில் மஞ்சள்பொடியைச் சிறுகச்சிறுகத் தூவி வறுக்கவும். இதைப் பின்பு கல்லுரலிலிட்டு இடித்துக் கொண்டு, ஒரு கரண்டியில் போட்டு நன்றாக வறுக்கவும். சிவப்பான சிந்தூரமாகும்.

காலை நேரங்களில் நோயின் பலத்திற்குத் தக்கபடி 2, 3, 4, அல்லது 5, பண வெடை சிந்தூரத்தைத் தேனிலுட் கொள்ளவும். ஒரு மண்டலமோ (40 நாட்கள்) அல்லது அரை மண்டலமோ உசிதம்போல் சாப்பிடவும். இருமல் தீரும்.

---

## 89. இருமல், இரைப்புக்கு 'ஏலாதிச் சூரணம்'

ஏலமஞ்சு யவட்சார மஞ்சுட
னிலவங்கமஞ்சு திப்பிலிநாலுமே

கோலச் சுக்கது மூன்று மிளகது
கொள்ளி ரண்டு பங்கு மிதுவல்லாமற்
சிலத் தாளிச பத்திரி வெண்காரஞ்
செப்பி ரண்டும் வகைக்கொரு பங்கதாய்
சோலி செய்யா தரைத்து வடிக்கட்டி
சுத்தமான சர்க்கரையுமதே (உாகூ)

சர்க்க ரையது முப்பத்தி ரண்டுமே
தானே கூட்டிக் கலந்ததி காலையி
லுருக்க மாக வெருகடி தூளதி
லொக்கத் தேனது மாகுதலிஞ் சிச்சாறு
திருத்த மாகவே கூட்டியே காலையிற்
றின்னிடு மரை மண்டலந் தன்னிலே
வருத்த மான யிரும லிரைப்பது
மற்றிடு முனி வோர்க ளருளிதே (ாஉஎ)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| ஏலக்காய் | 5 | பங்கு |
| எவச்சாரம் | 5 | ,, |
| கிராம்பு | 5 | ,, |
| திப்பிலி | 4 | ,, |
| சுக்கு | 3 | ,, |
| மிளகு | 2 | ,, |
| தாளீசபத்திரி | 1 | ,, |
| எண்ணெய் வெங்காரம் | 1 | ,, |

இவைகளை உலர்த்திக் கல்லுரலிலிட்டு இடித்து, வஸ்திரகாயஞ் செய்து சர்க்கரை 32 பலம் கூடப் போட்டுக் கலந்து வைத்துக்கொண்டு, காலை வேளைகளில் ஒரு வெருகடித் தூளைத் (மூவிரல்கொண்ட அளவு) தேனிலோ இஞ்சிச் சாற்றிலோ, 20 நாளைக்கு உட்கொள்ளவும். இருமல், இரைப்பு, முதலியவை தீரும்.

## 90. இருமல், ஈளை, இரைப்பு, கோழை, இளைப்பு, சுவாசகாசம் முதலான ரோகங்களுக்கும் திரி தோஷ கோபத்தாலுண்டான நோய்களுக்கும் 'அரிதாரப் புகை'

பொன்னரி தாரம் வராகனெடை யொன்று
புனிதமா மணத்தக் கரிச் சாற்றைவிட்
டன்னதை யரைத்து மைகள் போலவே
யளவ தாகவு மாறுவி ரற்கெடை
யுன்னிதச் சீலை தனிற் சவுக் கமாயொன்
றிரண்டு மூன்று நாலு மஞ்சுமே
நன்னயத் துடனே கிழித் தேயதில்
நாட்ட மாகவு மூட்டிடு வுண்மையே (உ௱அ)

ஊட்டி யூட்டி யுலர்த்தி யுலர்த்தியே
யோரேழு விசை யானபின் வைத்துக்கொள்
சாட்டிய பித்தங்க ளான சரீரமுந்
தானென் றுவரி தாரம் வராகனு
மேட்டிமை யெலுமிச் சம்பழச் சாற்றை
விட்டரைத் துமுன் சொன்ன படியுமே
நாட்ட மாகயே மூவிசை தானுமே
நயத்துட னுலர்த் தியதை வைத்திடே
(உ௱கூ)

வைத்துக் கொள்ளிரு மலுமி ரத்தமும்
வழலையும் விழும் நோயதற்குச் சொல்வேன்
சத்துகப் பொன்ன ரிதாரந் தன்னிலே
தானேகேளு வராகனெடை யொன்றும்
ஒத்திடு மிளகை வெந்நீர் வீட்டரைத்
துப் பிழிந்த ரசத்திற் கலந்துமே
இத்தையு முன்போ லேமுவிசை தோய்த்து
யின்பமா யுலர்த்தி வைபதனமே (உ௱ய)

பதன மாகவே மூன்று விதமுள்ள
பஞ்சுச் சீலை தனையடை யாளமாய்
விதமுடன் முன்(ன)ஞ் சொல்லிய பதத்தி(ல்)
வியாதி யைக்கரு வாக வறிந்துமே
சதமதாம் பசும் பாலுமுக்கா ற்படித்
தானே கொண்டொரு சுங்கான் கழியிலே
அதன மாவிலா மற்கால் துட்டிடை
யதிற் கிழித்துப் புகையுங் குடித்திடே (உகக)

குடித்தி டிப்படிக் காலைக்கு மந்திக்கும்
கொண்டிடு மறுநாள் காலரைக் காலும்
வடிப்ப மானமுன் சீலையி லேகிழி
வாவின் பால்குடித் தேபுகை கொண்டிடு
திடத்து டன்மூன்று நாளரைத் துட்டிடைச்
சீலை தன்னிற் கிழித்துத் தணலிட்டு
மிடுக்கு டன்புகை யுண்டிடிந் தப்படி
மேன்மையாய் மூன்றுநான் கைந்து நாளுமே (உகஉ)

ஐந்தே யாறுயே ழெட்டொன்ப துபத்து
மதிக மாய்ப்பதி னைந்துநாள் மட்டுமே
யிந்த நற்புகை யுங்குணங் கண்டதே
யிதமுள புகை யைவிடு வட்சிணம்
சந்த வாதசி லேத்துமப் பித்தத்தின்
சரீரக் கூறறிந் தேதுணி யிற் கிழி
விந்தை யாமுருங் கையிலைப் பிஞ்சதும்
விரும்பு வாய்நற்று வரம்ப ருப்புமே (உகங)

பருப்புங் கூட்டிடு வுப்புப் புளியது
பார்த்தி டாதேகண் ணலேப சுவின்பா
லுரிசை யாகிய நெய்யும் நிரம்பவே
யுண்டு பாரிந்த மூன்று விதமுள்ள
இரும லீளை யிரைப்புடன் கோழையு
மிளைப்புடன் சுவாச காசமு மற்றிடுங்

திருநடமிடுந் தென்றஞ்சை மாநகர்
தீர ஞஞ்சர பேந்திர னருளிதே (உ௧௪)

(இ-ள்)

சுத்திசெய்த தாளகம் 1 வராகனெடை எடுத்து ஒரு கல்வத்திலிட்டு மணித்தக்காளிச்சாறு வீட்டு நன்ருக மையாகும்படி அரைத்து வைத்துக்கொள்ளவும்.

6 விரற்கெடை அகலமுள்ளதும் ஒருசாண் நீளமானதுமுள்ள ஒரு வெள்ளைத்துணியை 5 பாகங்களாகக் கிழித்து அவைகளை மேலே சொன்ன தாளக விழுதில் தோய்த்துத் தோய்த்து உலரவைக்கவும். இவ்வாறு 7 தடவை செய்யவும். இது வாதநோய்களுக்கு உபயோகப்படும்.

வேருெரு துணியில் 1 வராகனிடை சுத்தி செய்த தாளகத்தை எலுமிச்சம்பழச்சாறு விட்டரைத்து முன்சொன்னபடி 7 தடவை அதில் தோய்த்துக் காயவைக்கவும். பித்த ரோகங்களுக்கு இது உதவும்.

மற்ருெரு ஒரு சாண் நீள அகலமுள்ள துணியையெடுத்துச் சுத்தி செய்த தாளகம் 1 வராகனிடையும், மிளகு ஒரு வராகனிடையும் எடுத்து வெந்நீர் விட்டு நன்ருக, அரைத்துப் பிழிந்த ரஸத்தில் தோய்க்கவும். இவ்வாறு 7 தடவை தோய்த்துக் காயவைக்கவும். இது இருமல், இரத்தம் கோழை முதலான ரோகங்களுக்குப் பயன்படும்.

இம்மாதிரி மேற்சொன்ன 3 வகைத் துணிகளிலே ஏதேனுமொன்றை வியாதிக்குத்தக்கபடி எடுத்து ¾ படி பசுவின்பாலைக் குடித்த பின், இதில் கால் துட்டெடை கிழித்து ஒரு சுக்கான் கழியில் சுற்றிக் கொளுத்திப் புகையை உட்கொள்ளவும். இம்மாதிரி காலையிலும், மாலையிலும் சாப்பிடவும். மறுநாள் பசுவின் பால் குடித்துவிட்டு, காலேயரைக்கால் துட்டெடை துணி கிழித்துப், புகையை முன்போல் உட்கொள்ளவும். மூன்ரும் நாளன்று, ½ துட்டெடை துணியைக் கிழித்து தணலில் இட்டு. அதிலிருந்து எழும்பும்

புகையை உட்கொள்ளவும். 3 அல்லது 4 முதல் 5, 6, 7, 8, 9, 10, நாட்களுக்கு இவ்வாறு சாப்பிடவும். அதிக பட்சம் 15 நாளைக்கு உபயோகிக்கவும். வாதபித்த ச்லேஷ்மத்தின் பலத்தை யறிந்து அரைக்கால் துட்டெடை துணியைக் கிழித்துக்கொள்ளவும்.

முருங்கை இலை, முருங்கைப் பிஞ்சு, துவரம் பருப்பு முதலியவைகளைச் சேர்த்துக்கொண்டு, உப்பையும், புளியையும் விலக்கவும். பசுவின் பால், நெய் முதலியவைகளை வேண்டிய அளவு சாப்பிடவும்.

தீரும் நோய்கள்:—

3 வித தோஷங்களினாலும் உண்டான, ஈளை, இளைப்பு, கோழை, இரைப்பு, சுவாசகாசம் முதலியவை.

---

## 91. ச்லேஷ்மத்துக்கு நஸ்யம்.

கடப்பங் கொட்டைப் பழச்சாற்றி லாவது
கன்னியர் முலைப் பாலினி லாவது
வடிப்ப மாகவ ரைத்துக் கலக்கியே
வண்மை யாயந்தி காலையுந் தானுமே
திடத்து டன்மூன்று துள்ளி நசியஞ்செய்
சேத்தும மற்றிடு மேயந்த நேரமே
மிடுக்கு ளக்களி றுமீதிற் பவனிசெய்
விபுவு ணர்ந்தமு றையிது வாகுமே (உ௰௫)

(இ-ள்)

கடப்பம் வீதையை எலுமிச்சம்பழச் சாற்றிலாவது அல்லது முலைப்பாலிலாவது அரைத்துக் கலக்கிக் காலையிலும், மாலையிலும் 3 துளிகள் வீதம் இரு நாசிகளிலும் விட்டு நஸ்யம் செய்ய ச்லேஷ்மம் (கபம்) அக்கணத்திலேயே தீரும்.

குறிப்பு:—

நசியம் இடும் விதம்:—

ரோகியை மல்லாந்து படுக்கச்செய்து தலையைச் சிறிது தூக்கச் சொல்லி (முன்புறமாக நிமிர்த்தி) அவனது மூக்கில் எண்ணெய் ஊறாத காகிதத்தைப் புனல்மாதிரி செய்து, அடியில் துவாரமிட்டுச் சொருகவும். அதில் வேண்டிய திரவத்தை விட்டு, வைத்தியன் தனது வாயினால், புனலிலுள்ள மருந்து ரோகியின் நாசிக்குள் செல்லும்படியாக, நிதானமாக ஊதவும். புரை ஏறும்படி வேகமாக ஊதக்கூடாது. இவ்வாறு செய்தபின் ரோகியை அப்படியே சிறிது நேரம் இருக்கச் செய்யவும்.

---

## 92. சிலேட்டும விகாரங்களுக்குத் 'தூதுவளையாதி நெய்'

தூதுவளை பிரமிசங்கு செம்முள்ளி
யுமாடா தோடைநொச்சி
ஓதுகுப்பை மேனியுந்தேள் கொடுக்கிவே
லிப்பருத்தி யுடன்பிரண்டை
வாதமறு மின்புரல் பொடுதலை சாரடை
யும்பிரு வடிப்புஞ் செம்பை
கோதில்கையாந் தகரைபோரும் பிலியினிலை
பதினேழ்(கூ)ட் டிக்கொள்ளே (உ௰சு)

கூட்டுவொரு வகைக்கரைச் சேர்சாறும்
பசுவின்நெய் குணமதாக
தேட்டமுட னிரண்டுசேர் பசுவின்பால்
நாலுசேர் சேர்த்துக்கொண்டு
வாட்டமிலாப் பெருமருந்து வழுக்கிராக்
கொடிவேலி வட்டத்திருப்பி
நாட்டமுட னிங்நால்வேர் திப்பிலியும்
விழாலரிசி நல்லிந்துப்பே (உ௰எ)

இந்துப்புப் பெருங்காய மத்தித்திப்
பிலியுஞ்சா திக்காய் கிராம்பு
விந்தைத்தான்றிக் காய்நெல்லி முள்ளிநற்
கற்கடசிங்கி வித்தக்கடுக்காய்
சந்தவரி தாரமுடன் சிறுமூலஞ்
சிறுதேக்கு சதகுப்பைதான்
சுந்தரம தாங்தேவ தாரமனோ
சிலைமிளகுஞ் சுக்குத்தானே (உ௰அ)

தானேகருஞ் சீரகத்தோ டேழுவகை
மருந்ததுவுஞ் சரியதாக
ஈனமிலாக் குழம்பதுவும் நாழிக்குக்
கழஞ்சரைத்து மேகரைத்து
ஊ(ன)மிலா வடுப்பேற்றி யெரித்துப்பதத்
தினில்வடித்து மோர்நாட்காலை
பானமது செய்நாலு காசிடையுஞ்
சிலேட்டுமங்கள் பறக்குந்தானே (உகக)

(இ-ள்)

| | |
|---|---|
| தாதுவளைவேர் | பிரமி |
| சங்கு | செம்முள்ளி |
| ஆடாதொடை | நொச்சி |
| குப்பைமேனி | தேள்கொடுக்கு |
| வேலிப்பருத்தி | பிரண்டை |
| இம்பூராவேர் | பொடுதலை |
| சாரடை | செருப்படி |
| செம்பை | *பொரும்பிலி |
| கையாந்தகரை | |

ஆக இப்பதினேழுவகை இலைகளின் சாறும் வகைக்கு ½ சேர்.

| | |
|---|---|
| பசுவின் நெய் | 2 சேர் |
| பசுவின் பால் | 4 சேர் |

இவைகளை யொன்றுகலந்து கொண்டு,

---

*பெரும்பிலீ என்பது சுழலாவாரை

| | |
|---|---|
| பெருமருந்துவேர் | அமுக்கிராக்கிழங்கு |
| கொடிவேலி வேர் | வட்டத்திருப்பி வேர் |
| திப்பிலி | விழாலரிசி |
| இந்துப்பு | பெருங்காயம் |
| யானைத்திப்பிலி | சாதிக்காய் |
| கிராம்பு | தான்றிக்காய்த்தோல் |
| நெல்லிவற்றல் | கற்கடசிங்கி |
| கடுக்காய்த்தோல் | சுத்திசெய்த தாளகம் |
| சிறுமூலம் (திப்பிலி) | சிறுதேக்கு |
| சதகுப்பை | தேவதாரு |
| சுத்தி செய்த மனோசிலை | மிளகு |
| சுக்கு | கருஞ்சீரகம் |

இச்சரக்குகளை வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை வீதமெடுத்து ஏதேனும் ஒறுசாறு விட்டரைத்து, சாறு கலந்த நெய்யுடனே குழப்பி, அடுப்பின்மேல் வைத்துப் பக்குவமாக எரித்துப் பதத்தில் வடிக்கவும். இந்நெய்யில் 4 வராகனெடை வீதம் தினம் ஒருவேளைச் சாப்பிட, ச்லேஷ்மங்கள் தீரும்.

குறிப்பு :

திப்பிலியை இருமுறை கூறப்பட்டுள்ளதால் 2 பங்கு எடுத்துக்கொள்ளவும்.

---

## 93. ச்லேஷ்மத்திற்குத் தேத்தான் சூரணம்

தேத்தான்கொட் டையைச்சுட்டு அரைத்துமதி
னுடனேதான் சீரகத்தோ
டேத்ததிப் பிலியேல மிவைமூன்றும்
வறுத்துப்பொடி யேதான் செய்து
வாய்த்தகொம்புத் தேனதிற் குழைத்து விழுங்
கிடத்தீரும் வளருஞ்சேற்றும
மாத்திவிடுஞ் சிவகிருபை தன்னாலே
தஞ்சைவிபு வருளிதாமே (உஉ௰)

(இ-ள்)

தேத்தான் கொட்டையின்மேல் தோலை நீக்கி அடுப்பி லிட்டுச் சுட்டு. அதனுடன்,

சீரகம் திப்பிலி
ஏலக்காய்

இம் மூன்றையும் சமனிடை எடுத்துப் பொன்வறுவலாக வறுத்து எல்லாவற்றையும் கல்லுரலிலிட்டு இடித்து வஸ்திரகாயஞ் செய்துகொண்டு, வெருகடிதூள் (மூவிரல் கொள்ளுமளவு) எடுத்துத் தேன்கலந்து சாப்பிடச் ச்லேஷ் மங்கள் தீரும்.

---

## 94. சேத்துமத்திற்குத் தூதுவேளையாதி உருண்டை

தூதுவேளை சங்காடா தோடைகண்
டங்கத்திரியுந் துளசியைந்துஞ்
சாதகப் பிட்ட வியலா யவித்துப்
பிழிந்தச்சாற்றிற் றூனே சுக்கு
மீதுடன் திப்பிலி கடுக்காய் மிளகிவை
நான்கும் வறுத்து முன் சாறுவிட்
டோதுமம் மிதனில் மைப்போல யரைத்துப்
பாக்களவுமுருட்டித் தானே (உஉக)

உருட்டி நெல்லின்பொரி மாவிலே புரட்டி
நன்றாக வுலர்த்தி வைத்து
திருத்த முள்ளவாய் தன்னி லடக்கச்
சேத்தும முறியுந்தே னிற்றூனே
உரத்திடுண் டைதனி லொன்றைப் பொடித்துக்
குழப்பிக் கொள்ளவுடனே சேத்தும
மருட்பிடித்து வூரை விட்டுப்போ மிதுந்
தப்பாமல் வளமாய்ச் செய்யே (உஉஉ)

(இ-ள்)

தூதுவேளை இலை திப்பிலி
ஆடாதோடை இலை கண்டங்கத்திரி இலை
துளசி இலை

இவைகளைச் சமனெடை எடுத்துக்கொள்ளவும். ஒரு சட்டியில் அரைவாசி ஜலம் விட்டு, அதன் வாயை ஒரு வெள்ளைத் துணியினால் வேடுகட்டி, அதன்மேல் ஷை இலைகளை வைத்து மேலே ஒரு பாத்திரத்தினால் மூடிப் புட்டவியலாக அவிக்கவும். பின்பு அந்தப் பச்சிலைகளைப் பிழிந்து, அச்சாறுடன்,

சுக்கு திப்பிலி
கடுக்காய்த்தோல் மிளகு

இந்நான்கு சரக்குகளையும் பொன் வறுவலாக வறுத்து வஸ்திரகாயஞ் செய்து ஷை சாறு விட்டு அம்மியின்மேல் வைத்து மைப்போலரைத்துப், பாக்களவெடுத்துக்கொண்டு நெல்லுப் பொரி மாவில் புரட்டி வாயிலடக்கச் ச்லேஷ்மம் முறியும்.

அல்லது தேனில் ஒரு உருண்டையைப் பொடித்துக் குழைத்துச் சாப்பிடக் கபம் தீரும்.

## 95. ச்லேஷ்ம விகாரங்களுக்குக் 'கடுகாதி கிருதம்'

கடுகு வெள்ளை வெங்காயஞ் சிற்ற
மட்டியுடனே மிளகதுவுங் கூட
திடமுடைய பேரா மட்டிகருஞ் சீர(க)ம்
வெளுத்த பிசின் சிறுகாஞ் சொறி
யுடனே வசுவாசி யிந்தவொன்ப தையுஞ்
சரியாகவுந்தான் கொண்டு
அடவியின் தூதுவளைச்சாறு விட்ட
ரைத்து நெய் நாழியதிற் புகட்டே (உஉரு)

புகட்டிய டுப்பினி லேற்றி யெரித்து
வடித்தோர் கரண்டி பிசகிடாமல்
வகையுட னேகாலை யந்தி கொள்ளத
லின்கடு கதுவும் வயணமாக
துகையுட னேமுக்க முஞ்சது கொள் சிலேத்ம
விகார மறுஞ்சுக மாய்த்தானே
சகமதனிற் கீர்த்தி பெருஞ்சர போசி
மகாராசன் சாற்றும் வாறே (உஉச)

(இ-ள்)

| | |
|---|---|
| கடுகு | வெள்ளை வெங்காயம் |
| சிற்றாமுட்டி | மிளகு |
| பேராமுட்டி | கருஞ்சீரகம் |
| வெளிச்சைப்பிசின் | சிறுகாஞ்சொரிவேர் |
| சாதிப்பத்திரி | |

இந்த ஒன்பது சரக்குகளையும் சரி எடை எடுத்து, தூது வேளைச்சாறு விட்டரைத்து, 1 படி பசுவின் நெய்யுடனே குழப்பி அடுப்பின் மேலேற்றிப் பக்குவமாக எரித்துப் பதத்தில் இறக்கவும். இந்நெய்யில் ஒரு கரண்டி (வராகனெடை) வீதம் காலையிலும் மாலையிலுமாக இருவேளை உட்கொண்டு, அதன் கடுகில் 3 கழஞ்சுகள் வீதம் உட்கொள்ளச் ச்லேஷ்மம் தீரும்.

---

## 96. பஞ்சகுன்மம். க்ஷயரோகம், ஈளை, இருமல், விக்கல், முதலானவைகளுக்குக் 'கண்டங் கத்தரியாதி லேகியம்'

கண்டங்கத் தரிவேரும் பலம்நூறு
மத்துடனே கடுக்காய்நூறு
உண்டிடுநீர் நான்குமரக் கால்விட்டுக்
காய்ச்சியிறக் கோர்மரக்கால்

பண்டுளவெல் லமதனி(ல்) நூறுபலம்
போட்டுநல்ல பக்குவமாகச்
சுண்டிவரும் லேகியப தம்பார்த்த
தனிற்போடும் வகைசொல்லுவேனே (உஉரு)

சொல்லுவேன் தேனுமறு பலமிளகு
திப்பிலியுஞ் சுக்கிம்மூன்றுஞ்
சல்லயமி லாமல்வகை யொன்றுக்கு
மூன்றுபலந் தானேயேலம்
நல்லயில வங்கபட் டையிலவங்
கப்பத்திரியும் நாகத்திப்பிலி
வல்லமையா யின்னாலும் வகைக்குமொரு
பலமதுவு மாகுந்தானே (உஉசா)

ஆகயேழு வகைமருந்தும் பொடிசெய்து
போட்டுகிண்டி யதையிறக்கி
தேகமதின் கூறறிந்து காலையந்தி
கொள்ளவுமே தீரும்வியாதி
லேகபஞ்ச குன்மங்கப ரோகமீ
ளையிருமல் விக்கலோடு
மேகவுசை முதலாகத் தீர்ந்துவிடுங்
கும்பமுனி யியம்பிவ் வாறே (உஉஎ)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| கண்டங்கத்திரிவேர் | 100 | பலம் |
| கடுக்காய் | 100 | ” |

இவைகளை யொன்றிரண்டாக வீடித்து, இவற்றுடன் 4 மரக்கால் ஜலம்விட்டு, அடுப்பின் மேலேற்றி ஒரு மரக்காலாக வற்றக் காய்ச்சவும். இக் கஷாயத்தை வடிக்கட்டி அதனுடன் 100 பலம் பழயவெல்லம் போட்டுப் பாகு காய்ச்சிக் கொள்ளவும். பின்பு

மிளகு திப்பிலி
சுக்கு

இவைகள் வகைக்கு 3 பலம்

ஏலக்காய் இலவங்கப்பட்டை
இலவங்கப்பத்திரி திப்பிலி

இவைகள் வகைக்கு 1 பலமும் எடுத்து, எல்லாவற்றையும் ஒன்று சேர்த்துக் கல்லுரலிலிட்டிடித்து வஸ்திரகாயஞ்செய்து பாகில் போட்டுத் தேன் 6 பலமும் விட்டுக் கிண்டி இறக்கிக் கொள்ளவும்.

தேகத்தின் பலமறிந்து தினம் காலையிலும் மாலையிலும் சாப்பிட 5 வித குன்மங்கள், கபரோகம், ஈளை, இருமல். விக்கல், மேகம் முதலிய ரோகங்கள் தீரும்.

---

## 97. அக்கினி மந்தம், காசசுவாசம், வறட்சி, குன்மம், உள்ளெரிவு, ஈரல்குலையெரிவு, பீலிகை, சேத்துமபித்த விகாரங்களுக்குச் சூரணம்

சாதிக்கா யும்வெள்ளி லோத்திரமு
மிலவங்கந் தக்கோலத்தோ
டோதுசெவ் வியமிளகுங் கற்பூரஞ்
சர்(க்)கரையி னுடனுகைப்பூ
வா தியந்த மாயொன்பது வகைமருந்
துஞ்சரியாய ரைத்துத்தேனில்
பேதமிலா நெய்யிரண்டி லொன்றதிலே
கலந்துகுழைப் பியுங்கொள்வாயே (உஉஅ)

கொள்ளலக் கினியின்மந்தங் காசசுவா
சம்வறட்சி குன்மத்தோடே
உள்ளெரிவி னுடனீரல் குலையெரிவும்
பீலிகையி னுடனேசேத்தும

முள்ளவிகா ரங்கள்சேத்தும விகாரங்கள்
கண்டத்தி லுற்றநோய்கள்
தள்ளியூர்விட் டுக்கதிர் கண்டபனி
யெனவோடுஞ் சகத்திற்றுனே (உஉகூ)

(இ-ள்)

| | |
|---|---|
| சாதிக்காய் | வெள்ளிலோத்திப்பட்டை |
| கிராம்பு | தக்கோலம் |
| செவ்வியம் | மிளகு |
| கர்ப்பூரம் | சர்க்கரை |
| சிறு நாகப்பூ | |

இந்த ஒன்பது வகைச் சரக்குகளையும் சமனெடை எடுத்துச் சூரணித்து, வஸ்திரகாயம் செய்துகொண்டு, தேனிலோ அல்லது நெய்யிலோ குழைத்துச் சாப்பிடவும். இதனால் அக்கினிமந்தம், காசசுவாசம், வறட்சி, குன்மம், உள்ளெரிவு (தேகத்தின் அனத்தல்), ஈரல் குலை எரிவு, பிலீகக்கட்டி, கபத்தினலுண்டான விகாரங்கள், கழுத்து வியாதிகள் முதலியவை தீரும்,

---

## 98. கபரோகம் சுவாசகாசம், ஈளைக்குத் 'தாளிசபத்திரிச் சூரணம்'

சுத்தமுள்ள தாளிசபத் திரிநறுக்கி
மூலமுடன் சுக்குத்திப்பிலி
கொத்தம(ல்)லி சிறுநாகப் பூசெ(வ்)வியங்
கடுக்காயுங் கூகைநீரு
முத்தவில்வ வேர்நெருஞ்சில் வேரிலவங்
கப்பட்டை யோடுகிராம்பு
நத்துமுந்தி ரிப்பழந்திப் பிலிமூலங்
கருஞ்சீர(க)ம் நற்சாதிக்காய் (உஙய)

7 OCT 1974



சாதிக்காய் கற்கடகசிங் கிலவங்கப்
பத்திரிச டாமாஞ்சேலஞ்
சாதிபத்தி ரிபேரீச் சம்பழஞ்சீ
ரகமிளகு தானுங்கிராம்பு
மாதளையோ டுடனிருபத் தாறுவகை
மருந்து மொவ்வோர் வகைக்குத்தானே
ஓதியசொற் படியுமரைப் பலங்கூட்டிச்
சூரணங்க ளுஞ்செய்வாயே (உ௩௧)

சூரணஞ்செய் தேயதையும் வடிக்கட்டி
யெலுமிச்சைச் சுத்தச் சாற்றில்
நேருடனே பிசறியதை நிழலுலர்த்த
லாயுலர்த்தி நீயுங்கேளு
சாரமுள்ள யிஞ்சிச்சா றதனைவிட்டுப்
பிசறிநிழ லுனிலுலர்த்திச்
சூரணங்கள் நின்றநிறை சீனிச்சர்(க்)
கரைகலந்து சொல்லக்கேளே (உ௩உ)

சொல்லக்கே ளுடம்புபலன் வியாதிகுணங்
காலமறிந் தும்மதனில்
சல்லயமில் லாமலெடுத் தேகாலை
யந்தியிலுந் தானேயுண்ண
அல்லல்செய்யுங் கபரோகஞ் சுவாசகா
சயமிளை யதுவுந்தீரும்
பல்லோர்கள் புகழ்தஞ்சை நகராளுஞ்
சரபேந்திரன் பகரும் வாறே (உ௩௩)

(இ-ள்)

| | |
|---|---|
| தாளீசபத்திரி | கண்டத்திப்பிலி |
| சுக்கு | திப்பிலி |
| கொத்தமல்லி விதை | சிறுநாகப்பூ |
| செவ்வியம் | கடுக்காய்த்தோல் |
| கூகை நீர் | வில்வவேர்க்கட்டை |
| நெரிஞ்சில் வேர் | இலவங்கப்பட்டை |

இராம்பு திராக்ஷைப்பழம்
திப்பிலிமூலம் கருஞ்சீரகம்
சாதிக்காய் கற்கடகசிங்கி
இலவங்கப்பத்திரி சடாமாஞ்சில்
ஏலக்காய் சாதிப்பத்திரி
பேரீச்சம்பழம் சீரகம்
மிளகு மாதளை ஓடு

இச்சரக்குகளை வகைக்கு $\frac{1}{2}$ பலம் வீதமெடுத்துச் சூரணித்து வஸ்திரகாயஞ் செய்துகொள்ளவும். இச்சூரணத்தை எலுமிச்சம்பழச்சாறுவிட்டுப் பிசரிக்கொண்டு நிழலில் உலர்த்தவும். மறுநாள் இஞ்சிச்சாறு விட்டுப் பிசரிக்கொண்டு, நிழல்தனில் உலர்த்தவும். பின்பு, சூரணத்திற்குச் சரி நிறை சர்க்கரை கலந்து வைத்துக்கொள்ளவும். இச்சூரணத்தில் ஒரு வெருகடி யளவு காலையிலும் மாலையிலும் உட்கொள்ளக் கபரோகம், சுவாசகாசம், ஈளை முதலியவை தீரும்.

குறிப்பு:—

கண்டத்திப்பிலி இருதடவை வருவதை கவனிக்க. ஆகவே 2 பங்கு எடுத்துக்கொள்ளல் வேண்டும்.

---

## 99. சேத்துமத்திற்கு இரண்டு ஔஷத முறைகள்

துவற்கடுக்காய் பலமொன்றுந் தானிக்காய்
பலமொன்றுந் தூக்கிக்கொண்டு
தவிப்பிலா நெற்பொரியுங் கூட்டிப்பொடி
செய்துமதைற் றுனேதேனி
லுவப்புடனே குழப்பியந்தி காலையுமே
கொள்சேத்தும முடனே தீரும்
நவகண்டங் கத்திரிசு மூலந்தூ
ளாப்பாலில் நயமாய்க் கொள்ளே (உ௩௪)

(இ-ள்)

| | |
|---|---|
| கடுக்காய்த்தோல் | 1 பலம் |
| தான்றிக்காய்த்தோல் | 1 ,, |
| நெல்பொரி | 1 ,, |

இவைகளை யொன்றுகூட்டிக் கல்லுரலிலிட்டிடித்து, வஸ்திரகாயஞ் செய்துகொண்டு தேனில் குழைத்துக் காலையிலும் மாலையிலும் உட்கொள்ளவும்.

(2) கண்டங்கத்திரியைச் சமூலமாகக் கொண்டுவந்து நிழலில் உலர்த்தி, இடித்து வஸ்திரகாயஞ் செய்துகொண்டு, பசுவின் பாலிலுட்கொள்ளச் சிலேஷ்மம் தீரும்.

---

## 100. இளைப்பு, இருமலுக்குத் 'தூதுவளம் பழவு(ரு)ண்டை

தூதுவளம் பழமுமுப்ப துவிரையு
மதினுடைய தோலுந்தானே
பேதகமி லாமதைப் பொரித்துவைத்து
நன்றாகப் பின்னுந்தானே
சீதமிகுஞ் சீரகத்திப் பிலிமிளகு
கிராம்பாகச் செப்பும்நான்கி
லோதும்வகை யொன்றினுக்கு நிறையாக
வராகனிடை யொன்றுகூட்டே (உ௫)

கூட்டிடுதேற் றான்கொட்டைத் தோல்சீவி
யேயதனுக் குள்ளிருக்கும்
நாட்டமுள்ள விதையதனில் நாலுவராக
னெடைவைத்து நயமாய்த்தானே
போட்டுசட்டி தனிற்பொரித்து யிவ்வாறும்
நன்றாகப் பொடியேசெய்து

தாட்டிகமாந் தேனைவிட்டு நன்றாக
வரைத்துமதைத் தானுங்கேளே (உ௩௬)

தானுங்கேள் தேற்றான்கா யளவுருண்டை
செய்துமதைத் தானேயுந்த
ஊனமிலா வாய்தனில டக்கியந்தச்
சாரமதை யுள்ளினுக்கு
ஈனமிகு மிரைப்புடனே யிருமலுந்தீர்ந்
தேநல்ல யிதமாந்தேக
மான்பான தஞ்சையில்வாழ் சரபேந்திர
பூபதியின் வசனமிதே (உ௩௭)

(இ-ள்)

| | |
|---|---|
| தூதுவளம் பழ விதை | 30 |
| அதன் மேல்தோல் | (பொரித்தது) |
| சீரகம் | திப்பிலி |
| மிளகு | கிராம்பு |

இந்நான்கு சரக்குகளும் வகையொன்றுக்கு 1 வராக னெடை வீதம் எடுத்துக் கொள்ளவும்

சீவிய தேற்றாங்கொட்டை 4 வராகனெடையும் எடுத்து எல்லாவற்றையும் ஒருசட்டியிலிட்டுப் பொன் வறுவலாக வறுத்துக் கல்லுரலிலிட்டிடித்து வஸ்திரகாயஞ் செய்து கொள்ளவும். பின்பு, வேண்டிய அளவு சுத்தத் தேனை விட்டுப் பிசைந்து தேற்றாங்கொட்டைப் பிரமாணம் உள்ள உருண்டைகளாகச் செய்து, தினம் ஒரு உருண்டை வீதம் வாயிலடக்கிக் கொண்டு உமிழ்நீரை உட்கொள்ள, இரைப்பு, இருமல் முதலியவை தீரும்.

## 101. இருமல் சேத்துமத்திற்கு வெங்காரக் குடிநீர்

சுந்தரவெண் காரமதைப் பொரித்துப்பா
சித்தண்ணீர் துரிசெடுத்து
வந்தப்பழந் தண்ணீரிற் கலக்கிமூன்
றேநாளும் வகை யாய்க் காலை
யுந்திரமாய்க் கொள்ளிருமல் சேத்துமமு
மேயகன்று மோடுந்தானே
தந்திரமா மருந்திதையுந் தஞ்சைசரபோசிமன்னன் சாற்றும்வாறே (உ௩அ)

(இ-ள்)

வெங்காரத்தைப் பொரித்துப், பாசித்தண்ணீரில் கலக்கி 3 நாளைக்குக் காலை நேரங்களில் உட்கொள்ளச் சிலேஷ்மம் தீரும்.

---

## 102 இருமலுக்கு செவ்வத்தி மருந்து

நந்தனச்செவ் வகத்திப்பூ விடித்துரச
மதையெடுத்து நலமாய்த்தானே
சந்தமிகுந் திப்பிலியைப் பொடிசெய்து
ரசத்துடனே தான்கலக்கி
பந்தமுட னதிகாலை தனில்மூன்று
நாட்கொள்ளப் பாரிதற்கு
வந்தயிரு மலுமகன்று குணமாகு
மிதுவும்நல்ல மருந்துதானே (உ௩௯)

(இ-ள்)

செவ்வகத்திப் புஷ்பத்தைக் கல்லுரலிலிட்டிடித்துச்சாறு பிழிந்து, திப்பிலியைத்தூள் செய்து அதனுடன் கலக்கி 3 நாளைக்கு அதிகாலையில் உட்கொள்ள, இருமல் குணமாகும்.

## 103. இருமலுக்கு ஏலாதிச் சூரணம்

ஏலமில வங்கந்திப் பிலிமிளகு
சுக்குடனே யிந்தவைந்துஞ்
சீலமுடன் சூரணித்துச் சரிசர்க்க
ரையுங்கலந்து தின்றுபாரு
காலையந்தி தனிற்பத்து நாடனிலே
யிருமலது கழன்று போகும்
ஞாலமதிற் கீர்த்திபெற்ற சரபேந்திர
பூபதியும் நவின்றதாமே (உசம)

(இ-ள்)

| | |
|---|---|
| ஏலக்காய் | கிராம்பு |
| திப்பிலி | மிளகு |
| சுக்கு | |

இச்சரக்குகளைச் சமனெடை எடுத்து உலர்த்திக் கல்லுரலிலிட்டிடித்து வஸ்திர காயஞ் செய்து, சரி எடை சர்க்கரை கூட்டிக் கலந்து, காலையிலும் மாலையிலுமாக 10 நாட்களுக்கு (ஒரு வெருகடி தூள்) சாப்பிட்டுக் கொண்டுவர இருமல் தீரும்.

---

## 104. இருமல் சேத்துமத்திற்கு 'நிலவிளாச் சூரணம்'

நிலவிளா யிலையதனைச் சூரணித்து
மாடையிடை நினைவாய் மூன்றும்
நலமான மிளகுபொடி மாடையிடை
யொன்றிரண்டும் நவிலக்கேளு
பலமாக மூன்றுநாட் கொளுகீரைக்
கறிசோறும் பத்தியந்தான்
சிலுக்கான யிருமலுடன் சேத்துமமு
மற்றுவிடுஞ் செய்துபாரே (உசக)

(இ-ள்)

நிலவிளா இலையைக் காயவைத்து இடித்து, வஸ்திர காயஞ் செய்து 1½ வராகனெடை தூளுடன் மிளகுப் பொடி 1¼ வராகனெடையும் சேர்த்து 3 நாள் உட்கொண்டால் இருமலும், கபமும் தீரும்.

பத்தியம்:—

கீரை வகைகளையும், சாதத்தையும் உண்டுவரவும்.

குறிப்பு:—

மாடை = ½ வராகனெடை.

---

## 105 காசம், கபரோகங்களுக்குச் 'சண்டமாருத லேகியம்'

மலையன்கடுக் காய்நூறு புளித்திடுங்கா
டியதனில் வளமாய்ப் போட்டு
நலத்துடனே யூறவைத்து மெடுத்திரவி
தனில்மூன்று நாளுலர்த்தி
மலையாமல் மூன்றுவிசை யூறவைத்து
மொன்பதுநாள் வணிதமாக
யுலர்த்திகொட்டைத் தள்ளியுமேற் றோலதையுந்
தராசில்நிறுத் துக்கொள்வாயே (உசஉ)

நிறுத்துக்கொண் டன்னிறைக்கு நாலிலொன்று
கல்லுப்பு நீயும்போட்டு
திருத்துபசு வின்குழம்புப் புளிமோர்வார்த்
துமரைத்துச் சிறுதீயிட்டு
யெரித்துமோர் சுண்டினவா றேயிறக்கி
யத்தூளை யெடுத்துலர்த்தி
கருத்தமிள கிந்துப்பு மோர்வகைக்கு
மோர்பலமுங் கருத்தாய்க்கூட்டே (உசங)

கூட்டுகண்டத் திப்பிலிதிப் பிலிமூலஞ்
செவ்வியமுங் கொடிவேலிவேர்
நாட்டமுள்ள திப்பிலியிவ் வைந்தில்வகைக்
கைந்துபலம் நயமாய்க் கூட்டி
தேட்டமுள்ள மருந்துமொன் பதுவகையுஞ்
சூரணங்கள் செய்துநன்ருய்ப்
போட்டுமு(ன்)னஞ் சொல்கடுக்காய்த் தூளதனிற்
தூவியதும் பொருந்தத்தானே (உசச)

பொருந்தெலுமிச்சம் பழச்சாறு விட்டுமதை
மத்தித்துப் புனிதமாக
திருந்துசண்ட மாருதலே கியமென்று
பெயரிதற்குச் செப்பித்தானே
உறைத்திடுதான் றிக்கா(ய்)ப்போ லுண்டைசெய்து
நாற்பதுநா ளுங்கொள்காலே
உருக்கமுடன் புளிப்புகைப்புப் புகையிலையும்
நீக்கியதை யுண்டுபாரே (உசரு)

உண்ணுகரி யுப்பைவறுத் துக்கூட்டிக்
கொள்பால்நெய் யுந்தான்கூட்டு
நண்ணுமுருங் கைப்பிஞ்சு வழுதலங்கா
யவரைக்காய் நன்மையாகச்
சண்ணுதுவ ரம்பருப்பு முளைக்கீரை
தனுடகாயும்...............
பண்ணும்வா ழைக்கச்சல் கூட்டுகப
காசநோய் பறக்குந்தானே (உசசூ)

(இ-ள்)

சுத்தமான முழுக் கடுக்காய் எண்ணிக்கையில் 100 எடுத்து, நன்ருக புளித்த காடி (1 படி) விட்டு ஒரு இரவு முழுதும் ஊறவைத்து வெய்யிலில் 3 நாளைக்கு உலர்த்தவும். மறுபடியும் புதுகாடியில் அவைகளையூறவைத்து 3 நாளைக்கு உலர்த்தவும். இப்படி 3 முறை செய்யவும். நன்ருகக்

காய்ந்த பின்பு கடுக்காய்களை உடைத்துக் கொட்டைகளை நீக்கியதன் தோலை ஒரு தராசில் போட்டு நிறுத்துக்கொள்ளவும்.

மொத்தநிறைக்கு நாலிலொன்று கல்லுப்புப்போட்டு, தண்ணீர் விடாத புளித்த பசுவின் மோர்விட்டுக் கடுக்காய்த் தோலையும், கல்லுப்பையும் நன்ருக அரைத்து அம்மோரிலேயே குழப்பி அடுப்பின் மேலேற்றி மோர் சுண்டும் வரை எரிக்கவும். பின்பு அச்சூரணத்தையெடுத்து வெயிலில் உலர்த்தவும், அதன்பின்,

| | |
|---|---|
| மிளகு | இந்துப்பு |

இவ்விரண்டும் வகைக்கு ஒருபலமும், இதனுடன்

| | |
|---|---|
| கண்டத்திப்பிலி | திப்பிலி மூலம் |
| செவ்வியம் | கொடிவேலிவேர் |
| திப்பிலி | |

இவைகள் வகைக்கு 5 பலமும் எடுத்து உலர்த்திக் கல்லுரலிலிட்டிடித்து வஸ்திரகாயஞ் செய்து, முன் சொல்லிய கடுக்காய்த்தூளுடன் கலந்து எலுமிச்சம் பழச்சாறு விட்டு அரைத்து லேகிய பதமாக எடுத்துப் பத்திரப்படுத்தவும்.

இது 'சண்ட மாருத லேகிய' மாகும். இதில் ஒரு தான்றிக்காயளவெடுத்துத் தினம் காலை வேளையில் மாத்திரம் 40 நாட்கள் உட்கொள்ளவும்.

பத்தியம் :—

புளிப்புப் பதார்த்தங்களையும், கசப்புப் பதார்த்தங்களையும், புகையிலையையும் நீக்கவும். உப்பை வறுத்துக் கூட்டிக் கொள்ளவும். பசுவின் பால், நெய் வகைகளை வேண்டிய வரை கூட்டிக்கொள்ளவும். முருங்கைப் பிஞ்சு, கத்தரிப் பிஞ்சு, அவரைக்காய், துவரம்பருப்பு, முளைக்கீரை, வாழைக் கச்சல் முதலியவைகளை கூட்டிக்கொள்ளவும்.

குறிப்பு :—

கண்டத்திப்பிலியும் திப்பிலிமூலமும் ஒன்றுதான், ஆகவே அதை இருமடங்கு எடுத்துக் கொள்ளவும்.

---

## 106. கபரோகமிருமலுக்குச் 'சண்டமாருத லேகியம்'

### (வேறு)

கண்டங்கத் திரிதூது வளைசங்கு
மிளகுதக் காளியோடே
வண்டுளப முமாடா தோடை மஞ்ச
ணத்தியே மூவகையின் சாறு
மிண்டியிடித் தேவகைக்குக் காற்படிச்சாறு
கூட்டிவற்றும் விதமாய்க்காய்ச்சி
யுண்டிடும் பனங்கட்டி யஞ்சுபலம்
பொடிசெய்து மொக்கப்போடே (உசஎ)

போட்டு கிண்டிக் காற்படியாய் நிற்கையிலே
கண்டுமதிற் போடுங்கற்கம்
வாட்டமிலாத் திப்பிலியுஞ் சிற்றரத்தை
கடுக்காயும் வகையொன்றுக்கு
கூட்டுபதி னைந்துவரா கனிடைரவி
தனிற்காயக் குணமாய்வைத்து
நாட்டமுட னிடித்துமதை நே(ர்)த்தியாய்
வடிக்கட்டி நலமாய்த்தானே (உசஅ)

நலமாகத் தூவியடிப் பற்றுமல்
கிண்டியதில் நல்லதேனுஞ்
சலதாக வுமரைக்கால் படிவிட்டுக்
கிண்டிபசு தனுடநெய்யு

மலையாமல் மாகாணி விட்டுகிண்டி
தான்றிக்காய் மாத்திரந்தா
னுலவுண்டை செய்துசண்ட மாருதத்தின்
லேகியமென வுரைக்கலாமே (உசக)

ஆமிதனி லொருண்டை காலைதனி(ற்)
நாற்பதுநா ளதுவுங்கொள்ளு
நேமமுடன் புளிப்புகைப்புப் புகைநீக்கிக்
கல்லுப்பை நீயுங்கூட்டு
ஆமிதற்கு நெய்பாலுங் கதலிக்கச்சல்
முருங்கைப்பிஞ் சவரைக்காயு
மேமுளைத்தண் டுங்கூட்டுக் கபரோக
மிருமலுமே விட்டுப் போமே (உருஎ)

(இ-ள்)

| | |
|---|---|
| கண்டங்கத்திரி வேர் | தூதுவளை |
| சங்கம் வேர் | மிளகுத் தக்காளி (மணித் தக்காளி) |
| துளசி | ஆடாதோடை |
| நுணா | |

இவைகளின் சாறுகள் வகைக்கு $\frac{1}{4}$ படி எடுத்து ஒரு சட்டியிலிட்டு அடுப்பின்மேலேற்றிச் சுண்டக் காய்ந்து வரும்பொழுது பனவெல்லம் 5 பலம் கூடப்போட்டுப் பாகு $\frac{1}{4}$ படியாக வற்றி வரும்பொழுது

| | |
|---|---|
| திப்பிலி | சித்தரத்தை |
| கடுக்காய்த் தோல் | |

இவைகள் வகைக்கு 15 வராகனிடை எடுத்து, வெயிலில் காயவைத்து இடித்து வஸ்திரகாயஞ்செய்து, பாகுடனே போட்டு அடிப்பிடிக்காமல் கிண்டி, சுத்தமான தேன் $\frac{1}{8}$ படியும் சேர்த்துப் பசுவின் நெய் 1 மாகாணி (வீசம் படி)யும் விட்டுப் பதத்தில் இறக்கவும்.

இதில் ஒரு தான்றிக்காயள வெடுத்துக் காலைவேளையில் உட்கொள்ளவும். இவ்வாறு 40 நாட்கள் சாப்பிடக் கபரோகங்கள், இருமல் முதலானவைகள் தீரும்.

பத்தியம் :—

புளிப்புச்சுவையுள்ள பதார்த்தங்கள், கசப்புப் பண்டங்கள், புகையிலை இவைகளை நீக்கவும். உப்பையும் நீக்கி விடவும்.

பசுவின் நெய், பால், வாழைக்கச்சல், முருங்கைப்பிஞ்சு, அவரைக்காய், முளைக்கீரை இவைகளைக் கூட்டிக்கொள்ளவும்.

---

## 107. இரத்த காசத்திற்குப் 'பதனி'

தினவாகி யேயிரத்தம் விழுங்காச
மதற்கவிழ்தஞ் செப்புவேன்கேள்
பனம்பதனி யதிகாலை யோர்மண்ட
லங்கொள்ளப் பாரிதுக்குங்
கனத்தபித்தப் பண்டமதைக் கூட்டாதே
மற்றெல்லாங் கருவாயுண் ணு
மனந்தனிலுற் றிடுபயத்தி னிரத்தகா
சமுந்தீரும் வகையாயுண்ணே (உருக)

(இ-ள்)

பதனியை அதிகாலையில் சாப்பிடவும். 40 நாட்களில் இரத்தகாசம் தீரும்.

இதற்குப் பத்தியம்:—

பித்த பண்டங்களைத் தள்ளவும்.

அவைகளாவன:— கத்தரிக்காய், புளி முதலியன.

---

## 108. வாயினுல் இரத்தம் வீழ்கிறதற்கு
## 'ஊறலவல் குடிநீர்'

கொட்டைப்பா சிலைதுவைத் தச்சாற்றில்
நாழியவல் கூடப்போட்டு
திட்டமுடன் பிசறிக் கடிகை முப்ப
தூறவைத்து மதையுலர்த்தி
அட்டியில்லா மற்காலே யாழாக்கு
அவலுண்ணு மடவியுற்ற
சட்டமரு தங்கொழுந்தைச் சட்டியிலே
போட்டுமதிற் றண்ணீருற்றே (உருஉ)

ஊற்றிப்பிசைந் தேவடியுங் கட்டியிந்த
நீரைக்கொள் ளுடனேதானே
ஆற்றமுடி யாயிரத்தம் வாயினுல் வீழ்
கிறதுமஞ் சாறுநாளில்
மாற்றிவிடும் பத்தியமா யிருமவிழ்தங்
கொள் மட்டும் வகையாய்த்தானே
ஆத்தியணி சிவன்கிருபை பெருஞ்சரபேந்
திரராச னருளீதாமே (உருந)

(இ-ள்)

(1) கொட்டைப்பாசி இலையையிடித்துப் பிழிந்த சாற்றில், அவல் 1 படி போட்டு 30 நாழிகை (½ நாள்) ஊறவைக்கவும். பின்பு அவலை வெய்யிலில் உலர்த்தி எடுத்துக்கொண்டு இதைக் காலை வேளைகளில் 1 ஆழாக்கெடுத்துச் சாப்பிடவும்.

வாயிலிருந்து இரத்தம் விழுதல் நிற்கும்.

(2) மருதங்கொழுந்தை வேண்டிய அளவெடுத்து ஒரு சட்டியில் போட்டுத் தண்ணீர் விட்டுப் பிசைந்து வடிக்கட்டி அந்நீரை யருந்திவர இருமும்போது இரத்தம் விழும்நோய் 5 அல்லது 6 நாட்களுக்குள் தீரும். பத்தியமாக இருக்கவும்.

## 109. பக்க காசத்திற்குப் பொங்கல்

முந்நாழி நெல்லுக்கு முந்நாழி
நீர்வார்த்து முறுமையாக
நன்ஞன வரட்பூலா வேர்வடக்கிற்
போரதையும் நலமாய்வெட்டி
யந்நாளிற் குளிசமதாய்ச் செய்துமொரு
பிடியுப்பு மதிலேபோட்டு
குன்றுத சங்கம்வே ரும்போட்டு
மடுப்பினிலே குணமாய்வையே (உ௫௪)

வைத்துத்தண் ணீர்சுவற யிறக்கியந்த
நெல்லதனை வகையாய்க்காய
வைத்தரிசி குத்தியிந்த வுமிக்குசமன்
சூளையிலே வகையாய்ப்போட
வுத்தகுசக் கலமுடையுங் கொல்லனுலை
யிற்போட வுமிரும்பு
சத்துமது வேகாது யிதின்தவிட்டைச்
செக்கதனிற் ருனேபோடே (உ௫௫)

போடயெண்ணெய் காணுது அரிசியையாப்
பால்தனிற் பொங்கியுண்ண
நாடுபக்க காசமதுந் தினகரன்முன்
பனியெனவே நகர்ந்துதானே
வோடுமது தப்பாம லாதிசிவன்
பூசையதி லுருக்கமாகத்
தாடனிலே யர்ச்சனைசெய் சரபேந்திர
பூபதிசொல் தானிதாமே (உ௫௬)

(இ-ள்)

நெல் 3 படி யெடுத்து, அதனுடன் 3 படி ஜலம் விட்டுக் கொள்ளவும். வடக்கேபோகும் வரட்பூலா வேரை வெட்டிக் *குளிசமாகச் செய்து அதில்போட்டு, உப்பு 1 பிடியும்

---

*குளிசம்—தாயத்து

போட்டு, சங்கம்வேரையும் அதிலிட்டு அடுப்பின்மேல் வைத்து எரிக்கவும். தண்ணீர் முழுவதும் சுண்டியபின் மிகுந்திருக்கும், நெல்லை வெய்யிலில் உலர்த்திக் காய்ந்தபின் உரலிலிட்டுக் குத்திக் கொள்ளவும்.

இந்த உமியைக் குசவன் சூளையில் போடப் பானை, சட்டி முதலானவைகள் உடைந்து விடும். கொல்லன் உலையில் போட்டால் இரும்பு வேகாது (உருகாது) அதன் தவிட்டை எண்ணெய் ஆட்டும் செக்கில் போட்டு ஆட்டிவர எண்ணெய் வெளிவராது.

இவ்வரிசியைப் பசுவின் பால் விட்டுப் பொங்கல் செய்து சாப்பிடப் பக்க காசங்கள் தீரும். கைகண்டது.

---

## 110. பக்கக்காசத்திற்குத் 'தூதுவளையாதி கஷாயம்'

தூதுவளம் வேர்கண்டங் கத்திரிவேர்
பெருமருந்துஞ் சொன்னதல்லால்
சாதிச்சிந் திற்கிழங்கு வமுக்கிரா
வேராறுஞ் சரியாய்க் கூட்டி
ஓதுமம்மி டனில்நறுக்கிக் கடாயம்வைத்து
மூன்றுநா ளுண்டாயானல்
வேதனைப் பக்கக்காச மற்றுவிடுந்
தப்பாமல் மேவிச்செய்யே (உருள)

(இ-ள்)

| | |
|---|---|
| தூதுவளைவேர் | கண்டங்கத்திரிவேர் |
| பெருமருந்துவேர் | சிந்தில் கிழங்கு |
| அமுக்கிரா கிழங்கு | சாதிக்காய் |

இவைகளைச் சரி எடையெடுத்து, ஒன்றிரண்டாக இடித்துக் கஷாயம் (16 பங்கு ஜலம்விட்டு எட்டிலொன்ருகக் காய்ச்சி) செய்து 3 நாளைக்குச் சாப்பிடவும். பக்ககாசம் தீரும்.

---

## 111. காசத்திற்குக் 'கவி'

இலவம்பட் டையிற்குறுவை யரிசியைப்போட்
டிடித்துக்களி யிதமாய்க்கிண்டி
நல்பசுவி(ன்) நெய்விட்டுக் கொண்டைந்தா
றேழெட்டு நாளுந்தின்ன
வலுமிகுத்த காசமறும் புளிப்புகைப்பும்
தவிர்ந்துவிடு வாய்நெற்சோறும்
பெலமாக வுண்ணுசிவன் கிருபைபெற்ற
தஞ்சைவிபு பேசும்வாறே (உருஅ)

(இ-ள்)

இலவம் பட்டையைச் சிதைத்துக் குறுவை அரிசியுடன் இடித்துக் களிகிண்டி, பசுவின் நெய் விட்டு 5, 6, 7, அல்லது 8 நாட்கள் சாப்பிடக் காசரோகங்கள் அனைத்துந் தீரும்.

புளிப்புப் பதார்த்தங்களையும், கசப்புப் பண்டங்களையும் நீக்கிப் பத்தியமானவற்றைச் சாப்பிடவும். நெல்லரிசிச் சாதம் சாப்பிடலாம்.

---

## 112. எலிகடி, இரைப்பு, மந்தாரகாசத்திற்கு ஆடுதீண்டாப்பாளை மருந்து

ஆடுதின்னுப் பாளைகொண்டு வங்தெலுமிச்
சங்காயி னளவரைத்துக்
காடதனில் மேய்வெள்ளாட் டுப்பாலில்
மூன்றுநாட் காலை தன்னில்
நாடியதைக் கொள்ளயெலி கடியிரைப்பு
மறுமிதலால் நரர்களுக்கும்
பீடைசெய்யு மந்தார காசமெல்லாம்
போகுமிது பீசகிடாதே (உருகூ)

பீசகிடா தேயுப்புப் புளிதள்ளு
மறுபத்தியம் பிடிக்கவேணும்

இசைவான மருந்ததுலர்த் தியுமாகி
லாப்பாலே யிதமாயுண்ணு
சசிதும்பை திங்கள்கங்கை யணிபரமன்
பாதமதிற் ருனர்ச்சிக்கும்
வசிவாளுற் றிடுஞ்சரப மன்னவனு
ருன்னிதமாய் வசனித்தாரே.” (உசூ௰)

(இ-ள்)

ஆடுதீண்டாப் பாளையைச் சமூலமாகக் கொண்டு வந்து அதை அம்மியின்மேல் வைத்து எலுமிச்சங்காயளவு அரைத்து, வெள்ளாட்டுப் பாலுடனே குழப்பி மூன்று நாளைக்குக் காலை வேளையில் மாத்திரமே குடித்து வர, எலிகடி, இரைப்பு முதலிய நோய்கள் தீரும்.

உப்பு, புளிப்பு முதலான சுவையுள்ள பதார்த்தங்களைத் தள்ளுவதுடன், மறு 3 நாளைக்கும் மறு பத்தியம் பிடிக்க வேண்டும். வேண்டிய அளவு பசுவின் பாலைக் கூட்டிக் கொள்ளவும்

---

## 113. ஈளை, இருமல், உளைமாந்தம், மந்தார காசம், சயம், வண்டுகடி, குஷ்டம், எலிகடி, முதலான ரோகங்களுக்கு ‘அரிதார பற்பம்’

தலையோடு கொண்டுவந்து பொடிசெய்து
சுண்ணும்புத் தண்ணீர்விட்டு
நலியாம லரைத்துகுகை பண்ணியதை
நன்ருக ரவியில்வைத்து
வுலையாமற் காய்ந்தபின்பக் குகைதனிலே
யரிதார முள்ளேவைத்துப்
பலமாக மேல்மூடிச் சீலைமண்ணுஞ்
செய்துமப்பாற் பகருவேனே (உசூக)

பகருவேன் குக்குடத்தின் புடம் போடப்
பற்பமதாம் பதனமாக

வகையுடனே வைத்துபலங் காலமறிந்
தேதேனில் வண்மையாகந்
தகைவாகக் கொடுயிளை யிருமலுளை
மாந்தைமந் தாரகாச
மிகல் செய்யுஞ் சயம்வண்டு கடிகுட்ட
மெலிகடியு மேகுந்தானே (உ சுஉ)

(இ-ள்)

வெந்த மண்டையோட்டைக் கொண்டு வந்து, கல்வத்தி லிட்டுச் சுண்ணும்பு ஜலம் விட்டு நன்ருக வரைத்துக் குகைச் செய்யவும். (தட்டான் பொன்னை உருக்குவதற்கு வைத்திருக் கும் மண் குகையைப் போல் வேண்டிய அளவுக்குக் குகை செய்து கொள்ளவும்)

அது நன்ருகக் காய்ந்தவுடன், சுத்தி செய்த தாளகத்தை அதனுள் வைத்து மூடிச் சேலைமண் செய்யவும். ஒரு சாண் நீள அகலமுள்ளதுமான குழியை வெட்டியதில் வரட்டிகளை அடுக்கி அதனுள் ஷ குகையை வைத்துப் புடம் போடவும்.

சுத்தமான தாளக பற்பம் கிடைக்கும். இதை நோயா ளியின் உடம்பு, பலம், காலம் இவைகளை அறிந்து ஒன்று அல்லது 2 அரிசியெடை விதம் தேனில் கொடுக்க ஈளை, இரு மல், உளைமாந்தம், மந்தாரகாசம், க்ஷயம், வண்டுகடி, குஷ்டம், எலிகடி முதலான ரோகங்கள் தீரும்.

## 114. சுரகாசத்திற்குத் ‘திப்பிலி நெய்’

திப்பிலிவெட் பாலையினுட வரிசிசிர
கஞ்சுக்கு கூவளைவேர்
தப்பிலாநெல் லிக்காய திவிடையஞ்
சந்தனம்பேர் மல்லிகைவேர்
ஒப்புளகீழ் காய்நெல்லி வேர்நிலவேம்
புடனேநன் னாரிவேர்கூட
நப்புளமுந் திரிப்பழத்தோடே
நவில்கடு(கு) ரோகிணிதானே (உ சுங)

தாளிலாமிச் சம்வேரு டன்பதினைந்
தற்புதமா கியமருந்துந்
தாளிதில்வ கைக்குமறு கழஞ்சரைத்து
தப்பிலாநெய் யிருநாழி
யூனமிலாப் பாலதுமி ருநாழி
யொக்கவேகூட் டிதீயிட்டு
நீனயமா னபக்குவந் தன்னிலேநி
லத்தினிலி றக்கியும்வையே (உ௲ச)

வைத்துமே யாதிசிவன் றனைநினைந்து
மனதினிலன் புடன்றனே
சுத்தமாம்நற் றிப்பிலிநெய் யையளவாய்
துடர்வி யாதியின் பலனறிந்து
நத்துலமா யதிகாலை யிற்றனே
நாலைந்து நாளதுங்கொள்ள
வத்திடுஞ்சு ரத்தின்கா சமுந்தானே
மானுவினரு ளிதுதானே (உ௲௫)

(இ-ள்)

| | |
|---|---|
| திப்பிலி | வெட்பாலை யரிசி |
| சீரகம் | சுக்கு |
| வில்வ வேர் | நெல்லி முள்ளி |
| அதிவிடயம் | சந்தனம் |
| பேராமல்லி | கீழாநெல்லி வேர் |
| நன்னாரி வேர் | திராக்ஷைப் பழம் |
| கடுகரோகிணி | இலாமிச்சம் வேர் |
| நிலவேம்பு | |

இவைகள் வகைக்கு 6 கழஞ்சு (கழஞ்சு-40 குன்றி) எடுத்து ஓன்றிரண்டாக இடித்துத் தண்ணீர்விட்டு நன்றாக ஊறவைத்துப் பின்பு அம்மியின் மேல் வைத்து அரைத்துப்

| | |
|---|---|
| பசுவின் பால் | 2 படியும் |
| ,, நெய் | 2 படியும் |

விட்டு, அடுப்பின் மேலேற்றி எரித்துப், பதத்திலிறக்கவும். இதை நன்ருக வடிக்கட்டிக் கொண்டு ஒரு பாத்திரத்தில் பத்திரப் படுத்தவும் வியாதியின் பலத்தை அறிந்து கொண்டு, தினம் அதிகாலேயில் ($\frac{1}{4}$ முதல் $\frac{1}{2}$ தோலா வரை). கொடுக்கவும். இவ்வாறு 4 அல்லது 5 நாட்களுக்கு உட்கொள்ளவும். சுரத்துடன் கூடிய காசம் தீரும்.

---

## 115. இரைப்பு, காசம், சுவாசகாசம், அடைப்பு, சேத்துமரோகத்திற்குத் 'தூதுவளையாதிச் சூரணம்'

தூ துவளம் பட்டையையு லர்வித்துத்
தூள்செய்து மதிலரைப் படியு
மீதுடன்பெ ருமருந்து வேர்ப்பொடியு
மேயுழக்கிரண் டையுங்கலந்து
சாதகயிந் துப்புடன்க டுக்காய் சித்
தரத்தைத்திப் பிலிகருஞ் சீர( க )ந்
தீதிலா யிலுப்பைக் கட்டியு மிளகு
திப்பிலி மூலமுஞ் சுக்கே (உ கூசு)

சுக்குட னேபெருங் காயமிப் பத்துந்
துகையுட ஞெவ்வொரு வகைக்கு(ப்)
பக்குவ மாகயிரண் டுகா சிடையும்
பார்த்தெடுத் திளவறுப்பாக
மெய்க்கவே வறுத்து யிடித்து நன்ருக
வேவடி கட்டிமுன் றாளி
லொக்கவே கலந்து முயர்பொரிக் கார
முரிமையாய்க் காசிடைகாலே (உ கூஎ)

காசிடை நன்ருய்ப் பொரித்ததில் கூடக்
கலந்துமே பதனம தாகத்
தூசிவி ழாமல் வைத்துவெ ருகடி
தூளது தேனிலே குழப்பி

யேசந்தி காலை கொள்ளத் தானே
யேழெட்டு நாளையி லிரைப்பும்
காசசு வாச மடைப்புடன் சேத்துமங்
கண்ணிற்ப டாமலோ டிடுமே (உசுஅ)

ஓடிடு மூன்று நாளையிற்றனே
வோதுவேன் பத்தியம் புளிப்பு
நாடிடா தேது வரையுட பருப்பும்
நல்லதா துவளையுங் கூட்டு
பாடிய புலவர் கலியது வகன்று
பறந்திடக் கனகமே யருளு
மாடிய பாதச் சிவன்பதம் பணியு
மன்புள தஞ்சைமா னுரையே (உசுகூ)

(இ-ள்)

தூதுவளம் வேர்ப் பட்டையை எடுத்து, நன்றாக வெய்யிலில் உலர வைத்துக் கொள்ளவும். பின்பு, இதை யொரு கல்லுரலிலிட்டிடித்து வஸ்திரகாயஞ் செய்த தூள் ½ படியுடன், பெருமருந்துச் சூரணம் (ஈச்வர மூலம்) ஒரு உழக்கும் போட்டு ஒன்று கலந்து

| | |
|---|---|
| பொரிந்த இந்துப்பு | கடுக்காய்த் தோல் |
| சிற்றரத்தை | திப்பிலி |
| கருஞ்சீரகம் | இலுப்பைக் கட்டி (அரப்பு) |
| மிளகு | கண்டந்திப்பிலி |
| சுக்கு | பொரித்த பெருங்காயம் |

இச்சரக்குகள் வகைக்கு 2 வராகனெடை வீதம் எடுத்து ஒரு சட்டியிலிட்டு இளவறுப்பாக வறுத்துக் கொண்டு, கல்லுரலிட்டிடித்து வஸ்திர காயஞ் செய்து கொண்டு முன் தூளுடன் சேர்த்துக் கொள்ளவும்.

இதனுடன் ¼ வராகனிடை பொரித்த வெங்காரம் கூட்டிக் கலந்து கொண்டு, தூசி விழாமல் பத்திரப் படுத்தவும்.

இதில் ஒரு வெருகடி (மூவிரல் கொள்ளு மளவு) தூள் எடுத்துத் தேன் விட்டுக் குழைத்துக் காலையிலும், சாயங் காலத்திலும் சாப்பிடவும். 7 அல்லது 8 நாட்களுள் இரைப்பு, காசம், ச்வாசம், அடைப்பு, கப ரோகங்கள் முதலான ரோகங்கள் தீரும். 3 நாட்களுக்குள்ளேயே குணம் காணப் படும்.

பத்தியம் :—

புளிப்புப் பதார்த்தங்களைத் தள்ளி, துவரம் பருப்பு, தூதுவளை இலை முதலானவைகளைக் கூட்டிக் கொள்ளவும்.

## 116. இரைப்பிற்குக் 'கண்டங்கத்தரியாதிக் கடாயம்'.

கண்டங்கத் திரிவேர் பேய்ப்புடல் தான்றிக்
காய்கடுக் காய்முசுமுசுக்கை
மண்டியநெல்லிக் காய்சுக்கிவ் வேழு
வகைச்சரி யாகவே சேர்த்து
கொண்டுமெட் டொன்றாய்க் காய்ச்சி கடாயங்
கொண்டிட யிரைப்புகடீருந்
தண்டமிழ் வாணர் கவித்திற மறியுஞ்
சரபபூ பதியரு ளாமே (உஎ)

(இ-ள்)

| | |
|---|---|
| கண்டங்கத்திரி வேர் | பேய்ப் புடல் |
| தான்றிக்காய்த்தோல் | கடுக்காய்த்தோல் |
| நெல்லிமுள்ளி | முசுமுசுக்கை |
| சுக்கு | |

இச்சரக்குகளை வகைக்கு (1 பல மெடுத்து) ஒன்றிரண் டாக இடித்து, 16 மடங்கு ஜலம் விட்டு எட்டிலொன்றாகக் காய்ச்சிக் கஷாயமாகச் செய்து சாப்பிட, இரைப்பு ரோகம் தீரும்.

## 117. பித்தத்திலெழுந்த நாற்பது காசம், உளமாந்தை, செரியாமை, சுரம், இளைப்பு, பாண்டு, காமாலை முதலான ரோகங்களுக்கு 'வில்வாதி லேகியம்'

கூவிளம் வேர்நாற் பதுபல மேலிற்
 கொண்டிடு தோலையும் போக்கி
நீவுர மாகச் சிறுகவும் நறுக்கித்
 திடமுட னெடுத்திடு தூணி
ஆவலாய்ப் பெரிய பானையி லிட்டு
 மதிலிரு தூணிநீர் விட்டு
நீ வைத்து மூன்று நாளது மூறி
 நெருப்பினி லிட்டதைக் காய்ச்சே (உஎக)

காய்ச்சியே குறுணி யானவா றிறுத்து
 கடைச்சரக் கேலம்நெல் லிக்காய்
சூச்சமாங் கிராம்பு மிலவங்கப் பட்டை
 சொல்லும்நன் னாரிவேர் திப்பிலி
வாச்சிடுங் கோரைக் கிழங்குடன் கொத்த
 மல்லியி லவங்கப்பத் தரியுந்
தாச்சியல் வெட்டி வேரதி மதுரந்
 தனுடனே சிந்திற் ச(ர்)க்கரையே (உஎஉ)

ச(ர்)க்கரை நெல்லிப் பருப்புடன் பேரீச்
 சம்பழ மிலாமிச்சம் வேரு
மொக்கவே பதினைந்து வகையின் மருந்து
 மொவ்வொரு கழஞ்சதும் கூட்டி
யெக்கியே யிடித்தத் தூளதைக் கடாயத்
 தினிலிட்டுப் பாகுபோற் காய்ச்சிச்
சக்கையில் லாமற் பதின்கழஞ் சதனிற்
 ச(ர்)க்கரை கூடவும் போடே (உஎந)

கூடவும் போட்டுத் தேனது முழக்குங்
 குணமுள்ள பசுவின்பா லுழக்கு

நாடியே விட்டுப் பதமதாய்க் காய்ச்சி
நலத்துட னிறக்கியே வைத்து
ஆடர வணியு மீசனை நினைந்து
வதிற்கொட்டைப் பாக்கள வெடுத்துத்
தேடியே பசுப்பா டன்னிலே கலக்கித்
தினமுனு மிருபது நாளே (உளச)

இருபது நாளுங் கொண்டிடப் பித்தத்
தினிலுறு நாற்பது காசம்,
வருமுள மாந்தை யுண்டிடு சோறும்
வயிற்றினி லேசெரி யாமை
சுரமுமே லிளைப்புப் பாண்டுகா மாலை
சுத்தமா யகற்றிடுங் கைப்பு
மரத்தினிற் புளியுந் தள்ளுபால் நெய்யும்
வளவுப்புக் கண்டமுங் கூட்டே (உளரு)

(இ-ள்)

மேல் தோலை நீக்கிய வில்வவேரில் 40 பல மெடுத்துச் சிறு சிறு துண்டுகளாக வெட்டி, அவைகளை இடித்து ஒரு பெரிய பானையில் போட்டு 8 மரக்கால் ஜலம் விட்டு, மூன்று நாளைக்கு ஊறவைக்கவும். நான்காவது நாளன்று, அப் பானையை அடுப்பின் மேலேற்றி எரித்து, 1 மரக்காலாகும் வரை சுண்டக் காய்ச்சவும். அக்கஷாயத்தை யிறுத்து அத னுடன்

ஏலக்காய்
கிராம்பு
நன்னாரிவேர்
கோரைக்கிழங்கு
இலவங்கப்பத்திரி
அதிமதுரம்
நெல்லிவிதைக்குள் ளிருக்கும் பருப்பு
இலாமிச்சம்வேர்
நெல்லிமுள்ளி
இலவங்கப்பட்டை
திப்பிலி
கொத்தமல்லிவிதை
வெட்டிவேர்
சீந்தில் சர்க்கரை
பேரீச்சம்பழம்

இச்சரக்குகளை வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை வீத மெடுத்து, நன்ருகக் காயவைத்துக் கல்லுரலிலிட்டிடித்து, வஸ்திரகாயஞ் செய்துகொண்டு கஷாயத்துடன் கலந்து, பாகுபோல் காய்ச்சி, அதனுடன் 10 கழஞ்சு (சுமார் 5 தோலா) ஜீனி சேர்த்து, சுத்தத்தேன் ஒரு உழக்கும், பசுவின்பால் 1 உழக்கும் கூடவிட்டுப் பதத்தில் (லேகிய) இறக்கிக்கொள்ள வும்.

இதில் ஒரு கொட்டைப்பாக்களவெடுத்துப் பசுவின் பாலில் கலக்கித் தினந்தோறும் 3 வேளை உட்கொள்ளவும். இம்மாதிரி 20 நாட்கள் சாப்பிடப் பித்தத்திஞலேற்படும் 40 காசவகைகள், உளமாந்தை, சாப்பாடு செரியாமை, சுரம், இளைப்பு, பாண்டு, காமாலை முதலான நோய்கள் தீரும்.

பத்தியம்:—

கசப்புப் பதார்த்தங்களையும், புளியையும் நீக்கிவிடவும். பசுவின்பால், நெய், உப்புக்கண்டம் முதலியவைகளை வேண் டிய அளவு கூட்டிக் கொள்ளவும்.

---

## 118. இரைப்பு, நெஞ்சினடைப்பிற்கு சோழி மருந்து

இரைப்பது மதிக மாகியே நெஞ்சடைத்
திட்டுமுட் டாகிடி லதற்கு
பாவையில் வளரும் பலகரை யதனைப்
பண்புள வம்மியிற் ருனே
அரைத்துநன் ருகவெந் நீரிலே குழப்பி
யருந்திட யிரைப்பது மகலு
முரந்தனில் மிகுந்த களிறினிற் பவனி
யும்வருந் தஞ்சைமா னுரையே (உஎசு)

(இ-ள்)

இரைப்பு அதிகமாகி நெஞ்சடைத்து, மூச்சுத்திணறல் உண்டானால், சுத்திசெய்த சோழியை அம்மியின் மேல் வைத்து வெந்நீர்விட்டு நன்றாக அரைத்து, அந்நீரிலேயே குழப்பி உட்கொள்ளவும். இரைப்பு தீரும்.

குறிப்பு :—

எலுமிச்சம்பழச் சாற்றிலூறவைத்து கழுவிக்கொள்ளச் சுத்தியாகும்.

---

## 119. இரைப்பு சேத்துமம், நெஞ்சுக்கட்டு முதலான ரோகங்களுக்கு ஈரவெங்காய மருந்து

ஈரவெங் காயச் சாறுதேங் காய்ப்பா
லிவ்விரண் டுஞ்சரி யாய்த்தான்
நேருடன் கூட்டி வெள்ளைக்காக் கரட்டா
னிலுமுறு வேர்த்தண்டான் கிழங்கு
கூறுட னரைத்துக் கரைத்துவெண் காரங்
குணமுடன் பொரித்ததிற் போட்டு
சாரமாய்க் கொள்ள யிரைப்புடன் சேத்துமந்
தானறும் நெஞ்சினிற் (கட்டே) (௨௭௭)

(இ-ள்)

| | |
|---|---|
| ஈரவெங்காயச் சாறு | 1 பங்கு |
| தேங்காய்ப் பால் | 1 பங்கு |

இவ்விரண்டையும் மொன்று கலந்து, வேண்டிய அளவு வெள்ளைக்காக்கணம் வேர், தண்டான் வேர் இவ்விரண்டையும் வெங்காயச்சாறு விட்டு நன்றாக அரைத்து, அதிலேயே குழப்பி, பொரித்த வெங்காரம் (1 வராகனெடை) அதிலிட்டு உள்ளுக்கு அருந்தி வர, இரைப்பு, கபம், நெஞ்சுக் கட்டு முதலான பலவித ரோகங்கள் தீரும்.

---

## 120. இரைப்பு, நெஞ்சுக் கட்டுக்குச் சுக்கு கல்கம் மருந்து

சுக்குவெண் காரந் தாளிச பத்திரி
யிந்துப்பு கம்பிப்பிசின் மிளகு
பக்குவ மாந்திப் பிலிகருஞ் சீர(க)ம்
பகரெட்டு வகைமருந் ததனில்
பிக்கிலா மலுமோர் வராக னெடையும்
பேதமி லாக்கண்டங் கத்தரி
யிக்கனி யிருப துமதிற் சேர்த்து
மிவையினிற் பசுவி(ன்) நெய் குத்தே (உஎஅ)

குத்தி*யே வருத்து மரைத்துமுக் கழஞ்சு
கொண்டிடு மிளவெந்நீர் தன்னில்
சத்துவ மாக நாலைந்து நாளுந்
தப்பிலா மலுமதி காலை
பத்தியம் புளியும் புகையிலை தள்ளுப்
பாரிரைப் புடன்னெஞ்சிற் கட்டு
மத்திடும் நீர்க்கட் டுடனே சிலேட்டு
மாதவர் பண்டிதர்க் குரையே (உஎகூ)

(இ-ள்)

| | |
|---|---|
| சுக்கு | பொரித்த வெங்காரம் |
| தாளிசபத்திரி | ,, இந்துப்பு |
| கம்பிப் பிசின் | மிளகு |
| திப்பிலி | கருஞ் சீரகம் |

இச்சரக்குகளை வகைக்கு ஒரு வராகனெடை எடுத்து ஒன்றிரண்டாக இடித்து அவைகளுடன், கண்டங்கத்திரிப் பழம் 20 (எண்ணிக்கையில்) எடுத்து, ஒரு இரும்பு சட்டியி லிட்டு சிறிது நெய் விட்டு வறுத்துக்கொண்டு, அம்மியிலிட்டு மற்ற கடைச் சரக்குகளையும் போட்டு நன்றாக அரைத்துக் கொள்ளவும். வேண்டும்போது, இதில் 3 கழஞ்சு (சுமார்

*குத்தி—ஊற்றி

$1\frac{1}{3}$ தோலா) எடுத்து, இளஞ்சூடுள்ள வெந்நீருடன், அதி காலையில் மாத்திரமே நான்கு அல்லது ஐந்து நாட்களுக்கு உட்கொள்ளவும்.

இதற்குப் பத்தியம் :—

புளிப்புப் பதார்த்தங்களையும், புகையிலையையும் நீக்கவும்.

தீரும் வியாதிகள் :—

இரைப்பு, நெஞ்சுக்கட்டு, நீர்க்கோர்வை, கபம் முதலானவை.

---

## 121. வயிறு பொருமல், பித்தம், வாந்தி இருமலுக்கு 'இலவங்காதிச் சூரணம்.'

இலவங்கந்தா துவளை யுந்தக் கோல
மேலமுங் கண்டங்கத் திரியும்
நலமுள்ள சுக்கு சாதிக்காய்ச் சன்ன
லவங்கத்தின் பட்டையுங் கூட
பலமிகு மிளகு திப்பிலி யோடே
பதின்வகை மருந்துமே சரியா
யுலரவே ரவியிற் காயவும் வைத்து
யொக்கவே போட்டதை யிடியே (உ௨௰)

இடித்துசூ ரணங்கள் செய்ததை வடிக்கட்
டியுமொரு புதியபாத் திரத்தி
லடவுடன் வைத்துப் பதனமுஞ் செய்தோ
ரளவதாய்ச் சூரண மெடுத்துத்
துடிசர்க்க ரையிலா வதுநல்ல
துப்புள தேனிலாவதுமே
வடிவுள யிளநீர் தன்னிலா வதுநீ
வளமுடன் கொண்டிடு வாயே (உ௨௧)

கொண்டிடு காலே யந்தியி லுந்தான்
குணமதாம் வியாதியைக் கேளு
மண்டிய வயற்றின் பொருமலும் பித்தம்
வாந்தியு மிருமலுந் தீரு
முண்டிய வாயுவின் பண்டமெ லாந்தள்
முக்கிய மாகிய யீசன்
முண்டகத் தாளி லர்ச்சனே புரியும்
முதல்வனு முரைத்திடு முறையே (உஅ௨)

(இ-ள்)

| | |
|---|---|
| கிராம்பு | தூதுவளே |
| தக்கோலம் | ஏலக்காய் |
| கண்டங்கத்திரி வேர் | சுக்கு |
| சாதிக்காய் | சன்னலவங்கப்பட்டை |
| மிளகு | திப்பிலி |

இப்பத்துவகை மருந்துகளேயும், நன்ருக வெய்யிலில் காயவைத்துக் கல்லுரலிலிட்டிடிக்கவும். இச்சூரணத்தை வஸ்திரகாயஞ் செய்துகொண்டு ஒரு புதுப்பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

இதில் மூவிரல்கொண்ட அளவு எடுத்துச் சர்க்கரை கலந்தோ, அல்லது தேனிலோ, அல்லது இளநீரிலோ உட்கொள்ளவும். இவ்வாறு காலேயிலும் மாலேயிலும் சாப்பிட வயிற்றுப்பொருமல், பீத்தம், வாந்தி, இருமல் முதலிய நோய்கள் தீரும். வாயுப் பண்டங்களே நீக்கிப் பத்தியமாகச் சாப்பிடவும்.

குறிப்பு :—

உளுந்து, மொச்சை, மாவுப்பண்டங்கள், கிழங்கு வகைகள் முதலியவைகளே நீக்கவும்.

21

## 122. சகல காசத்திற்குங் 'கண்டகாரி லேகியம்.'

காரிய கண்டங்காலி
கரிமுள்ளி விஷ்ணுக்ராந்தி
பாரிய சங்கின்பூரல்
பருத்தி தூ தளைநன்னாரி
சீரிய நிலவா வாரைச்
சிறந்ததூ தளையும்பின்னை
நாரிய பலந்தா னென்று
தனிற் பலமன்ப தாமே (உஅந)

அன்பதாய்க் கலநீர் விட்டு
ஆறிரண் டொன்றதாக்கு
முன்புறச் சங்கு கோட்ட
முதிர் திரி கடுகுதாகம்
வன்புறு மரத்தை யேல
மாசிக்காய் பலவெண் சார
யின்புவெட் பாலே வளவி
லிசைகடு(கு)ரோ கணியுஞ்சேரே (உஅச)

சேரவாய் விளங்கமிக்கத்
தேக்குடன் சித்திரமூலம்
பாரவே கூகை நீரும்
பருத்திமுந் திரிகை மாஞ்சில்
பூரமோ டார்சா திக்காய்
புதியநற் கிராம்பு சேர்த்துச்
சார்வெல்லம் லேகியந் தான்
சகலகா சங்கள் போமே (உஅரு)

(இ-ள்)

கண்டங்கத்திரிவேர் கரிமுள்ளிவேர்
விஷ்ணுக்ராந்திச்சமூலம் சங்கம்வேர்

| | |
|---|---|
| இம்பூராச் சமூலம் | பருத்திவேர் |
| தூதுவளைச் சமூலம் | நன்னாரிவேர் |
| ஆவாரைச் சமூலம் | |

இச்சரக்குகளை வகைக்கு 50 பலமெடுத்து, ஒன்றிரண்டாக வெட்டி ஒரு பெரும் பாத்திரத்திலிட்டு 12 மரக்கால் சுத்தஜலம்விட்டு ஆறிலொன்றாகக் காய்ச்சி வடிக்கட்டிக் கொண்டு, அதனுடன் வெல்லம் (1 வீசை) சேர்த்து அடுப்பின்மேல் வைத்துப் பாகாக்கிக் கொண்டு,

| | |
|---|---|
| சங்கம் வேர் | கோஷ்டம் |
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | ஓமம் |
| சிற்றரத்தை | ஏலக்காய் |
| வெங்காரம் | வெட்பாலை அரிசி |
| கடுகரோகணி | வாயுவிடங்கம் |
| சிறுதேக்கு | கொடிவேலிவேர்ப்பட்டை |
| கூகைநீர் | பருத்தி |
| திராக்ஷை | சடாமாஞ்சில் |
| சாதிக்காய் | கிராம்பு |
| மாசிக்காய் | |

முதலான இச்சரக்குகளை (ஒருபலம்) யெடுத்துச் சூரணித்து வஸ்திரகாயஞ் செய்துகொண்டு, மேல்சொன்ன பாகில் போட்டுக் கிண்டி, வேண்டிய அளவு பசுவின் நெய்யும் விட்டு, லேகியமாக செய்யவும். ஆறியபின் பச்சைக்கல்பூரம் 1 வராகனெடை, தேன் (2 சேர்) சேர்த்துக்கொள்ளவும். இதைத்தினம் 2 வேளை கழற்சிக்காயவு சாப்பிடச் சகலவித காசங்களும் தீரும்.

## 123. காசத்திற்குச் 'சாரணைக் கிழங்கு, எண்ணெய்'

சாரணைக் கிழங்கு தன்னோடு
சதாவரிக் கிழங்கு தானும்
விருளச்சிந்தில் வட்டு
வீரவிய வாடாதொடை
மாரிய பிரமி தூது
வளை மரிச் சாலங்கண்டு
ஆரிய வமுக்கிராவும்
துகளோர் பலங்கள் கொள்ளே (உஅசு)

கொள்ளறு நாழித்தண்ணீர்
குதிரவே கொதிக்கவிட்டு
மெள்ளவே காய்ந்த தூறி
வெந்துநா நாழியாக்கி
யெள்ளதி லெண்ணெய்தானு
மிருநாழி கூட்டியொக்கத்
துள்ளவே துளாவிக் காய்ச்சி
சொல்லிய சரக்குங் கூட்டே (உஅஎ)

சொல்லிய சரக்குச் சுக்குத்
திப்பிலி மிளகிந்துப்பு
நல்லசீ ரகத்தினூடே
நன்றுகற் கடகசிங்கி
மெல்லிய கிராம்புமேவெள்
ளுள்ளிக டுகுரோகணிச்
செல்லமுக் கழஞ்சு கொண்டு
செலுத்திடக் காசம் போமே (உஅஅ)

(இ-ள்)

| | |
|---|---|
| சாரணைக்கிழங்கு | தண்ணீர் விட்டான் கிழங்கு |
| சீந்தில் கொடி | ஆடாதோடை |

| | |
|---|---|
| பிரமி | தூதுவளை |
| குப்பைமேனி | அமுக்கிராக் கிழங்கு |

இச்சரக்குகளை வகைக்கு, 1 பலமெடுத்துக் கல்லுரலி லிட்டிடித்து ஒரு பாத்திரத்தில் போட்டு 6 படி ஜலம்விட்டு; அடுப்பின் மேலேற்றி நன்ருகக் கொதிக்க வைத்து 4 படி யாகச் செய்து வடிக்கட்டிக் கொள்ளவும். இக்கஷாயத் துடன், சுத்தமான எள்ளெண்ணெய் 2 படி விட்டு,

| | |
|---|---|
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | இந்துப்பு |
| சீரகம் | கடுக்காய்ப் பூ |
| கிராம்பு | பூண்டு |
| கடுகரோகிணி | |

இவைகளை வகைக்கு 3 கழஞ்சு ($1\frac{1}{3}$ தோலா.) வீதமெடுத் துச் சூரணித்து, கஷாயம் கலந்த எண்ணெயுடன் கலந்து அடுப்பின் மேலேற்றிப் பதத்தில் வடிக்கவும். இந்த எண் ணெயை (ஒரு துட்டெடைத்) தினம் உட்கொள்ளக் காச ரோகங்கள் தீரும்.

---

## 124. காசத்திற்கு மருந்து.

சுக்குடன் மிளகு தூது
வளை திப்பி(லி) வட்டுச் சிந்தில்
தக்கவே வோரொன்றுக்குச்
சமனகச் சாறுதான் கொண்
டொக்கமுங் நாழித்தண்ணீ
ரொன்றதா யரைத்துக் காய்ச்சி
நக்கவே நறுநெய் தேனில்
நன்றெனக் காசம் போமே (உஅகூ)

(இ-ள்)

| | |
|---|---|
| சுக்கு | மிளகு |

தூதுவளை திப்பிலி
சிந்தில்கொடி

இவைகளைச் சமமாகவெடுத்து இடித்து 3 படி தண்ணீர் விட்டு, அடுப்பின் மேலேற்றியெட்டிலொன்ருகக் காய்ச்சி வடிக்கட்டிக்கொண்டு, பசுவின்நெய், தேன் இவை கூட விட்டுக் கொண்டு சாப்பிடக் காசரோகம் தீரும்.

---

## 125. இருமல், பாண்டு, நீரிழிவு, பிரமியம், குடல்வாதம், சிலேத்துமம், வாதம், குட்ட ரோகம் முதலானதற்கு 'நாகபற்பம்'

நாகமொரு பலமதனை கோமூத்திர
மெருக்கம்பால் நல்லயெண்ணெ
யாகவிது மூன்றதனி லுருக்கிசுத்தி
பண்ணிக்கொண் டதைநறுக்கி
வாகுபுதுச் சட்டிதனிற் போட்டுருக்கு
புளிமரத்தில் வளர்பிராணி
யேகையினு லெடுத்ததிற் போட்
டாக்கோலி னினிலேதானே (உகூ௰)

கோலினுல் மத்திக்கப் பற்பமா
கும்பிறகுங் கூறக்கேளு
சிலம்பஞ் சாமிரதங் கூட்டியதைப்
பிசைந்துவிலே திறமாய்மூடி
சீலைமண் ணுஞ் செய்துபுட மிடபற்ப
மா முளுந்ததின் மாத்திரந்தான்
கோலமிகுஞ் ச(ர்)க்கரையி லந்தியுங்கா
லையினுமிதைக் கொண்டிடாயே (உகூக)

கொண்டிடிரு மல்பாண்டு நீரழிவும்
பிரமியமுங் குடல்வாதங்கள்

பண்டியசி லேத்மமும் வாதமுடன்
குட்டமெல்லா மறுதேசம்போம்
அண்டர்பிரான் கைலாச பதியுடைய
கிருபையினு லகிலமாளு
மண்டலாதி பதிசரபேந் திரனுணர்ந்த
நாகபற்பம் வகையாயுண்ணே (உகூஉ)

(இ-ள்)

துத்தநாகம் ஒரு பலத்தை ஒரு கடாயிலிட்டு உருக்கிப்,

பசுவீன் மூத்திரம்
எருக்கம்பால்
நல்லெண்ணெய்

இம் மூன்றிலும் தனித்தனியே விட்டுச் சுத்திசெய்து கொள்ளவும். இந் நாகத்தை ஒரு புதுச் சட்டியிலிட்டு உருக்கி புளியம்பிராணியை அதில் கொஞ்சம் கொஞ்சமாகப் போட்டு ஒரு கோலினுல் கிளறி வரவும். நாகம் பற்பமாகும்.

இதனுடன் சுத்திசெய்த இரஸம் கூட்டிப்பிசைந்து ஒரு அகலில்வைத்துச் சீலேமண்செய்து காய்ந்தபின்பு புடம்போடவும். சுத்தமான பற்பம் கிடைக்கும். இப்பற்பத்தில் ஒரு உளுந்துப் பிரமாணமெடுத்துச் சர்க்கரையில் வைத்துக் காலேயிலும் மாலேயிலும் உட்கொள்ளவும். இதனுல் இருமல், நீரிழிவு, பாண்டு, பிரமியம், குடல் வாதங்கள், கபதோஷங்கள், வாதரோகங்கள், குஷ்டம் முதலான வியாதிகள் தீரும்.

---

## 126. சுவாச காசத்திற்குக் கரிசாலேக்குடி நீர்

கரிசாலங் கண்ணிபொடு தலேதுளசி
செருப்படியுங் கண்டங்கத்தரி
உரதூது வளேப்பேரா மட்டிபெரும்
பூலாவி னுடன்செம் முள்ளி

யுரையாடா தொடைசங்குநொச்சி
பன்னிரண்டு மொக்கவேதான்
சரியாகத் துவைத்துமச் சாற்றைவைத்துப்
பிழியொருசட் டியிலே தானே (௨கூரு)

சட்டியிலே பிழிந்துமிள குள்ளியரைத்
தேபோட்டு தாளித்துக்கொள்
திட்டமுள்ள சுக்குதிப் பிலியிரண்டும்
பொடிசெய்து திறமாய்த்தானே
அட்டியிலா மற்றூவி (யதிற்குழப்பி)
காலைகொள்ளு நாலு நாளே
கெட்டசுவாச காசமறுங் கைப்புடனே
புளிப்பதுவுந் தின்றிடாதே (௨கூச)

(இ-ள்)

| | |
|---|---|
| கரிசாலங் கண்ணி சமூலம் | பொடுதலை |
| துளசி | செருப்படி |
| கண்டங்கத்திரி | தூதுவளை |
| பேராமட்டி | பெரும்பூலாவேர் |
| செம்முள்ளி | ஆடாதோடை |
| சங்கம் வேர் | நொச்சி |

இவைகளைச் சமபாகமெடுத்துக், கல்லுரலிலிட்டிடித்து நன்றாகப் பிழிந்த சாற்றை யொரு புதுச்சட்டியிலிட்டு, அதனுடன் மிளகு, பூண்டு இவைகளையுமரைத்துச் சாற்றுடன் குழப்பிச் சுண்ட வைத்துக்கொண்டு, சுக்கு, திப்பிலி இவ்விரண்டையும் பொடிசெய்து அதில் தூவித் தினம் காலை வேளையில் மாத்திரம் ஒரு வேளையுட்கொள்ளவும். 4 நாட்களில் சுவாசகாசம் தீரும். புளிப்பையும், கசப்பையும் நீக்கவும்.

## 127. இருமலுக்கு 'ஆடாதோடையாதிக் கடாயம்'

ஒருபிடியா டாதோடை யிலையில்நா
ழியும்நீர்விட் டுறுக்கமாகச்
சரியாகத் திப்பிலிசுக் குடன்மிளகுங்
கடுக்காயுந் தான்றிக்காயும்
உரையைந்துந் துணிதனிலே முடிந்துபோட்
டுக்காய்ச்சி யுழக்கதாக
வரும்போதி லிறக்கியதைச் சுத்தமாம்
பீங்கானில் வடித்துக் கொள்ளே. (உகரு)

வடித்துக்கொண் டேமுடிந்து போட்டுப்பொட்
டணந்தனையே வகையதாகத்
திடத்துடனே யரைத்துமதிற் கலக்கவொரு
காசினிடை தேனுங்குத்தி
விடியுமுன் கொள்ளிருமல் தியாகியைக்கண்
டிடுங்கலிபோல் விரண்டேயோடும்
படியதனிற் கீர்த்திபெற்ற தஞ்சைச்சர
பேந்திரதுரை பகரும்வாறே (உகசு)

(இ-ள்)

ஆடாதோடை இலை ஒரு பிடி எடுத்துக்கொண்டு சிறுக வரிந்து 1 படி சுத்த ஜலம் விட்டு அதனுடன்,

| | |
|---|---|
| திப்பிலி | சுக்கு |
| மிளகு | கடுக்காய்த்தோல் |
| தான்றிக்காய்த்தோல் | |

இச்சரக்குகளை யொன்றிரண்டாக இடித்து, ஒரு துணியில் முடிந்து ஷை கஷாயத்துடன் போட்டு அடுப்பின்மேல்

ஏற்றி, உழக்காகும்வரை சுண்டக் காய்ச்சவும். ஒரு பீங்கான் பாத்திரத்தில் இக்கஷாயத்தை இறுத்து, மூடிந்த பொட்டணத்தைப் பிரித்து அம்மியின்மேல் வைத்து அரைத்து, அக்கஷாயத்துடனே கலந்துகொண்டு, தேன் 1 வராகனெடையும் விட்டுஅதிகாலையில் குடிக்கவும். எவ்விதமான இருமலுந் தீரும்

---

## 128. இருமலுக்குக் கடாயம்.

முசுமுசுக்கைச் சமூலமே குறுகவரிந்
தேநீர்முக் குறுணிவிட்டு
யிசவாக வறுநாழி யாய்க்காய்ச்சி
நாளொன்றுக் கிருநாழிதான்
சுசியாக வரைபலஞ்ச(ர்)க் கரைக்கூட்டிக்
கொள்ளிருமல் தொலைந்தே போகும்
வசிவான அளகையினி லுற்றசரபேந்திர
பூபதியும் வசனித்தாரே (உ௬௭)

(இ-ள்)

முசுமுசுக்கையைச் (10 பலம்) சமூலமாக வெடுத்துச் சிறு சிறு துண்டுகளாக நறுக்கித் தண்ணீர் 3 மரக்கால்விட்டு, அடுப்பின் மேலேற்றி 6 படியாகும் வரைச் சுண்டக் காய்ச்சிக்கொண்டு, அக்கஷாயத்தைத் தினமொன்றுக்கு 2 படி வீதம் எடுத்து ½ பலம் ஜீனி போட்டு ஒரு நாளில் சாப்பிடவும். அப்போதைக்கப்போது தண்ணீர் சாப்பிடுவதற்கு பதில் இக்கஷாயத்தைச் சாப்பிடவும். இருமல் தீரும்.

---

## 129. இருமலுக்குச் 'சுக்காதிச் சூரணம்'

சுக்குமிள குந்திப்பிலி தான்றிக்காய்
நெல்லிமுள்ளி துவற்கடுக்கா

யொக்கயிந்த வாறுஞ்சரி சூரணித்து
வெருகடிதூ ளுந்தான் தேனில்
பக்குவமாய்க் குழப்பியுங்கொள் ளிருமலெலாஞ்
சூரியன்முன் பனியதாகும்
கைக்குள்சந்திரப் படையுடையோன் சரபேந்திர
னுச்சிதமாய்க் கருதும்வாறே (உகூஅ)

(இ-ள்)

| | |
|---|---|
| சுக்கு | மிளகு |
| திப்பிலி | தான்றிக்காய்த்தோல் |
| நெல்லி முள்ளி | கடுக்காய்த்தோல் |

இச்சரக்குகளைச் சமனெடையெடுத்துக், கல்லுரலிலிட் டிடித்து, வஸ்திரகாயஞ் செய்து பத்திரப் படுத்தி, மூவிரல் கொள்ளுமளவு இச்சூரணத்தை யெடுத்துத் தேனில் குழைத் துச் சாப்பிட, இருமல் தீரும்.

---

## 130. இருமலுக்குச் 'சூரணம்'

கண்டங்கத் திரிவேரொன் றேசுக்கி
ரண்டுமிள கதுவுமூன்று
மீண்டியதிப் பிலிநாலு சீரகமு
மைந்திவைய விளம்பக்கேளு
மண்டியெரி யுந்தணலிற் பொன்னிறமா
கத்தானே வறுத்துக்கொண்டு
கண்டிதமாய்ப் பொடிசெய்து வோர்பாத்தி
ரத்தில்வடிக் கட்டிடாயே (உகூகூ)

வடிக்கட்டி வெருகடிதூள் பசுநெய்யிற்
கலந்துவதி காலைகொள்ளத்
துடியாக வந்தியுமே கொள்ளிருமல்
தீர்ந்துவிடுஞ் சுகமாய்த்தானே

படியதனில் விப்பிரர்க்குச் சோடசதா
னங்களருள் பாக்கியசாலி
திடசித்த முளதஞ்சைச் சரபேந்திர
ளிட்சயித்த செய்கையீதே (நா)

(இ-ள்)

| | |
|---|---|
| கண்டங்கத்திரிவேர் | 1 பலம் |
| சுக்கு | 2 ,, |
| மிளகு | 3 ,, |
| திப்பிலி | 4 ,, |
| சீரகம் | 5 ,, |

இவைகளைத் தனியே ஒரு இரும்புச் சட்டியிலிட்டு, அடுப்பின் மேலேற்றிப் பொன் வறுவலாக வறுக்கவும். பின்பு இவைகளையொரு கல்லுரலிலிட்டிடித்து வஸ்திரகாயஞ் செய்து, மூவிரல் கொள்ளுமளவெடுத்துப் பசுவின் நெய்யுடனே குழைத்துக் காலையிலும் மாலையிலுமாகச் சாப்பிடவும். இருமல் தீரும்.

## 131. இருமல், ஈளைக்கு வேர்க்கொம்புக் கடாயம்.

இரண்டுசுக்கு நறுக்கியொரு படிதண்ணீர்
விட்டுமதை யேய(ா)ழ(ா)க்காய்
வருமட்டுங் காய்ச்சியதில் திப்பிலிநா
லுஞ்சுட்டு வகையதாகத்
திரண்டிடாமற் பொடியாய ரைத்துமந்தப்
பொடிதூவித் தேனும் நெய்யுங்
கரண்டியிலே காசிடையும் வகையொன்றுக்
கும்விட்டுக் கருத்தாய்க்கேளே (நாக)

கருத்தான கடாயத்தில் விட்டேமூன்
றேநாளுங் காலைதன்னில்
திருத்துமந்தி யிலுங்கொள்ளு யிருமலுட
னீளையெல்லாந் தீர்ந்தேபோகும்
ச(ர்)க்கரையின் மொழிதுளசி மகிபால
னீன்றருள்சற் புத்திரனெங்கோன்
திருக்கள்நிர்(த்)த மிடுந்தஞ்சைச் சரபேந்திர
னிர்ணயித்த செய்கையிதே (நாஉ)

(இ-ள்)

சுக்கு 2 தூறை யெடுத்து, அதன் மேல் தோலைச் சீவி நன்ருக நசுக்கி ஒரு பாத்திரத்திலிட்டு 1 படி ஜலம் விட்டு, அடுப்பின் மேலேற்றி ஒரு ஆழாக்காகவற்றக் காய்ச்சவும். திப்பிலி 4 (எண்ணிக்கையில்) எடுத்துச் சுட்டு (நன்ருகக் கருக்கும் வரை வறுத்துக்கொள்ளவும்) பொடி செய்து, அப்பொடியை முன் சொன்ன கஷாயத்துடன் சேர்த்துச் சுத்தமான பசுவின் நெய்யும், தேனும் வகைக்கு 1 காசெடை சேர்த்து, 3 நாட்களுக்குக் காலை வேளையிலும், மாலை வேளையிலும் சாப்பிடவும். இருமல், ஈளை முதலியவை தீரும்.

## 132. இருமலுக்குப் புகை.

மெல்லியசீலையைக்குறட்டைப் பழச்சாற்றி
லூறவைத்து மேயுலர்த்தி
நல்லபிரூன் பாலிலொரு நாள்நனைத்து
மதையுலர்த்தி நலமதாக
வல்லவெள் ளெருக்கம் பால் தனில் நனைத்து
நிழலுலர்த்தி வனத்தில்மேவு
மல்லலில்லாக் குப்பைமேனிச் சாற்றிலேதான்
கொஞ்சமரி தாரமாமே (நாஙு)

அரிதார மரைத்துக்கரைத் ததிலேயுந்
தோய்த்துலர்த்தி யந்தச்சீலைத்
திரியாகச் சிறுகவுஞ்செய் தெருக்கங்
குழாயதிலே செலுத்தித் தானே
சரியாக வும்மோருஞ் சோறுண்டு
பின்புபுகை தானேயுண்ணு
இருமலறும் வெந்நீருஞ் சோறுண்டு
பத்தியமா யிருநீதானே (நாச)

(இ-ள்)

ஒரு சாண் நீள அகலமுள்ள வெள்ளைத் துணியை யெடுத்துக் குறட்டைப் பழச்சாற்றில் நனைத்து, ஊறவைத்து, நிழலில் உலர்த்திக் கொள்ளவும். மறுநாள் அதைப் பசுவின் பாலில் ஊறவைத்து உலர்த்தவும், மூன்றுவது நாள் வெள்ளெருக்கம் பாலில் முன்போல் நனைத்துக் காயவைத்துக் கொள்ளவும்.

சுத்தி செய்த தாளகத்தைப் பொடித்துக் குப்பைமேனிச் சாற்றில் போட்டுக் கலக்கி அதில் அத்துணியை ஊறவைத்துக், காயவைத்துக் கொண்டு, சிறு சிறு துண்டுகளாகக் கிழித்துத் திரிகள் செய்து கொள்ளவும். வேண்டும்போது, நோயாளி மோர் சாதம் சாப்பிட்டபின், ஒரு திரியை யெடுத்து எருக்கங் குழலுக்குள் செலுத்திக் கொளுத்தி அதிலிருந்து எழும்பும் புகையை யுட்கொள்ளவும். இருமல் தீரும்.

பத்தியம் :—

அன்று வெந்நீர் சாதம் சாப்பிடவும்.

---

## 133. இருமலுக்குக் கண்டங்கத்திரிச்சூரணம்.

தூதுவளம் பழங்கண்டங் கத்திரியும்
வகைக்கோர்பலந் தூக்கிக்கொண்டு

சிதமிகு மேலந்திப் பிலிமிளகு
கிராம்புடனே சிரகத்தோ
டோதுவகை யைந்தினிலே வகைக்கிரண்டு
வராகனெடை யொக்கச்சேர்த்துச்
சாதகமாம் பசுவினெய் விட்டுமதைப்
பொன்னிறமாய்த் தானுங்கேளே (௩௱௫)

பொன்னிறமாய் வறுத்துப்பொடி செய்துவடிக்
கட்டிக்கண்ட பொடிக்குத்தானே
கன்னலுள சீனியாகில் ராயபுரிச்
ச(ர்)க்கரையுந் தான்கலந்து
உன்னிதமாம் நெய்தேனுங் கலந்துவைத்துக்
கொண்டுமன தொருமையாகக்
கொன்னேகூடி யைப்போற்றி யிரண்டுவரா
கனிடையதிற் கொண்டிடாயே (௩௱௬)

கொண்டிடந்தி காலையுமே மூன்றுநா
ளறுபொழுது குணமாய்த்தானே
மண்டிருமலு மற்றுப் போமுப்பும்
புளிப்பதுவும் வாய்வுப்பண்ட
முண்டிடா தேசோழ வளநாடன்
றஞ்சைநகர்க் குறுதியாக
வெண்டிசையும் போற்றசெங்கோல் நடத்துசர
பேந்திரனிதை யியம்பினரே (௩௱௭)

(இ-ள்)

தூதுவளம் பழம் கண்டங்கத்திரி வேர்

இவ்விரண்டையும் வகைக்கு 1 பல மெடுத்து, அதனுடன்

ஏலக்காய் திப்பிலி

மிளகு கிராம்பு

சீரகம்

இவைகள் வகைக்கு 2 வராகனெடையும் எடுத்து, ஒன்று சேர்த்து ஒன்றிரண்டாக இடித்து, ஒரு பாத்திரத்தில்போட்டு பசுவின் நெய் சிறிது விட்டுப் பொன் வறுவலாக வறுத்துக் கொள்ளவும். இதைக் கல்லுரலிலிட்டுச் சேதமாகாமலிடித்து வஸ்திரகாயஞ் செய்துகொண்டு, அதற்குச் சரியளவு ஜீனி சேர்த்துக் கொண்டு,

பசுவின் நெய்யும், சுத்தமான தேனும் வேண்டிய அளவு விட்டுக் கலந்து கொள்ளவும். இம் மருந்தில் 2 வராகனிடை எடுத்துக் காலையிலும், மாலையிலுமாக 3 நாளைக்கு 6 பொழுது உட்கொள்ள, இருமல் தீரும்.

பத்தியம் :—

உப்பு, புளிப்பு, வாயுபண்டங்கள் முதலியவைகளை நீக்கி விடவும்.

---

## 134. இருமலுக்குக் 'கொத்தமல்லியாதிக் கடாபம்'

கொத்தம(ல்)லி யின்பூரா வேர்சிறுநா
கப்பூகோ ரைக்கிழங்கு
நத்துகற்க டசிங்கி தூதுவளம்
வேருடனே நன்னாரிவேர்
சத்துளயிவ் வேழுமருந் தும்வகைக்கோர்
பலங்கூட்டித் தானிடித்து
சுத்தமா யஞ்சுபங்கு பண்ணியொரு
பங்குமெடுத் துக்கொள்வாயே (௩௱௮)

எடுத்துக்கொண் டொருபடிதண் ணீர்விட்டுக்
காய்ச்சியதை யேயரைக்கால்
படியாக யிறுத்தாறு வேளைக்குங்கொள்
பத்தியமோ பகரக்கேளு

நடத்துபொரித் திடுமிளகு நீர்ச்சாதந்
தூதுவளே நாடிக்கொள்ளு
துடித்திடிரு மலுந்தப்பா மற்போகு
மிதுகொள்ளச் சுகமுமுண்டே (௩௱௬)

(இ-ள்)

கொத்தமல்லி விதை
சிறு நாகப்பூ
கற்கடசிங்கி
நன்னரி வேர்
இன்புரா வேர்
கோரைக்கிழங்கு
தூதுவளம் வேர்

இவைகளே வகைக்கு 1 பல மெடுத்து, நன்ருக உலர்த்திக் கல்லுரலி லிட்டிடித்து வஸ்திரகாயஞ் செய்து கொள்ளவும். பின்பு இச்சூரணத்தை 5 பங்கு களாகச் செய்து ஒரு பங்கை யெடுத்து, அதனுடன் 1 படி சுத்த ஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி அரைக்கால் படியாகச் சுண்டக் காய்ச்சவும், இக்கஷாயத்தையிறுத்துத் தினம் 6 வேளே உட்கொள்ளவும். இம்மாதிரியே மற்ற பங்குகளேயும் கஷாய மிட்டுப் பருகவும்.

பத்தியம் :—

பொரித்த மிளகு ரசம், தூதுவளங்காய் வறுவல் முதலியவைகளேக் கூட்டிக் கொள்ளவும். இருமல் நீங்கிச் சுகமுண்டாகும்.

---

## 135. இருமலுக்குத் 'திப்பிலிச் சூரணம்'

படிகொள்ளும் பானே தன்னிற் கால்படிபால்
விட்டுமந்தப் பானேவாயைத்
திடமாக வேடுகட்டி வேட்டின்மே
லோர்பலந்திப் பிலியும்வைத்து

அடவுடனே யிரண்டுநா ழிகையெரித்துத்
திப்பிலியை யரைத்துத்தூளாய்
துடியாகக் கற்கண்டின் தூளுமொரு
பலங்கூட்டுச் சுகமாய்த்தானே (௩௱ம)

சுகமாகக் கலந்து தின சரியரைக்
காசிடையின் றாளெடுத்துப்
பகவானை நினைந்துண்டு பின்புவெந்நீ
ருண்ணிதற்குப் பத்தியங்கேள்
புகையிலையும் புளிதள்ளிப் பத்துநாட்
கொள்ளிருமல் போகுந்தானே
சகதலத்திற் கீர்த்திபெறு சரபேந்திர
தீரனுனர் சாத்திரந்தானே (௩௱க)

(இ-ள்)

ஒரு படிபிடிக்கு மளவுள்ள ஒரு பானையை யெடுத்து அதில் பசுவின் பால் $\frac{1}{4}$ படி விட்டு, அதன் வாய்க்கு ஒரு வெள்ளைத் துணியினால் வேடு கட்டவும். அதில் ஒரு பலந்திப்பிலியை வைத்து, பானையை அடுப்பின் மேலேற்றி 2 நாழிகை எரிக்கவும். பின்பு திப்பிலியை யெடுத்துச் சூரணித்து வஸ்திரகாயஞ் செய்துகொண்டு, அதற்குச் சரியெடை கற்கண்டுத் தூள் கலந்து வைத்துக் கொண்டு, தினம்

$\frac{1}{2}$ வராகனெடைச் சூரணத்தை வெந்நீருடன் உட்கொள்ளவும்.

பத்தியம் :—

புகையிலை, புளி, இவ்விரண்டையும் நீக்கவும். 10 நாளில் இருமல் தீரும்.

## 136. இருமலுக்கு மருந்து

அரிசியொரு சிரங்கைதனை நனையப்போட்
டிடித்துக்குகை யாகச்செய்து
வொருசிரங்கைக் கருப்புட்டித் தூள்மிளகு
திப்பிலியி னுடனேசுக்குஞ்
சரியாக வகைக்குமொரு காசெடையும்
பொடிசெய்து தானேகேளு
வுரைவெல்லத் தோடேயித் தூளையுமே
போட்டுப்பிசைந் தொன்றதாக்கே (௩௰௨)

ஆக்கிமாக் குகையில் வைத்து நெய்யதனைக்
காயவைத்து மடுப்பிலேதான்
மாக்குகையை(ப்) போட்டுமது வேகச்சே
கோழிமுட்டை வளமாய்நாலு
மேற்கதுவாம் வெள்ளையதை மாத்திரம்விட்
டேகிண்டி மென்மையாகு
மாக்கியசோ றுண்டபின்பு மிதையுண்டு
முறங்கிருமல் வாங்குந்தானே (௩௰௩)

(இ-ள்)

ஒரு சிரங்கை அரிசி யெடுத்து ஊறவைத்து, இடித்துச் சிறுசிறு குகைகளாகச் செய்து,

| | |
|---|---|
| கருப்புட்டி (பனை வெல்லம்) | ஒரு சிரங்கை |
| மிளகு | 1 வராகனிடை |
| திப்பிலி | ,, |
| சுக்கு | ,, |

இவைகளை ஒன்று சேர்த்து இடித்துப் பிசைந்து அக் குகைக்குள் வைத்து உருட்டி, ஒரு சட்டியில் பசுவின் நெய் விட்டு அடுப்பின் மேலேற்றி அது கொதிக்கையில் மேலே சொன்ன குகைகளைப் போட்டு, அவை வேகும் போது 4 கோழி முட்டைகளின் வெள்ளைக் கருவை மாத்திரம் அத

னுடன் போட்டு, வறுத்துக் கிளறி, இறக்கிக் கொள்ளவும். இரவில் நோயாளி சாப்பிட்டபின், இம்மருந்தைத் தின்று, நித்திரைக்குச் செல்லவும். இருமல் தீரும்.

---

## 137. இருமலுக்குச் சுக்காதிக் கற்பம்.

சுக்குத்திப் பிலிகடுக்கா யிதுமூன்றுஞ்
சரிநிறையாய்த் தூக்கிக்கொண்டு
(ப)க்குவமாய் நேகமைப்போ லேயரைத்து
மக்கொட்டைப் பாக்கின்மாத்திர
முக்கியமாந் தேனில்கலந் தேகொடுக்க
யிருமலெல்லா மோடிப்போகுந்
திக்குவிசை யஞ்செய்யுஞ் சரபோசி
மகராசன் செப்பும்வாறே (கூ௰௪)

(இ-ள்)

சுக்கு திப்பிலி
கடுக்காய்த் தோல்

இம் மூன்றையும் சரி எடை யெடுத்து இடித்து வஸ்திர காயஞ் செய்து கொண்டு, அதில் தண்ணீர் சிறிது விட்டு, அம்மியின் மேல் வைத்து, நேகவரைத்துக் கொண்டு, அவ்விழுதில் ஒரு கொட்டைப் பாக்களவு எடுத்துத் தேனில் குழைத்துச் சாப்பிடவும். இருமல் தீரும்.

---

## 138. இருமலுக்கு 'அந்தரத்தாமரைச் சூரணம்'

அந்தரத்தா மரைபல (மூன்று) சிலப்பட்டைத்
தாள்பலமூன் றதனினூடே
சந்தந்திப் பிலித்தூளும் பலமொன்று
மொன்றாகத் தான்கலந்து

இந்தத்தூள் தனிலெவெரு கடியெடுத்துத்
தேனதனி லிதவாய்க்கொள்ள
வந்திடுமீ ளையுமிரும லுப்பிசமுந்
தீர்ந்துவிடும் வகையாய்த் தானே (௩௰௫)

(இ-ள்)

| | |
|---|---|
| அந்தரத்தாமரை (உலர்ந்தது) த்தூள் | 3 பலம் |
| உசிலம் பட்டைத் தூள் | 3 பலம் |
| திப்பிலித் தூள் | 1 பலம் |

இவைகளை யொன்று கலந்து வஸ்திர காயஞ் செய்து கொண்டு, மூவிரல் கொள்ளுமளவு இத்தூளை யெடுத்துத் தேனில் குழைத்துச் சாப்பிட இருமல், ஈளை, வயிறுப் பிசம் முதலான ரோகங்கள் தீரும்.

---

## 139. இருமலுக்கு 'ஏலாதிச் சூரணம்'

(ஏலமி) லவங்கம் வாய்விளங்கங்கோ
ரைக்கிழங்கு மினியசுக்கு
கோலசிறு தேக்குபுட் கரமூல
மிளகெட்டுக் கோர்வகைக்குச்
சாலவரைப் பலமுந்திப் பிலியிரண்டு
பலமெல்லாந் தானிடித்து
ஆலமுண்ட கண்டர்தம்மை தியானித்துக்
கும்பிட்டு மதிலேதானே (௩௰௬)

அதிநோயும் வலுவறிந்து தானெ (டுத்)து
முண்டுபா ரந்திசந்தி
சதிசெய்யும் புகையிலையும் புளிதள்ளு
துர்ப்பண்டந் தானுந்தள்ளு
இதமாகு மிருமலெல்லாந் தப்பாமல்
மனுநீதி யோடத்தும்
பதிசோழ வளநாடன் சரபேந்திர
பூபனிதைப் பகரும்வாறே (௩௰௭)

(இ-ள்)

| | |
|---|---|
| ஏலக்காய் | கிராம்பு |
| வாயுவிடங்கம் | கோரைக் கிழங்கு |
| சுக்கு | சிறு தேக்கு |
| *புட்கரமூலம் | மிளகு |

இச்சரக்குகளை வகைக்கு ¼ பலம் வீதமெடுத்துக், காய வைத்துக் கல்லுரலிலிட்டிடித்து வஸ்திரகாயஞ் செய்து கொண்டு, திப்பிலிச் சூரணம் 2 பலமும் போட்டுக் கலந்து வைத்துக் கொள்ளவும்.

நோயின் பலத்தை அறிந்து, (¼ முதல் ½ தோலா எடுத்து) வெந்நீருடன் உட்கொள்ளவும். தினம் காலையிலும் மாலையிலும் உண்டு வரவும்.

பத்தியம் :—

புளி, புகையிலை, முதலியவைகளையும் இதர வாயுப் பண்டங்களையும் நீக்கவும். இருமல் தீரும்.

---

## 140. ஈளையிருமலுக்குத் 'திரிகடுகாதிச் சூரணம்'

திரிகடுகோ ரைக்கிழங்குச் சடாமாஞ்சில்
கற்கடக சிங்கிந்துப்பு
திரிபலையி னுடனுறுஞ் சரியாகக்
கூட்டிப் பொடி செய்திதற்குச்
சரிகண்டங் கத்திரிவேர்ச் சூரணமும்
பண்ணிரெண்டுஞ் சாரித்தே தான்
ஒருவெருக டித்தூளுங் காலையினில்
கொண்டுவெந்நீ ருந்தானுண்ணே (௩.ய௮)

---

* இச்சரக்குக் கிடைக்காவிடில் வெள்ளைக் கோஷ்டத்தை எடுத்துக் கொள்ளவும்.

உண்டுபா ரொருமாதந் தனிலீளை
யிருமலெல்லா மோடிப்போகு
மிண்டியவாய் வின்பதார்த் தங்களெல்லாந்
தள்ளியுண்ணு விமலனார்தம்
முண்டகத்தாள் தனில்வாச மலரணிந்து
அருள்பெற்ற முதல்வனாளும்
அண்டினரைக் கார்த்தருள் தஞ் சையில்மானு
சரபேந்திர னருளிதாமே (ருமகூ)

(இ-ள்)

திரிகடு (சுக்கு, மிளகு, திப்பிலி)
சடாமாஞ்சில்
இந்துப்பு
கோரைக் கிழங்கு
கற்கடசிங்கி
திரிபலா (கடுக்காய், நெல்லி, தான்றி)

இச் சரக்குகளை வகையொன்றுக்குச் சம எடை (1 பங்கு) யெடுத்து, நன்ருக உலர்த்திக் கல்லுரலிலிட்டிடித்து வஸ்திர காயஞ் செய்துகொண்டு, இதற்குச்சமன் கண்டங்கத்திரிவேர் சூரணம் போட்டு, இரண்டையுமொன்ருகக் கலந்து கொள்ளவும்.

இச்சூரணத்தில் மூவிரல் கொள்ளுமளவு எடுத்துக் காலை வேளைகளில் வெந்நீருடன் உட்கொள்ளவும். ஒரு மாத உபயோகத்தில் ஈளை, இருமல், முதலான நோய்கள் தீரும்.

பத்தியம் :—

வாயு பதார்த்தங்களை நீக்கவும், (கருணைக் கிழங்கு, மாவுப் பண்டங்கள், பூஷணிக் காய், பாகற்காய், அகத்தி முதலியவற்றை நீக்கி விடவும்.)

## 141. ஈளை, இருமல், க்ஷயத்திற்கு 'விளங்காதிச் சூரணம்'

ஏலம்வாய் விளங்கமில வங்கத்தின்பட்
டைத்திப்பிலி யிதுகள்நாலும்
தேலவிடா தொருபலமுஞ் சுக்குகண்டத்
திப்பிலியுஞ் செப்பிரண்டும்
நாலுபல மோர்வகைக்கிம் மருந்தெல்லாஞ்
சூரணித்து நலமதாயுஞ்
சீலசூர ணங்கண்ட நிறைக்குச்சர்க்
கரைகலந்து தினமுந்தானே (௩௨௰)

தினமுங்கா லையிலேவொரு கழஞ்செடுத்துக்
கொள்ளத்தீ பனமுமுண்டாம்
ஈனவீளை யிருமல்சயந் தீருமிதின்
விளங்காதிச் சூரணமாங்
கனயோக சாலிவித்துவ சனசேகர
னெழில்மங்கள கல்யாணன்
அனசேருமன்ன தானனற் றஞ்சைசர
போசிமன்ன னருளிதாமே (௩௨௧)

(இ-ள்)

| | |
|---|---|
| ஏலக்காய் | வாயுவிடங்கம் |
| இலவங்கப் பட்டை | திப்பிலி |

இவைகள் வகைக்கு 1 பலமும்

| | |
|---|---|
| சுக்கு | கண்டத்திப்பிலி |

இவ்விரண்டும் வகைக்கு, 4 பலமும் எடுத்துக் காய வைத்துக் கல்லுரலிலிட்டிடித்து, வஸ்திர காயஞ் செய்து கொண்டு, இச்சூரணத்திற்குச் சரிநிறை சர்க்கரை கூட்டித் தினந்தோறும் காலை வேளையில் 40 குன்றிமணியளவெடுத்து உட்கொள்ளத் தீபனம் உண்டாகும்.

இம் மருந்தின் பெயர், விளங்காதிச் சூரணமாகும்.

## 142. இருமலினுக்குச் 'சாரணையாதி வடகம்

சாரணைவேர் கொடிவேலி வேர்மிளகு
டன்புளியஞ் சாம்பல்சுக்கு
சீரகந்தா ளிசபத்திரி கண்டங்கத்
தரியின்வேர் திப்பிலியேலஞ்
சார்தால பத்திரங்கி ராம்புடனே
பன்னிரண்டுஞ் சரியாய்ச்சேர்த்து
கூறுடனே வுலர்த்திப்பொடி செய்துவடி
கொண்டுமப்பாற் கூறக்கேளே (௩௨௨)

கூறக்கே ளொருபங்கு சூரணத்திற்
கைந்துபங்கு குணமாம்வெல்லஞ்
சீருடனே தண்ணீர்விட் டனலிட்டுப்
பாகாகத் திரளும்போது
சூரணத்தைப் போட்டுக்கிள றியுமிறக்கிப்
பாக்களவு துடியாமுருண்டைக்
கூறுடனே செய்துமொரு புதுக்கலசந்
தன்னில்வைத்துக் கொள்ளுவாயே (௩௨௩)

வைத்துக்கொண் டேகடவு ளைநினைந்து
மோருண்டை வளமாந்தேனிற்
சத்துவமா யதிகாலை கொள்ளுமொரு
மண்டலந்தான் சரீரந்தன்னில்
மெத்தவுபா திக்குமிரு மலினை
யற்றுவிடும் விபுலைதன்னில்
சத்துருசம மாரவைவெல் படையுடைய
சரபேந்திரன் சாற்றும்வாறே (௩௨௪)

(இ-ள்)

| | |
|---|---|
| சாரணை வேர் | கொடிவேலி வேர் |
| மிளகு | புளியம் புரணி சுட்டசாம்பல் |

| | |
|---|---|
| சுக்கு | சீரகம் |
| தாளிசபத்திரி | கண்டங்கத்திரி வேர் |
| திப்பிலி | ஏலக்காய் |
| பச்சிலை | கிராம்பு |

இச்சரக்குகளை (வகைக்கு 1 பலம் வீதம்) எடுத்துக் கல்லுரலிலிட்டிடித்து வஸ்திரகாயஞ் செய்துகொள்ளவும். 60 பலம் வெல்லத்தைத் தூளாக்கி, வேண்டிய அளவு ஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றிப் பாகாக்கி, அதில் முன் சொன்ன சூரணத்தைப் போட்டுக் கிளறி, சூடாறு முன் இந்த லேகியத்தைப் பாக்களவுள்ள உருண்டைகளாகச் செய்து கொள்ளவும்,

அதிகாலைவேளையில் ஒரு உருண்டையைத் தேனில் குழைத்துச் சாப்பிடவும். இவ்வாறு 40 நாளைக்கு உட்கொள்ளவும். இருமல், ஈளை முதலான நோய்கள் தீரும்.

---

## 143. ஈளையிருமலுக்கு 'இண்டம் வேர்ச் சூரணம்

அடவியிண்டம் வேர்ப்பட்டைச்சிறுதேக்கி
 னுடன்சுழலா வாரைவேருந்
திடக்கண்டங் கத்திரிவே ரின்னுலுஞ்
 சரியாகச் சேர்த்திடித்து
அடவாகச் சூரணஞ்செய் தேதேனி
 லுண்டுபா ரந்திகாலை
விடுமீளை யிருமலெல்லாந் தப்பாம
 லிதுநல்ல விதமதாமே (கஉரு)

(இ-ள்)

| | |
|---|---|
| இண்டம் வேர்ப் பட்டை | சிறு தேக்கு |
| சுழலாவாரை வேர் | கண்டங்கத்திரி வேர் |

இவைகளைச் சரி எடை யெடுத்து, வெய்யிலில் காய வைத்துக் கல்லுரலிலிட்டிடித்து, வஸ்திர காயஞ் செய்து கொள்ளவும்.

இச்சூரணத்தில் மூவிரல் கொள்ளுமளவெடுத்துத் தேன் விட்டுக் குழைத்துக் காலையிலும் மாலையிலும் உட்கொள்ளவும். ஈளை, இருமல் முதலிய ரோகங்கள் தீரும்.

---

## 144. ஈளை, இருமலுக்குச் சூரணம்.

குஞ்சுபொரித் திடுகோழி முட்டைத்தோ
லெடுத்தரைத்துக் கொட்டைப்பாக்கில்
மிஞ்சாம லெலுமிச்சம் பழச்சாற்றை
நன்ருக விட்டரைத்து
இஞ்சிச்சா றினிற்குழைத்து மூன்று நாட்
காலைதன்னி லிதமதாகச்
சஞ்சலமில் லாமற்கொள் ளீளையுட
னிருமலெல்லாந் தவிர்ந்துபோமே (௩உசு)

(இ-ள்)

தானுகப் பொரித்த கோழி முட்டையின் ஓடு ஒரு கொட்டைப்பாக்களவு எடுத்து எலுமிச்சம் பழச்சாறு விட்டரைத்து, இஞ்சிச் சாற்றில் குழைத்து 3 நாளைக்குக் காலை வேளைகளிலுட் கொள்ளவும். ஈளை, இருமல் முதலிய நோய்கள் தீரும்.

## 145. ஈளை, இருமல், உஷ்மாந்தை, அக்கினி மந்தம், வசீதகாசம், உள் சுரம், காய்ச்சல் முதலியவைகளுக்குத் 'திப்பிலி நெய்'

திப்பிலியொன் றைந்துபல மிளகுவாய்
விளங்கமுடன் சித்திரமூலங்

திப்பிலிமூ லங்கார்போ கரிசிசிறு
மூலகமுஞ் செவ்வியமேழுந்
தப்பிலா மல்வகைக்கு மோர்பலமுஞ்
சிறுதேக்கு சாதிக்காயுஞ்
செப்புகடுக் காய்தான்றிக் காய்கோஷ்டம்
கற்கடக சிங்குதானே (௩௨எ)

சிங்கிநெல்லிப் பருப்புமதி மதுரமுடன்
சடாமாஞ்சில் சீரகத்தோ
டுங்கணக்குப் பத்தாம்வகைக் கோர்வகைக்கு
மரைப்பலந்தா னுமெடுத்து
சங்கையிலா மலும்பதினெட் டுவகைமருந்
துமரைத்து தானேயப்பால்
பொங்கமிகும் பசுவினெய் யாறுநாழி
விட்டுத்தூள் போட்டிடாயே (௩௨அ)

போட்டுநல்ல மெழுகுபதத் தினில்வடித்துக்
கடவுளரைப் பூஜைசெய்து
நாட்டமுட னதிகாலே யிருகழஞ்சு
கொள்ளெட்டு நாளுந்தானே
வாட்டியயி லையுமிரும லுளமாந்தை
யக்கினிமந் தம்வாதகாச
மூட்டிடுமுள் சுரங்காய்ச்சல் காசமெரி
குரலெலா மோடிப்போமே (௩௨௯)

(இ-ள்)

| | |
|---|---|
| திப்பிலி | 5 பலம் |
| மிளகு | வாயுவிடங்கம் |
| கொடி வேலி வேர்ப் பட்டை | கண்டத்திப்பிலி |
| கார்போகரிசி | சிறுமூலகம் (ஓர் கிழங்கு) |
| செவ்வியம் | |
| இவைகள் வகைக்கு 1 பலம் | |
| சிறு தேக்கு | சாதிக்காய் |

| | |
|---|---|
| கடுக்காய்த்தோல் | தான்றிக்காய்த்தோல் |
| கோஷ்டம் | கற்கடசிங்கி |
| நெல்லிப்பருப்பு | அதிமதுரம் |
| சடாமாஞ்சில் | சீரகம் |

இச்சரக்குகள் வகைக்கு ½ பலம்

இவைகளையெடுத்துக் காயவைத்துக் கல்லுரலிலிட்டிடித்து வஸ்திரகாயஞ் செய்து,

பசுவின் நெய் 6 படியுடன் கலந்து, அடுப்பின் மேலேற்றி, எரித்துப் பதத்தில் வடித்து, இறக்கி வடிக்கட்டிக்கொள்ளவும்.

இந்நெய்யில் 2 கழஞ்சு எடுத்துத் தினம் அதிகாலையில் உட்கொள்ளவும், 8 நாட்களுள் ஈளை, இருமல், உளமாந்தை, அக்கினிமந்தம், வாதகாசம், உள் சுரம். காய்ச்சல், எரிகுரல் முதலான பற்பல நோய்களுந் தீரும்.

## 146. ஈளை, இருமல், அருவருப்பு, குன்மம் மூலம், பெருவயிறு, காசம், சூலை, நெஞ்சடைப்பு, ஈளை, இரைப்பு, அகுவை, நாலிகை, பொருமல், கிராணி, வயிற்றில் புழு, மந்தாக்கினி முதலான நோய்களுக்குத் தூதுவளைத் தைலம்

தூதுவளை யுங்கையாந் தகரைதேட்
கடையாடா தோடைசங்கு
சாதகக்கீழ் காய்நெல்லி யுங்கண்டங்
கத்திரிசா ரணைநொச்சில்
தாதவிழுஞ் சுழலாவா ரையினுட
னேசிறுவ முதலைசமூல
மோதியபே ராமுட்டி பன்னிரண்டில்
வகைக்குமொரு பிடியுந்தானே (௩௩௰)

ஒருபிடியு மெண்ணெயிதற் கொடுபடியும்
விட்டுயிதி லொக்கத்தானே
திரிகடுகு மதிவிடயம் வெட்பாலை
யரிசியுடன் சிறுதேக்கோமம்
பெருங்குரும்பை யழிஞ்சில்விதை வசம்புமுத்
தக்காசு பலமாமிங்கு
கருஞ்சீர கசீர கங்கடுகு
ரோகணியுங் கடுகுந்தானே (ருருக)

தானேபெரு மரப்பட்டை வாய்விளங்கத்
துடனேதூ தளையின்வேருங்
கானிற்காட் டாமணக்கம் வேர்கொடிவே
லிப்பட்டை கண்டங்கத்திரி
வூனமிலா வேராக யிருபத்தி
ரண்டுமருந் தொக்கக்கொண்டு
நானுரைத்த படிக்குவகைக் கோர்வராக
னிடையது நயமாய்க்கூட்டே (ருரு௨)

கூட்டியரைத் தேகரைத்து மடுப்பினிலே
தானே சிறு கொதியுமிட்டு
நாட்டமுட னுலாநா ளிறக்கிவடித்
தேசிவனை நயமாய்ப் போற்றி
தேட்டமுட் னேகாலை யோர்கழஞ்சு
தைலங்கொள் தீரும்வியாதி
மூட்டு மஞ்சு வகையினை யிருமலரு
வருப்புகுன்மம் மூலம்போமே (ருருரு)

மூலமுடன் பெரு வயிறு சுவாச காச
மருசி முளைக்கும் பக்கச்
சூலையும் நெஞ்சடைப்பீ ளையும்மகுவை
பீலிகை பொருமற் றுடிகிராணி

சாலவயிற் றினிற்புழுமந் தாக்கினியு
மற்றுவிடுஞ் சகத்தின்மீதே
சீலமிகுந் தைலமிது தஞ்சைவிபு
நிர்ணயித்த செய்கைதானே (௩௩௪)

(இ-ள்)

| | |
|---|---|
| தூதுவளை | கையாந்தகரை |
| தேட்கொடுக்கி | ஆடாதோடை |
| சங்கம் கொழுந்து | கீழாநெல்லி |
| நொச்சில் | சுழலாவாரை |
| சிறு கத்திரிச் சமூலம் | பேராமுட்டி |

இச்சரக்குகளின் கொழுந்து வகைக்கு ஒருபிடி யெடுத்துச் சிறுக அரிந்து, 1 படி நல்லெண்ணெயிலிட்டு,

| | |
|---|---|
| சுக்கு | மிளகு |
| திப்பிலி | அதிவிடயம் |
| வெட்பாலைஅரிசி | சிறு தேக்கு |
| ஓமம் | பெருங்குரும்பை |
| அழிஞ்சில் விதை | வசம்பு |
| கோரைக்கிழங்கு | பெருங்காயம் |
| கருஞ்சீரகம் | கடுகரோகிணி |
| கடுகு | பெருமரப்பட்டை |
| வாயுவிடங்கம் | தூதுவளை வேர் |
| காட்டாமணக்கம் வேர் | கொடிவேலி வேர்ப்பட்டை |
| கண்டங்கத்திரி வேர்ப்பட்டை | |

இச்சரக்குகளை வகைக்கு 1 வராகனெடை வீதமெடுத்துத்தண்ணீர் விட்டரைத்து, மேல் கூறிய எண்ணெயுடனே குழப்பி, அடுப்பின் மேலேற்றிக் கொஞ்சம் கொஞ்சமாக 3 நாள் எரித்து, 4-வது நாளன்று பக்குவப்படுத்தி இறக்கி வடிக்கட்டிக் கொள்ளவும்.

வேண்டும்போது காலைநேரங்களில், இத்தைலத்தில் ஒரு கழஞ்சளவு உட்கொண்டுவர

| | |
|---|---|
| 5 வகை ஈளை | இருமல் |
| அருவருப்பு | குன்மம் |
| மூலம் | பெருவயிறு |
| சுவாச காசம் | அருசி |
| பக்கசூலை | நெஞ்சடைப்பு |
| ஈளை | மந்தாக்கினி |
| அகுவை | பீலிகை |
| கிராணி | வயிற்றிலுள்ள புழு |

முதலான பற்பல ரோகவகைகளுந் தீரும்.

# சரபேந்திரர் காசசுவாச வைத்திய முறைகளி லுள்ள மருந்து முறைகளுக்கு அட்டவணை

(அநேக இடங்களில் மருந்துகளுக்குப் பெயர்கள் கூறப் படாமலிருப்பதால் அவைகளுக்குப் பொருந்தும் பெயர்களை யிட்டுப் பிறைக்குறியும் (Bracket) இடப்பட்டிருக்கின்றன)


| | மருந்துகளின் பெயர். | பக்கம் |
|---|---|---|
| 1 | அந்தரத்தாமரைச்சூரணம் (இருமலுக்கு) .... | 180 |
| 2 | (அரிதார இலந்தைப்) புகை (நாசியாலிரத்தம் விழுதல், நீர் விழுதல் முதலியவைகளுக்கு) .... | 64 |
| 3 | அரிதாரப்புகை (காசம் முதலானதற்கு) ... | 67 |
| 4 | அரிதாரப்புகை (ஈளை, இருமலுக்கு) வேறு .... | 91 |
| 5 | அரிதாரப்புகை (இருமல், ஈளை, இரைப்பு, கோழை, இளைப்பு, சுவாசகாசம் முதலான நோய்களுக்கும் திரிதோஷ கோபத்தாலுண் டான நோய்களுக்கும்) வேறு .... | 120 |
| 6 | அரிதார பற்பம் (ஈளை, இருமல், உளைமாந்தம், மந் தார காசம், சயம், வண்டுகடி, குஷ்டம், எலிகடி முதலான ரோகங்களுக்கு) ... | 149 |
| 7 | அரிதார பற்பம் (ஈளை, இருமல், சுரம் முதலியவை களுக்கு) ... | 113 |
| 8 | அடை (இருமலுக்கு) ... | 70 |
| 9 | அண்டா நீராகாரம் (இருமலுக்கு) .... | 76 |
| 10 | (அப்பம்) இருமலுக்கு ... | 179 |
| 11 | (அவுரி வேர்ப்) புகை (இருமல், சுக்கிலப்பிரமேகத் திற்கு) ... | 92 |
| 12 | ஆடாதோடை நெய் (காச சுவாசத்திற்கு) ... | 7 |
| 13 | ஆடாதோடை நெய் (இருமல், ஈளை, நெஞ்செரிவு உடலுணர்தல், பித்தம், விஷ ஜ்வரத்திற்கு) வேறு .. | 102 |

| | மருந்துகளின் பெயர். | பக்கம் |
|---|---|---|
| 14 | (ஆடாதோடையிலை மருந்து) சாறு (சுவாசகாசத்திற்கு) ... | 10 |
| 15 | ஆடாதோடையாதிக் கடாயம் (இருமலுக்கு) ... | 169 |
| 16 | ஆடுதீண்டாப்பாளை மருந்து (எலிகடி, இரைப்பு, மந்தார காசத்திற்கு) ... | 148 |
| 17 | ஆனந்தரஸம் (காசத்திற்கு) ... | 48 |
| 18 | இண்டம் வேர்ச்சூரணம் (ஈளை, இருமலுக்கு) ... | 186 |
| 19 | இலவங்காதிச் சூரணம் (வயிறு பொருமல், பித்தம் வாந்தி, இருமலுக்கு) ... | 160 |
| 20 | இலவம்பட்டைக் களி (காசத்திற்கு) ... | 111 |
| 21 | இலைக்கள்ளிச் சூரணம் (ஈளை, இருமலுக்கு) ... | 89 |
| 22 | ஊசிக்காந்தாதிச் சூரணம் (சகல கழிச்சலுக்கும்) .. | 112 |
| 23 | ஊரலவல் குடிநீர் (வாயினாலிரத்தம் விழுகிறதற்கு) ... | 145 |
| 24 | ஏலாதிச்சூரணம் (இருமல், இரைப்பிற்கு) ... | 181 |
| 25 | ஏலாதிச்சூரணம் (இருமலுக்கு) . | 138 |
| 26 | (ஏலாதிச்) சூரணம் (இருமலுக்கு) ... | 118 |
| 27 | கடப்பம் விதை நஸ்யம் (ச்லேஷ்மத்திற்கு) .... | 123 |
| 28 | கடுக்காய்ச்சூரணம் (ஈளைக்கு) .... | 77 |
| 29 | கடுக்காய்த்தூள் (இருமலுக்கு) ... | 110 |
| 30 | (கடுக்காய்த்தூள்) ச்லேஷ்மத்திற்கு) ... | 134 |
| 31 | கடுகாதி கிருதம் (ச்லேஷ்ம விகாரங்களுக்கு) .. | 128 |
| 32 | கண்டங்கத்திரி எண்ணெய் (ஈளை, இருமல், மருந்தீடு முதலியவைகளுக்கு) ... | 85 |
| 33 | கண்டங்கத்திரி லேகியம் (ஈளை, இருமல், பஞ்சகுன்மம் சயம், இருமல், விக்கல் முதலான நோய்களுக்கு) ... | 129 |
| 34 | (கண்டங்கத்தரிச் சூரணம்) (ச்லேஷ்மத்திற்கு) ... | 134 |
| 35 | கண்டங்கத்திரிக் கடாயம் (இரைப்பிற்கு) ... | 154 |
| 36 | கண்டங்கத்திரிச் சூரணம் (இருமலுக்கு) .... | 174 |
| 37 | (கண்டங்கத்திரிச்) சூரணம் (இருமலுக்கு) ... | 171 |
| 38 | கண்டகாரிலேகியம் (சகல காசத்திற்கும்) ... | 162 |

| | மருந்துகளின் பெயர். | | பக்கம் |
|---|---|---|---|
| 39 | கரிசாலைக்குடிநீர் (சுவாசகாசத்திற்கு) | .... | 167 |
| 39a | கரிசாலை நெய் (காசத்திற்கு) | ... | 13 |
| 40 | (கரிசாலை) நெய் (காசத்திற்கு) | ... | 19 |
| 41 | (கீழா நெல்லிக்) குடிநீர் (ச்வாஸகாசத்திற்கு) | ... | 50 |
| 42 | குக்கிலாதி மாத்திரை (ச்வாஸ காசத்திற்கு) | ... | 46 |
| 43 | (குங்கிலிய) எண்ணெய் (காசத்திற்கு) | ... | 22 |
| 44 | குண்டலாதி லேகியம் (காசத்திற்கு) | ... | 39 |
| 45 | (குண்டலாதி) நெய் (சுவாச காசத்திற்கு) | ... | 23 |
| 46 | (குறட்டைப்பழ)ப் புகை (இருமலுக்கு) | ... | 173 |
| 47 | கூஷ்பாண்ட லேகியம் (ஈளை, இருமல், குன்மம், சயம், எரிகுன்மம், இரத்த பித்தத்திற்கு) | ... | 77 |
| 48 | (கையாந்தகரை) லேகியம் (ஈளை, இருமலுக்கு) | ... | 62 |
| 49 | (கொடிவேலி வேர்ச் (சித்திரமூலச்) சூரணம் (இருமலுக்கு) | ... | 52 |
| 50 | கொத்தமலியாதிக் கடாயம் (இருமலுக்கு) | ... | 176 |
| 51 | (கோழிமுட்டையோடு) கல்பம் (ஈளை, இருமலுக்கு) | | 187 |
| 52 | சங்காதிப்புகை (இருமலுக்கு) | ... | 73 |
| 53 | சண்டமாருத லேகியம் (காசம், கபரோகங்களுக்கு) | | 139 |
| 54 | சண்டமாருத லேகியம் (கபரோக இருமலுக்கு) வேறு | ... | 142 |
| 55 | (சாதிலிங்க) உருண்டை (காசம், இரைப்பு, இருமல் எலிகடி முதலியவைகளுக்கு) | ... | 12 |
| 56 | சாதிபலாதி சூரணம் (அக்கினி மந்தம், காச சுவாசம், வரட்சி, குன்மம், உள்ளெரிவு, ஈரல் குலையெரிவு, பீலிகை, ச்லேஷ்ம பித்த விகாரங்களுக்கு | | 131 |
| 57 | சாரணைக்கிழங்கு எண்ணெய் (காசத்திற்கு) | ... | 164 |
| 58 | சாரணையாதி வடகம் (இருமல், ஈளைக்கு) | ... | 185 |
| 59 | (சித்தொடுவீப்) புகை (இருமலுக்கு) | .... | 75 |
| 60 | (சிறுவழுதலை) நெய் (காசத்திற்கு) | ... | 6 |
| 61 | (சிறுவழுதலையாதி)க் குடிநீர் (காசத்திற்கு) | ... | 21 |
| 62 | (சிறுதேக்காதிச்) சூரணம் (சுவாசகாசத்திற்கு) | .... | 32 |

| மருந்துகளின் பெயர். | | பக்கம் |
|---|---|---|
| 63 | சுக்காதிச் சூரணம் (இருமலுக்கு) ... | 170 |
| 64 | சுக்காதி கற்பம் (இருமலுக்கு) ... | 180 |
| 65 | (சுக்கு கண்டங்கத்திரிச்) கல்கம் (இரைப்பு, நெஞ்சினிற் கட்டிற்கு) ... | 159 |
| 66 | (சுக்காதி) கஷாயம் (காசத்திற்கு) ... | 21 |
| 67 | செம்பு பற்பம் (காசம், ஈளை, இருமலுக்கு) ... | 99 |
| 68 | (செவ்வகத்தி) மருந்து (இருமலுக்கு) ... | 137 |
| 69 | (செருப்படிச்) சூரணம் (குலைப்பிற்கு) ... | 97 |
| 70 | (சோழி) மருந்து (இரைப்பு நெஞ்சினடைப்பிற்கு) | 157 |
| 71 | தசமூல நெய் (சுவாசகாசத்திற்கு) ... | 16 |
| 72 | தாமிர பற்பம் (சகல கழிச்சலுக்கும்) ... | 110 |
| 73 | தாளிசபத்திரி வடகம் (சுரம், தாபம், மார்வலி, ஈளை, இருமல், எலும்புருக்கி, பெரும்பாடு, சத்தி குன்மம், அரோசகம், உஷ்ணம், கிராணி, அதிசாரம், பாண்டு, அசீரணம் முதலான ரோகங்களுக்கு) ... | 84 |
| 74 | (தாளக) மா (ஈளைக்கு) .... | 94 |
| 75 | தாளிசபத்திரிச் சூரணம் (ஈளை, இருமல், மந்தாக்கினி, அருசிக்கு) ... | 94 |
| 76 | தாளகபற்பம் (சுவாசகாசத்திற்கு) ... | 9 |
| 77 | தாளிசபத்திரிச் சூரணம் (சுவாசகாசம், இருமலுக்கு) வேறு ... | 11 |
| 78 | தாளிசபத்திரி வடகம் (சுவாச காசத்திற்கு) ... | 17 |
| 79 | தாளிசபத்திரிச் சூரணம் (காசத்திற்கு) ... | 45 |
| 80 | தாளிசபத்திரிச் சூரணம் (கபரோகம், சுவாசகாசம், ஈளைக்கு) ... | 132 |
| 81 | (தாயைக் கொன்றுன்) மருந்து (ஈளைக்கு) ... | 82 |
| 82 | திரிப்புகை (இருமலுக்கு) ... | 68 |
| 83 | (திப்பிலி வெண்ணெய்) இருமலுக்கு ... | 56 |
| 84 | திப்பிலி ரஸாயனம் (காசத்திற்கு) .... | 36 |
| 85 | திப்பிலி ரஸாயனம் (காசத்திற்கு) வேறு ... | 37 |
| 86 | திரிலோக சிந்தாமணி (காசம், முதலானதற்கு) ... | 27 |

மருந்துகளின் பெயர். பக்கம்

87 திரிகடாதிச் சூரணம் (ஈளை, இருமலுக்கு) ... 182
88 திப்பிலி நெய் (ஈளை, இருமல், உளமாந்தை, அக்கினி மந்தம், வாதகாசம், உள் சுரம் காசம் முதலானதற்கு) .... 187
89 திப்பிலி நெய் (இருமல், ஈளை, கிருமி, கோழை, தோஷம், வாய்விற்கு) வேறு ... 104
90 திப்பிலி நெய் (சுரகாசத்திற்கு) ... 150
91 திப்பிலிச் சூரணம் (இருமலுக்கு) ... 177
92 (துத்தாதி) உருண்டை (சூலைப்பிற்கு) .... 97
93 (தூதுவளைத்) தைலம் (ஈளை, இருமல், அருவருப்பு குன்மம், மூலம், பெருவயிறு, காசம், சூலை, நெஞ்சடைப்பு, இரைப்பு, அகுவை, நளிகை, பொருமல், கிராணி, வயிற்றிப்புழு, மந்தாக்கினி, முதலிய ரோகங்களுக்கு) .... 189
94 (தூதுவளை) க் குழம்பு (இருமல், அக்கினிமந்தம், ஈளை, பெருவயிறு, மூலம், கிராணி, கிருமி, பக்க சூலைக்கு) ... 86
95 தூதுவளை எண்ணெய் (காசம், இருமலுக்கு) ... 1
96 (தூதுவளை) நெய் (காசம், இளைப்பு, இரைப்பு, பீனிசத்திற்கு) ... 35
97 தூதுவளையாதி கிருதம் (ஈளை, இருமலுக்கு) .... 56
98 தூதுவளையாதி கிருதம் (இருமலுக்கு) ... 59
99 (தூதுவளை) கிருதம் (இருமலுக்கு) ... 71
100 (தூதுவளைக்) கஷாயம் (இருமலுக்கு) ... 83
101 (தூதுவளைப்) பால் மருந்து (இருமலுக்கு) ... 108
102 தூதுவளையாதி நெய் (ச்லேஷ்ம விகாரங்களுக்கு).. 124
103 தூதுவளை) உருண்டை (சேத்துமத்திற்கு) ... 127
104 தூதுவளம் பழவுருண்டை (இளைப்பு, இருமலுக்கு) ... 135
105 தூதுவளையாதி கஷாயம் (பக்க காசத்திற்கு) .... 147

| | மருந்துகளின் பெயர். | பக்கம் |
|---|---|---|
| 106 | தூதுவளையாதிச் சூரணம் (இரைப்பு, காசம், சுவாச காசம், அடைப்பு, சேத்தும ரோகத்திற்கு) ... | 152 |
| 107 | (தேங்காய்ப்பால் ஈரவெங்காய மருந்து) (இரைப்பு சிலேத்துமம், நெஞ்சுக்கட்டு, முதலான ரோகங்களுக்கு) ... | 158 |
| 108 | (தேத்தான்) சூரணம் (ச்லேஷ்மத்திற்கு) ... | 126 |
| 109 | தேத்தான் கல்பம் (பல வியாதிகளுக்கு) .... | 65 |
| 110 | தேத்தான் நெய் (ஈளை, இருமல், உளமாந்தை, புகைச்சலுக்கு) ... | 58 |
| 111 | (தேவதாளி) எண்ணெய் (ஈளை, இருமல், இரைப்பிற்கு) ... | 89 |
| 112 | தேள் கொடுக்கு நெய் (ச்லேஷ்மகாசங்களுக்கு).. | 31 |
| 113 | நாகபற்பம் (இருமல், பாண்டு, நீரழிவு, பிரமியம், குடல்வாதம், ச்லேஷ்மம், வாதம், குஷ்டம், முதலான ரோகங்களுக்கு) .... | 166 |
| 114 | நாகச் செந்தூரம் (இருமலுக்கு) .... | 117 |
| 115 | நாகச் செந்தூரம் (ஈளை, இருமல், காசம், சுவாசம், மந்தாரகாசம், எலிகடி. இரைப்பு, அரிகுரல், நெஞ் செரிவு, முதலிய நோய்களுக்கு) (வேறு)... | 105 |
| 116 | (நால் பாமராதி) நெய் (ஈளை, இருமல், உடம்புலர்தல், எலும்புருக்கி, கோழை, சளிக்கு) ... | 53 |
| 117 | நிரா அபயாதி லேகியம் (காசத்திற்கு) ... | 26 |
| 118 | நில விளாச் சூரணம் (இருமல், ச்லேத்மத்திற்கு). | 138 |
| 119 | நீர்முள்ளியாதி நீர் (இருமலுக்கு) ... | 108 |
| 120 | நீலகண்டரஸம் (காசம், க்ஷயத்திற்கு) ... | 2 |
| 121 | (நொச்சி) எண்ணெய் (சளி, இருமலுக்கு) ... | 116 |
| 122 | பதனி (இரத்தகாசத்திற்கு) ... | 144 |
| 123 | பஞ்சகோலாதிச் சூரணம் (காசத்திற்கு) .... | 42 |
| 124 | (புரசம் பட்டைக்) கஷாயம் (ஈளைக்கு) ... | 82 |
| 125 | பூசினி நெய் (காசத்திற்கு) ... | 34 |

மருந்துகளின் பெயர். பக்கம்

126 பூசினி நெய் (சுவாசகாசத்திற்கு) வேறு ... 50
127 பூசினிக்காய் மருந்து (ஈளை, இருமலுக்கு) ... 95
128 பூர்ணசந்திரோதய மாத்திரை (சுவாசகாசத்திற்கு) 43
129 பேராமுட்டி நெய் தொண்டைக்கம்மல், பித்தம், வாந்தி, மயக்கம், இருமல், கை, கால் எரிவு, அரோசகம், பித்தம் முதலான ரோகங்களுக்கு). 80
130 பொடுதலை எண்ணெய் (காசம், சுவாசம், இருமல், ஈளை, கண்டத்தைப் பற்றிய வியாதிகளுக்கு) ... 60
131 பொங்கல் (பக்க காசத்திற்கு) ... 146
132 பொன்னரிதாரப் புகை (இருமலிற்கு) ... 70
133 மிளகுக்குடி நீர் (சுவாச காசத்திற்கு) ... 165
134 (முசுமுசுக்கை) மருந்து) புகைச்சல், இருமலிற்கு) 55
135 (முசுமுசுக்கைக்) கடாயம் (இருமலிற்கு) ... 70
136 முடக்கொத்தான் மருந்து (ஈளை, இருமல், இரைப்பிற்கு) ... 93
137 (முள்ளுக்கத்திரி)ச் சூரணம்) (சுவாசம், இருமலிற்கு) ... 6
138 (மூக்கரட்டை) எண்ணெய் (குலைப்பிற்கு) ... 98
139 ரஸபற்பம் (காசத்திற்கு) ... 29
140 (ரஸாதி) உருண்டை (காசத்திற்கு) .... 14
141 ஷண்முக ரஸம் (காசத்திற்கு) ... 49
142 விளங்காதிச் சூரணம் (காசத்திற்கு) ... 41
143 விளங்காதிச் சூரணம் (ஈ,ளை இருமல், க்ஷயத்திற்கு) ... 184
144 வில்வாதி லேகியம் (பித்தத்திலெழுந்த, 40 காசம், உளமாந்தை, செரியாமை, சுரம், இளைப்பு, பாண்டு, காமாலை முதலான ரோகங்களுக்கு) ... 155
145 வெங்காரக்குடி நீர் (இருமல், ச்லேத்துமத்திற்கு) 137
146 வேர்க்கொம்புக் கடாயம் (இருமல், ஈளைக்கு) .... 172
147 வேலிப்பருத்திச் சூரணம் (காசம், இருமல், ஈளைக்கு) ... 107
148 (வேலிப்பருத்தி) வெண்ணெய் (மருந்தீடுக்கு) ... 99


முற்றிற்று.

வெற்றிவேல் பிரஸ்,
தஞ்சை.

★

7 OCT 1974